Issued 7-7-1999

15 நவ 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 7, 1999 - தொகுதி 70 - எண் 1

Wednesday the 7th April, 1999 - Volume 70 - No. 1

...் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

V2u, 31'N99.
N99.70.1.
219406.

7-4-1999

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உறுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப் பட்டினத்தில் குண்டு வெடிப்பு | 40-66 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 41-45 |
| திரு. கே. சுப்பராயன் | 45-46 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 46-52,65 |
| திரு. ஈ. கணேசன் | 52-53 |
| திரு. டி. மணி | 53-56 |
| திரு. சி. வேலாயுதன் | 56-58 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 59-64,65-66 |
| 3. **அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 66 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 66 |

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 1999 2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 35 — பாசனம்
(ஆ) கோரிக்கை எண் 36 — பொதுப் பணிகள் — கட்டடங்கள்
(இ) கோரிக்கை எண் 51 — பாசனம் குறித்த மூலதனச் செலவு
(ஈ) கோரிக்கை எண் 55 — பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு
... 67-159

*மாண்புமிகு திரு. துரைமுருகன் ... 67,74,80,84, 88-89,97-98, 126-148
*திரு. அ. புரட்சிமணி ... 89,90-92
*திரு. தங்கம் தென்னரசு ... 92-96
*திரு. என்.வி. கிருஷ்ணன் ... 80,96-97,98-101,154
*திரு. கே.சி. கருணாகரன் ... 101-105
*திரு. டி. மணி ... 68,75,105-110, 149,152
திருமதி வாசுகி முருகேசன் ... 110-115
*திரு. முகம்மது கோதர் மைதீன் ... 115-118
திரு. அ. வெங்கடாசலம் ... 118-121
திரு. என்.வி. [illegible] ... 76-77,82, 121-125

அறிவிப்பு—
உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு ... 90

பேரவை முன் [illegible] ஏடுகள் ... 159-161

219406

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல்-மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
[illegible]

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
[illegible]

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
[illegible]

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
[illegible]

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
[illegible]

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :
[illegible]

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
[illegible]

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
[illegible]



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| **20. Minister for Information, Publicity and and Printing** | .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. சி.டி. தண்டபாணி**

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்**

**திரு. பெ. ஆசையன்**

**டாக்டர் ஆ. ஞானசேகரன்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. வை. சிவபுண்ணியம்**

*செயலாளர்*

**திரு. டி. சாலமன் ஜெயபால்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 30. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 31. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 33. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 36. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 37. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| 38. திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. அழகராஜா, திரு. என். ஆர். | .. | தேனி |
| 11. அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 19. ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |
| 20. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. நா. | .. | சங்கராபுரம் |



| | | | |
|---|---|---|---|
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 44. | கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா. |
| 50. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ. |
| 62. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 63. | கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 64. | கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ. |
| 65. | கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

| | | |
|---|---|---|
| 110. | சொக்கர், திரு. ஆர். | .. சிவகாசி |
| 111. | சொக்கலிங்கம், திரு. ஜி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 112. | ஞானசேகரன், டாக்டர் ஆ. | .. மேல்மலையனூர் |
| 113. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 114. | டேவிட் செல்வின், திரு. எஸ். | .. ஸ்ரீவைகுண்டம் |
| 115. | தங்கமணி, திரு. கே. | .. மானாமதுரை (செ.வ.) |
| 116. | தங்கம் தென்னரசு, திரு. | .. அருப்புக்கோட்டை |
| 117. | தங்கவேலன், திரு. சுப. | .. கடலாடி |
| 118. | தங்கவேல், திரு. அ. ல. | .. சேலம்-2 |
| 119. | தண்டபாணி, திரு. சி. டி. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 120. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | .. இளையான்குடி |
| 121. | தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | .. அரக்கோணம் (செ.வ.) |
| 122. | தமிழ்மணி, திரு. வீ. | .. செங்கல்பட்டு |
| 123. | தளபதி, திரு. கோ. | .. சேடப்பட்டி |
| 124. | தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | .. சேலம்-1 |
| 125. | தனபால், திரு. வி. ஜி. | .. குடியாத்தம் |
| 126. | தாமரைக்கனி, திரு. இரா. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. | திசைவீரன், திரு. உ. | .. பரமக்குடி (செ.வ.) |
| 128. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. பேராவூரணி |
| 129. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. அறந்தாங்கி |
| 130. | திருவேங்கடம், திரு. பெ. சு. | .. கலசப்பாக்கம் |
| 131. | துரைசாமி, திரு. பா. | .. வரகூர் (செ.வ.) |
| 132. | துரை, திரு. கே. | .. திருவெறும்பூர் |
| 133. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |



| | | |
|---|---|---|
| 134. | தெய்வநாயகம், திரு. எ. | .. மதுரை மத்தி |
| 135. | தேவராஜன், டாக்டர் மு. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 136. | நடராசன், திரு. ஆ. | .. பேரூர் |
| 137. | நடராஜன், திரு. த. | .. செஞ்சி |
| 138. | நயினா முகமது, திரு. கோ. | .. கடையநல்லூர் |
| 139. | நன்னன், திரு. கொ. வீ. | .. செங்கம் (செ.வ.) |
| 140. | நாகரத்தினம், திரு. ச. | .. கிருஷ்ணராயபுரம் (செ |
| 141. | நாஞ்சில் கி. மனோகரன், திரு. | .. திருவல்லிக்கேணி |
| 142. | நிஜாமுதீன், திரு. ஜி. | .. நாகப்பட்டினம் |
| 143. | நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. | .. நெல்லிக்குப்பம் |
| 144. | நேரு, திரு. கா.நா. | .. லால்குடி |
| 145. | பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | .. சிவகங்கை |
| 146. | பத்மா, டாக்டர் | .. நன்னிலம் (செ.வ.) |
| 147. | பரணிகுமார், திரு. பா. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 148. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 149. | பழனிசாமி, திரு. ஜி. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. | பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | .. மதுரை மேற்கு |
| 151. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 152. | பன்னீர்செல்வம், திரு. மு. | .. சீர்காழி (செ.வ.) |
| 153. | பாண்டுரங்கன், திரு. ந. | .. பெரணமல்லூர் |
| 154. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. முதுகுளத்தூர் |
| 155. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | .. பவானி |
| 156. | பாலசுப்பிரமணியன், திரு. ப. | .. பட்டுக்கோட்டை |

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 234. வெற்றிடம் | .. | நத்தம் |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. கே.வி. வெங்கடபதி | .. | அரசு தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 24, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 ஏப்ரல் 7, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு."

உழுவதைக் காட்டிலும் உரம் இடுதல் நல்லது; களை எடுப்பதும், நீர் பாய்ச்சுவதும் மிகவும் நல்லது; அதைவிட நல்லது, அந்தப் பயிரைப் பாதுகாப்பது.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 281, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**281—**

**பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை**

***11737—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய வரி வருவாயில் மாநிலங்களுக்கு 29 சதவிகிதப் பங்களிக்குமாறு பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை செயல்படுத்தப்பட்டுவிட்டதா?

(ஆ) இதனால் மாநில அரசுக்குக் கிடைத்த உபரி வரவு எவ்வளவு?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

(அ) இன்னும் செயல்படுத்தப்பட வில்லை. பத்தாவது நிதிக் குழுவின் வரிப்பகிர்ந்தளிப்பு மாற்றுத் திட்டத்தை கூடிய மாநிலங்களுக்கிடையேயான குழுவின் – Inter-State Council – மூன்றாவது கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து ஒருமைப்பாட்டின் அடிப்படையில் முந்தைய மத்திய அரசு கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்டது. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் தனது இடைக்கால வரவு செலவுத் திட்ட உரையில், 1998-99-ல் இதுபற்றிக் குறிப்பிடும்போது, 'எல்லா மாநிலங்களாலும் ஏற்பிசைவு அளிக்கப்பட்ட வரிப்பகிர்ந்தளிப்பு மாற்றுத் திட்டம் பற்றிய முடிவுகளைச் செயற்படுத்தும்பொருட்டு தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வர விழைகிறோம்' எனத் தெரிவித்துள்ளார். இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தச் சட்ட முன்வடிவு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் 14-7-1998 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டமுன்வடிவை நாடாளுமன்ற சபாநாயகர் அவர்கள், நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுப்பதற்கு முன்னர் நிதிநிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பியுள்ளார்கள். நடந்து முடிந்த குளிர்காலக் கூட்டத் தொடரில் இச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுக்கப்பட வில்லை. இதன் காரணமாக இந்தச் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வில்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகள், நிதித் துறையைப் பொறுத்தவரையிலே பலமாக இருந்தால்தான் வளர்ச்சித் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற முடியும். ஆனால் நம்முடைய இந்தியாவிலே மாநிலங்களின் நிதி நிலைமை மிகக் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. நிதி சம்பந்தப்பட்ட அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடமே குவிந்து கிடக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையிலும் வருமானம் என்று பார்த்தால் நில வரியும், விற்பனை வரியும் தவிர வேறு வகைகளில் வருமானமே இல்லை. இந்த நிலையில் 29 சதவிகிதம் என்பதுகூட சரியல்ல, 33.33 சதவிகிதம் என்ற முறையிலே அரசமைப்புச் சட்டத்



திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றுதான் மாநிலங்கள் வலியுறுத்துகின்றன. எனவே நம்முடைய மாநில அரசு பயனுறுமிக்க ஒரு நிர்பந்தத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கின்ற அந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நிர்பந்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலையைப் பகிர்ந்துகொள்வது சம்பந்தமாக, இப்போதுகூட 11-வது நிதிக் குழுவிற்கு நாம் பின்வரும் கோரிக்கைகளை வைத்திருக்கிறோம்: மைய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவிகிதம் அளிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் 1996-97 முதல் செயல்படுத்தப்பட வேண்டும் – முன்கூட்டியே 1-4-1998 முதல் இந்த விழுக்காடு 33.33 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும்; 2000-2001-லிருந்து இது 40 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும்; இதில் 35 சதவிகிதம் அனைத்து வரிகள், ஆயத் தீர்வைகள் முதலியவற்றின் வருவாயின் அடிப்படையிலும், ஏனைய 5 சதவிகிதம் கூடுதல் ஆயத் தீர்வையின் வருமானத்தின் அடிப்படையிலும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் 268 முதல் 269 ஆம் பிரிவுகளின்கீழ் வரும் வரிகளும், தீர்வைகளும் இத்திட்டத்திலுள் அடங்க வேண்டும்; பணித் துறையில் (Services Sector) பெறப்படும் வருவாயைப் பெருக்க மைய அரசு எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தவிருக்கிறோம். 11-வது நிதிக் குழுவில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்காக மிகக் கடுமையாக மத்திய அரசோடு நாடாளுமன்றத்தில் நாம் போராட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அந்தப் போர் ஜனநாயக ரீதியிலே நடைபெறுகின்ற போராகத்தான் இருக்க முடியும். ஆனால், இப்போது நாடாளுமன்றத்திலே யாரோடு போராடுவது என்பது நிச்சயமாக இருக்கிற காரணத்தினால், அது உறுதிப்பட்ட பிறகு, அந்தப் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

(முற்பகல் 9.30)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வருவாயில்

மாநிலங்களுக்கு 29 சதவிகிதம் பங்களிக்க வேண்டுமென்ற பத்தாவது நிதிக் குழு பரிந்துரையை அமல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் குறிப்பிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன்படி திருத்தம் கொண்டு வரப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதன் மூலம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் தொகை எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்திற்கு வருமான வரி மூலமாகவும், excise duty-யினுடைய கூடுதல் வரிகள், இவற்றின் மூலமாகவும் ரூ. 2,655 கோடி கிடைத்துக் கொண்டிருக்கிறது. 29 சதவிகித அடிப்படையில் கூடுதலாக ரூ.539 கோடி கிடைக்கும். ஆக மொத்தம் ரூ.3,194 கோடி கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசிடமிருந்து எத்தனை சதவிகிதம் வரியாக வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தற்போது வருமான வரியின் மூலம் மத்திய அரசுக்குக் கிடைக்கக்கூடிய மொத்த வருமானத்தில் 77.5 சதவிகிதம், பகிர்ந்தளிக்கக்கூடிய நிதித் தொகுப்பிலே சேர்க்கப்பட்டு, பின்னர் பல்வேறு கூறுகளின் அடிப்படையில் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்கண்ட தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டின் பங்கு 6.637 சதவிகிதம் அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிரம்ப இயற்கைச் செல்வங்கள் — குறிப்பாக, இயற்கை எரிவாயு — நிரம்ப கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாநில வருவாயைப் பெருக்கும்வகையில், மத்திய அரசிடமிருந்து



பங்குத் தொகை – royalty பெற, மாநில அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பங்குத் தொகை – royalty பெறுவது சம்பந்தமாக – ஏற்கெனவேகூட நெய்வேலியிலே இருந்து நமக்கு வரவேண்டிய royalty கூட – கடந்த காலத்தில், அதைப்பற்றிய பிரச்சினை எழுப்பப்படாமல் இருந்தது. தேசிய முன்னணி அரசு, திரு. வி.பி. சிங் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்றபோதுதான், முதன்முதலாக தமிழ்நாடு அரசு அதை வலியுறுத்தி, நெய்வேலி சம்பந்தமான royalty தொகையைப் பெற முடிந்தது. இவற்றைப் பற்றி அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று செயல்படுத்தியதால் ஏற்பட்ட செலவினத்தை ஈடுகட்ட மத்திய அரசு ஏதேனும் நிதி தர ஒப்புக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கு, மைய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட செலவு ரூ. 3,630 கோடி. அது 1998-99 வரையிலான செலவு. இதை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவை — மாநில அரசுக்குத் தர வேண்டுமென்று — அதிலும் 50 சதவிகிதம் இந்தக் கூடுதல் செலவிலே தரவேண்டுமென்று — வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வரி வருவாயில் மாநிலங்களுக்கு வழங்கக்கூடிய பங்களிப்பு என்பது, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே சீராக இருக்கிறதா; அல்லது வித்தியாசப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாநிலங்களுக்கு உள்ள நிலையில்,

அதன் தனித்தனி அடிப்படையிலேதான் இந்தப் பங்களிப்பு வழங்கப்படும். பொதுவாக, நாம் கேட்கின்ற 29 சதவிகித வரிப் பகிர்வில், எந்தெந்த வரிகள் அடங்கும் என்று பார்த்தால், இதுவரையிலே வருமான வரி, ஆயத் தீர்வை மாத்திரம்தான் இருக்கிறது. கடந்த ஐக்கிய முன்னணி அரசிலே, அப்போது நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் அறிவித்தவாறு அடங்க வேண்டிய வரிகள், வருமான வரி, ஆயத் தீர்வை, கூடுதல் ஆயத் தீர்வை, சுங்க வரி, சேவை வரி (service tax), கம்பெனிகள் மீதான வரி (corporate tax) உள்ளிட்ட அனைத்து மத்திய வரி வருவாயில் 29 சதவிகிதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படிப் பகிர்ந்து அளிக்கப்படும்போது எல்லாம் சீராக, even-ஆக இருக்க இயலாது. சதவீதத்திலே அது ஈடாகத் தரப்படுமே தவிர, தொகையைப் பொறுத்தவரை, பணம் என்ற அந்த அடிப்படையிலே அது சரியாக இருக்காது, சமமாக இருக்காது.

முற்பகல் 9-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு மத்திய அரசின் திட்டக் குழு வழங்குகின்ற நிதியின் அளவு கொஞ்சம் கூடியிருந்தாலும்கூட ரூபாயின் மதிப்பு என்பது தொடர்ந்து வீழ்ச்சி அடைந்தே வருகிறது. பண வீக்கத்தின் காரணமாக நிதியின் மதிப்பு என்பது நடைமுறையில் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில், அவர்களின் உதவி அதிகரிப்பதுகூட பொருளற்றதாக மாறிவிடுகிறது. அதுவும் மாநிலங்களிலிருந்து மத்திய அரசுக்கு வரி வருவாய் அதிகரித்து கொண்டே இருக்கிறது. ஆனால், மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவி குறைந்து கொண்டு இருக்கிறது. நிதியின் மதிப்பு குறைந்து கொண்டு இருக்கிறது. எனவே, மாநில அரசு மூச்சுவிட வேண்டுமானால், நெருக்கடிகளை, சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமானால், இந்த நிலைமையில் உறுதியான மாற்றம் வரவேண்டுமென்பதில் அழுத்தி, வலியுறுத்தி நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதையெல்லாம் உத்தேசித்துத்தான், இராஜமன்னார் குழு என்ற ஒரு குழுவை அமைத்து, மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் — அதிகாரங்கள்





என்றால், நிதி வசதி உள்பட எல்லாவிதமான அதிகாரங்களையும் நாம் பெற வேண்டும், எஞ்சிய அதிகாரங்கள் என்ற பெயரால் உள்ளவையும் மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும்; சில முக்கியமான அதிகாரங்களை மாத்திரம்தான் மத்திய அரசு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே இராஜமன்னார் குழு ஆராய்ந்து, அப்படி ஆராய்ந்து அறிவித்த அந்த அறிக்கையை, அமைச்சரவை ஆராய்ந்து, மாறன்-செழியன் குழு என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்களும் அதுபற்றிய கருத்தை அறிவித்து, அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலும், அமைச்சரவை எடுத்த முடிவின் அடிப்படையிலும், 1974 ஆம் ஆண்டு இதே அவையில், இந்தியாவிலேயே முதன்முதலாக மாநில சுயாட்சி, தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நாம் அதற்காக வாதாடி வருகின்றோம், போராடி வருகின்றோம். திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்த அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், நிதி ஆதாரங்கள் உள்பட பெருக்கிட வேண்டுமென்று முனைந்து பணியாற்றி வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**282—**

**தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்**

***14121—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே அரசு தொழில் நுட்பக் கல்லூரி இல்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் ஏழ்மையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் தனியார் நடத்துகின்ற தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு உண்டான பணவசதியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர், கல்வித் துறையை மிகவும் சீரமைத்துக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்திலாவது, என்னுடைய தொகுதியிலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்குவதற்கு, அதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்தொழில் பயிலகம் போன்ற கல்வி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஏராளமான முதலீடு தேவைப்படுகிறது. அதேபோல ஆண்டுதோறும் தொடர் இனச் செலவு மிகுதியாகிறது. எனவே, கல்லூரிகளோ அல்லது இப்படிப்பட்ட பயிலகங்களோ அரசே தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்ற கருத்து சில ஆண்டுகளாகவே மேற்கொள்ளப்படுகிறது. மேலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் 7 பல்தொழில் பயிலகங்கள் நடைமுறையிலே செயல்படுகின்றன. மூன்று பொறியியல் கல்லூரிகள் இயங்குகின்றன. எனவே, தொகுதி அடிப்படையிலேயோ, மாவட்ட அடிப்படையிலேயோ இப்படிப்பட்ட கல்வி நிலையங்களை ஏற்படுத்த அண்மையிலே வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 283, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**283—**

**வேலைவாய்ப்பில் முன்னுரிமை**

**•19205—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வட்டம் மற்றும் மாவட்ட அளவில் விளையாட்டுத் துறையில் முதன்மையாக வருபவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில அல்லது தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பகத்தின் மூலமின்றி, நேரடியாக சார்நிலை மற்றும் கடைநிலைப் பணிகளில் நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் மற்றும் தாலுக்கா அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்தச் சலுகையினை அளிக்க முற்பட்டால், ஊராட்சி ஒன்றியம் மற்றும் தாலுக்கா அளவு என்பது மிகக் குறுகிய வட்டமாய் இருப்பதால் இந்தச் சலுகையினைத் தவறாகப் பயன்படுத்திட வாய்ப்பு ஏற்படும் எனக் கருதுவதால், தற்போது இதைப் பரிசீலிக்க இயலவில்லை.

முற்பகல் 9-45

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வித் துறையிலே மாணவர்களை ஊக்கப்படுத்துகிற அளவிற்கு சத்துணவு கொடுக்கிறோம். முட்டை கொடுக்கிறோம். பஸ் பாஸ் இலவசமாக வழங்குகிறோம். மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலேயும், மாநில அளவிலேயும் கல்லூரிகளில் இருந்தோ, பள்ளிகளில் இருந்தோ சிறந்த விளையாட்டு வீரர்களாக தகுதி பெறுகிறவர்கள் மாநில அளவிலே அரசு மூலமாக வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்கு இடம் இருக்கிறது. ஆனால், அதை விரிவுபடுத்திக் கொண்டு போய் ஒன்றிய அளவிலேயும், வட்ட அளவிலேயும் அதை விரிவாக வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. எல்லாவற்றையும்விட வேலைவாய்ப்பே குறைவாக இருக்கிறபோது, வேலைவாய்ப்பிலே ஏராளமான முன்னுரிமைகள் வழங்குவது ஏற்றதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

[1999 ஏப்ரல் 7

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு தற்சமயம் உதவித் தொகையாக எவ்வளவு வழங்கப்படுகிறது? தற்சமயம் வழங்கப்படுகிற உதவித் தொகையை அதிகரித்து வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு ஆணையம் அமைக்கக் காலத்திலேதான் எவ்வளவு நிதி வழங்குவது என்று தீர்மானித்து இருக்கிறது. என்னென்ன தரத்திற்கு எவ்வளவு நிதி வழங்குவது, பாராட்டு நிதியாக எவ்வளவு வழங்குவது என்று தீர்மானித்திருக்கிறது. எனவே, இப்போது அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் மாவட்ட அளவில் பள்ளிகளில் இருந்து வருகின்ற மாணவர்கள், மாணவிகள், மாநில அளவிலும், அகில இந்திய அளவிலும் விளையாடச் செல்கிறபோது, அப்படிப்பட்டவர்களுக்கு, அதிலே வெற்றி பெறுகிறவர்களுக்கு முன்னுரிமை தருவதோடு, ஏற்கெனவே அகில இந்திய அளவில் சமீபத்திலே மணிப்பூரில் நடந்த விளையாட்டில் அந்தத் துறையைச் சேர்ந்த வீரர்களுக்கு அரசு வழங்கிய அந்த உதவித் தொகை வழங்கப்பட்டு விட்டதா என்பதைக்கூட அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என்று நம்புகிறேன். இல்லை என்றால், விரைவில் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலே, ஆசிய போட்டிகள் அல்லது ஒலிம்பிக் போட்டிகளிலே பங்கு பெற்றிருக்கிற விளையாட்டு வீரர்கள் தமிழகத்திலே ஒரு சிலர் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அதிலே, குறிப்பாக ஹாக்கிப் போட்டியிலே பங்கு கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கிறதா? அதைப்போல, அப்படிப்பட்ட தேசிய, ஒலிம்பிக் போட்டிகளிலே பங்குகொண்ட விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கீட்டின் அடிப்படையிலே வீடுகள்



1999 ஏப்ரல் 7]

வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறதா? அப்படி வழங்கப்பட்டிருந்தால், அதன் விவரத்தை தெரிவிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வீடுகள் வழங்குவது என்பது ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒரு கொள்கை. ஆனால், அவர்கள் கேட்கிற, விரும்புகிற இடங்களில் வீடு வழங்கக்கூடிய வாய்ப்பில்லை. அவற்றின் விலை நிர்ணயம் வேறுபட்டுவிடுகிறது. அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகையைவிட, அதிகமாகவோ, குறைவாகவோ வேறுபடுகிறது. எனவே, வீடு வழங்குவதில் சிக்கல் இருப்பதன் காரணமாக, நிதியாக குறிப்பிட்ட தொகை வழங்குவது என்ற முறையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *284*, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**284—**

**வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி**

**•21225—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு அறிவிப்பு செய்தும் பணிகள் ஏதும் நடக்காமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பணிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு தூத்துக்குடியில் மட்டும் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9.50

[1999 ஏப்ரல் 7

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆண்டே, வேலூரிலே மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்து Special Officer-ஐ கூட நியமித்தார்கள். அவர்கள் இடத்தையெல்லாம் பார்த்தார்கள் நாங்கள் வரும் என்ற நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருந்தோம் ஆனால் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் நிதிநிலைமைக்கேற்ப முதலில் தூத்துக்குடியில் எடுக்கப்படும். அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப என்று underline போட்டு ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதல்வரவர்கள் பட்ஜெட்டில் அறிவிக்கிறபோது அடுத்த ஆண்டு வேலூரில் எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வேலூரில் சி.எம்.சி மருத்துவமனை இருக்கிறது என்ற ஒரே ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் தூத்துக்குடிக்கு முன்னுரிமை அளித்திருக்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களே, சி.எம்.சி மருத்துவமனையில் எந்த சீட்டும் இடை பாதில்லை அந்தப் பகுதியிலே இருக்கக் கூடியவர்கள் யாருக்கும் இடை பாதில்லை. ஒருவேளை அமைச்சரவர்கள் அந்தப் பகுதியிலே வாழக்கூடியவர்களில் 50 சதவீதத்திற்கு அந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பதற்கு ஆவன செய்தால் கூட நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம். ஆக நிதிநிலைமைக்கேற்ப.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, வினாவா? ஒரு வாய்ப்புக் கொடுத்தால், உடனே நீங்கள் ஒரு Lecture கொடுத்துவிடுவீர்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே உங்களுடைய செல்வாக்கைக் கொஞ்சம் பயன்படுத்தி, அமைச்சரிடத்திலே சொல்லி, தயவுசெய்து வருகிற ஆண்டிலே வேலூரிலே இந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம், குமரி ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி தொடங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. எந்த அடிப்படையில் என்றால், கூட்டுறவுத் துறையின் மூலமாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்கி, ஆண்டுதோறும் மாணவர்கள் ரூ.1 லட்சத்தைச் செலுத்தினால் அவர்களுக்கு இடம்



1999 ஏப்ரல் 7]

கொடுத்து, அதற்குப் பிறகு அவர்கள் படித்துவிட்டுச் செல்கின்ற நேரத்திலே அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பது என்று கேரளாவில் ஒரு முறை ஏற்கெனவே தொடங்கப்பட்டது. அதைப் பின்பற்றி இப்படி தொடங்கலாமா என்று யோசித்தோம். ஆனால் கேரளாவில் அப்படிப்பட்ட முறை சரியாகச் செயல்படவில்லை என்றும், நீதிபதி உன்னிக்கிருஷ்ணன் கொடுத்த தீர்ப்பின்படி அப்படித் தொடங்கப்படுகின்ற கல்லூரிகளில் 15 சதவீதத்திற்கு மேல் இடங்களை தனியாருக்கு ஒதுக்கக்கூடாது என்றும் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. எனவேதான் அரசாங்கமே மருத்துவக் கல்லூரிகளை நடத்துவது என்று முடிவு செய்து, கடந்த ஆண்டு திருச்சியிலே கி.ஆ.பெ. விஸ்வநாதன் பெயரிலே ஒரு கல்லூரியை ஆரம்பித்தோம். இந்த ஆண்டு தூத்துக்குடியில் ஆரம்பிக்க இருக்கின்றோம். அடுத்த ஆண்டு நிச்சயமாக வேலூரிலே தொடங்குவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சி.எம்.சி. நடத்துகின்ற மருத்துவக் கல்லூரியிலே 50 சதவீத இடம் வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு பெற்றுத் தரமுடியுமா என்று கேட்டார்கள். அது தனியார் கல்லூரி. அதிலே தலையிடுவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 285, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**285—**

### பரமக்குடியில் பாதாளச் சாக்கடை

***2115—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். மேலும் இப்பகுதியிலே மனிதநேயத்தை வளர்க்கும் முகமாக தேசிய நெடுஞ்சாலை மற்றும் பிரதான வீதிகளிலே மரங்களை நட்டு, சாலையோரப் பூங்காக்களை அமைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பகுதியில் கழிவுநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் நகருக்கு வருகின்ற பயணிகள், விருந்தினர்கள் எல்லாம் முகம் சுளிக்கின்றனர். அத்தோடு அங்கே வாழ்கின்ற மக்களுக்கும் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. இதையெல்லாம் கருத்தில்கொண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்த மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்காக சில விதிமுறைகளும் நடைமுறைகளும் இருக்கின்றன. ஒரு நகரின் மக்கட்தொகை ஒரு லட்சத்திற்கு மேல் இருந்தாலோ, ஒரு நகரம் சுற்றுலாத் தலமாக இருந்தாலோ, அல்லது அந்த மாவட்டத் தலைநகரமாக இருந்தாலோ ஒழிய, அல்லது அந்த நகரம் தர இயலாது. பரமக்குடி நகராட்சியைப் பொறுத்தவரையில், அது 72321 மக்கட்தொகை கொண்டது. அந்த மக்கள் தொகை தரும்போது இருப்பது. சாக்கடைத் திட்டம் வேறு, பாதாளச் சாக்கடைத் திட்டம் வேறு. நடைமுறையில் எடுத்துக்கொண்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அத்தனையும் பணம் முழுங்கித் திட்டங்களாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சி அமைப்புகளில் அதைச் செயல்படுத்துவதற்கான நிலை வருகின்றபோது நீதிமன்றத்திற்கு பலர் செல்வதும், அதில் தடையாணை பெறுவதும், அதிலிருந்து மாற்று நடவடிக்கை எடுப்பதற்குக் காலதாமதம் ஆகிறது என்பதையும் கருத்திற்கொண்டு, அதை விடுத்து, சாக்கடைத் திட்டமாக நிதியாதாரத்திற்குத் தக்கவாறு ஏதாவது செய்யலாமா என்பதைப் பரிசீலிக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 286, திரு. ச. இராஜ ரெட்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



முற்பகல் 9-55

**286—**

## ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி

***14078— திரு. ச. இராஜ ரெட்டி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதியை எப்படிப் பயன்படுத்துவது என்று விதிமுறைகள் உள்ளனவா?

(ஆ) தனி தொகுதி, தனி ஒன்றியத்தில் பொது நிதியை இரண்டாண்டுகளாக எப்படிப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்ட விதி முறைகளுக்கும் மற்றும் அரசால் வெளியிடப்படும் ஆணைகளுக்கும் உட்பட்டே தனி ஊராட்சி ஒன்றியத்தில் வரவு-செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. ச. இராஜ ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எப்படிப் பயன்படுத்தலாம், பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, பொதுவாக இதுவரையில் நடைமுறையில், சட்ட விதிமுறைகளுக்கும் அவ்வப்போது அரசு விதிக்கின்ற உத்தரவுகளுக்கும் இடையேதான் தனியிலே நடந்துகொண்டிருக்கிறது. 1994 ஆம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டப் பிரிவு 191-ன்படி ஊராட்சி ஒன்றியப் பொது நிதிகளை அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய விதிகளுக்கும்தான் ஆணைகளுக்கும் உட்பட்டு தான் செலவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது.

[1999 ஏப்ரல் 7

அதுமாதிரிதான் [illegible] மற்றும் இப்போதிருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது [illegible] 1998-ஆம் [illegible] 5-வது மாதத்தில் ஒரு புதிய உத்தரவின்படி [illegible] அந்த [illegible] பணியிடங்களை [illegible] முடிவெடுத்தது. அதுபோல் [illegible] என்று சொல்லியிருக்கிறது [illegible] இருந்தால் [illegible] அனுமதிக்கலாம் என்று விதி இருக்கிறது [illegible] இருக்கிற [illegible] அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. இப்படி விதிகள் [illegible] அதையும் ஒட்டித்தான் தனி [illegible] பணியிடம் [illegible] பெறுகிறது. நீதித் துறையைப் பொறுத்தவரையில், [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 287, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**287 —**

### உதவி வேளாண்மை அலுவலர் பணி

***17646 — திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

கடந்த 10 ஆண்டுகளாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகளுக்கு உதவி வேளாண்மை அலுவலர் வேலைவாய்ப்பினைத் தடுக்கும் [illegible] அரசின் அரசாணை எண் 118/93-ஐ திருத்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மை உதவி அலுவலர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்ய வாய்ப்பு இல்லை என்பதால் அரசாணை எண் 118, வேளாண்மை, நாள் 7-3-1993-ஐ தற்போது திருத்தி அமைக்கும் உத்தேசம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளாக வேளாண்மை



1999 ஏப்ரல் 7]

மற்றும் தோட்டக்கலை பட்டதாரிகள் 2 ஆண்டுகாலம் பயிற்சி முடித்தவர்கள் சுமார் 2,500 பேர்கள் வேலைவாய்ப்பற்று இருக்கிறார்கள். ஏற்கெனவே 1200 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒரு உதவி வேளாண்மைத் தோட்டக் கலை அலுவலர் என்று பணி நியமனம் செய்யப்படுகின்ற நிலைமையை மாற்றி, 600 விவசாயக் குடும்பங்களுக்கு ஒரு உதவி வேளாண்மைத் தோட்டக்கலை அலுவலர் என்று பணி நியமனம் செய்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு முன்வருமா? இல்லாவிட்டால், வரும் கல்வியாண்டிலேயிருந்து 6-ம் வகுப்பிலேயிருந்து வேளாண்மையை ஒரு பாடமாகக் கற்றுத்தர அரசு நடவடிக்கை எடுப்பதாக வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, முழுப்பயிற்சி பெற்ற மற்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு வாருங்கள், நீங்கள் நிறைய நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அந்த உயர்நிலைப் பள்ளியிலே வேளாண்மைப் பாடப் பிரிவுகளை நடத்துவதற்கு இந்த வேளாண்மை மற்றும் தோட்டக் கலைப் பட்டதாரிகளைப் பணியமர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறைச் செயலாளரால் 1-10-1992 அன்று, இத்துறைப் பணியிடங்கள் குறித்து நடத்தப்பட்ட Ze-bag ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உதவி அலுவலர் மற்றும் வயல் விளக்க அலுவலர் ஆகிய 2 பணியிடங்களுக்கும் சேர்த்து 6295 என்பதை 4500 என்ற எண்ணிக்கைக்கு வரன்முறைப்படுத்தவேண்டுமென முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு வேளாண்மைத் துறையில் பணிபுரியும் அனைத்து வயல் விளக்க அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்து, அவர்கள் அனைவரையும் படிப்படியாக வேளாண்மை உதவி அலுவலர்களாகப் பதவி உயர்வு வழங்கி, வருங்காலத்தில் வயல் விளக்க அலுவலர் பதவியின்றி, விரிவாக்க அடிப்படை மட்டத்தில் வேளாண்மை உதவி அலுவலர் என்ற பதவி மட்டுமே இருக்கும் வகையில் அரசு கொள்கை முடிவெடுத்து, அதன்படி செயல்படும் வகையில் அரசாணை எண் 457, வேளாண்மை, நாள் 28-7-1993 மூலம் கீழ்க்காணும் ஆணைகள் வெளியிடப்பட்டன. வயல் விளக்க அலுவலர் பதவிக்கு இனி வருங்காலங்களில் நியமனம் எதுவும் இல்லையாது. தற்போதுள்ள

வயல் விளக்க அலுவலர் அமைப்பைத் தற்போது வேளாண்மை உதவி அலுவலராகத் தரம் உயர்த்தியபோது வேளாண்மை உதவி அலுவலர் மொத்தப் பணியிடம் 1,500-ஆக மட்டுமே உள்ளது என்பதை வேளாண்மை இயக்குநர் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. பட்டதாரிகளுக்கு வயல் விளக்கப் பணியாளர்களாகப் பயிற்சி அளிப்பது 10-வது வரை படித்தவர்களுக்குத்தான் அந்த இரண்டு ஆண்டுகாலம் பட்டயப்படிப்பு. ஆனால், வேளாண்மை பாடம், அரசு கொள்கை முடிவு எடுத்து இன்று அறிவித்திருப்பது, மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் நுட்பப் பாடங்களை நடத்த வேண்டும் என்பது. ஆகவே, மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகால பட்டதாரிகளைக் கொண்டுபோய் அங்கே நியமித்து வயல் விளக்கப் பாடம் நடத்துவது சாத்தியம் அல்ல. அது பற்றுக் கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 288. திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**288—**

## நகரப் பேருந்து இயக்குதல்

***15576—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை பகர்வாரா:

(அ) போளூரிலிருந்து சதுப்பேரிக்கு மண்டகுளத்தூர், வடமாதிமங்கலம், கீழ்பட்டு வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கிராமங்களும் ஏற்கெனவே அருகில் உள்ள போளூர், ஆரணி போன்ற நகரங்களுடன் பேருந்து வசதி மூலம் இணைக்கப்பட்டு, பயன்பெறுவதால் ஒரு புதிய பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிற சதுப்பேரியிலிருந்து வட்டத் தலைநகரமான போளூருக்கு நேரடிப் போக்குவரத்து வசதி கிடையாது. வழியோரக் கிராமங்களான சதுப்பேரி, கட்டேரி, மடவிளாகம், கீழ்பட்டு, வடமாதிமங்கலம், கரிக்காத்தூர், மண்டகுளத்தூர் உட்பட ஏறக்குறைய 20 கிராமங்களுக்கு மேலாகவும், வழியிலே ஒரு தனியார் சர்க்கரை ஆலையும் வருவதனால் ஏறக்குறைய 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்தத் தடத்திலே பயணிப்பதற்காக இருக்கிறார்கள். நல்ல வருவாயைப் பெறக்கூடிய நகரப் பேருந்தாக இது அமையும். ஆகவே, அரசு பரிசீலனை செய்யுமா அல்லது இருமுறையாவது அந்த வழித்தடத்தில் நகரப் பேருந்தை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழியிலேயுள்ள கிராமங்கள் அனைத்துமே போக்குவரத்து வசதி பெற்றிருக்கின்றன. சதுப்பேரி, கீழ்பட்டு கிராமங்கள் அருகிலுள்ள நகரமான ஆரணியுடன் அரசு நகரப் பேருந்துகள் மூலம் 10 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு, பயன் பெறுகின்றன. ஆகவே, சதுப்பேரிக்கும், ஆரணிக்கும் பேருந்து வசதி அதிகமாகவே இருக்கிறது. சதுப்பேரியிலிருந்து போளூருக்குப் பேருந்து வசதி நேரிடையாக வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே, நகரப் பேருந்துகள் இயங்குகிற காரணத்தால், அது சுற்றிச் சென்றாலும் செல்ல முடிகிறது. இதுபோல சுற்று வழித்தடங்களில் பேருந்து விடும்போது நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு வருங்காலங்களில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 289, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 7]

289—

**கூடுதல் பேருந்து வசதி**

***21751—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சாவூர் மாவட்டம், [illegible] பட்டுக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டைக்கு செங்கிப்பட்டி வழியாகக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[illegible] பேருந்து வசதி [illegible] பட்டுக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டைக்கு செங்கிப்பட்டி வழியாகக் கூடுதல் பேருந்து இயக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] பேருந்து [illegible] இல்லாமல் [illegible] பட்டுக்கோட்டையிலிருந்து செங்கிப்பட்டி வழியாக [illegible] புதுக்கோட்டை செல்லுவது [illegible] அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த [illegible] பட்டுக்கோட்டை [illegible] தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை [illegible] பேருந்து [illegible] இயக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை [illegible] பகுதியில் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், [illegible] மற்றும் தனியார் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. [illegible] பேருந்து



[1999 ஏப்ரல் 7]

வசதி நிலவுகிற காரணத்தால் கூடுதல் பேருந்து விடுகிற சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பே. மாரி அய்யா.

முற்பகல் 10-05

**திரு. பே. மாரி அய்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து திருவோணம், செங்கிப்பட்டி, கந்தர்வக்கோட்டை, திருச்சி வழியாக கோயம்புத்தூர் வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகப் பேருந்து விடப்பட்டது. அது இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. திருவோணம், கந்தர்வக்கோட்டை, செங்கிப்பட்டியில் இருக்கிற வர்த்தகப் பிரமுகர்களும், விவசாயிகளும், விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும், வர்த்தகம் சம்பந்தமாகச் செல்வதற்கும் கோயம்புத்தூருக்குப் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலேயிருந்து தஞ்சாவூருக்கோ, திருச்சிக்கோ அடிக்கடி பேருந்துகள் இருக்கின்றன. திருச்சிக்குச் சென்று, செல்வதற்கு திருச்சியிலிருந்து கோயம்புத்தூர் செல்வதற்கு நிறைய பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலேயிருந்தும் நேரடியாகப் பேருந்து வசதி கேட்க வேண்டும் என்று சொன்னால், கட்டணத் தொகையை உயர்த்திக் கொடுத்தால் அது போன்ற நஷ்டம் ஏற்படாத சூழ்நிலையில், அதை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

290—

**கோயம்புத்தூர் - திண்டுக்கல் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக்குதல்**

***9746—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா -

[1999 ஏப்ரல் 7

(அ) கோயம்புத்தூர் - திண்டுக்கல் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் [illegible] அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் 6-1-1999 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், 1200 கிலோமீட்டர் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் கோயம்புத்தூர் - திண்டுக்கல் சாலையும் - தேசிய நெடுஞ்சாலை எண் 209 என்ற வகையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் - திண்டுக்கல் சாலையின் இடையில் ஒட்டன்சத்திரம் அமைந்திருக்கிறது. [illegible] மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் [illegible] ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினசரி உள்ளே வந்து செல்லுகின்றன. பழனிக்கு [illegible] பக்தர்கள் [illegible] செல்லுகின்ற பல இலட்சக்கணக்கான பக்தர்கள் நடந்து [illegible] செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கின்ற இந்த நேரத்தில் ஒட்டன்சத்திரத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள் புறவழிச்சாலையை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய [illegible]. அந்தச் சாலையிலே விருப்பாச்சி என்ற இடத்திலே [illegible] என்ற [illegible] இருக்கிறது. [illegible] வாகனங்கள் அந்த [illegible] செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த [illegible] [illegible] அமைச்சர்கள் [illegible]. [illegible] என்பதைத் [illegible] அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் இது தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு அறிவிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தச் சாலைகளை [illegible] [illegible] திட்டங்கள் இப்பொழுது



1999 ஏப்ரல் 7]

ஆய்விலே இருக்கின்றன. ஆய்வு முடிந்து, மத்திய அரசுக்கு அனுப்ப அவர்கள் நிதியுதவி செய்கிறபொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற ஒட்டன்சத்திரத்திற்குப் புறவழிச்சாலை, விருப்பாச்சி கணவாய்ப் பகுதியிலே சாலைகளை விரிவுபடுத்துகிற அந்தத் திட்டம் இவை எல்லாம் பரிசீலிக்கப்படும். நிதி ஆதாரம் வருகிறபொழுது அவை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தஞ்சாவூருக்கும், இதற்கும் என்ன தொடர்பு? சரி, கேளுங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1200 கிலோமீட்டர் சாலை தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். எந்தெந்த சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளன? இது குறித்து மத்திய அரசு ஒப்புதல் வந்துவிட்டதா? இந்தச் சாலைகளை மேம்படுத்த மத்திய அரசு நிதி அளித்துள்ளதா? ஆமெனில் எவ்வளவு நிதி கிடைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வியில் கூடுதலாக இந்த மாமன்றத்தில் நான் எந்தெந்த சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை இங்கே உறுதிப்படுத்த விரும்புகிறேன். தேசிய நெடுஞ்சாலை 205 - சென்னை, திருத்தணி, திருப்பதி சாலை. தேசிய நெடுஞ்சாலை 207, ஓசூர், தேவனப்பள்ளி சாலை. தேசிய நெடுஞ்சாலை 209 - திண்டுக்கல், பொள்ளாச்சி, கோயம்புத்தூர், சாம்ராஜ் நகர் கொள்ளேகால் சாலை, தேசிய நெடுஞ்சாலை 208 - திருமங்கலம் தென்காசி சாலை, கொல்லம் வரையில். தேசிய நெடுஞ்சாலை 45அ நாகப்பட்டினம், பாண்டிச்சேரி சாலை. தேசிய நெடுஞ்சாலை 45பி திருச்சி, மேலூர் மதுரை அருப்புக்கோட்டை, தூத்துக்குடி சாலை. தேசிய நெடுஞ்சாலை 67 கரூர், பல்லடம், கோயம்புத்தூர் சாலை. தேசிய நெடுஞ்சாலை 210, திருச்சி-புதுக்கோட்டை - காரைக்குடி தேவகோட்டை - இராமநாதபுரம் சாலை. இந்தச் சாலைகள் அனைத்தும் 1,227 கிலோ மீட்டர் என்று இருக்கிறது மத்தி

[1999 ஏப்ரல் 7

[illegible] (Gazette Notification-ல்) 1200 ஏக்கர் [illegible] Gazette Notification [illegible] Notification [illegible] Handing over, taking over process [illegible] 1200 ஏக்கர் [illegible] Notification [illegible] condition [illegible] Notification [illegible] Property [illegible] condition [illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** [illegible]



1999 ஏப்ரல் 7]

**291---**

**தார்ச்சாலை அமைத்தல்**

***16243—திரு. பெ.சு. திருவேங்கடம் :**
**திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :-

திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலிருந்து ஜவ்வாது மலைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 2 கி.மீ. தூரம் தார்ச்சாலை போடாமல் உள்ளதைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த ஜவ்வாது மலைப் பகுதியில் கலசப்பாக்கம், போளூர், செங்கம் என்று மூன்று சட்டமன்றத் தொகுதிகள் அடங்கி இருக்கின்றன. பத்தாண்டுக்காலமாக வனத் துறையுடைய அனுமதி கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்தைச் சொல்லி, கிட்டத்தட்ட ஒரு பாலம்கூட தரமேம்படுத்தப்படாமலேயே இருந்து வருகிறது. வனத் துறையின் அனுமதி நெடுஞ்சாலைத் துறைக்குக் கிடைத்து விட்டதா? குறையாக விடப்பட்டிருக்கிற சாலை பூர்த்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரிலிருந்து ஜவ்வாது மலை, ஆலங்காயம் வரையில் செல்லக்கூடிய அந்தச் சாலையை மேம்படுத்த நிதி Central Road Fund Scheme என்ற மத்திய சாலை நிதியிலிருந்து பெறப்பட்டு, அதற்கு ரூ. 102.10 இலட்சம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு பெரும்பாலும் அந்தத் தொகை செலவழிக்கப்பட்டு சாலையும் முடிந்துவிட்டது. இடையே ஒரு குறிப்பிட்ட இடத்தில் மூன்று கொண்டை ஊசி வளைவுகள் (Hair-pin bends) வருகின்றன. அவை தவிர, செங்குத்தாக மேலோங்கிய நிலை எல்லாம் இருக்கிறது. அதை மாற்றி,

[1999 ஏப்ரல் 7

மாற்றுப்பாதை அமைப்பதற்கு 900 மீட்டர் நீளத்தில் ஒரு புதிய சாலை அமைக்க முடிவெடுக்கப்பட்டது அதன்படி சேர்த்து ரூ. 215.70 இலட்சம் தேவைப்பட்டது ரூ. 192.10 இலட்சத்திலிருந்து ரூ. 215.70 இலட்சம் தேவைப்படுகிறபோது. இந்த அதிக நிதியை மாநில அரசுதான் செலவழிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. மத்திய சாலை நிதியிலிருந்து போடப்பட்ட சாலைகள் எல்லாம் இப்பொழுதுதான் கடந்த ஆட்சிக்காலத்தில் இடையிலே போடப்பட்டிருக்கின்றன. அதற்கான தேவையான நிதியை மாநில அரசுதான் செலவழிக்கவேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்துவிட்டது. எனவே அரசின் நிதி ஆதாரம் கேட்டு இருக்கிறோம். இந்தச் சாலையைப் பொறுத்த அளவுக்கு 900 மீட்டர் நீளத்திற்கு இருக்கிற இந்தப் பகுதியை உடனடியாகச் செப்பனிட வேண்டும், மேற்கொள்ள வேண்டும் என்று நான் தலைமைப் பொறியாளருக்கு உத்தரவிட்டிருக்கிறேன். நடப்பு ஆண்டில் அது எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கிலோ மீட்டர் தூரம் தேசிய நெடுஞ்சாலைத் துறையிலிருந்து மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றவில்லை என்று சொல்கிறார்கள். அதனால்தான் ஏற்கனவே பணிகள் காலதாமதமாகின்றன என்று காரணம் கேட்டுச் சொன்னார்கள். கேட்டபோது அதிகாரிகள் சொல்கிறார்கள் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மாநில நெடுஞ்சாலைக்கு மாற்றம் கொடுக்கப்பட்டதா? மாற்றப்பட்டிருந்தால் எப்போது மாற்றப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை அல்ல National Highways அல்ல C.R.F. என்று சொல்கிற Central Road Fund, மத்திய சாலை நிதி என்பது மத்திய சர்க்கார் பெட்ரோலிலே இருந்து வரி விதிப்பில் இருந்து தேசிய நெடுஞ்சாலை அல்லாத மாநில அரசு சாலைகளுக்கு Central Road Fund-லிருந்து போடுகிற நிதி இல்லாத காரணத்தால் மாநில அரசு செலவழிக்க இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.R.F. நிதியிலிருந்து 1974-ல் நிதி ஒதுக்கப்பட்டது போளூரிலிருந்து



1999 ஏப்ரல் 7]

பாண்டிச்சேரி செல்லும் நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டது. இது இராமாபுரம், எழுதிபாணிபண்ணா, வாணியம்பாடி, ஆலங்காயம், ஜவ்வாது மலை வழியாக போளூர், பாண்டிச்சேரி செல்லக்கூடிய பாதை இதுவரையில் இதிலே இடைவெளிகள் இருப்பதற்குக் காரணம் என்ன? ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் திட்டம் 1974-லேயே தொடங்கப்பட்டது. இடையிலே ஏற்பட்ட தொய்வுக்குக் காரணம் என்ன? இது நிறைவு பெற்று விட்டதா? எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இந்தச் சாலை போளூரிலிருந்து ஜவ்வாது மலை, ஆலங்காயம் வரையிலே இருக்கக்கூடிய 6.4 கிலோ மீட்டரிலிருந்து 42.535 கிலோ மீட்டர் வரையில் உள்ள பகுதி மட்டும்தான், C.R.F.-லே எடுக்கப்பட்டது. அதற்கு 192.10 இலட்ச ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மறுபடியும் Revised Estimate வருகிறபோது ரூ. 215.70 இலட்சம் தேவைப்படுகிறது. Central Road Fund Scheme-லிருந்து கொடுக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாக வருமானால் அதை மாநில சர்க்கார்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்து விட்டார்கள். எனவே விடுபட்ட இந்தத் தொகையை மாநில சர்க்கார் செலவழிக்கத் தயாராக இருக்கிறது. இடையிலே ஏற்பட்ட காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**292—**

## அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத் திருப்பணி

***1698—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 7

ஏற்படுகிறது கண்டு இருப்பதைப் பற்றித் தகவல் கொடுத்தவர்களையே கைது செய்து சிறையில் அடைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு 3 நாட்கள் விசாரணை நடத்தி, அவர்கள் நிரபராதிகள் என்று சொல்லி, 6 பேரையும் விடுதலை செய்கிறார்கள். இது சம்பந்தமாக தனி விசாரணை வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, குமரி மாவட்டத்தினுடைய ஜமாத்துக்களுடைய கூட்டமைப்புத் தலைவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய ஜி.எம். ஷா அவர்களுடைய தலைமையில் மிகப்பெரிய போராட்டம் அங்கே நடைபெறுகிறது. அதற்குப் பிறகு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பேராயர் எஸ்றா. சற்குணம் அவர்கள் அங்கே வருகை தந்தார்கள். அவர்களிடமும் விசாரணை பெருமக்கள் போய், எங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை; நியாயம் வேண்டும்; தனியாக ஒரு Team-ஐப் போட்டு விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு C.B., C.I.D.-க்கு வழக்கு மாற்றப்படுகிறது, என்று சொல்லி C.B., C.I.D.-க்கு வழக்கு மாறறப்படுகிறது. ஆனால் அங்கேயும் நியாயமான விசாரணை நடைபெறாமல், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களையே தொடர்ச்சியாகத் துன்புறுத்தும் சூழ்நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில், 31-11-1998 அன்று புதுக்கடை காவல் நிலையத்தினுடைய காவலர்கள் வாகனப் பரிசோதனை நடத்திக் கொண்டு வருகிறபோது, பொன்னப்பன் என்கிற, இந்து முன்னணியினுடைய தலைவர், முன்சிறை ஒன்றிய இந்து முன்னணித் தலைவர், அவரும் அவருடைய சகோதரரும், ஆட்டோ டிரைவர் ஒருவரும் ஆட்டோவிலே வந்து கொண்டிருக்கிறபோது, கிட்டத்தட்ட 2,000-க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்கள், டெட்டனேட்டர் குச்சிகள் அந்த ஆட்டோவிலிருந்து கைப்பற்றப்படுகின்றன. கைப்பற்றப்பட்டு, அவர்களிலே பொன்னப்பனை மாத்திரம் விடுதலை செய்து மற்ற இரண்டு பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்து முன்னணித் தலைவர் என்கிற காரணத்தால் அவர் விடுதலை செய்யப்படுகிறார். இது எதற்காகக் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால், எங்களுடைய விசாரணையில் தெரிய வந்தது, டிசம்பர் 6 ஆம் தேதி...



1999 ஏப்ரல் 7]

[illegible] செலவு செய்யப்பட்டிருக்கக்கூடிய காலகட்டத்திலே, எதிர்காலத்தில் பழமையான நகரம் என்ற அடிப்படையிலேயும், நகர வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக, சுற்றுலாத் துறையின் மூலமாக இந்த சிறந்த சுற்றுலா தலத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை காட்டித்தான் நிறைய சாலை வசதிகளை, பாலங்களை, வசதிகளை, கழிவு கழிப்பிட வசதிகளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோயிலுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** கோயில் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக அதனை மேலும் நல்ல முறையிலே வேலை செய்வதற்கு அரசின் மூலமாக தாராளமாக நிதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நிதி கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறை தொழில்நுட்ப அனுமதியும், நிர்வாக அனுமதியும் வழங்கி அதிலே பொது மக்கள் நன்கொடை எவ்வளவு, அரசு நிதி எவ்வளவு, முதலமைச்சர் நிதி எவ்வளவு என்று வரையறுக்கப்பட்ட பிறகு அதுதான் இறுதித் தீர்மானமாக இருக்கும். பொது மக்களுடைய நன்கொடைகளை நீங்கள் ஏராளமாக வாரி வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் உங்களையும் உள்ளடக்கிய இருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது. திடீரென்று வறுமை வந்துவிட்டது, வறுமை கொட்டுகிறது என்று சொன்னால் சில வேலைகளைத்தான் நிறுத்த வேண்டியிருக்குமே தவிர, அரசாங்கத்திலிருந்து தரப்படுகிற நிதி, முதலமைச்சர் நிதி என்ற முறையில் 50 இலட்ச ரூபாயும் அதே நேரத்தில் அடுத்தக் கட்டத்தில் 10 இலட்ச ரூபாய் பணம் தரப்பட இருக்கின்ற நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. காரணம் அந்தக் கோயிலுக்கு இருக்கிற மொத்த வருமானமே வெறும் 21,18,795 ரூபாய்தான். அதனாலே அரசு தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நினைவில் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 293, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**293—**

**ஆலயத்திற்குத் திருப்பணி**

***22511—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழுக்கு செய்யும் பொருட்டு 31 நபர்கள் கொண்ட திருப்பணிக் குழு 19-2-1999-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உடன் திருப்பணிக் குழுக் கூட்டம் கூட்டி தீர்மானம் இயற்றி, விரைவில் திருப்பணி வேலைகள் நடைபெறவும், திருப்பணி வேலைகள் முடிவுற்ற பின்பு குடமுழுக்கு செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் என்று ஏசுநாதர் சொன்னதாக விவிலியத்தில் காணப்படும் வாசகங்கள்போல, தட்டுவதற்கு, கேட்பதற்கு, தேடுவதற்கு முன்பே தெரிந்து, அறிந்து எல்லா நற்பணிகளையும் செய்து கொடுக்கின்ற இந்த அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். மேலும் திருவண்ணாமலையில் மலை சுற்றுவதற்காக இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அவர்கள் மலை சுற்றுகிற அந்தப் பாதையில் திரைப்பட நடிகர் திரு. ரஜினிகாந்த் அவர்கள் இலவசமாக சோடியம் விளக்குகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். திருவண்ணாமலை ஊராட்சி மன்றம், வேங்கிக்கால் ஊராட்சி மன்றம், ஆகியவை அந்த விளக்குகளுக்கு



ஆகும் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு நிதி இல்லாமல் திணறுகிறது. எனவே கோவில் நிர்வாகமே அந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனிப்பட்ட வரையறைகள் இருக்கின்றன. கிரி வீதி என்பது நம்முடைய எல்லைக்கு அப்பாற்பட்டு உள்ளாட்சித் துறையின்கீழ் வருகிறது. அதனை நேரிடையாக மாவட்ட ஆட்சித் தலைவர் கவனித்து, அங்கே போடப்பட்டிருக்கின்ற விளக்குகள், அதனைப் பேணுதல் அது தொடர்பாக கிரி வீதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் ஆகிய பணிகளை அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். அந்தப் பணி அவர்களாலேயே தொடரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 294, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**294—**

**புதிய நியாய விலைக் கடை**

***14768—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட மல்லியக்குட்டை ஊராட்சியில் ஒரு புதிய நியாய விலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[1999 ஏப்ரல் 7

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியிலே உள்ள மல்லியக்குட்டை ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை கட்டித்தருவதால், அந்தப் பகுதி மக்கள் நீண்ட தூரம் சென்று கூட்டுறவுப் பண்டங்களை வாங்க இயலாத நிலையில், அங்கே ஒரு புதிய கட்டடத்தைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் கிட்டத்தட்ட 1500 புதிய நியாய விலைக் கடைகள் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற அளவில், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து, இப்படி பல்வேறு திட்டங்களின்கீழ் 1500 கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சார்பாக நடத்தப்படுகின்ற மல்லியக்குட்டையில் சொந்தமாக இடம் இல்லாத காரணத்தால், உடனடியாக அங்கு கடை கட்ட இயலவில்லை. இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தங்களுடைய நிதியிலிருந்து அதற்கு நிதி ஒதுக்கி தருவார்களானால், அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாக இடம் பெற்று, அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 295, திரு. நா. பெரியசாமி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

**295—**

**விவசாயத் தொழிலாளர்களுக்குத் தனித் துறை உருவாக்குதல்**

***10730—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உழைப்பாளர் பகுதியில் பெரும்பகுதியினராக உள்ள விவசாயத் தொழிலாளர்களின் நலம்பேண தனித் துறை ஒன்றை உருவாக்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயலுக்கு வரும்?



1999 ஏப்ரல் 7]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக முன்னாள் நில சீரமைப்புத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் திரு. கோலப்பன் தலைமையில் அமைக்கப்பட்ட குழு 13 கொள்கை பரிந்துரைகளைத் தெரிவித்துள்ளது. இப்பரிந்துரைகளில் விவசாயத் தொழிலாளர்களின் நலம்பேண தனித் துறை அல்லது வாரியம் அமைப்பதும் ஒன்றாகும். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-25

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுமுன்தினம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதத்தை உயர்த்தி அறிவித்தார்கள். அதற்காக தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோலப்பன் அவர்களுடைய தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலே வேளாண் தொழிலாளர்களுக்காக ஒரு தனித் துறை தொடங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏறத்தாழ ஒரு கோடி அளவில் எண்ணிக்கையில் இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினையை அன்றாடம் கவனிப்பதற்காக அப்படியொரு தனித் துறை மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து, விரைவில் அதை ஏற்று அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் குறித்து கோலப்பன் குழு பரிந்துரையை ஏற்று முதல்வர் அவர்கள் இந்தப் பேரவையிலே அறிவித்தார்கள். அதற்காக அவர்களும், வெளியிலே இருக்கக் கூடியவர்களும் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, விவசாயிகளுக்காக தனித் துறை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயவேண்டியிருக்கிறது. உதாரணமாக, தொழிலாளர் நலத் துறை, வருவாய்த் துறை, விவசாயத் துறை இருக்கின்றன. இப்போது இருக்கக்கூடிய இந்தத் துறைகளின் மூலமாகவே பல்வேறு பிரச்சினைகள்

[1999 ஏப்ரல் 7

பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, unorganised sector என்று கருதுவோம் என்று சொன்னால், Manual Act-ஐயோ Schedule-ஐத் திருத்தி, அந்தப் பலனைப் பெற வைக்க முடியுமா. இதுபோன்ற பல்வேறு நடைமுறை சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய வேண்டியிருக்கிறது. எனவே, முதல்வர் அவர்களோடும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் கலந்துபேசி அரசு பரிசீலித்து, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்து அறிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 296, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**296—**

### கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

***19888—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயல் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பல்வேறு நூற்பாலைகளும் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், பல்வேறு நூற்பாலைகள் திறக்க முடியாமல் இருக்கக்கூடிய இந்த நிலையிலே புதியதாக ஒரு நூற்பாலை அமைப்பது மிகக கடினமான ஒன்று என்பதை நான் அறிவேன், என்றாலும்கூட அருப்புக்கோட்டை தொகுதியிலே, நரிக்குடி ஒன்றியம் முழுவதும் ஒரு வறண்ட பூமி. வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய அந்த



1999 ஏப்ரல் 7]

இடத்திலே ஒரு தொழிற்சாலைகூட இதுவரை அமைக்கப்பெறவில்லை. எனவே, விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே வருங்காலத்திலே இந்தத் தொழில் துறையிலே ஏற்படக்கூடிய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டாவது அரசு மறுபரிசீலனை செய்து முன்னுரிமை அடிப்படையிலே அங்கே நூற்பாலை அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில் நூற்பாலைகளுடைய நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். வேறு தொழில் அமைக்க ஏதாவது வாய்ப்பிருந்தால் அதுதான் முறையான அமைப்பாக இருக்குமேயொழிய நூற்பாலையை எதிர்காலத்திலே தமிழகத்திலே உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 297, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**297—**

### மாணவியர் விடுதிக்குக் கட்டட வசதி

***21923—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சித்துக்காடு அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்குக் கட்டட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், சித்துக்காட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஏதும் இயங்கவில்லை. அங்கு சீர்மரபினர் மாணவர் விடுதி மட்டும் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 ஏப்ரல் 7

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே உள்ள சித்தூக்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளியில் உள்ள சிறப்பான விடுதி தொடங்கப்பட்டு பல ஆண்டுகளாகிறது. அங்கே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு அந்தக் கட்டடத்தில் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விதிமுறைக்கேற்ப, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீடிக்கப் பெறுகிறது. வினா எண் 298, திரு. ச. அழகுவேலு. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**298—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

***2624—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை பகர்வாரா:

கண்டமங்கலம் தொகுதி, புராணசிங்குபாளையம், குமளம், மேலக்கொந்தை, வி. மாத்தூர், வீராணம், வள்ளுவர் மேடு ஆகிய கிராமங்களில் வசித்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 ஏப்ரல் 7]

கண்டமங்கலம் தொகுதி, புராணசிங்குபாளையம், குமளம், வி. மாத்தூர் வீராணம், வள்ளுவர்மேடு ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அக்கிராமங்களிலுள்ள நிலங்களைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலக்கொந்தை கிராமத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு 1994 ஆம் ஆண்டு 170 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் இக்கிராமத்திற்குப் புதியதாக நில எடுப்புச் செய்யும் அவசியம் இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கிராமங்களில் எல்லாம் மனைப்பட்டா வழங்குவதற்காக நீண்ட காலமாகக் கிடப்பிலே போடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான ஒரு முறையீட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கடந்த வாரம் கொடுத்து இருக்கின்றேன். ஆகவே, அரசு உரிய முறைப்படி விரைவாகத் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, புராணசிங்குபாளையத்தில் கூட மத்திய சட்டப்படி நிலம் எடுக்கப்பட்டு, 75 நபர்களுக்கு நவம்பர் 1998-ல் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் குமளம் என்ற இடத்திலும் 15 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலக்கொந்தை என்ற கிராமத்திலும் மேற்கொண்டு 170 பட்டாக்கள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டு, வீராணம், வள்ளுவர் மேட்டில் இந்த இடம் நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டு உள்ளதால், இங்கு சரியான பாதை வசதி இல்லாத காரணத்தாலும் அந்த மக்கள் மாற்று இடம் கேட்டு இருக்கின்ற காரணத்தாலும் விரைந்து தக்க நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 299, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 7

**299—**

**சுற்றுலா மாளிகை அமைத்தல்**

***10425—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பெரம்பலூர் தொகுதி, சின்னாறு நீர்த்தேக்கத்தைப் புதுப்பித்து சுற்றுலா மாளிகை அமைத்து பூங்காக்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் தொகுதி, சின்னாறு நீர்த்தேக்கத்தைப் புதுப்பித்து, சுற்றுலா மாளிகை அமைத்து, பூங்காக்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாறு நீர்த்தேக்கத்தைப் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி உள்ளேன். அங்கே ஏற்கெனவே, நீர்த்தேக்கம் இருந்து அதிலே சிறுவர் பூங்கா அமைத்து, நெடுஞ்சாலை பயணிகள் எல்லாம் அங்கே தங்கி உணவு அருந்திவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல், அது பாலை நிலம் போல் காட்சி அளிக்கிறது. ஆகவே, அங்கே சுற்றுலாத் துறை மூலம் பூங்கா அமைத்து மீண்டும் அதைப் புதுப்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாறு நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்து இருக்கிற அந்தப் பகுதிகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளோ அல்லது வெளி மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளோ வருவதில்லை. எனவே, அதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 300 திரு. டி. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 7]

**300—**

**மீன்பிடி தங்குதளம் அமைத்தல்**

***17949—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தேங்காய்ப்பட்டினத்திற்கு அருகில் மீன்பிடி தங்குதளம் அமைக்க அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்திற்கு அருகில் மீன்பிடி தங்குதளம் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தித்தர மைய அரசுக்கு ஏற்கெனவே கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த தேங்காய்ப்பட்டினத்தில் தங்குதளம் அமைப்பதற்காக மாநில அரசு எவ்வளவு நிதியை ஒதுக்கித் தந்துள்ளது? மத்திய அரசிடம் மாநில அரசு எவ்வளவு தொகை வேண்டுமெனக் கோரிக்கை வைத்து உள்ளது? மத்திய அரசிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்று அதற்குத் தேவையான இடத்தை நில ஆர்ஜிதம் செய்து, இந்த நிதி ஆண்டிலேயே அந்த தங்குதளத்தைக் கட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மீன்கள் எல்லாம் வெளிநாட்டில் விலை அதிகமாக இல்லை என்ற காரணத்தால், அது சுத்தமான முறையில் இல்லை என்ற காரணத்தால், தடை விதிக்கப்பட்டு இருந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசிடம் பேசி விதியைத் தளர்த்தி மொத்தத்தில் தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீன்களைச் சுத்தமான முறையில் கையாளுவதற்கு

[1999 ஏப்ரல் 7

தங்குதளம் அமைத்துத் தருவதற்காக — தமிழக அரசு பாதியும், மத்திய அரசு பாதியும் தருவதாகக் கூறி, ஒரு தங்குதளத்திற்கு 1½ கோடி ரூபாய், அதாவது 150 இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில், தமிழக அரசு இப்போது பணம் தரத் தயாராக இருக்கிறது. ஆனால், மத்திய அரசிலிருந்து இன்னும் பணம் வரவில்லை. தேங்காய்ப்பட்டினத்தில் அதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய டென்னிஸ் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் அனுப்பி உள்ளார்கள். இந்த 5 இலட்ச ரூபாயில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 1.8 இலட்ச ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளித்து, 3.6 இலட்ச ரூபாய் நீர் அழுத்தம் மற்றும் நீரேற்றும் மையதத்திற்கு பூண்டியில் உள்ள மையத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்போது தகவல்கள் எல்லாம் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் ஆய்வுகள் மேற்கொண்டு, நிச்சயமாக மைய அரசிடமிருந்து நாங்கள் பணத்தை வாங்கி, தங்குதளங்கள் அமைத்துத் தருவோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:-** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் குண்டு வெடிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து "கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் குண்டு வெடித்தது" குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. ம. அப்துல் லத்தீப், திரு. அ.வ. அப்துல் நாசர், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கே. சுப்பராயன், திரு. எஸ்.எஸ். மணி நாடார், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், திரு. ஐ. கணேசன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. சி. வேலாயுதன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் டாக்டர் தே. குமாரதாஸ், சுருக்கமாகப் பேசுங்கள்.



1999 ஏப்ரல் 7]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே கடந்த 4, 5 மாதங்களாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் கோர்வையாக நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பார்க்கின்றபோது, இந்த அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் அவை நடைபெறுகின்றனவா அல்லது சிறுபான்மையினர் மீது இருக்கின்ற காழ்ப்புணர்வின் காரணமாக, அவர்களை நிம்மதியாக வாழவிடக் கூடாது என்பதன் அடிப்படையிலே இப்படிப்பட்ட திட்டமிடப்பட்ட செயல்கள் நடைபெறுகின்றனவா என்கிற ஐயப்பாடு மக்கள் மத்தியிலே எழுந்துள்ளது.

கடந்த 9-9-1998 அன்று மாலை சுமார் 3-00 மணி அளவிலே அமீர், அஜீர், சமீர் என்கிற 3 சிறுவர்கள், தேங்காய்ப்பட்டினம் ஊரிலிருந்து சுமார் 1½ கிலோமீட்டர் தள்ளி விளையாடச் சென்ற பகுதியிலே ஏதோ ஒரு மர்மப் பார்சல் இருந்திருக்கிறது. அதிலேயிருந்த பொருளை எடுத்து விளையாடியதில் ஒரு குண்டு — அது குண்டாக இருந்திருக்கிறது — வெடித்துவிட்டது. உடனே அவர்கள் தேங்காய்ப்பட்டினம் ஜமாத்துக்கு வந்து, அந்த ஜமாத்தினுடைய தலைவர் ஹாஜி ஜமாலுதீன் அவர்களிடம் "இப்படி ஒரு பொருள் இருந்தது; அதை நாங்கள் எடுத்து விளையாடினோம்; வெடித்து விட்டது" என்கிற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். உடனே அந்த ஜமாத்தினுடைய தலைவர், புதுக்கடை காவல் நிலையத்திற்குச் சென்று "இப்படி அங்கே வெடிகுண்டு வெடித்துவிட்டது; நீங்கள் வந்து விசாரித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று" கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நடைபெற்றது 9-9-1998-ல் சரி என்று சொல்லிவிட்டு—அன்றைக்கு யாரும் செல்லவில்லை—10 ஆம் தேதி காலை 10-00 மணி அளவிலே மாவட்டக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை அதிகாரிகளுமாக அங்கே சென்று, எந்தப் பகுதியிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்று கேட்டு, இவர்களே அந்தப் பொருள் இருந்த இடத்தை, சிறுவர்களை அழைத்துக் கொண்டுபோய்க் காட்டுகிறார்கள். சிறு வெடிகுண்டுகளாக 13 குண்டுகளை எடுத்து அவற்றை அங்கேயே அவர்கள் முன்னாலே செயலிழக்க வைத்துச் சென்றார்கள்.

பிறகு 11 ஆம் தேதி இந்த பெட்டிஷன் கொடுத்தவர்களிலே 6 பேரை, 'இவர்கள்தான் குண்டு வைத்துள்ளார்கள்' என்று கைது செய்கிறார்கள். இங்கேதான் வாதி, பிரதிவாதி ஆகின்ற ஒரு சூழ்நிலை

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1999 ஏப்ரல் 7

ஏற்படுகிறது. குண்டு இருப்பதைப் பற்றித் தகவல் கொடுத்தவர்களையே கைது செய்து சிறையில் அடைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு 3 நாட்கள் விசாரணை நடத்தி, அவர்கள் நிரபராதிகள் என்று சொல்லி, 6 பேரையும் விடுதலை செய்கிறார்கள். இது சம்பந்தமாக தனி விசாரணை வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, குமரி மாவட்டத்தினுடைய ஜமாத்துக்களுடைய கூட்டமைப்புத் தலைவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய ஜி.எம். ஷா அவர்களுடைய தலைமையில் மிகப்பெரிய போராட்டம் அங்கே நடைபெறுகிறது. அதற்குப் பிறகு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பேராயர் எஸ்றா. சற்குணம் அவர்கள் அங்கே வருகை தந்தார்கள். அவர்களிடமும் விசாரணை பெருமக்கள் போய், எங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை; நியாயம் வேண்டும்; தனியாக ஒரு Team-ஐப் போட்டு விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு C.B., C.I.D.-க்கு வழக்கு மாற்றப்படுகிறது, என்று சொல்லி C.B., C.I.D.-க்கு வழக்கு மாற்றப்படுகிறது. ஆனால் அங்கேயும் நியாயமான விசாரணை நடைபெறாமல், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களையே தொடர்ச்சியாகத் துன்புறுத்தும் சூழ்நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில், 31-11-1998 அன்று புதுக்கடை காவல் நிலையத்தினுடைய காவலர்கள் வாகனப் பரிசோதனை நடத்திக் கொண்டு வருகிறபோது, பொன்னப்பன் என்கிற, இந்து முன்னணியினுடைய தலைவர், முன்சிறை ஒன்றிய இந்து முன்னணித் தலைவர், அவரும் அவருடைய சகோதரரும், ஆட்டோ டிரைவர் ஒருவரும் ஆட்டோவிலே வந்து கொண்டிருக்கிறபோது, கிட்டத்தட்ட 2,000-க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்கள், டெட்டனேட்டர் குச்சிகள் அந்த ஆட்டோவிலிருந்து கைப்பற்றப்படுகின்றன. கைப்பற்றப்பட்டு, அவர்களிலே பொன்னப்பனை மாத்திரம் விடுதலை செய்து மற்ற இரண்டு பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்து முன்னணித் தலைவர் என்கிற காரணத்தால் அவர் விடுதலை செய்யப்படுகிறார். இது எதற்காகக் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால், எங்களுடைய விசாரணையில் தெரிய வந்தது, டிசம்பர் 6 ஆம் தேதி...



1999 ஏப்ரல் 7]

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள். இன்னும் 7 பேர் பேசவேண்டும். சுருக்கமாகப் பேசுங்கள் என்றால் நீங்கள் இழுத்துக் கொண்டிருக்கிறீர்களே?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது நாங்கள் பேசுவதே நியாயம் வேண்டும் என்பதற்காகத்தான். எங்களுடைய கருத்துகளைச் சொன்னால் அது சரியாக இருக்கும் என்று சொன்னேனே தவிர, நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற உணர்வு அல்ல; தொடர்ச்சியாக நடந்த நிகழ்ச்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக. அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதி வேறு. எனவே, டிசம்பர் 6 ஆம் தேதி இஸ்லாமியர்களுடைய ஒட்டுமொத்த எதிர்ப்பையும் தெரிவிப்பதற்காக ஏதோ சதித் திட்டம் செய்வதற்கு இந்தக் குண்டுகள் வைத்து வேலை செய்கிறார்கள் என்ற உணர்வைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் இன்னும் ஒன்றை நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால், இந்த நிகழ்வுகள் நடைபெறுகிறபொழுது எந்தவிதமான Casualties and deaths அங்கு நடைபெறவில்லை. மாறாக, ஒரு பீதி மக்கள் மத்தியிலே - வெடிகுண்டு, வெடிகுண்டு, வெடிகுண்டு என்ற பீதியைத்தான் - பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். இஸ்லாமியர்கள் என்று சொன்னால், தீவிரவாதிகள் என்கிற உணர்வைப் பரப்ப வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல கடந்த மாதம் 18 ஆம் தேதி நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீதிமன்றத்திலே வழக்கறிஞர் உரையாடுகிறபொழுது, ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்; அதை அவையிலே தள்ளுபடி செய்துவிட்டார்கள்: எனவே, இவர்களுக்கு ஜாமீன் கொடுக்கக்கூடாது என்று இப்படியெல்லாம் நீதிமன்றத்திலே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். C.B., C.I.D. இன்ஸ்பெக்டரை விசாரிக்கிறபோது, 'நாங்கள் இன்னும் 4 தினங்களிலே குண்டுகளை உங்களிடம் ஒப்படைப்போம், எனவே இவர்களை ஜாமீனில் விடக் கூடாது' என்று அவர் சொல்கிறார். அவர் சொன்ன மறுநாளைக்கு மறுநாள் அதாவது 18-3-1999 அன்று சுமார்

2 மணி அளவிலே தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே அசோகன் என்கிற நபர் வெடிகுண்டு வெடித்து இறந்துவிடுகிறார். விசாரித்தபொழுது அவர்கள் சொல்கிறார்கள், மீன் பிடிப்பதற்காகச் சென்ற நேரத்திலே அங்கே குண்டு வெடித்து இறந்து விட்டதாகச் சொல்கிறார். உண்மை அதுவல்ல. எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி அலெக்ஸ் த/பெ. சவரிமூர்த்தி, பாஸ்டியன் த/பெ. ராஜகுமார் மற்றும் அசோகன் ஆகிய மூன்று பேருமாக இந்தக் குண்டுகளைக் கொண்டுவந்து புதைத்து வைப்பதற்காகச் சென்றிருக்கிறார்கள். சென்ற இடத்திலே கால் தடுமாறி கீழே விழுந்து அதிலே ஒன்று burst-னால்தான் அசோகன் என்கிற நபர் இறந்து இருப்பதாக எங்களுக்குச் செய்தி. ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் கடற்கரை கிராமங்களில் இஸ்லாமியர்களோ அல்லது இந்துக்களோ இவர்களில் ஒருவர்கூட மீன் பிடிக்கச் செல்வது கிடையாது. அங்கே கடற்கரையில் வாழுகின்ற மீனவர்கள் மட்டும்தான் மீன் பிடிப்பார்கள். அதிலும் இப்படிப்பட்ட ஜெலட்டின் குச்சிகளைப் போட்டு குண்டுகளைப் போட்டு மீன் பிடிக்கிற பழக்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதியில் எங்குமே கிடையாது. எனவே, குண்டுகளை மறைத்து வைப்பதற்குச் சென்றவர்கள்தான் இப்படிப்பட்ட விபத்திலே மாட்டி மரணமடைந்து இருக்க முடியும் என்கிற செய்தி இருந்து கொண்டிருக்கிறது.

அதைப்போல ஜோர்டான் என்கிற பையன், ஒரிஸ்ஸாவில் கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டார்கள் என்கிற காரணத்திற்காக ஒரு கண்டனத் தீர்மானம் போட்டு, ஊர்வலத்தை நடத்திச் செல்கிறான். ஊர்வலத்திலே 50 பேர் செல்கிறபோது, 3, 4 பேருந்துகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. உடைத்தவர்கள்மீது வழக்கு போடுவதில் தவறு கிடையாது. அவர்கள் ஏதோ ஒன்றிற்கு அனுதாபமாகப் போராட்டம் நடத்தி தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் இப்படிச் செய்வது சரி என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் அவர்கள் பேருந்துகளை உடைத்தார்கள் என்கிற விதத்திலே வழக்குகள் போட்டு இருக்கலாம். மாறாக, அவனைக் கைது செய்து, அந்தப் பையனுடைய வீட்டிலிருந்து வெடிகுண்டு எடுத்ததாக போலீஸார் வழக்குப் பதிவு செய்கிறார்கள். அவனைத் தடாவிலே உள்ளுக்குத் தள்ள வேண்டும் என்று வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட, வெடிகுண்டுகளை காவல்துறையே வைத்து வழக்குகள் போடுகின்ற ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டு இருப்பதை ஏற்க இயலாது. எனவே, சிறுபான்மைப் பிரிவினருக்குக்



களங்கம் ஏற்படுத்தும் விதத்திலே அவர்கள் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்தும் விதத்திலே, இஸ்லாமியர்கள் தீவிரவாதிகள் என்கிற நோக்கோடு மக்கள் பார்க்க வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற அந்த இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கு உடந்தையாக இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் மீது C.B., C.I.D.-யிலேயே Special Investigation Team-ஐ வைத்து, இதற்கு முன்னுரிமை கொடுத்து விசாரிக்க வேண்டும். ஏனென்றால், சிறுபான்மை மக்கள் உங்கள் மீது நம்பிக்கை இழந்து போகாத விதத்தில் நியாயம் வழங்க வேண்டும். யார் தவறு செய்திருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களை நீங்கள் கண்டு எடுப்பதில், கண்டுபிடிப்பதில் இரண்டொரு கருத்துக்கு இடமில்லை. எனவே, தனியாக ஒரு Special Investigation Team - போட்டு, அந்த வெடிகுண்டுப் பொருட்களைக் கண்டுபிடிக்க அமைக்கப்பட்டிருக்கிற குழுவின் மூலம் அதைப்பற்றி விசாரித்தால் சிறப்பாக இருக்கும். பாரபட்சமற்ற விசாரணை நடைபெறும் என்று நம்புகிறோம். ஆகவே அதற்கான ஆணையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்துத்தர வேண்டுமென்று வேண்டுகோள் வைத்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், தயவுசெய்து விரைவில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. விவரங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் முஸ்லீம்களில் ஒரு சிலர் தீவிரவாதத்திற்கு இரையாகிவிட்டார்கள் என்பதனாலேயே முஸ்லீம்கள் எல்லோருமே தீவிரவாதிகளாக இருப்பார்கள் என்ற கண்ணோட்டத்தோடு பிரச்சினையை அணுகுவது பல்வேறு தீய விளைவுகளைத் தோற்றுவித்துவிடும் என்பதை மட்டும் நான் அரசுக்கு எச்சரிக்க விரும்புகிறேன். ஏனென்றால் இந்துக்களோ, இஸ்லாமியர்களோ, இரண்டு தரப்பும் மாநில அரசை எதிர்க்கிற ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. பிரச்சினையை நியாயமாக அணுகுகின்றபோது சில நெருக்கடிகள் வரும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த தேங்காய்ப்பட்டினத்தில் நடந்த சம்பவங்களைப் பொறுத்தவரையில் முஸ்லீம்கள்தான் அந்தப் பிரச்சினையையே போலீஸ் தரப்பிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். புகார் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப் புகார் கொடுத்தவர்களையே தண்டிக்கின்ற முறையில்

வழக்குகள் பதியப்பட்டிருக்கின்றன. அத்தகைய நிலைமைகள் குறித்து மறு விசாரணை செய்ய வேண்டும்.

*முற்பகல் 10.45*

அதேபோல, காவல் துறை மீது ஒட்டு மொத்தமாக நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை, அதிகாரிகளைப் பற்றியும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அழுத்தந்திருத்தமான ஒரு கருத்தில் நான் இருக்கிறேன், I.A.S./I.P.S. அதிகாரிகள் சாதிகளாக, மதங்களாகத்தான் இருக்கிறார்கள். சாதிய, மத முழக்குகளிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ளவே இல்லை. எனவே இவர்கள் நியாயமாக நடந்து கொள்வார்கள் என்று என்னுடைய சிற்றறிவின் எல்லைக்குள் அத்தகைய அனுபவம் இதுவரையில் வரவேயில்லை. எனவே, I.A.S. I.P.S. அதிகாரிகளின் நிலைகளில், அவர்களுடைய அவைகளிலிருந்து நாம மதிப்பீடு செய்துவிடக் கூடாது என்பதை மட்டும் தெரிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தெளிந்த சிந்தனையில், அவர்கள் உண்மையிலேயே இந்த மைனாரிட்டி மக்களின்பால் அக்கறை கொண்டவர்கள் என்பதை நான் உளப்பூர்வமாக உணர்கிறேன். ஆனால் ஒரு விஷயம் கீழே நடந்து கொண்டிருக்கிறது. மைனாரிட்டி மக்கள் இந்த மாநில அரசு தங்களுக்கு ஆதரவாக இல்லை என்று கருதுகிறமாதிரி சில சம்பவங்கள் நடந்துவிடுகின்றன. அத்தகைய சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கு, இந்த விஷயங்களை எல்லாம் கவனத்திலே கொண்டு, தேங்காய்ப்பட்டினத்தைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் இஸ்லாமியர்கள். அந்த இஸ்லாமியர்கள்மீது நடவடிக்கை எடுக்க போலீஸையே இந்து தீவிரவாத அமைப்புகள் நிர்பந்திக்கின்றன என்று நான் அஞ்சுகிறேன் என்பதை மட்டும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நாம் அனைவரும் நடுநிலைமையில் நின்று மிகவும் பொறுப்புடன் நடந்தவற்றைக் கணித்துப் பார்த்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு உதவும் என்று நான் நம்பி சில கருத்துக்களை இந்த அரசுக்கும், அவைக்கும், நாட்டுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக ஒரு சமுதாயமே குற்றப் பரம்பரை சமுதாயம் என்ற ஒரு பெயரைப் பெற, ஒரு அவலத்தைச் சந்திக்க இன்றைக்கு நாட்டில் திட்டமிட்டு காரியங்கள் நடைபெறுகின்றன. இது குறித்து



எல்லோரையும்விட அரசுக்குப் பெரும் பொறுப்பு உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தேங்காய்ப்பட்டினத்தில் நடந்த சம்பவங்கள், குண்டு வெடிப்புக் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல முஸ்லீம் ஜமாத்தின் தலைவரால்தான் முதலிலே போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அந்தத் தகவலின் அடிப்படையில் போலீஸ் விசாரணை செய்து, குறிப்பிட்ட இடத்திற்கு வந்து பார்வையிட்டு, உரியவர்களைச் சந்தித்து, விசாரணை செய்து அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை அவர்கள் புரிந்துகொண்டு, முஸ்லீம் ஜமாத்தினர்களுக்கு நன்றி சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைப் பத்திரிகைகளின் வாயிலாகவே நாம் அறிந்தோம்.

*முற்பகல் 10-50*

தொடர்ந்து, இது தொடர்பாகத் திட்டமிட்ட அடிப்படையில் இஸ்லாமிய சமுதாயம் ஈடுபட்டிருக்கிறது என்பதை விசாரணையின் அடிப்படையாக வைத்து இஸ்லாமிய சமுதாயத்தை களங்கப்படுத்த வேண்டுமென்று எண்ணுபவர்கள் சிலர், போலீஸ் துறையையே தங்களுடைய தகாத எண்ணத்திற்கு ஆளாக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் எடுத்துக்கொண்ட சில முயற்சிகளின் விளைவாகத்தான் படிப்படியாக போலீஸ் துறையிலேயே மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். குண்டு வெடித்த இடம் இடுப்பு அளவிற்கு, அதற்கு மேலும் மார்பளவிற்குத் தண்ணீர் இருக்கின்ற இடம். அந்த இடத்திலே குண்டு போட்டால்கூட வெடிக்காது என்பது நிபுணர்களுடைய கருத்து. ஆனால், அந்த இடத்திலேதான் குண்டு வெடிப்பதற்கு அல்லது குண்டுகளைத் தேக்கி வைத்து, ஏதோ ஒரு எதிர்காலத்தில் சதி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் முஸ்லீம்கள் தெரியாமல் வைத்து, சில இடங்களில் தெரியாமல் சதித் திட்டங்களைத் தீட்டுவதற்காக மறைத்து வைத்திருந்த குண்டு வெடித்தது என்றெல்லாம் கூறப்படுவது; நீண்ட நாட்களுக்குப் பிறகு நன்றி சொல்லிய போலீசே, பிறகு யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக, தங்களுடைய பூர்வாங்கமான விசாரணையின் அடிப்படையில் கண்டுபிடித்த உண்மையை மாற்றி, இஸ்லாமிய சமுதாயத்தைக் கேவலப்படுத்த, குற்றப் பரம்பரை என்று நிரூபிக்க, தெரிந்து திட்டமிட்டு, யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக அவர்களைத் திருப்திப்படுத்த, இத்தகைய ஒரு தகாத காரியத்தை, வேலியே பயிரை மேய்வதுபோலச் செய்திருக்கிறார்கள். இதில் அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. காரணம் என்னவென்றால்,

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1999 ஏப்ரல் 7

இந்தப் போலீஸ் துறை மீது எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேரடிப் பார்வையில் உள்ள ஒரு துறை.

இதிலே இரண்டு விதமாக இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். போலீஸ் துறையிலேகூட சில கருப்பு ஆடுகள் இருக்கிறார்களோ என்பது என்னுடைய சந்தேகம் மட்டுமல்ல; அதுகுறித்து நான் மிகவும் தெளிவாகவே இருக்கிறேன். இந்த ஆட்சிக்கு விரோதமாக சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்; அதுவும் குறிப்பாக, யார் இந்த ஆட்சியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அதுவும் குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை யார் உள்ளார்ந்த முறையில் நேசிக்கிறார்களோ அவர்களையெல்லாம் அவரிடத்திலேயிருந்து பிரித்துவிட வேண்டுமென்ற எண்ணம் உடைய சிலபேர் அந்தத் துறையிலேயே இருக்கிறார்கள் என்பதை நான் மறைத்துப் பேச விரும்பவில்லை, குற்றம் சாட்டுகிறேன். இட்டுக்கட்டிய காரணங்களைக்கூறி முஸ்லீம்களை குற்றப் பரம்பரையினர் என்று பரவலாக நாட்டிலே ஒரு எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சில காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று நான் அவைக்கும் சொன்னேன். யார்மீதும் குற்றம் சொல்லக்கூடிய காரணம் எனக்குப் போன்றவர்களுக்கு இல்லை. போலீஸ்காரர்களும நம்முடைய சகோதரர்கள்தான். அவர்களும் நம்மோடு இருப்பவர்கள்தான். அவர்கள் மீது நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அங்கே இருக்கக்கூடிய ஊனத்தை, அங்கே இருக்கக்கூடிய குற்ற உணர்வை, அவர்கள் திட்டமிட்டுச் செய்கிற காரியங்களை, ஏன் நாம் பகிரங்கமாக அறிவித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதுதான். நான் தெளிவாகச் சொல்கிறேன். அதை யார் செய்திருந்தாலும், அதை ஜமாத்தார் செய்திருந்தாலும், முஸ்லீம்கள் செய்திருந்தாலும் சரியான ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள். ஒரு நாட்டிலே கலகம் விளைவிக்கக்கூடிய கூட்டம் எங்கேயிருந்தாலும் அவர்களைப் பற்றி நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது. அவர்களைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆனால், ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இப்போது என்ன நிலைமை தெரியுமா? உண்மையைச் சொல்கிறேன்

நேரடியாக நான் விசாரித்ததைச் சொல்கிறேன். எந்த ஒரு முஸ்லீம் சென்றாலும் போலீஸ்காரன் பிடிக்கிறான், உன்னைக் குற்றவாளி



1999 ஏப்ரல் 7] [திரு. ம. அப்துல் லத்தீப்]

என்று உள்ளே தள்ளிவிடுவேன்; ஆயிரம் ரூபாய் கொடு, இரண்டாயிரம் ரூபாய் கொடு என்று பேரம் நடக்கிறது. அப்படி அங்கே நடப்பது இரகசியத் துறைக்குத் தெரியாதா? தகவல்கள் வரவில்லையா? நான் இப்படியெல்லாம் முஸ்லீம்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். உங்களைக் கேட்டுக் கொள்வது; இந்த ஆட்சியைக் கேட்டுக்கொள்வது, இவர்கள் குற்றம் நயவுசெய்து குற்றம் இருந்தால் சொல்லிவிடுங்கள். இவர்கள் குற்றம் செய்கிறார்கள் என்று. ஒரு முஸ்லீம், அதுவும் ஜமாத்தார் இப்படிச் செய்யமுடியுமா? முஸ்லீம் ஜமாத்தார் 1400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருக்கக்கூடியவர்கள், ஒரு வணக்க ஸ்தலத்திலே இருக்கக்கூடிய முஸ்லீம்கள் இப்படிக் குண்டு வெடிப்பார்களா? குண்டே அங்கே வெடிக்க முடியாது. மீனவர்கள் குண்டு வெடித்து மீன்களைப் பிடிப்பதற்கு, அவர்கள் சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்தார்களா அல்லது அந்த பொன்னப்பன் என்கின்ற இந்தப் பிரச்சினை வந்த பிறகு, பல பேர் சென்று விசாரணை செய்த பிறகு, சி.பி., சி.ஐ.டி-க்கு அது விடப்பட்டிருக்கிறது. சி.பி., சி.ஐ.டி-க்கு விட்டால், சி.பி., சி.ஐ.டி. யாருடைய ஏஜெண்டாகவோ அதுவும் அங்கே இருக்கக்கூடிய புதிய ஆய்வாளராக வந்திருக்கின்றவர், ஏஜெண்ட்டாகவோ செயல்படத் தொடங்கியிருக்கிறார். அவர் பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறார். இப்படித்தான் நான் செய்துகாட்டுவேன், இங்கே நான் அந்த வார்த்தையைப் பயன்படுத்த விரும்பவில்லை. ** சரியான பாடம் கற்பிப்பேன் என்றெல்லாம் அவன் பேசியிருக்கிறான். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படிப்பட்ட வார்த்தைகளை நயவுசெய்து இந்த அவையிலே சொல்லாதீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் சொல்லவில்லை, அவன் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அவர் என்று சொல்லமாட்டேன். அவன் என்றுதான் சொல்லுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரை 'அவன்' என்று சொல்லுங்கள் அதுபற்றிப் பரவாயில்லை. நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நீங்கள் தோழமைக் கட்சி.....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தோழமைக் கட்சி என்று சொன்னால் மனிதாபிமானமே இல்லாமல் போய்விடுவதா நான் இந்த சமுதாயத்திற்காக எதையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். ஒரு அநீதி நடந்தால் அந்த அநீதிக்கு என்ன பரிகாரம் என்று கூடக் கேட்கக்கூடாதா? எத்தனை நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எத்தனை நாட்களாக நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம்? தயவுசெய்து நான் சொல்கிறேன் நீங்கள் நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுக்கச் சொன்னால் இந்த நடவடிக்கை மட்டும் அல்ல அந்த ஆய்வாளர், அந்த C.B., C.I.D., ஆய்வாளர் இப்படிச் சொன்னதற்கு, நேற்று யாரோ, எப்படியோ நடந்து கொண்டார்கள் என்பதற்காக சரியான விசாரணை இல்லாமல் கமுதியில் நடந்ததற்கு போலீஸ்காரர்மீது நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள். We want justice; we want effective action; otherwise we don't want anything. இந்த உறுப்பினர் பதவியைக்கூட ராஜிநாமா எல்லாவற்றையும் ராஜிநாமா செய்துவிட்டுப் போகத் தயாராக இருக்கிறோம். எங்களுக்குத் தேவையில்லை. எனவே முதலமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் வேண்டுவது ** என்று சொன்னான். அப்படியே அங்கே இருக்கின்ற பெண்களை எல்லாம் கேவலப்படுத்தினான். யாரோ சொல்கிறார்கள் எனவே யார் ஆளுகிறார்கள் என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. எனவே தயவுசெய்து நீங்கள் எதுவேண்டுமானாலும் முடிவெடுங்கள். ஆனால் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். எங்களுக்கு மானம் வேண்டும். நாங்களும் இந்த நாட்டிலுடைய அமைதியில் அக்கறை கொண்டிருக்கிறோம். நாங்களும் சரியான சட்டப்படி நடக்கக்கூடியவர்கள். தொடர்ந்து எங்களை இப்படி கேவலப்படுத்திக் கொண்டிருப்பது, எங்களை இப்படி கைது செய்து கொண்டிருப்பது சரியில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நான் உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன் இந்த அவையிலே இருப்பதைக்கூட நான் விரும்பவில்லை. நாங்கள் ராஜிநாமா செய்துவிட்டு போகிறோம். ஏனென்றால் எவனோ செய்கிறான், எவனோ செய்கிறான் என்பதற்காக எங்களைத் திட்டுகிறார்கள். நீங்கள் எல்லாம் இருக்கிறீர்களே, என்னடா செய்கிறீர்கள் என்று ஊர், ஊராகக் கேட்கிறார்கள். தயவுசெய்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வேறு ஏற்பாடு செய்யுங்கள். நீதி வழங்குங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



முஸ்லீம்கள் என்றால் அவர்கள் ஏதோ குற்றப் பரம்பரை என்ற நிலையில் நானும் அதிலே உட்படுகிறேன். நாங்கள் அப்படிப்பட்ட ஆட்களா? சாதாரண அப்பாவிகளை எல்லாம் குண்டு வைத்துக் கொல்லக்கூடியவர்களா? விட்டுக் கொடுக்கத் தெரியாதவர்களா, தாங்கிக்கொள்ள தெரியாதவர்களா? தயவு செய்து நான் கேட்கிறேன் முதலமைச்சர் அவர்களை We don't want even this representation in this House; it is of no avail *(குறுக்கீடு)* அது ஏதோ நான் முடிவு எடுக்காவிட்டால் தோழமைக் கட்சி, என்று சொல்கிறார்கள். தோழமைக் கட்சி, அதனால் தான் நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப், நீங்கள் நீண்ட நாள் உறுப்பினராக இருக்கிறீர்கள். கொஞ்சம் நிதானமாகப் பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** என்னால் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் சொல்கிறேன். எனக்கு இப்போது உடம்பு வேறு சரியில்லை. உடம்பும் சரியில்லை; உள்ளமும் சரியில்லை. ஆகையால் தயவுசெய்து நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இதற்காக ஒரு முடிவு செய்யாவிட்டால் இஸ்லாமிய சமுதாயம் எந்த விளைவுகளையும் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறது. மானத்தைவிட உயிர் பெரிதல்ல. எங்களைக் கேவலப்படுத்துகிறார்கள். நாங்கள் வன்முறையாளர்கள் என்று சொல்கிறார்கள். மசூதியிலே இருக்கின்ற முத்தவல்லிகூட குண்டு வெடிக்கிறான் என்று சொல்கிறார்கள். குண்டு வெடித்து அப்பாவிகளைக் கொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்கிறேன் இப்பேர்ப்பட்ட கூட்டத்தினரின் பொறுமைக்கும் எல்லை உண்டு. பொறுமை கடலினும் பெரிது. ஆனால் பொறுமைக்கும் எல்லை உண்டு என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் யாராக இருந்தாலும் நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது தயவுசெய்து நாங்கள் குற்றவாளிகளா? எங்கள் ஜமாத் தலைவர் இதைச் செய்தாரா? இருந்தால் ஒரு தாட்சண்யம் இல்லாமல் சொல்லுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். இந்த C.B., C.I.D. ஆய்வாளரை மாற்றுங்கள். முறையாக இங்கே நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லிருப்பதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருப்பதைப் போல, அதன்படி நடவடிக்கை எடுங்கள். இல்லையென்றால், நாங்கள் நம்பிக்கை இழந்துவிடுவோம்.

இந்தச் சட்டமன்றத்தின் மீதும், எல்லாவற்றின் மீதும் நாங்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டினம் நிகழ்ச்சி, இவ்வளவு சூட்டோடு இந்தச் சட்டமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் மற்ற அரசு அதிகாரிகளும், மிக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அருகிலே, 43 தேங்காய் குண்டுகளை (குறுக்கீடுகள்) நாகப்பட்டினம் மாவட்டம்....(குறுக்கீடுகள்) மன்னிக்கவும், நாகர்கோயில் அருகிலே, தேங்காய்ப்பட்டினத்திலே 43 குண்டுகளை 3 சிறுவர்கள் கண்டு பிடித்து, அதை முறையாக முஸ்லீம் சமுதாயம், சிறுபான்மை சமுதாயம், காவல் துறைக்குச் சொல்லியும், முதல் நாள் காவல் துறை அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், மறுநாள் உயர் போலீஸ் அதிகாரிகள் வந்து அதன்மீது நடவடிக்கை எடுத்து, அதன் பிறகு ஒருசிலரை விசாரணைக்காகக் கைது செய்து பிறகு விடுதலை செய்து, நவம்பர் மாதம் 9 ஆம் தேதி, தமிழக அரசு C.B., C.I.D.-க்கு இந்த வழக்கை மாற்றியிருக்கிறது. இந்த வழக்கினுடைய தன்மைகளை, நம்முடைய சட்டமன்றத்தின் மூத்த உறுப்பினர் அருமை அண்ணன் லத்தீப் பாய் அவர்கள் மிக உணர்ச்சிபூர்வமாக, உணர்வுபூர்வமாகப் பேசினார்கள். 1977-வது ஆண்டிலே அவருடைய உணர்ச்சிமிக்க பேச்சினைக் கேட்டவன் என்ற முறையிலே, இன்று அந்த உணர்ச்சிகளைக் கண்டு மெய்மறந்து நான் சொல்கிறேன்; சிறுபான்மை சமுதாயம், இதிலே மிகவும் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. அங்கே முஸ்லீம் சமுதாயம் மீன்பிடிக்க செல்வதில்லை. மீன்பிடிக்கக்கூடிய தொழிலை முஸ்லீம் சமுதாயம் அந்தப் பகுதியிலே செய்வதில்லை என்ற ஒரு குறிப்பினை இந்த அரசு தெரிந்து





வைத்திருக்கிறது என்று எண்ணுகிறேன். இருப்பினும், அருமை நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல, ஒருசில உயர் அதிகாரிகள், அவர்கள் சார்ந்த சமுதாயத்தை, சாதியைத் தூக்கி நிறுத்துவதற்காக, இதுபோன்ற பொய் வழக்குகளைப் போடுகிறார்கள். கோவையிலே, முஸ்லீம்கள் குண்டு வைத்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இந்தச் சம்பவத்தைப் பற்றித்தான் பேசுகிறேன். அந்த முஸ்லீம் சமுதாயத்திற்குத் தமிழ்நாட்டிலே நிறைய இடையூறுகள் இருக்கின்றன என்பதை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி உணர்ந்து, இந்த அவையிலே, அந்தச் சிறுபான்மை சமுதாயத்திற்கு ஒரு விடிவுகாலம் ஏற்படுத்தி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேங்காய்ப்பட்டினம் தேங்காய் குண்டு — பிறகு மாங்காய் குண்டு வெடித்து, ஒரு ஆள் இறந்துபோய், இன்னொரு ஆள் கால் ஒடிந்துபோய் விட்டது. அதனுடைய நிகழ்ச்சிக்குள்ளே முழுவதும் நான் வரவிரும்பவில்லை. 9-9-1998-லேதான் இந்தத் தேங்காய் வெடிகுண்டு — அதை அந்தச் சிறுவர்கள் கண்டுபிடித்து, காவல் துறையினருக்குச் சொன்னார்கள். அன்றைய எஸ்.பி. போய் பார்த்து அந்தக் குண்டினைப் பரிசோதித்த போது, அதில் ஒன்றும் பெரிய விவகாரம் இல்லையென்று அவரே சொல்லிவிட்டார். ஆனால், அதற்குப் பின்னால் அவர்களாகவே, காவல் துறைக்கு தகவலைக் கொடுத்து, யார் யார் எல்லாம் வேண்டுமென்று கேட்டார்கள். கொஞ்சம் பேரைக் கொடுத்தார்கள்; விசாரித்தார்கள். இதையெல்லாம் செய்து பிறகு ஒரு நபரை மட்டும் வைத்துக்கொண்டார்கள். அந்த நபரைச் சரியாக தோல் உரித்து, ஜமாத்தார்தான் இந்தக் குண்டை வைத்தார்கள் என்ற ஒரு அறிக்கையை வாங்கிக்கொண்டு ஒரு வழக்கை ஜோடித்திருக்கின்றார்கள். இது ஒரு நிகழ்ச்சி.

முற்பகல் 11-05

இரண்டாவது பொன்னப்பன் விவகாரம். தேங்காய்பட்டணம் பக்கத்திலே இருக்கக்கூடிய பனங்காலை என்ற ஊரிலே, ஒரு ஆட்டோவை மறித்தபோது, அந்த ஆட்டோவிலே பொன்னப்பனுடன் சேர்த்து ஏராளமான வெடி குண்டுகள், வெடிகுண்டு தயாரிக்கின்ற பல்வேறு உபகரணங்கள், மருந்துகள் இவை எல்லாம் கைப்பற்றப்பட்டன. புதுக்கடை காவல் துறையினர் அவரை அழைத்துச் சென்றார்கள். என்னுடைய வாதமெல்லாம் ஏன், இந்த பொன்னப்பனை விடுதலை செய்தார்கள் என்பதுதான். அதற்குக் காரணம் என்ன ? சாதாரணமாக கொஞ்சம் வெடி மருந்துகளை அனுமதியில்லாமல் வைத்திருந்தாலே காவல் துறையினர் வழக்கு பதிவு செய்வது வழக்கம். ஆனால், அப்படிச் செய்யாமல் 5 மணி தாண்டி அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், அதற்கு பின்னணி ஒன்று உண்டு என்று நான் கருதுகின்றேன். அவர் இந்து முன்னணியைச் சார்ந்தவர் என்றும் அந்த வட்டாரத்தினுடைய தலைவர் என்றும் பகிரங்கமாகக் கூறப்படுகின்றது. என்னுடைய நண்பர் வேலாயுதன் அவர்களிடம் இது குறித்து கேட்டபோது, அவருக்கும் இந்து முன்னணிக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும்கூட, இதற்குப் பின்னால் கூட அவர் பொதுக் கூட்டம் போட்டு பேசியிருக்கின்றார் என்று ஒரு தகவல் இருக்கிறது. இது இரண்டாவது நிகழ்ச்சி.

மூன்றாவது, பத்திரிகைகள் முழுவதிலும், மீன்பிடிக்க போன இடத்திலேதான் இந்தக் குண்டு வெடித்து இறந்துவிட்டார்கள் என்று செய்தி உள்ளது. தேங்காய்பட்டினத்தில் இருக்கின்ற சிறுபான்மை இஸ்லாமியர்கள் யாரும் குண்டு வைத்து மீன்பிடிப்பதில்லை. ஊரிலே ஒன்றைச் சொல்வார்கள், தோட்டா போட்டு மீன்பிடிப்பது என்று. ஆனால் மீனவர்கள் கடலிலே குண்டு வீசி மீன் பிடிப்பதில்லை. இது தாமிரபரணி ஆறு சங்கமம் ஆகின்ற பகுதிக்கு அருகிலே இருக்கின்ற இடம். ஆற்றிலே ஒரு கிலோமீட்டர் வடக்கே வருகின்றபோது, அங்கேதான், இப்படிப்பட்ட தொழிலைச் செய்பவர்கள் இருக்கிறார்கள், அது வேறு. மீனவர்கள் செய்வதில்லை. இஸ்லாமியர்களும் செய்வதில்லை என்பது ஒரு உண்மையான விஷயம்.

எனக்கு முன்னால் பேசிய டாக்டர் குமாரதாஸ் அவர்கள் சொன்னது மாதிரி, இதற்குப் பின்னணி என்பது அங்கே ஒரு கலவரத்தை, அல்லது ஒரு பீதியைத் தூண்டுவதற்காக, சமூக விரோதிகள்



செய்த ஒரு நிலையினுடைய பின்னணி. அது இந்து முன்னணியாகவும் இருக்கலாம், அல்லது வேறு ஒரு முன்னணியாகவும் இருக்கலாம். எனவே, குண்டு வைப்பதற்கு அங்கு சென்ற நோக்கிலேதான் அது வெடித்து அந்த ஆள் விழுந்து மரணம் ஏற்பட்டது. ஏனென்றால், சாதாரணமாக ஆற்றோரத்திலே தோட்டா போட்டு மீன்பிடிப்பதற்குப் போனால், மூன்று, நான்கு அடி தள்ளித்தான் அந்தத் தோட்டாவை கையாளுவார்கள். ஆனால், இறந்தவருடைய பிணம் சுமார்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** 10 அடி தூரத்திற்கு அப்பால்தான் இருந்திருக்கிறது. எனவேதான் இதிலேதான் சந்தேகம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி முடிவடைந்தும் ஒரு கார் அந்தப் பிணத்தை எடுத்துச் செல்வதற்காக வந்திருக்கிறது. அப்போது, அந்த ஊர் மக்கள், அந்தக் காரைத் தடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சி முழுவதும் காவல் துறைக்கு சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு என்னவென்று பதிவு செய்திருக்கிறார்கள் என்பது தெரியாது. எனவே, இதற்கு பின்னணி என்ற வகையில், அதற்குப் பின்னாலே இந்த ஜமாத்தாரில் இருக்கக்கூடியவர்கள் முன்ஜாமீனுக்காக நீதிமன்றம் சென்றார்கள். ஆனால் ஒரு வழக்கை ஜோடிக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை விசாரிக்கின்ற ஒரு C.B., C.I.D., இன்ஸ்பெக்டர் "ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்ற வகையிலே கொடுத்திருக்கின்றார்கள். அது சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டு விட்டது" என்று நீதிமன்றத்திலே 3 தடவை இவர்களை ஜாமீனில் விடுவது குறித்த பிரச்சினை எழுந்தபோது, அதற்கு பதிலாக சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு அறிக்கையை காவல் துறையினுடைய அதிகாரி ஒருவர் கொடுப்பாரேயானால், இதிலேதான் எங்களுக்கு முழுமையான சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவேதான் இவருக்கும் இந்து முன்னணிக்கும் தொடர்பு இருக்கின்றதா என்பதைக்கூட விசாரிக்க வேண்டும். நம்முடைய சட்டமன்றத்திலே விவாதிப்பதற்கு முன்னால் இப்படி ஒரு அறிக்கையை அவர் கொடுத்திருக்கின்ற காரணத்திற்காக அந்த அதிகாரி மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். அந்த C.B., C.I.D. இன்ஸ்பெக்டர் தகுதியானவர் அல்ல என்பது எங்களுடைய உணர்வு. ஏற்கெனவே, நான் இது சம்பந்தமாக விளக்கமான கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொடுத்திருக்கின்றேன். எனவே, இது சம்பந்தமாக விசாரித்து இந்து

முன்னணியைச் சேர்ந்தவரோ, அல்லது இஸ்லாமிய முன்னணியைச் சேர்ந்தவரோ என்று இல்லாமல் மதச்சார்பற்ற அதிகாரிகளைக் கொண்டு முழுமையாக இதனை விசாரிக்கின்றபோதுதான் இதனுடைய உண்மை புலனாகும். அப்படி உண்மை புலனாகும்போது, யார் குற்றம் செய்திருந்தாலும் சரி, அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அதற்குரிய தண்டனை வழங்க வேண்டும். அந்த வட்டாரத்தில் இருக்கின்ற இஸ்லாமிய பெருமக்கள் என்று சொல்லும்போது, எந்தவிதமான தீவிரவாத அமைப்போடும் அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. மூன்று முறை அந்தப் பகுதியிலே சென்று நான் நேரிடையாக எல்லா துறைகளிலும் விசாரித்து வந்தேன் என்ற முறையில் மிக அழுத்தம் திருத்தமாக இந்தத் தகவலைச் சொல்லி, இந்த அடிப்படையிலே அரசாங்கம் ஒரு விசாரணை நடத்த வேண்டும், அந்த அப்பாவி இஸ்லாமியர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டு, இந்த விஷயங்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் என்பதல்ல பிரச்சினை. நாட்டு மக்கள் அமைதியாக வாழ வேண்டும். அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்குதடையில்லாத நடவடிக்கைக்கு ஆவன செய்ய வேண்டும். சிறுபான்மை, பெரும்பான்மை என்பதல்ல பிரச்சினை. அனைத்து மக்களும் அமைதியாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். முதல் நாள் இந்த குண்டு வெடித்த தகவல் கிடைத்தவுடன் மாலை 3½ மணிக்கு இந்த குண்டு வெடித்த தகவல் சொல்லப்பட்டது. அடுத்த நாள் காலை 12 மணிக்குத்தான் காவல் துறை அங்கு சென்றிருக்கிறது என்று சொன்னார்கள். முதலில் வந்த சந்தேகம் உண்மையாக தீவிரவாதிகள் தப்பிச் செல்வதற்கு காவல் துறை கால அவகாசம் கொடுத்ததோ என்ற ஒரு சந்தேகம். இரண்டாவது, 3 பைக்குகளில், இரண்டு கேரளத்தைச் சேர்ந்த அதாவது கேரள Registration bike 3 பைக்குகளில் 6 பேர் வந்திருக்கிறார்கள். புதுக்கடை காவல் நிலையத்தில் 6 பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



12 மணிக்கு கைது செய்து, இரவு 1 மணிக்கு 6 பேரும் விடுதலையாகி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அங்கிருக்கக் கூடிய பொது மக்களுக்கு சந்தேகம் வலுப்பதற்கு காரணமாகி விட்டது. முதல் நாள் தகவல் கிடைத்து, அடுத்த நாள்தான் காவல் துறை சென்றது. சென்று 13 வெடிகுண்டை எடுத்திருக்கிறது. சில நாட்கள் கழித்து 3 பைக்குகளில் வந்தவர்கள் கைது செய்யப்பட்டு, இரவோடு இரவாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, அந்த குண்டுவெடித்த அந்த இடம் ஒரு தென்னந்தோப்பு. அந்தத் தென்னந்தோப்பு உரிமையாளரை அழைத்து விசாரிக்கவில்லை.

இன்னொன்று, அந்தத் தென்னந்தோப்பிற்குச் செல்வதற்கு சாதாரணமாக சாலை வழியாகச் செல்வதைவிட மக்கள் பயன்படுத்துவது பொழிக்கரையைத்தான் பொழியில் கடந்து செல்வதற்கு படகு போன்ற ஒன்றை ஓட்டித்தான் ஆட்களை கடத்திக் கொண்டுவிடுவது வழக்கம். அந்தப் பொழிக்கரையில் படகு விடக்கூடியவர்கள், படகு ஓட்டக் கூடியவர்கள் இதுவரை விசாரிக்கப்படவில்லை.

அந்த பொன்னப்பனுடைய பிரச்சினையைச் சொன்னார்கள். பொன்னப்பன், அவருடைய தம்பி இரண்டு பேருமே பாறை வெடி வைக்கக் கூடிய அந்த மருந்து லைசென்ஸ் வைத்திருப்பவர்கள். அவர்களை காவல் துறையினர் கைது செய்து இருக்கின்றார்கள். வீட்டில் சென்று பார்த்து இருக்கின்றார்கள். லைசென்ஸ் எல்லாம் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விசாரித்து, விட்டுவிட்டதாகத் தகவல். இரண்டாவது, 22-2-1999 அன்று இந்த ஆண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன். இந்த ஆண்டு 22-2-1999 காவல் துறையினர் விசாரணையில் முதலில் இருந்த சந்தேகம் பொதுமக்களுக்கு வலுவடைந்தவுடன் சி.பி.சி.ஐ.டி. விசாரணைதான் வேண்டும் என்று கேட்டதன் அடிப்படையில் அரசாங்கம் C.B., C.I.D.-க்கு உத்தரவிட்டது. C.B., C.I.D.-யினர் 22-2-99 அன்று ஒருவனை கைது செய்து 6 குண்டுகளையும் கைப்பற்றி இருக்கிறார்கள். அதற்குப் பின்னர் சில நாட்கள் கழித்து அங்கிருக்கக்கூடிய அரசியல் கட்சி பிரமுகர்கள் சிலர் எங்களுக்கு முன் ஜாமீன் வேண்டுமென்று நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார்கள்.

[திரு. சி. வேலாயுதன்] [1999 ஏப்ரல் 7

முன் ஜாமீன் கிடைக்கவில்லை. இதற்குப் பிறகு பொது மக்களுக்கு இன்னும் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டு, அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

உண்மையிலேயே, சாதாரணமாக காவல் துறை சமீப காலமாக சற்று நேர்மையாகத்தான் நடந்து வருகிறது என்பது உண்மையாக இருந்தாலும்கூட, அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள், ஜாதித் தலைவர்கள் என்று சொல்லக்கூடிய பிரச்சினை வந்துவிட்டால் காவல் துறை சற்று யோசிக்கத் தொடங்குகிறது. அவர்களைக் கைது செய்தால், அல்லது நடவடிக்கை எடுத்தால் அரசியல் பிரச்சினை வந்துவிடுமோ, ஜாதிப் பிரச்சினை வந்துவிடுமோ, மதப் பிரச்சினை வந்துவிடுமோ என்று ஆலோசிக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இது சமுதாயப் பிரச்சினை. ஏதாவது பணத்தைக் கடத்துகிறான், பொன்னைக் கடத்துகிறான், பவுனைக் கடத்துகிறான் அல்லது தானியங்களைக் கடத்துகிறான் என்று சொன்னால் அது பொருள் சேர்க்க வேண்டுமென்ற கொள்ளை ஆசையினால் என்று வைத்துக்கொள்ளலாம். வெடிகுண்டை எதற்காகக் கடத்துகிறார்கள்? ஆட்களைக் கொல்வதற்குத்தானே? இதை எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், யார் செய்தாலும்கூட, ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு சமூக துரோகி என்று நோக்கத்தோடு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், சமயத் தலைவர்களும், ஜாதித் தலைவர்களும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க ஒத்துழைத்து, அனைத்து மக்களும் நிம்மதியாக வாழ வழிவகுக்க அரசாங்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும். நடவடிக்கை எடுக்க அனைத்து வகையிலும் அரசாங்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும். எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போதைய சூழ்நிலையில் C.B., C.I.D. விசாரணைக்கு வந்ததற்குப் பிறகு நேர்மையாக நடக்கிறது என்று பொதுமக்கள் சொல்கிறார்கள். இதில் பல சந்தேகங்கள்கூட கிளப்பியிருக்கிறார்கள் ஓரளவிற்கு நியாயம் இருக்கின்றது. ஆனாலும்கூட எந்த அளவிற்கு இதில் உண்மையிருக்கிறது என்பதை விசாரித்து, தக்க நடவடிக்கை எடுத்து, உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்து, மேலும் சமீப காலத்தில் நடந்த பிரச்சினைகள் போன்று தமிழகத்தில் எங்கும் வரக் கூடாது என்ற உணர்வோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை, காவல்துறை அதிகாரிகள் எந்தவிதமான பயமும் இல்லாமல் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு, அமைகின்றேன். பாரத் மாதா கீ ஜெய்!



1999 ஏப்ரல் 7]

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்பார்த்தபடியே கன்னியாகுமரியிலே ஏற்பட்ட Tension இங்கேயும் - அவையிலே இந்த விவாதம் வந்தால் - ஏற்படும் என்று அன்றைக்கு நான் சொன்னபடியே Tension-னோடு இந்த கவன ஈர்ப்பு மற்ற மாண்புமிகு உறுப்பினர்களால் கையாளப்பட்டு, பேசப்பட்டிருக்கின்றது. ஏழு மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. இது சிறப்புக் கவன ஈர்ப்பாக, தங்களுடைய பெருந்தன்மையின் காரணமாக எங்களுடைய விட்டுக்கொடுக்கும் தன்மையின் காரணமாக இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது விவாதிக்கப்பட்டிருக்கின்றது.

நான் முதலில் சில விவரங்களை இதுபற்றிக் கூற விரும்புகின்றேன். பிறகு இங்கே ஆவேசமாகவும், உருக்கமாகவும் பேசிய பேச்சுகளுக்கு பதில் சொல்லவும் கடமைப்பட்டிருக்கின்றேன். 9-9-1998 அன்று கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை காவல்நிலைய சரகம் தேங்காய்ப்பட்டினம் கல்லாம்பொத்தையில் அப்துல் ரகுமான் என்பவருடைய மகன் அஜீர் என்பவர் விளையாடிக்கொண்டிருந்தபோது ஒரு நாட்டு வெடிகுண்டை எடுக்கும்போது அது வெடித்ததில் அவர் காயமடைந்தார். இதுகுறித்து தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம் ஜமாத் தலைவர் ஜமாலுதீன் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் புதுக்கடை போலீஸ் குற்ற எண் 664/98, இந்திய வெடிபொருள் சட்டம், பிரிவு 3-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புதுக்கடை காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த ஆய்வாளர் திரு. பாஸ்கரன் இது சம்பந்தமாக விசாரணை செய்து (1) பீர் முகமது, (2) அமீர், (3) ஹுசேன், (4) ஜமீல், (5) மொஹீன் ஆகியோரைக் கைது செய்து, அவர்களிடமிருந்து 43 நாட்டு வெடிகுண்டுகளை தேங்காய்ப்பட்டினம், கல்லாம்பொத்தைப் பகுதியிலிருந்து கைப்பற்றினார் என்பது குறித்து 2 வழக்குகள் புதுக்கடை காவல் நிலையக் குற்ற எண் 66/98 மற்றும் 67/98 — 98 என்றால் போன வருடம் — ஆகியவற்றின்கீழ் பதிவு செய்து, முகமது என்பவரைக் கைது செய்து அவரிடமிருந்து முக்கால் கிலோ கந்தகம், 1400 கிராம் வெடி மருந்துகள், 3-ல் பியூஸ் ஒயர், 15 டெட்டனேட்டர்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது — கூறப்பட்டது என்றுதான் குறிப்பிடுகிறேன். நிச்சயப்படுத்திச்

சொல்லவில்லை என்பதையும் தெரிவிக்கின்றேன். இந்த வழக்கு விசாரணை குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, விசாரணை மேற்கொண்டதில் காவல் துறையினரின் ஒருதலைப் பட்சமாக கைது செய்யப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள் அல்லர் என்று தெரிய வந்துள்ளது. தொடர்ந்து மேற்கொண்ட தீவிர புலன் விசாரணையின் பயனாக 22-2-1999 அன்று [illegible] சேர்ந்த அப்துல் கரீம் என்பவருடைய மகன் [illegible] கைது செய்யப்பட்டு அவருடைய வாக்குமூலத்தின் பேரில் 6 நாட்டு வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டன.

தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம்களுக்கும், முள்ளூர்துறை, இராமன்துறை, இனையம், இனையம் புத்தன்துறை ஆகிய கிராமங்களிலுள்ள மீனவ கிறிஸ்துவர்களுக்குமிடையே 1993 ஆம் ஆண்டு முதல் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம்கள் சிலர் இந்நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரித்ததாக விசாரணையிலே சில தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 8 நபர்களை போலீசார் தீவிரமாகத் தேடி வருகிறார்கள். முஸ்லிம் இனத்தவர்மீது C.B., C.I.D., போலீசார் பொய் வழக்குகள் பதிவு செய்கிறார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அப்படி இருந்தால் உண்மையான குற்றவாளிகள் அல்ல என்று, கைது செய்யப்பட்ட 6 முஸ்லீம்கள், நீதிமன்ற விடுவிக்கப்பட்டிருக்கமாட்டார்கள் என்பதிலிருந்தே இது தெளிவாகப் புரியும். அவர்களும் முஸ்லிம்கள்தான். அவர்கள் உண்மையான குற்றவாளிகள் அல்ல என்று விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாநில குற்றப் புலனாய்வுத் துறை முஸ்லீம்களுக்கு எதிராகப் பொய் வழக்குப் போடுவதாகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு சரியானதாகத் தெரியவில்லை. வழக்குகள் நடக்கும்போது காவல் துறை பாரபட்சம் இன்றி விசாரணை செய்ய வேண்டும் என்றும், சிறுபான்மையினருக்கு எந்தவிதமான துன்புறுத்தலும் கூடாது என்றும் அறிவுரைகள் அரசால் வழங்கப்பட்டு இருக்கின்றன.

(முற்பகல் 11-20)

இதுபற்றி இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் குமாரதாஸ் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. சுப்பராயன் அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் உரையாற்றிய திரு. அப்துல் லத்தீப் அவர்களும், பா.ம.க. சார்பில் உரையாற்றிய திரு. கணேசன் அவர்களும், சி.பி.எம். சார்பில்



உரையாற்றிய திரு. மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. வேலாயுதன் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் முதலில் எடுத்துரைத்த டாக்டர் குமாரதாஸ் அவர்களுடைய அந்தக் கருத்தில் ஒருசில வேறுபாடான கருத்துக்களையும் எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். குமாரதாஸ் அவர்கள் உரையாற்றியபோது, இந்த விவரங்களையெல்லாம் சொல்லவில்லை. அவருடைய சொந்தத் தொகுதி. இருந்தாலும்கூட, சிதம்பரநாதன் என்ற C.B., C.I.D., ஆய்வாளர், நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்ட இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றிய அந்த வார்த்தைகளை அவர் சொன்னாரா என்பதை டாக்டர் குமாரதாஸ் அவர்கள்தான் எனக்கு விளக்க வேண்டும். சொன்னதாகத் தெரியவில்லை. உடனடியாக நான் அதைப்பற்றி விசாரிக்கும்போது, அவர் அப்படிப்பட்ட தவறான வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்று ஏ.டி.ஜி.பி., வி.கே. இராஜகோபாலன் அவர்கள் மூலம் தொலைபேசியிலே கேட்டு அறிந்திருக்கிறேன். அப்படி அவர் சொல்லவில்லை. சிதம்பரநாதன் அவர்கள் இந்து என்றாலும், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அத்தகைய வார்த்தையைப் பயன்படுத்தமாட்டார் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், தமிழகத்திலே சுய மரியாதை இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும், அடுத்தபடியாக நாடார் சமுதாயத்திலும்தான் உருவாயிற்று. அதுதான் அதற்குத் தொட்டில். எனவே, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த சமுதாயத்தினர், அன்றைக்கு ஆதாரபூர்வமாக இருந்து வளர்த்த அந்த சமுதாயத்தினர், இப்படிப்பட்ட வார்த்தைகளை நிச்சயமாகச் சொல்லியிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. யாரோ தவறாக, நம்முடைய திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு அந்த வார்த்தைகளை அவர்கள் சொன்னதாகச் சொல்லியிருக்கக் கூடும். இந்த விசாரணையிலே என்னென்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய வேண்டியது என்னுடைய கடமை.

நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது சொன்னார — எப்போதுமே அது கம்யூனிசத் தத்துவம் — ஐ.ஏ.எஸ். ஆக இருந்தாலும், ஐ.பி.எஸ். ஆக இருந்தாலும் ஒரு ஜாதி என ஒதுக்கி, அவர்களைக் கண்டிப்பது கம்யூனிசம். இல்லாவிட்டால் அவர்கள் கம்யூனிஸ்டுகள் ஆக இருக்க முடியாது (சிரிப்பு). ஆனால் அவர் ஒன்றை அழகாகச் சொன்னார்; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., இது ஒரு ஜாதி பொதுவாகவே எதிர்க்கப்பட வேண்டிய அல்லது புறக்கணிக்கப்பட

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 7]

வேண்டிய ஜாதி வெறியைப் போல அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த கருத்துப்பட இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் இன்னொன்றையும் சொன்னார் முஸ்லீம்கள் எல்லோருமே எப்படி தீவிரவாதிகளாக இருக்க முடியும் என்று அவர் சொன்னார். நான் இங்கே திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். முஸ்லீம்கள் எப்படி எல்லோருமே தீவிரவாதிகளாக இருக்க முடியாதோ, அதைப்போல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் எல்லோருமே தீயவர்களாக இருக்க முடியாது. அதிலேயும் நல்லவர்கள் நிச்சயமாக இருக்க முடியும் என்பதை திரு. சுப்பராயன் போன்றவர்கள் மறந்துவிடக் கூடாது. சி.பி.ஐ. ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், சி.பி.எம். ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், தி.மு.க. ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், காங்கிரஸ் ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் ஆட்சி நடத்த வேண்டும். அதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒருமுறை அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணாவினுடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த ஒருவரைப் இருந்தவரைப் பார்த்துச் சொன்னார்கள் - ஒரு அதிகாரியை அமைச்சர் கொஞ்சம் வேகமாகச் சாடிவிட்டார். அப்போது அண்ணா சொன்னார் அவரைப் பார்த்து- "நீ ஒரு அதிகாரியைச் சாடிவிட்டாய். நீயும் நானும் இருக்கப் போவது 5 வருஷம்தான். அந்த அதிகாரி நிலையாக இருக்கப் போகிறவர். அவர் மேலே எந்தவிதமான குற்றமும் வரவில்லை என்றால், நிலையாக இருக்கப் போகிறவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், இருக்கப்போவது 5 வருஷம்தான். அதனாலே அதிகாரியை வேகமாகப் பேசுவது நல்லதல்ல. அவர்களையும் சேர்த்துத்தான் நாம் அரசாங்கத்தை நடத்த வேண்டும். நிர்வாகத்தை நடத்த வேண்டும்" என்று அண்ணா சொன்ன அந்த தத்துவங்களை எல்லாம் இப்போது எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. நீண்ட நேரம் பேசினால், பொதுப்பணித் துறை விவாதத்திலே பலபேர் பல அணைகளை, தேக்கங்களை, எல்லாம் கேட்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நான் குறுக்கே நின்றவனாக நான் இப்போது ஆகிவிடுவேன். அதற்கு இப்பொழுது அணைகட்டி விட நான் விரும்பவில்லை. இருந்தாலும்கூட, நான் நம்முடைய திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். ஏதோ இந்த அரசாங்கம் முஸ்லீம்களுக்கு விரோதமாகச் செயல்படுவதாக ஒரு தவறான கருத்தை யாரோ பரப்புவதாகச் சொல்லி, அவர்கள்



[1999 ஏப்ரல் 7] [கலைஞர் மு. கருணாநிதி]

பரப்புவதைவிட அதிக வேகமாக இந்த அவையிலே அந்தத் தவறான கருத்தை அவர் பரப்பினார் என்று நான் உள்ளபடியே வேதனைப்படுகின்றேன். இந்தியாவிலேயே முஸ்லீம் லீக் என்றால் வகுப்புவாத இயக்கம் என்று சொன்னவர்களை எதிர்த்துப் பேசிய ஒரேயொரு இயக்கம் திராவிடர் இயக்கம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(முற்பகல் 11-25

முஸ்லீம் லீகிற்கு - இன்றைக்கு முஸ்லீம் லீக், இந்திய தேசிய லீக் என்று இருக்கலாம். - எப்படி தி.மு.க., அ.தி.மு.க. மோதிக் கொள்கிறதோ, அதேபோல இரண்டு லீக்குகளும் மோதிக்கொள்ளலாம், அது வேறு விவகாரம். ஆனால், முஸ்லீம் லீக், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களால் வழிநடத்தப்பட்ட இந்திய யூனியன் முஸ்லீம் லீகைப் பார்த்து வகுப்புவாத இயக்கம் என்று நாடு தழுவிய அளவிலே பிரச்சாரம் நடந்தபோது, இந்தியாவின் தென்கோடி முனையிலே தமிழகத்திலேயிருந்து எதிர்த்துக் குரல் கொடுத்த ஒரே ஒரு இயக்கம் திராவிட இயக்கம்தான், அதுதான், தந்தை பெரியாருடைய தலைமையிலே, அண்ணாவினுடைய தலைமையிலே - எங்களுடைய பொறுப்பிலே அந்தக் காரியத்தை இன்றைக்கும் நாங்கள் ஒழுங்காக நடத்திக்கொண்டுதான் இருக்கின்றோம். இடையிலே சில கோளாறுகள் ஏற்பட்டன. நீங்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? 1998 தேர்தலிலே, நாடாளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம், தமாகா போன்ற இந்தக் கட்சிகள் எல்லாம் கூட்டணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலிலே நின்றபோது தோற்றதற்கு என்ன காரணம்?. ஒரு கோயம்புத்தூர் சம்பவம் அல்லவா? அதை மறந்துவிடக் கூடாது. அந்த கோயம்புத்தூர் சம்பவம் நடக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு டெல்லியிலே பா.ஜ.க. அரசு இருக்குமா? அதற்கு இங்கே இருந்து சலாம் விட்டுக்கொண்டிருக்கின்றவர்கள் இருப்பார்களா? நாம் அல்லவா டெல்லியிலே அரசு எது என்று நிர்ணயிக்கக்கூடிய அந்த வலிமையைத் தமிழகத்திலே பெற்றிருப்போம்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்தக் குறிப்பிட்ட சில பேரால், அந்தத் தீவிரவாதிகளால்தான் கோயம்புத்தூரிலே நடைபெற்ற அந்தச் செயலால்தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய இழிநிலை இந்தியாவிற்கே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்காக, கோயம்புத்தூரிலே சில பேர் தீவிரவாதிகள் இருந்தார்கள் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற முஸ்லீம் மக்கள், இஸ்லாமிய மக்கள் அத்தனை பேரும்

தீவிரவாதிகள் என்கிற புரட்டான்தனமான காரணத்தை எல்லோருக்கும் நான் போட மாட்டேன் என்பதைத் தயவுசெய்து நீங்கள் எல்லோரும் பார்க்க வேண்டும். அப்படி எண்ணுகிறவர்களாக இருந்தால் - அண்மையிலே சென்னைக் கடற்கரையிலே நடைபெற்ற ஒரு மாபெரும் பேரணியில் நானும், பேராசிரியர் அவர்களும் கலந்துகொண்டபோது இஸ்லாமிய இளைஞர்கள் காட்டிய பேரன்பை யாரும் மறந்துவிட முடியாது. தமிழகத்திலேயிருந்து, கேரளாவிலிருந்து, தென்னகத்தின் பல பகுதிகளிலேயிருந்து வந்த இஸ்லாமிய பெருமக்கள் திமுக, தமாகா போன்ற இந்த இயக்கங்கள் சிறுபான்மைச் சமுதாயத்தைக் காப்பாற்றுகின்ற இந்த இயக்கங்களே என்கின்ற அந்த உறுதியைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த உறுதி திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கும் உண்டு என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், அவர் இங்கே வீரமாக, ஆவேசமாகப் பேசியதன் மூலமாக எனக்கு அவர் பதில் சொல்லுவதாக அர்த்தமல்ல. நான் உங்களுக்காக வாதாடவில்லை என்று என் மீது தவறாகச் சொல்கிறார்களே பாருங்கள், நான் எப்படி வாதாடிக் காட்டுகிறேன் என்று அவர் இங்கே வாதாடிக் காட்டியிருக்கிறார் என்றுதான் நான் எண்ணிக்கொண்டிருக்கிறேனே அல்லாமல், தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. பலர் திரு. வேலாயுதன் வரையிலே நம்முடைய திரு. மணி அவர்கள் அத்தனை பேரும் பேசிய அந்தப் பேச்சுக்களையெல்லாம் கவனித்தால், ஒன்றேயொன்று நம்முடைய அருமைக்குரிய நண்பர் சி.பி.எம். உறுப்பினர் திரு. மணி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். இதற்கு உரிய ஒரு விசாரணையை வைக்க வேண்டும் என்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஒரு பெரும் பழி C.B. C.I.D.,-யினுடைய ஆய்வாளர்மீதும் போடப்பட்டிருக்கிறது. சிதம்பரநாதன் மீதும் போடப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் சரியாகத் தெரிந்துகொள்வதற்கு, உண்மை இதுதான் என்று அறிந்துகொள்வதற்கு உங்கள் அத்தனை பேருடைய கருத்துகளின் அடிப்படையில், அதிலும் குறிப்பாக மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டியதன் அடிப்படையில் ஒரு நீதி விசாரணை இதற்கு வைக்கப்படும் என்பதைத் தெரிவித்து இந்த அளவில் அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வதற்குச் சற்று தயக்கம் காட்டியதற்குக் காரணம் எனக்கு இப்போது நன்றாகப் புரிகின்றது. என்னுடைய அறியாமையைத்தான் இப்போது நான் விலக்கிக்கொள்ள வேண்டும். இந்த விவாதத்திலே



பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மூத்த உறுப்பினர். உணர்ச்சியின் காரணமாக ஜாதியைச் சொல்லி மிக இழிவான ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அதைக் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். நான் அதைச் சொல்லவில்லை. யாரோ சொன்னார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவலைத்தான் சொன்னேன். இதை நான் சொன்னதாகச் சொல்வது நீங்கள் என்னை களங்கப்படுத்துவதுபோல் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், நான் சொல்லுவதைக் கேளுங்கள்...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எனக்கு உணர்ச்சி வரும். எனக்கு உணர்ச்சி வருகின்ற காரணத்தால் அறிவை இழக்க மாட்டேன்; அறிவை இழந்து பேசமாட்டேன். இந்த அவையிலே உள்ளவர்கள் நீண்ட காலமாக இதை அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நான் சொன்னது...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எல்லாவற்றையும் தாங்கிக்கொள்வேன்; தாங்கிக் கொண்டிருக்கின்றேன். உங்களுக்கு ஒரு சிறு இழிவு ஏற்பட்டாலும் யாராவது தவறாகப் பேசினாலும், என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதைத்தான் நான் விளக்கிச் சொல்கிறேன். நான் இருந்து என்ன பிரயோசனம்? தயவுசெய்து நான் சொல்கிறேன். அந்த வார்த்தையை நான் பயன்படுத்தவில்லை. யாரோ பயன்படுத்தினார்கள் என்றுதான் எடுத்துக்காட்டினேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த அவைக்கு நன்றாகத் தெரியும். இந்தச் செய்தியை திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொல்லவில்லை. அந்த வார்த்தையை அவர்கள் சொல்லவில்லை. யாரோ சொன்ன சொற்றொடர்களுக்காக, அசிங்கமான, கேவலமான, இழிவான, தரக்குறைவான எந்த வார்த்தையும் இன்னார் சொன்னார் என்றுகூட இந்த அவையிலே பயன்படுத்துவது முறையல்ல. அதை

அனுமதித்துவிட்டால் அவர் இப்படிச் சொன்னார் என்று அதேபோன்று இழிவான வார்த்தைகளை இந்த அவையிலே எல்லா உறுப்பினர்களும் பயன்படுத்துகின்ற உரிமையைப் பெற்று விடுவார்கள். எனவே, இது லத்திப் அவர்கள் சொன்னார்கள் என்று அல்ல; யாரோ சிதம்பரநாதன் என்கின்ற போலீஸ் அதிகாரி சொன்னார் என்று சொல்லப்பட்ட அந்த வார்த்தை - அதனால்தான் நான் அதற்குப் பதில் அளிக்கும்போதுகூட ஒரு தவறான வார்த்தை என்று சொன்னேனே தவிர, அந்தக் குறிப்பிட்ட சொற்றொடரை நான் பயன்படுத்தவில்லை. எனவே, அந்தக் குறிப்பிட்ட சொற்றொடர் அவைக்குறிப்பிலே வராமலும், பத்திரிகையிலே இடம் பெறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அது இந்த அவையினுடைய கண்ணியத்தையும், பத்திரிகைகளுடைய பொறுப்பு, கடமை இவற்றையும் பொறுத்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்பதாவது முதல் நூற்று அறுபத்து மூன்றாவது வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை. திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தி மூன்றாவது முதல் எழுபத்தேழாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 35 - பாசனம்
### (ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள்
### (இ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு
### (ஈ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் – கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999-2000 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள். மானியக் கோரிக்கை எண் 35 - பாசனம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

### (அ) கோரிக்கை எண் 35 - பாசனம்

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 315,24,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1382. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில், வேலூர் வட்டம், மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 315,24,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 227, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலில் குள்ளம்பட்டியிலிருந்து எடப்பாடி பெரிய ஏரிக்கு காவேரியில் உபரிநீர் வாந்துக் காலத்தில்,

பாசனத்திற்கு ஒரு வாய்க்கால் வெட்டி இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 10-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 111, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1069, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட [illegible] அணை பழுதடைந்த நிலையில் புதிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 871, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதி, சாமி செட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் அருகே கன்னிமார் மடுவன் குறுக்கே ஒரு சிறிய அணை மற்றும் நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் அருகே பெருங்களவாய் பள்ளம் ஆற்றின் குறுக்கே அணை கட்டி அப்பகுதியில் ஆயிரக்கணக்கான விவசாயிகளின் நிலங்கள் பாசன வசதி பெறுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1578, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 426, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள செக்கடியில் பாம்பன் ஆற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 940, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, சித்தாற்றின் குறுக்கே நான்கு இடங்களில் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் பயனடையும் வகையிலும் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலும் சிறு தடுப்பு அணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் பத்மநாபபுரம் புத்தன் சானல் (PP சானல்) 1992-ம் ஆண்டு பெருமழையால் உடைந்ததை செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 615, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "[illegible] பிரதானக் கால்வாய்களுக்கு மேலான பயன் [illegible] கொடி வாய்க்கால் அமைப்புப் பணியை [illegible] வேண்டியதன் அவசியம் [illegible] விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"[illegible] 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. [illegible],000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2087, [illegible]

**திரு. [illegible] ஆர். [illegible]:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] சிறிய நீர்த்தேக்கம் [illegible] அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"[illegible] 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. [illegible]-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1696, [illegible]

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] இருக்கின்ற [illegible] கரைகளைக் [illegible] அவசியம் [illegible]



குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,21,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1354, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரில் ஓடும் பாமணி ஆற்றுக் கரைகள் உடைந்து நகரில் வெள்ளம் புகுந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் இவ்வாண்டு திட்டத்தில் தூர்வாருவதுடன் கரைகளை பலப்படுத்தி ரிவிட்மெண்ட் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1664, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி அயன்தத்தனூர் பாசன ஏரியை ஆழப்படுத்தி விளை நிலங்களுக்குச் செல்லும் வாய்க்கால் அமைத்து கொடுப்பதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1164, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்ற தொகுதி இராமாவூர்புரம் வாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக் குறையின் காரணமாக காவிரியில் ஒரு தடுப்பு அணை கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 156, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புன்னம்புழா-பாண்டியாறு பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1626, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் வெள்ளாற்றில் பு.ஆதனூர் முதல் சேத்தியாதோப்பு வரையும் சேத்தியாதோப்பு முதல் பரங்கிப்பேட்டை வரையும் உள்ள வடக்குகரையை உயர்த்தி பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 658, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkataswamy:** Hon. Speaker Sir, 'To discuss the need to construct Doddalalla project to jungle stream near Anchetty of Denkannikota Taluk', I Move—

"That the sum of Rs.315,24,03,000/- allocated under Demand No.35- Irrigation be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1268, திரு சு. சிவராஜ்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சீர்ப்பநந்தல் கிராமத்தில் உள்ள ஏரிக்கு சாத்தனூர் அணையில் இருந்து வரும் பாசன நீர் வருவதற்கு அணை வாய்க்காலில் இருந்து அந்தியூர் வழியாக புதிய வாய்க்கால் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.315,24,03,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2653, திரு. ப. மோகன் கந்தசாமி,

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பி.ஏ.பி. வாய்க்கால் பாசனம் நான்கு மண்டலமாகப் பிரிக்கப்பட்ட பிறகு குண்டடம் பகுதியில் இரண்டாவது மண்டலத்தில் பாசனம் பெறும் தேவராஜபட்டினம் கிளை வாய்க்காலில் கொப்பு எண் 25-ல் கடைமடைகளுக்குத் தண்ணீரே கிடைப்பதில்லை. இவ்வாய்க்காலை முன்னுரிமை கொடுத்து கான்கிரீட் வாய்க்கால் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3512, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் 'விளாத்துறை நீரேற்று விவசாயம்' பழுதடைந்துள்ள நிலையில் அதை மீண்டும் செயலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 315,24,03,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 36, பொதுப்பணிகள் - கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36- பொதுப் பணிகள்-கட்டடங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப்பணிகள் கட்டடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 72,11,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1381, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் தொரப்பாடி, சதுப்பேரி ஏரிகளில் தூர் எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 72,11,13,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 239, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்துதரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 143, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆறுகளின்



கரைகளுக்கு தடுப்புச்சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1081, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, சிவலோகம் பயணிகள் விடுதிக்கு கூடுதல் கட்டடம் கட்டிக்கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 787, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் அணைக்கட்டு முனியப்பன்கோவில் அருகில் வணிக வளாகம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1579, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 437, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தனூர் அணையில் தங்கும் விடுதி ஒன்று கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 950, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாண்டியாறு, புன்னம்புழா, அத்திக்கடவு ஆகிய திட்டங்கள் குறித்த வேலைகளை இவ்வாண்டே உடன் தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1426, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் கடல் முகத்துவாரங்களில் கடல்நீர் புகுந்து நிலம், தண்ணீர் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரணியல் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 617, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு ஒன்றியத்திலும் பொதுப்பணித் துறையின் மூலம் பயணியர் விடுதிகள் கட்டிக் கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1682, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலும் ஆறும் கலக்கும் இடங்களில் ரிவர்பெட் அமைத்து நிலத்தடி நீரைக் காக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1358, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகரில் செயல்படும் அனைத்து அரசு அலுவலகங்களின் கட்டடங்கள் அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1655, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, வல்லம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1180, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கபிஸ்தலம் பயணியர் மாளிகையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 462, திரு. கே. சுப்பாராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1628, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேத்தியாத்தோப்பு பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1307, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தில் உள்ள பாசன வாய்க்கால்களான ஆவியூர் வாய்க்கால், சித்தேரி வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்கால்களின் இரண்டுபுறமும் சிமெண்ட் லைனிங் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 115, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் மணிமுத்தாறு பாசனம் பெறும் குளங்களுக்கு தனித்தனி கால்வாய் அமைக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.72,11,13,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

## (இ) கோரிக்கை எண் 54
## பாசனம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54- பாசனம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 334, 49, 37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 112, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 246, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரப் பகுதிக்குப் பாசன வசதிக்காக மேட்டூர் கிழக்குக்கரைக் கால்வாய்ப் பாசனத்தை விரிவுபடுத்தி, ஒரு



கிளைக் கால்வாய் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 815, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் ஊராட்சியில் கோவிந்தபாடிக்கு அருகில் குண்டடன்காட்டுக்கு கிழக்கில் ஐயம்பெருமாள் நிலத்திற்கு அருகில் ஏரி ஒன்று உருவாக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1580, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 960, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், சங்கராண்டம்பாளையம் ஏரியையும், ஆண்டிகுளம் ஊராட்சி, காடையம்பட்டி ஏரியையும் தூர் எடுத்து செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1423, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பொரவூரணி தொகுதி, களத்தூர் ஊராட்சி, குறிச்சிகுளம், கோபாலகுளம் போன்றவைகளைத் தூர்வாரி மராமத்து செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 620, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்பவானி வாய்க்கால் பாசனத் திட்டத்தின் கொப்பு வாய்க்கால்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1683, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை, கீழையூர் ஒன்றியம், வேட்டைக்காரனிருப்புக்கு அருகில் உள்ள சுவர் பகுதியை நீர்த்தேக்கமாக அல்லது ஏரியாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1561, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3028, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 334,49,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 161, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 334,49,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1612, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2655, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பி.ஏ.பி. பாசனம் நான்கு மண்டலமாகப் பிரிக்கப்பட்ட பிறகு குண்டடம் பகுதியில் இரண்டாவது மண்டலத்தில் பாசனம் பெறும் தேவராஜ் பட்டணம் கிளை வாய்க்காலில் கொப்பு எண் 25 வலதில் கடைமடைகளுக்குத் தண்ணீரே சரிவரப் பாயாததால், இவ்வாய்க்காலில் கான்கிரீட் போட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,49,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ச) கோரிக்கை எண் 55–
## பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55 பொதுப்பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 177,35,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1820, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள பொதுப்பணித் துறை கட்டடங்கள், நீர்ப்பாசன அலுவலகங்கள், தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் தற்காலிகமாக இயங்குவதால் அவற்றுக்கு சத்துவாச்சாரியில்



நிரந்தர அலுவலகக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 260, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி நகரில் பொதுப்பணித்துறை சார்பாக ஒரு கலை அரங்கம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 111, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 830, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் நகரில் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் கலை அரங்கம் ஒன்று கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1583, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் பழுதடைந்துள்ள கட்டடங்களை உடனடியாக புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 965, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், அட்டவணைபுதூர் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி செய்து கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 177,35,89,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 623, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டத் தலைநகரான ஈரோட்டில் ஆட்சியாளர் [illegible] மாளிகையில் கூடுதல் அறைகளைக் கொண்ட தனிக்கட்டடம் ஒன்று கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1680, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகூர், பட்டினசேரி மீனவர் குப்பத்தில் உள்ள வீடுகள் கடல் அரிப்பால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1570, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3029, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 177,35,89,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 463, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மா[illegible] 1610, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.177,35,89,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் இருக்கையில் இல்லை. திரு. வி. அய்யலுசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப்பணிகள் - கட்டடங்கள், பாசனம் குறித்த மூலதனச் செலவு, பொதுபபணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய

@ 163 முதல் 380 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேசவிருக்கின்றார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவருக்கு 7 நிமிடங்களும், மற்ற உறுப்பினர்களுக்கு ஆளுக்கு 5 நிமிடங்களும்தான் கொடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் திரு. ச. புரட்சிமணி. *(குறுக்கீடு)*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a Point of Order. இன்றைக்கு பொதுப்பணித் துறையினுடைய விவாதத்தை எடுத்துக்கொள்கிற இந்தநேரத்தில் பெரியார் அணை ஏறத்தாழ 6 மாவட்டங்களிலே பாசனத்தைக் கொடுக்கின்ற அந்த அணை இன்றைக்கு 150...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி Point of Order-ஆக வரும்?

**திரு. லா. சந்தானம்:** ஏற்கெனவே தங்களிடம் கவன ஈர்ப்பாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு. அதைப்பற்றி இப்போது நீங்கள் பேச முடியாது, உட்காருங்கள். அதைப்பற்றி இப்போது பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்துள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குட்டைகளையும் குளங்களையும் தூர் வாரும் பணி தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக இப்போது நடைபெற்று வருவதை நான் இங்கே மனதாரப் பாராட்டுகிறேன்.

## 5. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுப்பணித் துறையின் மானியம் நடைபெறுவதை முன்னிட்டு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சிற்றுண்டி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்; வழக்கமாக வழங்குகின்ற இடத்திலே சிற்றுண்டி வழங்கப்படும். உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**திரு. ச. புரட்சிமணி:** என்னுடைய தொகுதியிலுள்ள வெலிங்டன் நீர்த்தேக்கம் கரைப் பகுதியில் கடந்த 10 மாதங்களுக்கு முன்பு பெய்த மழையால் கீழே சுமார் 2 அடிக்கு அழுத்தம் ஏற்பட்டு அந்த கரைப்பகுதி மிகவும் சீர்கெட்ட நிலையில் உள்ளது. அந்தக் கரைப் பகுதியினை உறுதிப்படுத்த வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த வெலிங்டன் நீர்த்தேக்கத்தை 1999-2000 ஆண்டில் அணைப் பாதுகாப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமாய் இந்தநேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த வெலிங்டன் நீர்த்தேக்கத்தில் சுமார் 26 கிளை ஏரிகள் உள்ளன; ஏரிகளையும் தூர் வார வேண்டுமாய் இந்தநேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடிக்கு அருகிலுள்ள கூத்தப்பன்குடிகாடு என்ற இடத்தில் வெள்ளாற்றின் கரைக்கு அருகே தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று எங்கள் பகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகப், பலமுறை போராட்டங்கள் நடத்தப்படும். அதற்கான உத்தரவு நிதித் துறையிலே கடந்த 23.11.1998 அன்று வழங்கப்பட்டும் இதுவரை அதற்கான பணிகள் நடைபெறவில்லை. அந்தப் பணிகளை விரைவில் நடத்தி முடிக்க ஆவன செய்ய வேண்டுமாய் இந்தநோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

சிறுபாக்கம் என்ற கிராமத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரிக்கு அருகில் சுண்ணாம்பு ஓடை ஒன்று சென்று கொண்டிருக்கிறது. அந்த சுண்ணாம்பு ஓடையில் செல்லுகின்ற தண்ணீர் வீணாகக்



காட்டுக்குள் செல்கின்ற நிலைமை உள்ளது. அதனால் சுண்ணாம்பு ஓடை நீரை சிறுபாக்கம் ஏரிக்குக் கொண்டு வருவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் இந்தநேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, முருகன்குடி என்ற கிராமத்தில் பாலம் கட்ட வேண்டுமென்று கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு அரசு உத்தரவிட்டிருந்தும் இதுவரை அந்தப் பணி நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கருவேப்பலங்குறிச்சி என்ற கிராமத்தில் கடந்த ஆண்டு, பெய்த மழையின்காரணமாக வெள்ளாற்றில் பாலம் ஒன்று அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, டி.வி. புத்தூர் கிராமத்தில், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின்காரணமாக, ஆற்றின் கரையில் அரிப்பு ஏற்பட்டு அந்தக் கிராமமே பாதிக்கப்படுகின்ற அளவுக்கு கடுமையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல சிறுமுலை, புதுகுளம் செல்லுகின்ற வழியில் இரண்டு பாலங்கள் கட்டித் தர வேண்டுமென்று இந்தநேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என் தொகுதியில், திட்டக்குடியில் ஒரு தீயணைப்பு நிலையம் உள்ளது. இதற்குக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் தொரவளூர் கிராமத்திற்கு அருகில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 5 ஏக்கர் நிலத்தை அருகில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நீர்த்தேக்கங்கள் இருக்கின்ற இடத்தில், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான telephone மட்டும்தான் உள்ளது. நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் உள்ள அந்த இடத்தில் சாதாரணத் தொலைபேசி வசதி அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல புதுகுளம் என்ற கிராமத்திற்குச் செல்கின்ற வழியில் நிதிநத்தம் என்ற இடத்தில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொண்டு பேசுவதற்கு இந்நேரத்தில் எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்று கூறி விடைபெறுகிறேன். நன்றி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

* **திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி' என்ற புறநானூறு வரிக்கேற்ப ஒரு தாய், தான் பெற்ற குழந்தைகளைப் பேணிக் காப்பதுபோல இந்தத் தமிழகத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 12-வது நிதிநிலை அறிக்கையையொட்டி, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைமீது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக, அருப்புக்கோட்டை தொகுதி மக்கள், தொடர்ந்து எழுப்பி வருகின்ற கோரிக்கையாக விளங்கக்கூடிய, 3 மாவட்டங்களும், அருப்புக்கோட்டை, திருப்பரங்குன்றம், மானாமதுரை, திருமங்கலம் ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளும் பயன்பெறும் வகை ஒருயில் பாசனவசதி அளிக்கக்கூடிய 53 கண்மாய்கள் உள்ள நிலையூர் - கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 8.94 கோடிக்கு ஒப்புதல் அளித்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக இந்த இனிய நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம், எங்களுடைய நெஞ்சில் நீங்கா இடம்பெற்றிருக்கக்கூடிய எனது தந்தையார், அமரர் தங்கபாண்டியன் அவர்களுடைய நீண்டகாலக் கனவுகளில் ஒன்று. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையில், இந்த அவையில் அவர் இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு கிடைக்காவிட்டாலும்கூட, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அருப்புக்கோட்டை தொகுதி மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கு மட்டுமின்றி, அவருடைய நினைவுக்கும் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பரிசாகக் கருதி நான் தலைவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல தூயதோர் நட்புக்குச் சாட்சியாக, உள்ளார்ந்த அன்புக்கு எடுத்துக்காட்டாக, எங்கள் பகுதியில் இந்தத் திட்டம் விளங்கிட வேண்டுமென்ற



ஆர்வத்தோடு எங்களுக்குப் பக்கபலமாக இருந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த இனிய நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

இந்த அவையைப் பொறுத்தமட்டில் இங்கே கொடுக்கப்படக்கூடிய வாக்குறுதிகள் எல்லாம் கண்ணியத்தோடு காப்பாற்றப்பட கொடுக்கப்படுவனேயொழிய காற்றிலே பறக்கவிடுவதற்கல்ல என்பதை நிலைநிறுத்தக்கூடிய வகையிலே 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் இந்த அவையிலே பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையிலே பேசிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம் என்று ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். இப்போது இந்தத் திட்டம் நிறைவேறியிருக்கிறது என்றால், 'செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம்' என்று சொல்லக்கூடிய தலைவர் கலைஞர் அரசு தொடர்ந்து அந்தக் கொள்கையில் உறுதியாகச் செயல்பட்டு வருவதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்கிறது என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

புறநானூற்றிலே சொல்வார்கள். குடபுலவியனார் என்கிற புலவர் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப் பற்றிச் சொல்கிறபோது,

"வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆகும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்
அடுப்போர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே"

என்று சொல்வதாக புறநானூற்றிலே சொல்லப்பட்டிருக்கிறது.

புன்செய் நிலம் எவ்வளவு விரிந்து பரந்து இருந்தாலும்கூட விளைச்சல் இல்லாமல் அது உரிய பயனைத் தருவதில்லை. எனவே, மன்னனாக இருக்கக்கூடியவன் இந்த நிலமெங்கும் நீர்நிலைகளைப் பெருக்கி வாழ வேண்டும், வளமையைச் சேர்க்க வேண்டும் என்று

புறநானூற்றிலே சொல்லப்பட்டதற்கு ஒப்ப இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே மூன்று ஆண்டு கால சாதனையில் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதைப்போல காவிரி கழிமுகப் பகுதிகளையொட்டி ஏறத்தாழ 4350 கிலோ மீட்டர் வாய்க்கால்கள் பலகோடி ரூபாய் செலவிலே தூர்வாரப்பட்டிருக்கின்றன. 1999-2000 ஆண்டில் அந்த ஆற்றுப்படுகைகள், வடிகால்கள், கால்வாய்கள் தூர்வாரப்படுவதற்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பெரியார் அணையை 152 அடிக்கு உயர்த்துவோம் என்கிற முயற்சியில் தமிழகம் தொடர்ந்து ஈடுபடும் என்கிற அவர்களுடைய உறுதியை நான் இந்நேரத்திலே பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கே பாய்ந்து வரக்கூடிய கிருதுமால் நதியைப் பற்றி அமைச்சருடைய கவனத்தைத் திருப்ப விரும்புகிறேன். கிருதுமாலைப் பொறுத்தமட்டில் கொந்தகைக் கண்மாய்க்கு கீழே அம்பலத்தாடி அணைக்கு மேலே முற்றிலுமாக அதனுடைய போக்கே மாறக்கூடிய அளவிற்கு இப்போது ஆக்கிரமிப்புகளால் சூழப்பட்டிருக்கிறது. குறிப்பாக மேலவெள்ளூர் கிராமத்திற்கு அருகே கிருதுமால் நதியின் குறுக்கே தென்னந்தோப்புகள் உருவாகக்கூடிய அளவிற்கு அங்கே ஆக்கிரமிப்புகள் சூழ்ந்திருக்கின்றன. எனவே, அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் போக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போல, அம்பலத்தாடி அணைக்குக் கீழே அத்திகுளம் அணைக்கு மேலே இருக்கக்கூடிய கிருதுமால் முற்றிலுமாக மண்மேடிட்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலேயும் உடனடியாகத் தூர்வாரக்கூடிய பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம் ஏறத்தாழ 99.9 சதவீதம் முடிந்துவிட்டிருந்தாலும்கூட, அதனுடைய வலதுபுற பிரதான வாய்க்கால் வேலைகள் எல்லாம் முற்றிலுமாக முடிந்திருந்தாலும்கூட, இடதுபுறக் கால்வாயைப் பொறுத்தமட்டில் குராயூர் கிராமத்தின் அருகே 100 மீட்டர் தொலைவிலே அந்த வாய்க்காலிலே ஏற்பட்ட அடைப்பு இன்னும் வெட்டப்படாமல்



இருக்கக்கூடிய காரணத்தினால் அந்தத் திட்டத்தினுடைய முழுப் பலனையும் தொகுதி மக்களுக்குத் தர இயலாத நிலை இப்போது இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மிக நன்றாக அறிவார்கள். நான் அவர்களிடத்திலே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் அதையும் கருத்திலேகொண்டு விரைவிலே அந்தத் திட்டத்தை முற்றிலுமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கண்மாய்களைத் தூர்வாருவதைப் பொறுத்தவரையில் எப்படி காவிரிப் பகுதிகளிலே முழுமையாகத் தூர்வாரும் பணி நடைபெறுகிறதோ அதைப்போல பழைய இராமநாதபுரம் மாவட்டம், இப்போது விருதுநகர் மாவட்டத்தை உள்ளடக்கி இருக்கக்கூடிய பகுதிகளிலும், ஏரி மாவட்டம் என்று அழைக்கக்கூடிய செங்கல்பட்டு மாவட்டப் பகுதிகளிலும் தொடர்ச்சியாகத் தூர்வாரும் பணிகள் எல்லாம் நடைபெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டார் வாய்க்கால் என்பது எங்களுடைய பகுதிக்கும் பரமக்குடி பகுதிக்கும் பெரிதும் பயன் அளிக்கக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றிட வேண்டும்.

அதைப்போல, செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கக்கூடிய கானாதூர் வாய்க்காலையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அந்தப் பகுதி உறுப்பினர் இங்கே கோரியிருக்கின்றார். அமைச்சர் அவர்கள் அதையும் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

இப்போதெல்லாம், தனியார் தொலைக்காட்சியில் வரக்கூடிய தொடர்கள் மிகப் பிரபலம் பெற்றிருக்கின்றன. எனவே, அந்த பாஷையிலே நான் சொல்ல வேண்டுமென்றால், பொதுப்பணித் துறையிலே நிறைவேற்றக்கூடிய இந்தக் திட்டங்கள் எல்லாம் "மாயாவி மாரீசனைப்" போல மறைந்துபோய்விடாமல் "ஆகாயக் கோட்டையினைப்" போல கலைந்து போய் விடாமல், என்றைக்குமே நிலைபெற்றிருக்கக்கூடிய "சப்த ஸ்வரங்களாக", வரையாது வழங்கக்கூடிய "அட்சயா" பாத்திரங்களாக விளங்கிக்கொண்டு வருகின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் இணைந்து செயல்படுத்தி ஒரு வலிமையான

வளமான தமிழகத்தை உருவாக்கக்கூடிய "சக்திமானாக" நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திகழ்கிறார்கள். அவர்களுடைய கையிலே இருக்கக்கூடிய சக்தியாக நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் ஒவ்வொரு "குடும்பமும்" "நிம்மதி எங்கள் சாய்ஸ்" என்று மகிழ்ச்சிக் கடலிலே திளைத்து இருக்கிறார்கள். "இந்த நாள் இனிய நாளிலே", "தினமும் ஒரு திருக்குறள்" சொல்லக்கூடிய இந்த அவையிலே தமிழ்நாட்டு மக்கள் அத்தனைபேருடைய நன்றியையும் வணக்கத்தையும் ஒட்டுமொத்தமாக "வணக்கம் தமிழகம்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் "நேருக்கு நேர்" தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

* **திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென் மாவட்டங்களில் தொழில் வளம் இல்லை என்று கருதி, தென்மாவட்டங்களைத் தொழில்மயமாக்க வேண்டும் என்று நினைத்து, நாங்குனேரி தொகுதியில் 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில்நுட்பப் பூங்கா தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பொதுப்பணித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் சாதனைக் குறிப்பேடுகளைத் தெள்ளத் தெளிவாக புரியக்கூடிய அளவில் தந்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வருகின்ற மானியக் கோரிக்கைகளில் எல்லா அமைச்சர்களும் இப்படித் தெள்ளத் தெளிவாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் நான் பாராட்டுகிறேன்.

நாங்குனேரி தொகுதியில் கொடுமுடியாறு வடக்கு பச்சையாறு அணைக்கட்டு, தாமிரபரணி ஆற்றிலிருந்து சுமார் 17 பஞ்சாயத்துகளுக்கு, 108 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டமும், நாங்குனேரி தொகுதி



பள்ளியூருக்கு அரசு மருத்துவமனையும், மேலும் அங்கே 2 ஆரம்பப் பள்ளிகளும் தந்த அமைச்சர் பெருமக்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை மூலமாக ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் எல்லாம் செப்பனிட வேண்டும்; தூர்வார வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தப் பணிகளை ஜூன் மாதம் முதல் தேதிக்குள் முடிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதைவிட முக்கியமாக குளங்கள் தூர்வாரும் பணிகளிலே Tender விடுகின்றபோது, குறைந்த Tender கேட்கப்பட்டு, 25 சதவீதம், 50 சதவீதம் குறைவாகக் கேட்கப்பட்டு அந்த வேலை நடைபெறுகிறது. அப்படி அந்த வேலை நடைபெறுகின்றபோது அது தரமாக இருக்குமா என்று அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பொதுப்பணித் துறை மூலமாக, அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சி நிதியிலிருந்து யூனியன் மூலமாகவும் பொதுப்பணித் துறை மூலமாகவும் கட்டடத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூர்வாருகிறபோது Tender-லே குறைத்து, minus போட்டு எடுத்து இருக்கிறார்கள்; வேலை சரியாக நடைபெறுமா என்றும் அமைச்சர் கவனிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். நான் அவருக்குத் தெரிவிக்கிறேன். ஆண்டுக்கு 200 குளங்களை நாங்கள் பல இடங்களில் தூர் வாருகிறோம். ஆனால், ஒரு அமைச்சரே அவற்றையெல்லாம் சென்று பார்க்க முடியாது. ஆகையினால்தான், ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினருக்கும் ஒரு கடிதம் எழுதினேன். தங்கள் தொகுதியில் என்னென்ன பொதுப்பணித் துறை வேலைகள் நடைபெறுகின்றன? தூர்வாரும் பணிகளை தாங்கள் பார்வையிட்டீர்களா? குறை இருந்தால் எனக்கு எழுதுங்கள் என்று எழுதினேன். நான் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன், ஓரிரு உறுப்பினர்களைத் தவிர, வேறு யாரும் எனக்குப் பதில் எழுதவில்லை (குறுக்கீடுகள்) அந்த ஓரிரு உறுப்பினர்களில் நீங்கள் வந்து இருக்கிறீர்கள், ஆகையினாலே நீங்கள் எனக்குச் சொல்லுங்கள். ஆனால், அந்த

Rate, Man Power-ஐ Machine Power ஆக மாற்றி விட்டோம். அதனாலே அவர்களுக்கு லாபம் உண்டு.

நண்பகல் 12-00

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. சட்டமன்ற உறுப்பினர்களுடைய வளர்ச்சி நிதியிலிருந்து கட்டடத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகளிலிருந்து ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக கட்டப்படுகின்ற கட்டடம் விரைவாக முடிக்கப்படுகிறது. ஆனால் பொதுப்பணித் துறையின் மூலமாகக் கட்டப்படுகின்ற கட்டடம் தாமதமாகக் கட்டப்படுகிறது. ஆகவே இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், சிவகிரியிலிருந்து மேற்கே சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையின் உட்பகுதியில் புதுமலை, ராமநேரி, ஏலநேரி, வடுகானத்து போன்ற உயரமான மலைப் பகுதிகள் இருக்கின்றன. அந்த மலைப் பகுதிகளில் பருவமழை காலங்களில் மழை தொடங்குகிறபோது, அந்தப் பகுதிகளிலிருந்து தண்ணீர் முழுவதும்கோம்பையாற்றிற்கு வருகிறது. இந்தக் கோம்பையாற்றிலே அணை கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை 1937 ஆம் ஆண்டிலிருந்து சிவகிரி வட்டத்திலேயுள்ள மக்கள் வைத்திருக்கிறார்கள். பருவ காலங்களில் மழை பெய்கிறபோது, இந்தக் கோம்பையாறு பகுதிகளில் உள்ள குளங்களில் வருடந்தோறும் உடைப்பு ஏற்படுகிறது. வருடந்தோறும் அந்த உடைப்பை அடைப்பதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கிறது. மேலும் வருடந்தோறும் விவசாயிகள் அங்கே நஷ்டம் அடைகிறார்கள். இந்த அணை கட்டப்படுமானால் வருடந்தோறும் ஏற்படுகின்ற உடைப்புகளைத் தடுத்து நிறுத்துவதோடு, நஷ்டம் ஏற்படுகின்ற விவசாயிகளுக்கு நிதி கொடுப்பதையும் தடுத்து நிறுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அந்த அணையைக் கட்டினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** Point of Order, துணைப் பேரவையினுடைய சபாநாயகர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள..



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி ஒரு பேரவையும் ங்கு இல்லை: அதற்கு நான் சபாநாயகரும் இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, ன்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள காம்பையாறு அணைத் திட்டம், சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேலாக, ந்த அணையைக் கட்ட வேண்டுமென்று சிவகிரி பகுதியிலுள்ள க்கள் போராடி, வாதாடி, உண்ணாவிரதம்கூட ஒரு வாரத்திற்கு ன்னால் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே நேரடியாக தாடர்பு கொண்டு, 'சம்பந்தப்பட்ட அமைச்சரிடம், சம்பந்தப்பட்ட ட்டமன்ற உறுப்பினர் அதைக் கடுமையாக வலியுறுத்திக் கொண்டு ருகிறார்: இந்தத் திட்டத்தை மீண்டும் வலியுறுத்தி, நிறைவேற்றித் ருமாறு சட்டமன்ற உறுப்பினர் வலியுறுத்தி வருவதாக' அந்தப் பாராட்டத்தில் ஈடுபட்ட, உண்ணாவிரதத்தில் இருந்த மக்களுக்கு, ாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். அதேமாதிரி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசியதில் என்ன oint of Order ? நீங்கள் ஒரு சொற்பொழிவை ஆற்றிக் காண்டிருக்கிறீர்கள். அவர் பேசியதில் ஏதாவது ஒழுங்கு வறியிருந்தால், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பலாம். அவருக்கு ருக்கிற நேரத்தில் அவருடைய தொகுதியைப் பற்றிப் பேச வேண்டும் ங்கள் உட்காருங்கள். திரு. கிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வர்களே, இந்த அணை கட்டப்பட்டால் பெரியாவுடைப்பேரி, ன்ன ஆவுடைப்பேரி, விடயரங்கபேரிகுளம், உடகால்குளம், தன்கால்குளம், புல்லாந்துரைகுளம், உருவாட்டிகுளம், உயர்குடிகுளம், தன்மலைகுளம், பட்டாங்குளம், பூவானிகுளம், பெரியகுளம், கானார்குளம், வழிவில்குளம் ஆகிய குளங்கள் பாசனம் பெற ாய்ப்புள்ளது. இக்குளங்களின் மூலம் பாசனம் பெறும் நஞ்சை லங்கள் 4,307 ஏக்கர். அதோடு புஞ்சை நிலம் சுமார் 3,000 ஏக்கர் ஞ்சையாக மாற வாய்ப்புள்ளது. மேலும் இந்த அணை ட்டப்பட்டால்—சிவகிரி பகுதியில் நீண்டகாலமாக குடிநீர்ப் பிரச்சினை ருந்து வருகிறது—அந்தக் குடிநீர் பிரச்சினையையும் தீர்ப்பதற்கும் துவாக இருக்கும். நாங்குனேரி தொகுதியில் இரண்டு அணைகளை ந்த பொதுப்பணித் துறை அமைச்சரும், முதலமைச்சர் அவர்களும் வகிரி வட்டத்திற்கு கோம்பையாறு அணைத் திட்டத்தினை தர

வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். அடுத்து மணிமுத்தாறு பாசனம். நாங்குநேரி தொகுதியில். மணிமுத்தாறு பாசனம் பெறும் நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. மணிமுத்தாறு பாசனத்திற்குத் தண்ணீர் வருகிறபோது, குளத்தின் மேல் குளமாக, ஒவ்வொரு குளமாகத் தண்ணீர் செல்கிறது. ஆகவே, மணிமுத்தாறு பாசனம் பெறுகின்ற குளங்களை, தனித்தனியாக கால்வாய் வெட்டி ஒவ்வொரு குளத்திற்கும் பாசனம் கிடைக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மேலும் மணிமுத்தாறு பாசனத்தில், தேவநல்லூர் அணையிலிருந்து பச்சையாற்றில் புறக்கால்வாய் வெட்டுவதாக ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புறக்கால்வாயை மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் இணைந்துவிட்டால், மழைக் காலங்களில் அதிகமாக வெள்ளம் வருகின்றபொழுது, அந்தப் பிரதானக் கால்வாய் வழியாக பச்சையாறு, தண்ணீர் பாசனம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் எனறு கூறிக்கொள்கிறேன்.

மேலும், நாங்குநேரியில் கால்வாய் அருகே நாங்குநேரி வடக்கு பச்சையாறு பாசனம் பெறாத குளங்கள். கால்வாய் ஓரமாக இருக்கின்ற குளங்கள் ரஸ்தா குளம், சுட்டிப்பாறை குளம், பாலன்குளம் மேலும் தாழைகுளம் ஆகியவை பச்சையாற்றில் பாசனம் பெறுவதற்குக் கால்வாய் அமைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மேலும், பச்சையாற்றில் குளம் ஆதாரமில்லாமல் ஏற்கெனவே நேரடியாகப் பாசனம் பெற்று வந்த சிங்கிகுளம் பகுதியில் கால்புறவு. பொன்னாக்குடி கால்வாயில் பூமடை பகுதிக்குக் குளங்கள் கிடையாது. அங்கு நேரடியாக ஆற்றிலிருந்துதான் பாசனம் உண்டு. ஏற்கெனவே பச்சையாறு கால்வாய் கட்டப்பட்டால் ஆற்றில் தண்ணீர் வருமோ, வராதோ என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே அணையிலிருந்து நேரடியாத அதற்குப் பாசனம் கிடைக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும். நம்பியாறு. ஏர்வாடி பகுதிகளில் ஆற்றின் குறுக்கே முள் மரங்கள் இருப்பதால், ஆற்றில் வெள்ளம் வரும் காலங்களில் அந்தத் தண்ணீர் தடுத்து நிறுத்தப்படுகின்றது. அதேபோன்று நாங்குனேரியில் பெரிய குளம், விஜயநாராயணம் ஆகிய குளங்களின் கரைகளில் முள் மரங்கள் அதிகமாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும்.

நாங்குநேரி தொகுதியில் சாத்தான்குளம், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மணிமுத்தாறு அணைக்கட்டிலிருந்து பாசனம் பெறும் நிலங்கள் இருக்கின்றன. வருடந்தோறும் மணிமுத்தாறு அணையில் இருந்து பாசனம் பெறும் விவசாயிகளுக்குப் போதிய அளவு தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே, பாபநாசம், சேர்வலாறு அணைக்கட்டிலிருந்து, மணிமுத்தாறு அணைக்கட்டுக்கு ஒரு கால்வாய் அமைந்து, மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் தாமிரபரணி ஆற்று தண்ணீரை இணைத்தால் வருடந்தோறும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமல், நாங்குநேரி, சாத்தான்குளம் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய மூன்று தொகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதுவரை பேச வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கணேசன்.

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீரோடை நிலம் கிழித்து தண்ணீர் வீணாகப் போகாமல் இருப்பதற்கு பல இடங்களில் கண்மாய்கள் அமைத்தும், அணைகள் கட்டியும், பழுதடைந்த கால்வாய்களைச் சீர்செய்தும், உலக வங்கி உதவியோடு பல காரியங்கள் நடைபெற்று வருவதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல முடியாமல் இருக்கிற 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதையும் நான் மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல 371 கோடி ரூபாய் ஒதுக்கி, 171 பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதையும், அதற்காக இந்த நிதியாண் [illegible] கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதையும் நான் வரவேற்கக்

219406.

கடமைப்பட்டிருக்கின்றேன். 665 கோடி ரூபாயில் 53 பாசனக் கால்வாய் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1997-98 ஆம் ஆண்டு 32 1/2 கோடி ரூபாய் செலவில் ஆற்றுப் படுகைகளையும், கால்வாய்களையும், வடிகால் ஓடைகளையும், குளங்களையும் சீரமைப்பு செய்திருப்பதையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். 1998-99-ல் 46 கோடி ரூபாய் செலவில் வேலை நடைபெற்றதற்காக உள்ளபடியே தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 12-10

1999-2000-ல் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. 46கோடியையும், 32½கோடியையும் சேர்த்தால்—இரண்டு ஆண்டுகளில் செய்யப்பட்ட வேலைகள்—கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய்க்கு வருகிறது. இப்போது 50 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 50 கோடி ரூபாய், அணைகளை, கால்வாய்களை வெட்டுவதற்கு, ஏரிகளைத் தூர் வாருவதற்குக் கண்டிப்பாக போதாது.

ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு ஏரி என்று சொல்லி 10 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறை ஏரிகளை எடுத்துக்கொண்டால், ஒரு தொகுதியில் குறைந்தது 10, 12 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை எல்லாம வெட்டித்தான் தீரவேண்டும். யார் காலத்திலும் வெட்டப்படவில்லை. இப்போது வெட்டியிருக்கின்ற வாய்க்கால்கள் குறித்தும், வெட்டியிருக்கின்ற வடிகால்கள் குறித்தும், ஓடைகள் குறித்தும், வெட்டியிருக்கின்ற ஏரிகள் குறித்தும் விவசாயப் பெருங்குடி மக்கள் மனதார பாராட்டுகிறார்கள். இதுவரையில் யாரும் செய்யாதத் திட்டம், யாரும் நடைமுறைப்படுத்தாத திட்டம். இந்தத் திட்டம் கிராம மக்களிடத்திலே, விவசாயிகளிடத்திலே பெரும் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது. இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அதற்கு நிறைய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியுள்ள, பொம்பலூர் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். இன்னும் சொல்லப்போனால் அது பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலை சாதியினர் வசிக்கின்ற மாவட்டமாகும், கொள்கை விளக்கக் குறிப்பில் பல மாவட்டங்களில் நிலையான ஓடைகள் வெட்டுவதற்கும், கால்வாய்கள் அமைப்பதற்கும், நிதி ஒதுக்கக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொம்பலூர் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. பொம்பலூர்



மாவட்டம் புதிதாக தொடங்கப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளில் தண்ணீரைத் தேக்கினால்தான் விவசாயம் செய்ய முடியும். அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வருகின்ற வாத்து வாய்க்கால்களை வெட்டித்தா வேண்டும். ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும், அதேபோல வடிகால் ஓடைகளையும் வெட்டித்தா வேண்டும். ஆக, நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பொம்பலூர் மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டம், அந்த மாவட்டத்தில் இருக்கின்ற 5 தொகுதிகளும் வானத்தை நம்பியிருக்கின்ற பகுதிகளாகும். மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும் என்பதால் மழைநீர் வீணாகச் செல்வதைத் தடுத்து நிறுத்தி பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற வகையில், வடிகால் வாய்க்கால்களையும், பாசன வாய்க்கால்களையும், ஏரிகளையும் வெட்டித்தா வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே ஒரே ஒரு பாசன வாய்க்கால் இருக்கிறது. அது - பொன்னாறு என்ற பாசன வாய்க்கால் - அரியலூர் தொகுதியில் குருவாடி என்கின்ற இடத்தில், ஆகும். அந்த கொள்ளிடத்திலிருந்து பிரிந்து வருகின்ற வாய்க்கால் ஆண்டாண்டு காலமாக வாய்க்காலில் தண்ணீர் வரவேண்டுமென்றால் ஜெ.சி.பி. மூலமாகவும் மண்ணை புல்டோசர் மூலமாகவும் அகற்றிவிட்டுத்தான் தண்ணீர் விடுகிறார்கள். சில நேரத்தில் மொராம்பு வைப்பார்கள். இருந்தாலும் தண்ணீர் வருகின்ற இடத்திலே, சற்றேறத்தாழ 30 அடி உயரம் இருப்பதால், காற்று மழை வருகின்றபோது, பெரிய காற்று வருகின்றபோது வெட்டிய மண் அப்படியே வாய்க்காலில் தூர்ந்து விடுகிறது. ஆகவே, அந்த வாய்க்காலை பழுதுபார்ப்பதோடு மட்டுமல்லாமல், Revetment கட்டி மணல் வாய்க்காலில் விழாமல் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து நான் 1990 ஆம் ஆண்டு இதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இது குறித்து அரசிடம் திட்டம் இருக்கிறது. ஆனால் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. தண்ணீர் சரியாக வரவேண்டுமென்று சொன்னால் அந்த வாய்க்காலின் தலைப்பில் நான் சொல்லியதுபோல் கற்களை அடுக்கி, Revetment கட்டினால்தான் மண் சரிவு ஏற்படாமல் இருக்கும். அப்படி மண் சரிவு ஏற்படாமல் இருந்தால்தான் சரியாக விவசாயம் செய்ய முடியும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலுள்ள சோழமாதேவி, குறிச்சி கிராமத்திலிருந்து தாப்படுவுக்குச் செல்லவேண்டுமென்றால், குறுக்கே சிந்தாமணி ஓடை இருக்கிறது. அந்தச் சிந்தாமணி ஓடை கலுங்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். அது தொடர்ந்து அப்படியே இருக்கிறது. விவசாயம் செய்ய வேண்டுமானால் பொன்னாறு வாய்க்கால் கலுங்கை கடந்துதான் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வரவேண்டும். அந்தக் கலுங்கு சீர்கெட்டுப்போயிருக்கிறது. மீன் பிடிப்பவர்கள் அந்தக் கலுங்கை திறந்துவிட்டாலும், கசிவினாலும் தண்ணீர் பாசனத்திற்கு வராமல் போய்விடுகிறது. அந்தக் கலுங்கைப் பராமரிக்க வேண்டுமென்றும், அந்தக் கலுங்கின் மேல் - பொதுமக்களும், பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும் மழைக் காலத்தில் செல்லுகின்ற காரணத்தால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்று சொல்லுவார்களே அதைப்போல, வடிகாலையும் சீர் செய்ய வேண்டும், அதேநேரத்தில் பொதுமக்களும், பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும் மழைக் காலத்தில் 10 நாட்களுக்கு தாப்படுவுக்கு செல்ல முடியாத நிலையும் மாறி அவர்கள் மழைக் காலத்தில்—செல்வதற்கு வாய்ப்பாகவும், பேருந்து செல்வதற்கு வாய்ப்பாகவும் அந்த மதகை சீர் செய்யவேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் முருகையன் அவர்களிடத்திலே சீர் செய்ய வேண்டுமென்று அன்றைக்கு நேரடியாகச் சொன்னார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகள் ஆகியும் சீர் செய்யப்படவில்லை. பிறகு ஐந்தாண்டு காலத்திற்கு இன்னொரு ஆட்சி இருந்தது. அந்த ஆட்சியிலும் சீர் செய்யப்படவில்லை. திரும்பவும் நாமே ஆட்சிக்கு வந்து, அப்பொழுதிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களே இப்பொழுதும் பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கின்ற இந்த நேரத்தில், அந்தச் சிந்தாமணி வடிகால் கலுங்கைச் சீர் செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.15

பெரம்பலூர் மாவட்டத்திலேயும், என்னுடைய தொகுதியிலேயும் இருக்கின்ற வடிகால் வாய்க்கால்களையும், இருக்கின்ற ஏரிகளையும் சீர்செய்து, அதற்கு அதிகமான நிதியொதுக்கி, நான் முன்பு சொன்னதைப்போல 50 கோடி ரூபாய் போதாது; ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி, பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள்



வசிக்கின்ற காரணத்தால், ஏரிகளையே நம்பி வாழ்கின்ற காரணத்தால், ஒரு ஏரி என்பதை மாற்றி, எங்களுக்கு கால்வாய்கள் வெட்டுவதற்கு வாய்ப்பில்லை, அணைகள் கட்டுவதற்கும் வாய்ப்பில்லை, ஆகவே, இருக்கின்ற ஏரிகள் அத்தனையையும் சீர் செய்து தர வேண்டும். அதற்காக அதிகமான நிதியை ஒதுக்கித்தர வேண்டும். கால்வாய்களையும், வடிகால்களையும் வெட்டித்தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

* **திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சுருக்கமாகச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு சிறந்த திட்டத்திற்கு, மாம்பழத்துறையாறு திட்டத்திற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் சேர்ந்து அதற்கான நிதியை ஒதுக்கித் தந்தமைக்கு, ஏற்கெனவே நீண்டகாலமாக, 1978 ஆம் ஆண்டு முதல் இந்த மாமன்றத்திலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜி.எஸ்.மணி, திரு. நூர் முகம்மது, திரு. ஹேமசந்திரன் ஆகியோரும், அதேபோன்று இப்போது நானும், என்னுடைய நண்பர் திரு. வேலாயுதன் அவர்களும் சேர்ந்து அந்தக் கோரிக்கையை வைத்து, அதனை அரசு ஏற்றுக் கொண்டதற்கு என்னுடைய மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நன்றியை முதலில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசனத்தைப் பொறுத்தவரை, நம் மாநிலம் நீர்வளத்தில் சற்று பின்தங்கிய மாநிலமாகும். பருவ மழையால் நமக்குக் கிடைக்கும் மொத்த நீர் அளவு சுமார் 830 டி.எம்.சி. என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மழை அதிகமாகப் பெய்யும்போது பாதிப்பும், மழை சரியாகப் பெய்யாத காலத்தில் வறட்சியினால் பெரும் பாதிப்பும் ஏற்படுகின்றது. பாசனத்திற்கும், குடிநீருக்கும், தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படும் தண்ணீரின் அளவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. தமிழகத்தின் நீர்வளம் என்பது மேல்பரப்பு நீர்வளமும், நிலத்தடி நீர்வளமும் உள்ளது. இதன் வாயிலாக தமிழகத்தில் மொத்த நீர் வளம் என்பது சுமார் 1260 டி.எம்.சி. என கருதப்படுகிறது. இதில் பாசன நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு சுமார் 225 டி.எம்.சி. எனவும், 39,000 ஏரிகளின் கொள்ளளவு சுமார் 390 டி.எம்.சி. எனவும்

கணக்கிடப்படுகிறது. மீதி நீரைத் தேக்குவதற்கான ஏற்பாடுகள்
போதுமானதாக இல்லை. ஏற்கெனவே பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்
நிறைவேற்றப்பட்டுவிட்டன என்றும், சிறிய நடுத்தரப் பாசனத்
திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் புதிய பாசனத் திட்டங்கள்
வரும் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.
அதைப் பாராட்டுகிறோம். இருந்தாலும், மழைக் காலங்களில் மழைநீர்
வீணாகக் கடலில் கலக்கின்றது. இந்தத் தண்ணீரைச் சிறுசிறு
அணைக்கட்டுகள் மூலமாகவும், Check Dams மூலமாகவும் பாசனத்திற்கு
அதிக அளவில் பயன்படுத்தும் திட்டங்கள் நடைமுறைப்படுத்த அதிகக்
கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலுள்ள 39,000 ஏரிகளில் சுமார் 2,000 ஏரிகள்
வரை தூர்ந்துவிட்டதாகவும், பல குடியிருப்புகளாக மாறியுள்ளதாகவும்
கூறப்படுகிறது. சில வரத்துக் கால்வாய்கள்கூட மறைந்துவிட்டன.
பாசனப் பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி
அந்தப் பகுதிகளை முழு அளவு பாசனத்திற்குப் பயன்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆய்வு செய்வதிலும்,
திட்டமிடுவதிலும், அனுமதி வழங்குவதிலும், திட்டங்கள்
செயல்படுத்துவதிலும் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மொத்த நிலத்தடி நீர் 905 டி.எம்.சி. எனவும், இதில்
425 டி.எம்.சி. நீரை 17 இலட்சம் கிணறுகள், 7,000 ஆழ் குழாய்க்
கிணறுகள் மூலம் எடுக்கிறோம். நிலத்தடி நீர் என்பது வற்றாத
சுரங்கங்கள் அல்ல. எனவே, மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை
முழுமையாகப் பயன்படுத்தினால் நிலத்தடி நீரை அதிகப்படுத்த முடியும்.

தஞ்சாவூரில் கால்வாய்களை நவீனப்படுத்தவும், மீதியுள்ள
கால்வாய்களையும் நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது
பாராட்டுக்குரிய விஷயம். ஆனால், அந்தக் கால்வாய்களைச்
சீர்செய்கின்றபோது அடித்தளத்தில் காங்கிரீட்டும், பக்கச் சுவரும்
கட்டுவதன் மூலமாகத்தான் நீண்டகாலத்திற்கு அதைப் பயன்படுத்த
முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். உலக வங்கித் திட்டங்கள்,
ஐரோப்பிய நிதியுதவித் திட்டங்கள், ஜப்பான் உதவித் திட்டங்கள்
ஆகியவற்றின் மூலம் தூர்வாருதல், நவீனப்படுத்துதல் ஆகியவற்றைக்
காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும். அண்டை
மாநிலங்களின் உபரி நீரைப் பெற அந்தந்த மாநிலங்களோடு பேசி



சுமூகமான தீர்வை ஏற்படுத்திட வேண்டும். அதேபோல், தென்
மாநிலங்களில் மகாநதி, வைகை இணைப்பையும் நிறைவேற்ற வேண்டும்.
மாராமத்துப் பணிகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கு
வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். காவிரிப் பாசன மேம்பாட்டுத்
திட்டத்திற்கு உலக வங்கி நிதி அளிக்காத நிலையில் அந்தத் திட்டம்
நிறைவேற மாநில அரசு அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர்த்தேக்கங்களில் மண்
நிரம்பியுள்ளதை அகற்ற வேண்டும். பாசன விவசாயிகளின்
சாகுபடியாளர்கள் சங்கங்களை ஊக்குவித்து குடிமராமத்து
வேலைகளைப் புதுப்பிக்க வேண்டும். இந்த அரசுக்குச் சொந்தமான
மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்ப்பதோடு
குறிப்பிட்ட காலத்திற்குள் அரசு அலுவலகங்களை வாடகைக்
கட்டடங்களிலிருந்து மாற்றி, புதியக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதுபோன்று என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்ற சில
பிரச்சினைகளை நான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். குறிப்பாக
100 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட பேச்சிப்பாறை அணையில்
சுமார் 20 அடி வரையிலும் மண் நிரம்பியுள்ளது. பல்வேறு காலக்
கட்டங்களில் பெய்த மழையின் காரணமாக குறிப்பாக 1992 ஆம்
ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக மலை இடிந்து அந்த
அணைப் பகுதியில் மண் நிரம்பியுள்ளது. அதை எப்படித் தூர் வார
முடியும் என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும். அந்த அணை
மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. சமயத்திலே சில பழுதுபார்ப்பு
வேலைகள் நடந்திருந்தாலும்கூட கசிவு அதிகமாக உள்ளது. எனவே,
அதனுடைய பின்புறம் ஒரு புதிய அணையைக் கட்டுவதற்கான
ஏற்பாடுகள் பற்றி அரசு ஆய்வு நடத்தவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெய்யார் இடதுகரைக் கால்வாய்க்காக ஏற்கெனவே உலக
வங்கிக் கடனிலிருந்து ஒரு கோடியே 18 இலட்ச ரூபாய் பெற்று
அந்தப் பணியை ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் அடித்தளத்தில்
காங்கிரீட் போடுவது மாதிரி தோன்றவில்லை. எனவே இப்போது
இருக்கின்ற நிலையில் எந்த அளவிற்கு அடித்தளத்தில் காங்கிரீட்

போடுவதன் மூலமாக அதை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைப் பார்த்து அந்த வகையிலே ஏற்பாடு செய்வதென்பது முறையாக இருக்கும். அது விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

அதுபோல, முல்லையாற்றின் குறுக்கே அணை கட்டுவதென்பது நீண்டகால கோரிக்கை. மழைக் காலங்களில் 3 கிராமங்கள் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. அந்தக் காலக் கட்டங்களில் உடைப்புகள் பெருமளவிற்கு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே முல்லையாற்றின் குறுக்கே ஒரு சிறிய அணை. அதைப் பல்லிக்கூட்டம் அணை என்று சொல்வார்கள். அதை கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, நம்முடைய வற்றாத தாமிரபாணி ஆறு, நெல்லையில் ஓடுவது மாதிரி கன்னியாகுமரி மாவட்டத்திலே செல்கிற அதை குழித்துறை ஆறு என்று சொல்வார்கள். அதில் எந்தெந்தப் பகுதிகளில் Check Dam கட்டுவதன் மூலமாக விவசாயத்திற்குத் தண்ணீரை நாம் பயன்படுத்த முடியும் என்பதை ஆய்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஏற்கெனவே பழைய திருவிதாங்கூர்—கொச்சி சமஸ்தானத்திலே பனம்பள்ளி கோவிந்த மேனன் முதலமைச்சராக இருந்த காலத்திலே விளாத்துறை lift-irrigation-ஐ உருவாக்கினார்கள். ஆனால் மின்சாரம் போதுமான அளவிற்கு இல்லை என்ற காரணத்தினாலே படிப்படியாக அது கெட்டுப்போய்விட்டது. மீண்டும் அதை வேறுவிதமாக நாம் ஜெனரேட்டரை வைத்துக்கொண்டு தண்ணீரை எடுத்துக் கொடுக்கும் முறையைக் கையாண்டால் தண்ணீர் இல்லாத பல பகுதிகளுக்குத் தண்ணீரை தரமுடியும். குளங்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவும், வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அந்த அடிப்படையிலே தாமிரபரணி ஆற்றிலே Check Dam கட்டுவதையும் அதிலே எந்தெந்தப் பகுதிகளில் lift-irrigation கட்டமுடியும் என்பதையும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வள்ளியாறு. என்னுடைய கல்குளம் தாலுகாவிலே வருகிறது ஓர் ஆறு. அதனுடைய பாலத்திற்குக் கீழ்ப் பகுதியிலே போதுமான இடமிருக்கிறது. அதிலே ஒரு Check Dam கட்டினால் நேரடியாக வயல்களுக்குப் பாசனம் தரமுடியும். இதுபோன்ற குளங்களுக்கு ஏராளமான தண்ணீரை நாம் supply செய்யமுடியும்



என்பதையும் அரசு கவனித்து அதற்கு ஆய்வு நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல விளாத்துறை. ஏற்கெனவே பழுது அடைந்துள்ள முழுக் கால்வாயையும் பழுது பார்க்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையிலே,

இன்னொன்று. குளங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே ஒரு தொகுதிக்கு ஒரு குளம் என்று எடுத்தார்கள். அதிலே விளவங்கோடு கிராமத்திலே ஒரு குளத்தை எடுத்தார்கள். 6 இலட்ச ரூபாய் என்று அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால் அதனுடைய வேலை ஒழுங்காகவும், முறையாகவும் நடக்கவில்லை. நாம் கொடுத்த பணம் முழுமையாக விவசாயிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. ஏற்கெனவே பலமுறை நான் இதுசம்பந்தமான விவரங்களை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதுபோல அந்த மாவட்டத்தில் குறிப்பாக நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சருடைய தொகுதிக்குள்ளே வருகிறபோது நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்குள்ளே செல்கின்றபோது இரண்டு பக்கங்களிலும் மிகப் பெரிய குளங்கள், வற்றாத குளங்கள் உண்டு. அவற்றைச் சீர் செய்வதில் போதிய கவனம் செலுத்தவில்லை. அவற்றிலுள்ள தூரை வாரி, அவற்றினுடைய பக்கச் சுவர்களைக் கட்டி முழுமையாக விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய அளவிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்கிறேன். *(மணியடிக்கபெற்றது)* அதுபோல, குளங்களைப் பாரமரிக்கின்ற பணி செய்கின்றபோது முறையாகச் செய்ய வேண்டும். அதற்கு 3 இலட்சம், 1 இலட்சம் என்று போடாமல் தேவை எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்து அந்த அளவிலே நிதி ஒதுக்கி அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

கடந்த ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிலே, நான் ஒரு அங்கத்தினராக இருந்தபோது, கொடுமுடி நீர்த்தேக்கத் திட்டம் குறித்து ஆய்வு நடத்தியபோது, அந்தப் பகுதியிலே இருக்கும் ஒரு சாலையைச் செப்பனிடுகிற வேலையிலே, எந்த ஒரு வேலையும் செய்யாமல், சாலை இல்லாமல் அதற்குப் பணம் ஒதுக்கியதாக அன்று விவாதத்திலே

இடம்பெற்றிருக்கிறது. Vigilance Committee முன்னாலே, இன்று அது பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதிலே என்ன சொன்னார்கள் என்று கேட்டால், இது 25 இலட்சம் ரூபாய் அளவுக்கு இருக்கக்கூடிய சம்பவம்தானே; இது ஒரு பெரிய சம்பவம் இல்லை என்று. ஆனால், கோடிக்கணக்கான ஊழல் நடந்த சம்பவங்கள் எல்லாம் முன்னால் இருக்கிறது. அவ்வளவு பிரச்சனைகளையும் ஆக ஆராய வேண்டுமென்றும், அவற்றின்மீது உரிய கவனம் செலுத்தி, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிப்பது என்பது, எதிர்காலத்திலே நம்முடைய அனைத்து திட்டங்களையும் முறையாக வழிநடத்திச் செல்வதற்கும், முறையாக செயல்படுத்துவதற்கும் உதவும் என்ற என்னுடைய கோரிக்கையை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் புதிய காலகட்டத்திலே, என்னுடைய மாவட்டத்திலே, புதிய நீர்த்தேக்கத் திட்டங்கள் வரவில்லை. நூறாண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பேச்சிப்பாறையும், 1946-லே கட்டப்பட்ட பெருஞ்சாணியும்தான் இருக்கின்றன. அதற்கு இடைப்பட்ட காலத்திலே, பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே சிற்றாறு 1 மற்றும் 2 என்ற அணை கட்டியதைத தவிர, அதற்குப் பிறகு நம்முடைய தேவைகளைப் போதுமான அளவுக்குப் பூர்த்தி செய்ய எதுவும் இல்லை. எனவே, என்னுடைய மாவட்டத்திலே அந்தப் பிரச்சினையை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் முறையாக ஆய்வு நடத்தி, மழைக் காலங்களிலே வருகின்ற தண்ணீரை சேமித்து வைப்பதற்கும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இருக்கின்ற தண்ணீர் பஞ்சத்தைக்கூட போக்குவதற்குமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டின் நாடு போற்றும் நிதிநிலை அறிக்கையின் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னர்கள் காலத்திற்குப் பிறகு, குறிப்பாக பராந்தக சோழன், கரிகால் வளவனுக்குப் பிறகு, வரலாறு காணாத வகையில், காவிரி மற்றும் கிளை வாய்க்கால்களில் தூர் வாரி, அகலப்படுத்தி,



விவசாயிகளின் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்துவிட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், விவசாயக் குடும்பத்திலிருந்து இன்று சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் என்னைப் போன்றவர்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆவோம்.

கொள்கை விளக்கக் குறிப்பில், 1999-2000 ஆம் ஆண்டில், இத்துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 408.15 கோடியாகும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லாத நிலையில், நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் 1998-99 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே மொத்தம் 23 திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில், பகுதி-2 திட்டத்தின்கீழ், சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள் மொத்தம் 19; இது தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் 1; மொத்தம் 20. இப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றுகூட கரூர் மாவட்டத்திற்கு இல்லை என்ற வேதனை தரும் செய்தியை நான் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கரூருக்கு வந்தபோது, கிருஷ்ணாராயபுரம் தொகுதிக்குட்பட்ட வெள்ளியணை மற்றும் பல கிராமங்கள் பயன்பெறும் வகையில், குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ரூ. 1 கோடி அளவில் அறிவித்தது மட்டும் கோடையில் குளிர் தென்றலாய் ஆறுதலைத் தருகிறது. இது தவிர, 1999-2000 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்கள் மொத்தம் 16. இதிலே கரூருக்கு என்று எந்தத் திட்டமும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கரூரிலும், காவிரி, அமராவதி என்ற இரண்டு ஆறுகள் பாய்ந்து கொண்டிருப்பதை மறந்து விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழகம் முழுவதும், ஒவ்வொரு தொகுதியிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான ஏரிகள் புனரமைப்புத் திட்டத்தின்படி, இதுவரை 200 ஏரிகள் தூர் வாரப்பட்டன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடிதம் எழுதி, சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின்பேரில் இதனைச் செய்து கொடுத்தார்கள் எனக்கும் இரண்டு கடிதங்கள் வந்தன. ஆனால், துரதிருஷ்டவசமாக எனது தொகுதியில் ஏரியே இல்லை. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துவிட்டேன். இதுவரை எனது தொகுதியில்,

பொதுப்பணித் துறை மூலம் கட்டடங்கள் கட்டும் பணியைத் தவிர, வேறு பாசனத் திட்டம் எதுவும் நடைபெறவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மூன்றாண்டு கால கழக அரசின் சாதனைகளை பொதுப்பணித் துறை மூலம் புத்தக வடிவில் பார்த்தும், போட்டோக்களைப் பார்க்கும்போதும்தான் மாண்புமிகு முதலமைச்சர், நம்முடைய தமிழினத் தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சியில், சட்டமன்ற உறுப்பினர்களாக நாமும் இருக்கிறோம் என்ற பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் எங்களைப் பெருமைகொள்ளச் செய்கிறது. நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் உழைப்பும், உறுதியும் வீண்போகாமல் விவசாயப் பெருங்குடி மக்களைச் சென்றடைந்துள்ளதை எண்ணி, அவர்தம் பணி தொடர, தொகுதி மக்களின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், கரூர் ஒன்றியத்தில், புகளூர், நெரூர், வாங்கல் மற்றும் பாப்பன முதலியார் வாய்க்கால் போன்ற 4 பெரும் வாய்க்கால்கள் பாசனத்திற்குப் பயன்பட்டு வருகின்றன. புகளூர் வாய்க்காலில், பள்ள வாய்க்கால் என்ற கிளை வாய்க்காலும் உள்ளது. கரூர் நகரைச் சுற்றியும், தாந்தோணி ஒன்றியத்திலும், அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் வடதுகரை இடதுகரை கால்வாய்கள் என்ற இரண்டு உள்ளன. இதில் புகளூர் வாய்க்கால் காவிரி ஆற்றின் வலதுகரையில் ஜேடர்பாளையம் படுகையில் பிரிந்து 21 மைல் நீளத்திற்குச் சென்று 8054 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை அளிக்கிறது. இந்த வாய்க்காலில் தூர் வாரும் பணி, தடுப்புச்சுவருடன் கூடிய படிக்கட்டுத்துறையைக் கட்டுதல், கரையைப் பலப்படுத்துதல், வெளிப்போக்கி மற்றும் மதகுகளுக்கு shutter போடுதல் போன்ற பணிகள் உடனடியாக செய்ய வேண்டியுள்ளது.

பிற்பகல் 12-30

அதுபோலவே, பாப்பன முதலியார் வாய்க்காலில் தூர்வாரி வடிகால் வசதியைச் செய்து தரவேண்டும். பாசன வாய்க்காலில் தூர்வாரி தடுப்புச் சுவர் கட்டி கரையை பலப்படுத்த வேண்டும். இது 10 மைல் நீளம் சென்று 1458 ஏக்கருக்குப் பாசன வசதியை அளிக்கிறது. நெரூர் வாய்க்கால் 11 மைல் நீளம் சென்று 1758 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியைச் செய்கிறது. இதிலேயும் தூர்வாரி, தடுப்புச் சுவரைக் கட்டி, கரையைப் பலப்படுத்திட வேண்டும். இந்த நான்கு



வாய்க்கால்களிலும் பணிகளைச் செய்ய மொத்தமாக ரூ. 40 இலட்சம் தேவைப்படும் என்று தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர எங்களுடைய நீண்ட கால பிரச்சினை, புகளூர் வாய்க்காலில் நொய்யலாற்றில் கழிவு நீர் கலப்பது. நொய்யலாறு புகளூர் வாய்க்காலில் நேரிடையாக கலக்கிறது. நொய்யலாற்றில் விரிவாக்கப்பட்ட நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க ஏதுவாக ஆற்றின் குறுக்கே மேல் பகுதியில் ஒரத்துபாளையம் என்ற இடத்தில் நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கத்திற்கு திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாயப் பட்டறைகளிலிருந்து மாசுபட்ட நீர் வருவதால் அதனைப் பாசனத்திற்கு பயன்படுத்த முடியாமல் அணையிலேயே நீரைத் தேக்கி வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அணை நிரம்பும்போது நொய்யலாற்றில் மாசுபட்ட நீர் திறந்து விடப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) இவ்வாறு திறந்துவிடப்படும் மாசுபட்ட நீர் புகளூர் வாய்க்காலில் நேரிடையாகக் கலப்பதால் பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீரை வழங்கமுடியாமல் போய்விடுகிறது. தலைப்பு மதகை அடைத்து அணைக்கட்டிலுள்ள போக்கி மூலம் நீர் வெளியேற்றப்பட்டு காவிரிக்குச் செல்கிறது. இப்படி மாசுபட்ட நீர் நொய்யலாற்றிற்கு வரும்போது, 10, 30 நாட்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. கடந்த 4, 5 வருடங்களாக வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு முறை நொய்யலாற்றில் மாசுபட்ட நீர் வருவதால் சுமார் 750 ஏக்கர் அளவிற்கு வெற்றிலையும், சுமார் 4500 ஏக்கர் அளவிற்கு கரும்பும், வாழை 2000 ஏக்கர் அளவிற்கும், சோளம் 750 ஏக்கர் அளவிற்கும், நெல் 1500 ஏக்கர் அளவிற்கும் மற்றும் பிற பயிர்கள் 500 ஏக்கர் அளவிற்கும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர, ஆசியாவிலேயே மிகப் பெரிய காகித ஆலையான தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் எங்களுடைய தொகுதியில் அமைந்துள்ளது. இந்த மாசுபட்ட நீர் வரும்போது எல்லாம், காகித ஆலை நிறுவனம் தனது தொழிலை நிறுத்தி வைத்து கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. இவை எல்லாவற்றையும் விட, ஆடு மாடுகள் இந்த நீரை அருந்துவதால் உடனடியாக இறப்பு ஏற்படுகிறது. புதுக்கோட்டை இடைத்தேர்தலின்போது, இந்த மாசுப்பட்ட நீரால் நிகழவிருந்த பெரிய ஆபத்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் பெரு முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தில் இருக்கும் என்று நம்புகிறேன். இந்தப் பாதிப்புகளை நிரந்தரமாகத் தடுக்கும் வகையில் நொய்யலாற்றில் வரும் மாசுபட்ட நீர், ஒரத்துப்பாளையம்

நீர்த்தேக்கத்திலிருந்து, அதிகபட்சமாக 500 கன அடி நீர் தொடர்ந்து திறந்துவிட்டு, நீர்த்தேக்கத்தில் நீரைக் குறைத்துக்கொள்ளும் வகையில் புகளூர் வாய்க்காலில் சைபன் வழியாக மாற்று வழியில் கொண்டு சென்று பாசனத்திற்குத் தேவையான தண்ணீரை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ. 50 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இந்தப் பணிகளைச் செய்ய இயலாது என்பதால் இதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணியின் முக்கியத்துவம் கருதி, இந்தப் பணிக்கான நிதியை ஒதுக்க இன்றே அறிவிப்பு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியின் மறுபக்கத்தில் அமராவதி, வலது மற்றும் இடது கரை வாய்க்கால்கள் மூலமாக சுமார் 7,500 ஏக்கர் அளவிற்கு நிலங்கள் பாசன வசதி செய்யப்படுகின்றன. இந்த வாய்க்கால்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக தூர் வாரி பராமரிப்பு செய்யப்படாததால் எனது தொகுதியினர் மட்டுமல்லாமல், கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அந்தக் கடைசிப் பக்கத்தைப் படியுங்கள், நேரமாகிறது. (சிரிப்பு)

**திருமதி வாசுகி முருகேசன்:** வலதுகரை வாய்க்கால் செட்டிப்பாளையம் அணையிலிருந்து பிரிந்து திருமலையனூர், புலியூர், கட்டளை, மணவாசி மற்றும் மாயனூர் வாய்க்கால்களை உள்ளடக்கி, 27 கிலோமீட்டர் நீளம் ஓடி 7,500 ஏக்கர் அளவிற்குப் பாசனம் செய்கிறது.

இடதுகரை கால்வாய் அமராவதி குறுக்கே அணைப்பாளையம் அணைக்கட்டிலிருந்து பிரிந்து, பல்லபாளையம், பஞ்சமாதேவி, கோயம்பள்ளி மற்றும் சோமூர் ஆகிய வாய்க்கால்களை உள்ளடக்கி 37 கிலோமீட்டர் தூரம் ஓடி சுமார் 5700 ஏக்கர் அளவிற்குப் பாசன வசதியை செய்கிறது. இந்த இரண்டு வாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்களில் தூர் எடுத்து கரையை பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திருமதி வாசுகி முருகேசன்:** இது போன்ற பணிகளுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று அதிகாரிகள் பட்டியல் தயாரித்துள்ளார்கள். இப்படி பல்வேறு நிலைகளில் பாசனத்திற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்தாலும் வாய்க்கால் பராமரிப்பு செய்துவர போதுமான Laskar போடப்படாததால், வருடா வருடம் கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்துக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது. நமது கழக அரசில், சாலைப் பராமரிப்பிற்காக அனைத்து சாலைகளும் சாலை பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, சரியான அளவில் பராமரிக்கப்பட்டு வருவதைப் போல, பாசன கால்வாய்கள் பராமரிப்பிற்கும் தேவையான Laskar நியமிக்கப்பட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

***திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியிலே தூர் வாரக்கூடிய பணியை மிகச் சிறப்பாகச் செய்ததைப்போல திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கக்கூடிய எல்லா கால்வாய்களையும் தூர் வார வேண்டும் என்கின்ற அடிப்படையில் தாமிரபரணி பாசனத் திட்டத்தை புனரமைப்பதற்காக ரூ. 27.66 கோடியை ஒதுக்கியமைக்காக அவர்களுக்கு திருநெல்வேலி மாவட்ட மக்கள் சார்பாகவும் குறிப்பாக பாளையங்கோட்டை தொகுதி மக்கள் சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியானது மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்கின்ற அடிப்படையில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த மார்ச் திங்கள் 7 ஆம் தேதி நெல்லைக்கு வந்து அங்கே பாசன மகாநாட்டைக்கூட்டி ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது பாசான மகாநாடு அல்ல, பாசன மகாநாடு.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** நீர்ப்பாசன மகாநாட்டை கூட்டி, அங்கு அதிலே விவசாயிகள் சொன்ன கோரிக்கைகளைக் கேட்டு,

வாழக்கூடிய மக்களுடைய, விவசாயிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் நெல்லை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கால்வாய்களை தூர் வாரக்கூடிய சிறப்பான பணியைச் செய்ய உத்தரவிட்டமைக்கு அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில் பாளையம் கால்வாயின் மூலமாக அதிகமான கிராமங்கள் பயன் பெறுகின்றன. அதேபோல், திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாயின் மூலம் சில கிராமப் பகுதிகள் பயன்பெறுகின்றன. ஆகவே, அந்த 3 கால்வாய்களையும் தூர் வாரக்கூடிய பணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அதை விரைந்து முடிக்க வேண்டுமென்று கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏன் என்று கேட்டால், ஜூன் மாதம் 1 ஆம் தேதி தாமிரபரணி பாசனத்தில் உள்ள பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் திறந்து விடுவார்கள். இந்தப் பணிகளுக்காக இன்னும் ஒரு மாதம் அதிகரித்து ஒரு மாதத்திற்குப் பின்பாக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்கள் மிக வேகமாக செய்வதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். Poclain மூலம் தூர்வாரக்கூடிய பணி நடைபெறுகிறது. சில இடங்களிலே அதிகமான தண்ணீர் தேங்கி அது குட்டையாக இருக்கிறது. இந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த poclain மூலம் தூர் வாரக்கூடிய பணியை செய்ய முடிவில்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்றாண்டு சாதனை என்கின்ற ஒரு புத்தகத்தை கொடுத்திருக்கிறார்கள். அதிலே பக்கிங்காம் கால்வாயில் புதிய இயந்திரத்தின் மூலம் தூர் வாரக்கூடிய பணி நடைபெறுகிறது என குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, இப்படி நாம் குட்டையாக இருக்கக்கூடிய பகுதிகளில் நவீன இயந்திரத்தை வைத்து தூர் வாரக்கூடிய பணியை எங்களுடைய பகுதியிலே செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, பாளையங்கோட்டை பகுதியிலே, அதேபோல மேலப்பாளையம் பகுதியிலே இதுபோன்று தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய குட்டைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் புதிய இயந்திரத்தின்



மூலம் இந்தப் பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இன்னும் ஒன்று, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் ஒரு சிறப்பான திட்டம். கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று இருந்தார்கள். அந்த நேரத்திலே நான் மேலப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். 1976 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் பச்சையாறு திட்டத்திற்கு கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டமானது இப்போது வடக்குப் பச்சையாறு என்ற திட்டமாக உருவாகியிருக்கிறது. இந்தப் பச்சையாறானது மேற்குத் தொடர்ச்சி மலை கருமாந்தியம்மன் கோவில் அணையிலிருந்து ஆரம்பமாகிறது. இப்படி ஆரம்பமாகிற இந்த ஆற்றிலிருந்து கடந்த 100 வருடங்களாகப் பயன்பெற்று வாக்கூடியவர்கள் என்னுடைய தொகுதியிலே பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டியபோது என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய அத்தனை கிராமங்களும் இந்தப் பச்சையாறு திட்டத்தின் மூலம் பயன்பெறக்கூடியதாக இருந்தன. ஆனால் இப்போது புதிதாக உருவாகியிருக்கின்ற திட்டத்தினால் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பகுதிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. அரசபத்து அணைக்கட்டிலிருந்து தேவநல்லூர் அணைக்கட்டு வரை உள்ள பகுதிகளை பிரித்து, அதிலிருந்து பயன்பெறக்கூடிய பகுதிகளை மட்டும் இந்த வடக்குப் பச்சையாறுத் திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள். ஆனால், பொன்னாக்குடி அணைக்கட்டுப் பகுதியிலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் 17 கிராமங்களிலுள்ள 2,916 ஏக்கர் நிலங்கள் பயன்பெற்று வந்திருக்கின்றன. அதேபோல் இட்டேரி கிராமத்தில் தாமரைச்செல்வியில் 158.93 ஏக்கர் பயன்பெற்று வந்திருக்கின்றன. அதேபோல் தமிழாக்குறிச்சி அணைக்கட்டில் 150 ஏக்கர் பயன்பெற்று வருகின்றன. இந்த உண்மை தாமிரபரணி வடிகால ரெக்கார்டுகளிலே இருக்கின்றன. ரெக்கார்டுகளிலே, வருவாய்த் துறை ரெக்கார்டுகளிலே இருக்கின்றன. ஆனால் கலைஞர் அவர்கள் இந்தப் பச்சையாறு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள் என்கின்ற அடிப்படையில், அதற்குப் பின்பாக வந்த ஆட்சியாளர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய நிலங்களை நீக்கியிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளின்மீது கருணையோடு செயல்படக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், என்னுடைய தொகுதியில் விட்டுப்போன நிலங்கள் அனைத்தும் பாசனம் பெறும் வகையில், அந்தப் பச்சையாறு திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000-ஆம் ஆண்டுக்கான பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1856-ல் புதுக்கோட்டை மன்னர் தொண்டைமான் அவர்களால் கொள்ளிடத்திலிருந்து புதுக்கோட்டைக்கு உபரி நீரைக் கொண்டு செல்லக்கூடிய திட்டம் அன்றைக்கு ரூ. 1½ கோடி அளவிற்கு திட்டம் தீட்டப்பட்டு, அதற்குப் பிறகு இன்றையவரையிலும் அந்தத் திட்டம் கிடப்பில் இருப்பதை இரண்டாவது முறையாக சட்டமன்றத்தில் பலமுறை எடுத்து வைத்திருந்தாலும்—ஏற்கெனவே 1997-98-ல் நம்முடைய முதலமைச்சரிடத்திலே சொல்லி இன்றைக்கு அதற்கு ரூ. 150 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற யாவரும் அறிந்திருக்கிறீர்கள். 111 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற, கொள்ளிடத்திலிருந்து புதுக்கோட்டைக்குச் செல்கின்ற அந்த உபரி நீர் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நிறைவேற்றுவார்களா, அல்லது பரிசீலனைக்காவது எடுத்துக்கொள்வார்களா, அல்லது அடுத்த ஆண்டிலாவது பகுதித் திட்டத்திலாவது சேர்த்து அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது தஞ்சை மாவட்டம் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இந்த ஆண்டோடு மூன்று ஆண்டுகளாக ரூ. 60 கோடிக்கு மேல் செலவில் தூர் வாருகின்ற பணிகளைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அது தஞ்சை மாவட்டத்தோடு ஒட்டி இருக்கின்ற என்னுடைய தொகுதியிலே, காம்பாக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த உள்வெளிச் சாலையிலே 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய நிலையில் காவிரி நீர் பாய்கிற பகுதி உள்ளது. மாண்புமிகு அமைச்சரிடத்திலும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்தில் 2 ஆண்டுகளாகவும் சொல்லியும் அந்தப் பகுதியில் தூர் வாருகிற பணி



குளங்களைச் சீரமைக்கிற பணி, மடைகள் சீரமைக்கிற பணி, இப்படி அனைத்துப் பணிகளையும் செய்யச் சொல்லிப் பலமுறை கோரிக்கை வைத்தும், அந்தப் பகுதியை மாற்றாந்தாய்ப் பிள்ளையாகக் கருதி, அதிகாரிகள் அந்தத் திட்டத்தை, தூர் வாருகிற பணியை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-45

செங்கமேடு பத்துத்தாக்கு என்பது முழுக்க முழுக்க ஆதிதிராவிட மக்கள் வாழுகிற பகுதி. சுமார் 4 கிலோமீட்டர் தூரம் முற்றிலும் அந்த வாய்க்கால் தூர் வாரப்படாமல் தரைமட்டமாகத் தூர்ந்து இருக்கிறது. ஆகவே, அந்த வாய்க்காலில், தூர் வாராத காரணத்தினால் அந்தப் பகுதியில் காவிரி நீர் போகாமல் அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையே 10 ஆண்டுகளாக நிறுத்தியிருக்கிறார்கள்; கூலி வேலைக்குச் செல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு—இந்த ஆண்டு அங்கே தூர் வாரப்படுகிற பணி நிரம்ப நடைபெறுவதற்கு டெண்டர்கள், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு 10 சதவீதம், 50 சதவீதம் தள்ளுபடி செய்து எடுத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படித் தள்ளுபடி செய்து எடுக்கப்பட்ட தொகையை நீங்கள், திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளுக்கு மாற்றி சீரமைக்கக்கூடிய பணியை தொடங்குவதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே, அருள்கூர்ந்து அந்தப் பகுதியில் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிற, புது ஆற்றிலிருந்து பிரிகிற உளவயல் சானல் பகுதிகளில், இந்த ஆண்டாவது தூர் வாருகிற பணியை முழுமையாக நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் என்பது தஞ்சை மாவட்டத்தில் பொதுப்பணித் துறைக் குளங்களில் இருக்கக்கூடியவை, கால்வாய்களில் இருப்பவைகள் முழுமையாக அகற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிற பொதுப்பணித் துறைக் குளங்கள் மற்றும் கால்வாய்களில் இருக்கக்கூடிய நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள், தொடர்ச்சியாக அகற்றப்படாத காரணத்தினால், தூர்ந்துபோய் மழைக் காலங்களில் தண்ணீர் வருவதே கிடையாது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, தொடர்ச்சியாக 3 கோரிக்கைகள் 10, 15

ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. திருமணஞ்சேரி அணைக்கட்டு என்பது அக்கினி ஆற்றில், 3 கோடி ரூபாய்க்கு திட்டம் தயார் செய்து, அந்த அக்கினி ஆற்றில், தண்ணீரை நிரப்பி அந்தப் பகுதியிலே உள்ள 10,000 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு செல்லக்கூடிய திட்டம். 15 ஆண்டுகளாக திட்டம் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்த அணைக்கட்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தர வேண்டும்.

அதோடு, வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டக்கூடிய திட்டம். 35 இலட்சம் ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சுமார் 10 ஆண்டுகளாக இருக்கிறது. அந்த வெள்ளாற்றில் பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்ட அந்த இசுவப்பட்டிப் பாலம். ஆறுகளில் நிறைய மணல் மேடுகள், செடிகள் (மணியடிக்கப்பெற்றது) நிறைந்திருந்த காரணத்தினால் அந்தப் பாலம் இப்போது இடிந்துபோய் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக, வெள்ளாற்றில் இருக்கக்கூடிய மணல் மேடுகளையும், செடிகளையும், அதுபோல அக்கினி ஆற்றில் இருக்கக்கூடிய அந்தப் பாலங்களின் அடியில் இருக்கக்கூடிய மணல் மேடுகளை முற்றிலுமாக அகற்றித்தர வேண்டும்.

இன்னொன்று, நம்முடைய அமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு கேட்பது, ஆலங்குடித் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது உயர் அதிகாரிகளோ வந்து உட்கார வேண்டும் என்று சொன்னால் எங்கேயாவது டீ கடையிலோ, பெட்டிக் கடையிலோதான் உட்கார வேண்டும். அந்த நிலை இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித் துறை மூலம் பயணிகள் தங்கும் விடுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஏதாவதொரு திட்டத்தின் மூலம், நிச்சயமாக நீங்கள் கட்டித் தர வேண்டும். தொடர்ந்து நிறைவேற்றப்படாமல் இருக்கிற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டும்.

அதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல்வேறு மாவட்டங்களுக்கு அணைகள் கட்டுவது, குளங்களைச் சீரமைப்பது, இப்படி கொள்கை விளக்கப் புத்தகத்திலே சிறப்பாக திட்டங்களை நிறைவேற்றுவதாகக் கூறியிருக்கிறீர்கள். அதை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எந்தவிதமான திட்டமும் அதில் இடம் பெறவில்லை.



என்னுடைய தொகுதியில் இரண்டே இரண்டு கால்வாய்கள், கவிநாட்டுக் கண்மாயிலிருந்து அறந்தாங்கி வரையிலும் செல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய பொதுப்பணித் துறை கண்மாயின், வாய்க்கால் முற்றிலுமாகத் தூர்ந்திருக்கிறது. அது 10,000 ஏக்கருக்கு பாசனம் செய்யக்கூடியது. அந்த வாய்க்கால் 50 ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் இருக்கிறது.

அதேபோல, கொத்தமங்கலத்திலேயிருந்து நகரம் செல்லக்கூடிய அன்னதானக் காவிரி வாய்க்கால் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த கண்மாய். அதுவும் தூர் வாரப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்தக் கண்மாய்களுக்கு, வரத்து வாரிகளுக்கு (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியை வழங்கி அந்த வாரிகளைத் தூர் வாரக்கூடிய நடவடிக்கையை இந்த ஆண்டாவது எடுக்க வேண்டும்.

அதோடு, ஒரு தொகுதிக்கு ஒரு குளம் என்ற திட்டத்தின்கீழ் இரண்டு ஆண்டுகளாக அந்தப் பணி சிறப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நடந்திருக்கிறது. அதில் இன்னொரு சந்தேகம் என்னவென்று சொன்னால் ஒதுக்குகிற அந்த 10 இலட்சம் ரூபாய் நிதி அந்த வேலை முடிவடைந்ததற்குப் பிறகும் முழுமையாக வழங்கப்படவில்லை என்று ஒப்பந்தக்காரர்கள் சொல்கிறார்கள். ஒரு குளத்தில் 10 இலட்சம் ரூபாய்க்குப் பணி முடிந்து, 7 இலட்சம் ரூபாய், 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கி (மணியடிக்கப்பெற்றது) முழுமையாக நிதி வழங்கப்படாத நிலையிலே 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் இன்னும் 2 ஆண்டுகளாக பாக்கி இருக்கின்றது. முழுத் தொகையை வழங்கவில்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொல்கிறார்கள். அதிகாரிகளை அழைத்து, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் பேசி முடிக்கப்பட்ட பணிகளுக்கு முழுத் தொகையை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தின் இறுதியாக திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை,

பாசனம் மானியக் கோரிக்கையின் மீதும் எனது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினை அளித்ததற்காக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலத்திலே மிக அதிகப்படியான நீர்த் தேக்கங்களை எல்லாம், மிக அதிகப்படியான ஏரிகளை எல்லாம் தூர் வாரச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டிலே பொருளாதார வளர்ச்சியிலே முன்னிலை வகிப்பது விவசாயமாகும். இந்த விவசாயம் நல்ல முறையில் விளங்கிட நீர்ப் பாசனம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாக எனது பேராவூரணி தொகுதி இருக்கின்றது. மேட்டூர் அணையிலே தண்ணீர் ஜூன் மாதம் திறக்கப்பட்டு எனது பேராவூரணி தொகுதிக்கு வருவதற்கு ஏறக்குறைய ஆகஸ்ட் மாதம் ஆகிறது. அந்த சூழ்நிலை ஏற்படுகின்றது. காரணம், கல்லணைக் கால்வாயில் இருக்கின்ற பிரதான வாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்களில் எல்லாம் அதனுடைய முகத்துவாரப்பகுதிகளிலே மிக அதிகப்படியான மணல் திட்டுகளும் சேர்ந்திருக்கின்றன. அதை சென்ற ஆண்டு ஒரு சில இடங்களிலே அப்புறப்படுத்தியிருந்தாலும், இன்னும் அவ்வாறு அப்புறப்படுத்தாமல் இருக்கின்ற வாய்க்கால்களிலே முழுமையான அளவிலே அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அப்புறப்படுத்தினால் கால்வாய் திறக்கப்படுகின்றபோது 4000 கனஅடி தண்ணீர் முழுமையாக எனது பகுதிக்கு வரும். அதோடு அல்லாமல் வருஷம்தோறும் இந்தப் பணியை கல்லணைக் கால்வாய் முகத்துவாரங்களிலும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே சுமார் 39,202 ஏரிகள் உள்ளன. அவற்றிலே ஒரு சில ஏரிகள்தான் தங்களால் தூர் வாரப்பட்டிருக்கின்றன. இன்னும் பல்வேறு ஏரிகள் தூர் வாரப்பட வேண்டும்; செப்பனிடப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும். எனது பேராவூரணி தொகுதியைப் பொறுத்தமட்டிலே ஏறக்குறைய 375 பெரிய ஏரிகள் இருக்கின்றன. அவற்றிலே சென்ற ஆண்டு ஒரு சில ஏரிகளிலே தூர் வாருதல் சிறப்பான முறையிலே நடைபெற்றிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல் வாய்க்கால்கள் திட்டத்திலே வாய்க்கால்கள் எல்லாம் சிமெண்ட் வாய்க்கால்களாக அமைக்கப்பட கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதியாதாரம் குறைவு என்ற காரணத்தாலே, எடுக்கப்பட்ட ஒரு சில வாய்க்கால்களின் பணிகள் முடிக்கப்படாமலும், பல்வேறு வாய்க்கால்கள் எல்லாம் இன்னும் எடுக்கப்படாமலும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் வரவிருக்கின்ற நிதியாண்டிலே எடுத்துக்கொண்டு இப்பணிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கால்வாய்கள் மற்றும் ஏரிகளில் முழுமையான அளவிலே ஆகாயத் தாமரை, நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் இருக்கின்ற காரணத்தாலே ஏரிகளிலே முழுமையான அளவு தண்ணீர் தேங்க முடியாமல், வாய்க்கால்களிலே தண்ணீர் முழுமையான அளவு செல்ல முடியாத நிலை இருக்கின்றது. ஆக இரண்டு ஆண்டுகளாக தக்க நடவடிக்கை எடுத்திருந்தாலும் இன்னும் வரவிருக்கின்ற ஆண்டுகளிலே நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை முழுமையாக அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

தமிழக வரலாற்றிலே மாமன்னர் கரிகால் சோழனுக்குப் பின்பு காவிரிக்கு வடிவத்தைக் காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மரியாதைக்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சென்ற ஆண்டு ஏறக்குறைய 20 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அதற்கான பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

இந்த ஆண்டு தற்போது ஏறக்குறைய 50 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகளை நிறைவேற்றுவதற்காக டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. டெண்டர் கோரும் பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும் தற்போது முடிந்திருக்கின்ற டெண்டர் முறைகளிலே ஏறக்குறைய 35 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் மதிப்பீடுகள் எல்லாம் குறைந்த மதிப்பீடுகளிலே டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பணியை முழுமையாகவும், முறையாகவும் நிறைவேற்றுவதற்காக தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயப் பிரிதிநிதிகள் கொண்ட ஒரு குழுவை

அமைத்து அந்தப் பணிகளையெல்லாம் முழு அளவிலே நிறைவேற்றுவதற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எனது பேராவூரணி தொகுதியின் மக்களுடைய நீண்ட கால கோரிக்கைகளையும் நான் இந்த மாமன்றத்திலே தொடர்ந்து மூன்று முறை பேசியபோதும், அதேபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் நேரிடையாகவும் தெரிவித்திருக்கிறேன். பேராவூரணி தொகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்ற மகாராஜ சமுத்திரம் என்ற காட்டாற்றின் அதிகப்படியான தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கின்றது.

அதிலே ஒரு நீரேற்றும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் வரவிருக்கின்ற நிதியாண்டிலே நீரேற்றும் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் பட்டுக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற முதல்சேரி, பள்ளிகொண்டான், தொக்காலிக்காடு, மயிலங்கோட்டை பகுதி விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

பேராவூரணி ஒன்றியத்திலே இருக்கின்ற அம்புலி ஆற்றிலே ஒரு நீரேற்றும் திட்டம் அமைக்கப்பட்டால், பேராவூரணி ஒன்றியத்தின் தென்பகுதியும், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியத்தினுடைய தென் பகுதியும் முழுமையாகப் பயனடையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்னி ஆறு, சேதுபாவாச் சத்திரம் ஒன்றியத்திலே கடலிலே கலக்கின்ற பகுதியிலே அக்னி ஆற்றினுடைய கரைகள் தற்பொழுது உடைந்த நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் கொள்ளுக்காடு என்ற அந்தக் கிராமம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை இந்த ஆண்டு சிமெண்ட் தளம் போட்ட கரைகளாக அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி ஒன்றியத்திலே ஓடும் நரி ஆற்றின் தண்ணீர் வீணாகச் செல்கிறது. அந்த நரியாற்றின் குறுக்கே அலிவலம் அருகே ஒரு அணை கட்டி நீர்த்தேக்கம் அமைத்துக் கொடுத்தால் அந்தப்



பகுதியிலே இருக்கின்ற அலிவலம், பாலக்களி, கருவேப்பிலைக்காடு போன்ற பகுதி மக்கள் பயன் அடைவார்கள்.

அதுபோல இன்னும் பல்வேறு பணிகள், பல்வேறு நீர்த் தேக்கங்கள் எனது தொகுதியிலே நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லணைக் கால்வாய்க் கடைமடைப் பகுதியிலே முழுமையான அளவிலே இன்னும் கரைக் காவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. காலியாக இருக்கின்ற கரைக் காவலர் பணியிடங்களை விரைவிலே நிரப்பினால் அந்தப் பகுதியிலே தண்ணீர் திருட்டு, மற்றும் மரங்கள் திருட்டெல்லாம் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லணைக் கால்வாய்ப் பகுதியிலே இருக்கின்ற பாசனக் காவலர்கள், பாசன எழுத்தர்கள் தங்குகின்ற குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேராவூரணிக்கு வருகின்ற அமைச்சர் பெருமக்கள், மற்றும் அரசு அலுவலர்கள் எல்லாம் தங்கிச் செல்வதற்குப் பொதுப் பணித் துறையிலே ஒரு பயணிகள் விடுதியை ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை பாசனப் பிரிவிலே சூரியநாராயணபுரம் கிராமத்திலே இருக்கின்ற பொதுப்பணித் துறை பயணிகள் விடுதியைப் புதுப்பித்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணியில் இருக்கின்ற சார்பதிவாளர் கட்டடம் இடிந்து விழுகின்ற தறுவாயிலே இருக்கிறது. அதற்கு இந்த நிதியாண்டிலே புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

மதுக்கூர், இரண்டாம் புலிக்காடு, திருச்சிற்றம்பலம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற மேலான கருத்துக்களுக்கு என்னுடைய பதிலை அளிக்கக்கூடிய வாய்ப்பைத் தாங்கள் தந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1989-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆட்சியை அமைத்தபொழுது இருமுறையும், இந்த முறை ஆட்சியமைத்தபொழுது 3 முறையும், ஆக 5 முறை பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு தந்திருக்கிற என்னுடைய அரசியல் தலைவர், என்னுடைய அரசியல் குருநாதர், கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து அவர் இருக்கிற திக்கு நோக்கி வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன்.

எட்டு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பலர் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். நன்றி என்று சொல்ல மாட்டேன். அதைச் செய்ய வேண்டும் என்கிற ஆதங்கத்தில் சிலர் சிலவற்றைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் நெஞ்சிலே கொண்டிருக்கிறேன். நிதிநிலைக்கு ஏற்ப அவர்கள் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, இந்த உரைக்கு முன்னால் நான் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகள் கண்ணீரும் கம்பலையுமாய் அனுதாபச் செய்திகளோடுதான் இந்த விவாதம் இன்று நடந்திருக்க வேண்டும்.

கலைஞர் அவர்கள் கடந்த 31-ஆம் தேதி விடிவதற்கு முன்பே விழித்தெழுந்து, மக்கள் வெள்ளத்தால் மடிவதற்கு முன்பே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்காவிட்டால் புழல் ஏரியினுடைய விபத்து பெருவிபத்தாக மாறியிருக்கும். அன்றைக்கு மற்றவர்கள் தன்னுடைய இமைக் கதவைத் திறப்பதற்கு முன்னால் கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து மின்னல்



வேகத்திலே அவர் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான், பல ஆயிரக்கணக்கான உயிர்களையும் காத்தார், நிலத்திலே இருக்கிற பயிரையும் காத்தார். ஏன், நான் பொறுப்பேற்றிருக்கிற இந்த இலாக்காவின் மானத்தையும் காத்தார், (மேசையைத் தட்டும் ஒலி) என்னையே அவப்பெயரில் இருந்து காத்தார். ஆகவே அந்த மானத்தையும் உயிரையும் காத்த நம்முடைய தலைவர் அவர்களுக்கு நான் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. ஏரியினுடைய கதவை அடைப்பதற்காக கோட்டையினுடைய கதவைத் திறந்த ஒரே ஒரு முதலமைச்சர், இந்தியத் திருநாட்டிலே, அதுவும் விடியற்காலையில், பொழுது விடிவதற்கு முன்னதாகவே வந்தவர் நம்முடைய கலைஞர். அந்த இளங் காலைப் பொழுதில், புழலேரியை நோக்கி அவர் சென்றபோது, நான் அவரை அறிவேன். காலை நேரத்திலே, சூரிய உதயத்திற்கு முன்னால், பூபாளம் பாடுகின்ற அந்தக் காலக்கட்டத்திலே வெளியில் போவதில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருப்பார்? ஆனால் எனக்கொரு துக்கத்திலும் நான் நினைத்திருந்தேன், புழலுக்குப் போகின்ற நேரத்தில் கலைஞருடைய இதயம் தழலாக, அனலாக, அனல் கொதிக்கின்ற உள்ளத்தோடுதான் அந்த ஏரிக்கரையிலே அவர் நின்றிருக்கமுடியும். என்னைப் பொறுத்தவரையிலே ஒன்றைச் சொல்கிறேன். எப்போதோ ஒரு காலத்தில் மதுராந்தகம் ஏரி உடைய இருந்ததாகவும், இராமன் வந்து நின்று அந்த ஏரி உடையாமல் காத்ததற்காக அங்கே ஒரு ஏரி காத்த இராமர் கோயில் இருக்கிறது. அது புராணம், புராணம் கற்பனை. எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் இது இன்றைக்கு நடந்திருப்பது வரலாறு.(மேசையைத் தட்டும் ஒலி) சான்றோடு கூடிய வரலாறு. மதுராந்தகம் ஏரியை இராமன் காத்தாரோ காக்கவில்லையோ எங்களுக்குத் தெரியாது. ஆனால் புழலேரியைக் காத்து புகழ்கொண்ட தலைவர் என்னுடைய தலைவர் கலைஞர் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறையை என்னிடத்திலே ஒப்படைத்திருந்தாலும் அவருடைய துறை அதுதான். எல்லாத் துறைகளும் அவருடைய துறைகள்தான். இருந்தாலும் எல்லாப் பிள்ளைகளையும் விட பெரிய பிள்ளையின் மீது கொஞ்சம் பாசம்

[திரு. துரைமுருகன்] [1999 ஏப்ரல் 7

அதிகம் இருக்கும் அல்லவா? இன்றைக்கு இந்தியா முழுவதும் மிகப் பெரிய நிர்வாகி என்று முதல்வரைச் சொல்கிறார்கள். ஆனாலும் அவர் நிர்வாகத்திலே நடை பயின்றது இந்தப் பொதுப்பணித் துறையிலே என்ற காரணத்தால், எப்போது எப்போதெல்லாம் கலைஞருடைய ஆட்சி இங்கே உதயமாகிறதோ அப்போதெல்லாம் பொதுப்பணித் துறைக்கு ஒரு பொற்காலம் ஏற்பட்டுவிடுகிறது. ஒரு காலம் இருந்தது. ஒரு காலம் என்ன, மூன்றாண்டுகளுக்கு முன்னாலே ஒரு காலம் இருந்தது. இந்தப் பொதுப்பணித் துறை, பணம் காய்க்கும் மரமாக, கமிஷன் மண்டியாக, காமதேனுவாக, சிலருக்கு கற்பக விருட்சமாக மாறியிருந்தது. பொதுப்பணிக்குப் பணி செய்யும் இந்தத் துறை ஊழல் என்னும் பிடிக்குள் மாட்டிக்கொண்டு தவித்துக்கொண்டிருந்தது. ஆனால் சாகாத சரித்திரத்தையும் படைக்கக்கூடிய தலைவர் அவர்கள் இந்தத் துறையையே தூர் வாரினார்கள்.

நிர்வாகச் சீரழிவு, கமிஷன் என்னும் காட்டாமணிச் செடி, முறைகேடு என்னும் கட்டுமானச் சிதைவு ஆகியவற்றால் தூர்ந்து போய்க் கிடந்த பொதுப்பணித் துறையையே தூய்மை என்னும் பொக்லைன் புல்டோசர் கொண்டு தூர் வாரிச் சீரமைத்து, நிர்வாக பணி என்னும் நீர் சிந்தாமல் சிதறாமல் கொண்டு செல்வதற்கு வழி கண்டவர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான். அவர் எப்போது எப்போதெல்லாம் முதலமைச்சராக வருகிறாரோ அப்போதெல்லாம் பொதுப்பணித் துறைக்கு ஒரு பொற்காலம்.

1969-லிருந்து இன்றைய வரையில் தமிழ்நாட்டில் அவர் கட்டியிருக்கிற அணைக்கட்டுகளை மட்டும் ஒரு கணம் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1969 முதல் 1975 வரை—ராமா நதி நீர்த் தேக்கத் திட்டம், கடனா நதித் நீர்த் தேக்கத் திட்டம், பாப்பலாறு நீர்த் தேக்கம், பாலாறு - பொறந்தலாறு நீர்த் தேக்கம், வருதமாநதி நீர்த்தேக்கம், மருதா நதி நீர்த்தேக்கம், பொன்னனியாறு நீர்த்தேக்கம், பிளவக்கல் நீர்த்தேக்கம், பெரியாறு, பிளவக்கல் நீர்த்தேக்கம் கோவிலார் கருப்பா நதி நீர்த்தேக்கம், சித்தாறு நீர்த்தேக்கம் - 1, மணி அவர்களே (குறுக்கீடு) சித்தாறு நீர்த்தேக்கம் - 2 - ஏனென்றால் நீங்கள் வேறு மாதிரி சொன்னீர்கள்—மேல் நீராறு நீர்த்தேக்கம், கீழ் நீராறு நீர்த்தேக்கம், குடகனாறு நீர்த்தேக்கம், மணிமுத்தா நதி நீர்த்தேக்கம், சின்னாறு நீர்த்தேக்கம், வரத்துப்பாளையம் நீர்த்தேக்கம், வட்டமலை கிரியோடை



1999 ஏப்ரல் 7] [திரு. துரைமுருகன்]

நீர்த்தேக்கம், பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கம், குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கம், வைகை அணையிலே விரகனூர் தடுப்பு அணை நீர்த்தேக்கம், பார்த்திபனூர் தடுப்பு அணை, முக்கொம்பு அணை, இவை 1975 வரையில். அதற்கடுத்து 1989-லிருந்து 1991 ஆம் ஆண்டு வரையிலே ஆட்சியிலே கலைஞர் அவர்கள் இருந்தபோது தந்த அணைக்கட்டுகள் பொய்கையாறு அணை, நம்பியாறு அணை, அடவிநயினார் அணை, நங்காஞ்சியாறு அணை, கிருதுமால் அணை, இராஜாதோப்புகானாறு அணை, மோர்தானா அணை. இப்போது கலைஞர் அவர்கள் 1996-லிருந்து 1999 வரையில் வழங்கியிருக்கிற, தந்திருக்கிற அணைகள். வரட்டாறு-வள்ளிமதுரை அணை, ஆண்டியப்பனூர் ஓடை அணை, பத்தலபள்ளி-மலட்டாறு அணை, செண்பகத்தோப்பு அணை, குப்பநத்தம் அணை, மிருகண்டாநதி அணை, வெள்ளக்கல் கானாறு அணை, ரெட்டிதீப்ப அணை, ஆணைவிழுந்தான் ஓடை அணை, சிறுமலை ஆறு அணை, நாயோடை அணை, நல்லத்தங்காள் ஓடை அணை, சாஸ்தான் கோயில் அணை, குப்பத்து ஓடை அணை, வடக்குப்பச்சையாறு அணை, மாம்பழத்துறையாறு அணை, உள்ளாறு நீர்த்தேக்க அணை.

பிற்பகல் 1.05

திட்டங்கள். 58 கிராமங்களுக்கு வைகை தண்ணீரை அளிக்கும் திட்டம். நிலையூர் கால்வாய் திட்டம். நிலையூர் கால்வாயிலிருந்து கம்பிக்குடி கண்மாய் வரையில் பாசனத்திற்கு நீர் வழங்கும் திட்டம். இது கம்பம், போடி, தேனி தொகுதிகளுக்கு. பதினெட்டாம் கால்வாய் திட்டம். சண்டையனேரி கால்வாய் திட்டம். நந்தன் கால்வாய் திட்டம். காவேரி மேலணையை பலப்படுத்தும் திட்டம்.

அதுமட்டுமல்லாமல், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே அணையை தொடங்கிவிட்டு, அதற்கு நிதி கொடுக்காமல் போய்விட்டார்கள். தான் பெற்ற பிள்ளையை மட்டும் வளர்க்கவில்லை, மற்றவர்களுடைய பிள்ளையை வளர்ப்பதுபோல தாய் உள்ளத்தோடு, அவர்கள் பணம் கொடுக்காத காரணத்தால் இருந்த நிலைகளுக்கு பணத்தை ஒதுக்கி- சோத்துப்பாறை அணை, சண்முகா நதி நீர் திட்டம் - சண்முகா நதி அணை, மலட்டாறு அணை-கமுதியில், இருக்கன்குடி அணை, குதிரையாறு அணை, சென்னமபட்டி அணை இவ்வளவு திட்டங்களும் கலைஞருடைய காலத்திலேதான் உருவாகி இருக்கின்றன. இப்படி சொல்கிறபோது இது பொற்காலமா, அல்லவா என்பதை அருள்கூர்ந்து சிந்திக்க வேண்டும். அதுமட்டுமல்ல, கலைஞர் அவர்கள் பொதுப்பணித்

துறையிலே பொற்காலத்தை மட்டும் உருவாக்கவில்லை. இப்போது இந்த பொதுப்பணித் துறையிலேதான் கலைஞர் அவர்கள் சரித்திரத்தையும் படைத்திருக்கின்றார்கள்.

இப்போது காவிரிக்கு ஒரு ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட அவருடைய பிறப்பு காலத்திலிருந்து, 1924-லிருந்து காவிரியிலே பிரச்சினை ஆரம்பித்தது என்பார்கள். அவரே அடிக்கடி சொல்வார், நான் பிறந்த பொழுதே ஆரம்பித்த பிரச்சினை என்று. அந்தப் பிரச்சினைக்காக 26 முறை பேச்சுவார்த்தை நடந்தபோதெல்லாம் 25 முறைகளுக்கு மேலே பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு அதற்கொரு நடுவர் மன்றம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த காலத்தில் காலம் கடந்து கொண்டிருந்தது. ஆனால் கலைஞர் அவர்கள் 1989-லே வந்தபோதுதான் காவிரிக்கு வரலாற்று புகழ்பெற்ற நடுவர் மன்றத்தை கலைஞர் அவர்கள் கண்டு சரித்திரம் படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது நடுவர் மன்றமாக இருக்கட்டும், அது விசாரிக்கட்டும், தீர்ப்பு சொல்லட்டும். ஆனால் இடைக்காலத்திலே ஒரு தீர்ப்பு வேண்டுமென்று கேட்டு ஒரு தீர்ப்பை, 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம், தமிழ்நாட்டிற்கு மேட்டூரில் கொண்டுவந்து தரவேண்டும் என்ற வரலாற்று சிறப்புமிக்க அந்த இடைக்காலத் தீர்ப்பை பெறுவதற்கும் அடித்தளத்தை அமைத்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தத் தீர்ப்புக்கு, அதை அமல்படுத்துவதற்கு சட்டபூர்வமான ஓர் அங்கீகாரம் தேவை, ஒரு ஸ்கீம் தேவை என்று கேட்டு அதற்கும் உச்சநீதிமன்றத்திலே வாதாடி, வற்புறுத்தி ஆணையத்தைப் பெற்று இன்றைக்கு பிரதமர் தலைமையிலேயே ஓர் ஆணையத்தைப்பெற்று ஒரு வரலாற்றை கலைஞர் அவர்கள் படைத்ததும் இந்தப் பொதுப்பணித் துறையிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஏதோ கிருஷ்ணா வாட்டர் வருமோ, வாராதோ என்று ஏங்கி கொண்டிருந்த அந்த கிருஷ்ணா நதி நீரை சென்னை மாநகருக்கு கொண்டுவந்தது பல தடைகளைத் தாண்டி கொண்டு வந்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான், என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்றுதான், இங்கே சகோதரி வாசுகி பேசியதுபோல, கரிகால் மன்னன் கல்லணையைக் கட்டினான், வரலாறு தெரிகிறது. ஆனால்



அந்தக் கல்லணைக்குக்கீழே யார் காவிரிக்குக் கரை கட்டினார்? அதற்கு வரலாறு இல்லை. ஆனால் தூர்ந்து போய், செடி மண்டிப்போய், மண்மேடிட்டுக் கிடந்த அந்த பகுதிகளை தூர் வாருவதற்கே ஒரு புதுமையைக் கண்டவர். காரணம் என்னவென்றால், Poclain Bulldozer போன்ற நவீன கனரக இயந்திரங்களை வைத்து தூர் வாரவேண்டுமென்ற ஒரு சிந்தனை இந்தத் தலைவருடைய நெஞ்சிலே உதித்த ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் காவிரிக்கரைதீரத்திலே மட்டுமல்ல, கொள்ளிடக்கரை ஓரத்திலும் தூர் வாரப்படுகிறது. அதெல்லாம் போதாது. கொங்கு நாட்டு சீமையிலும் வாரட்டும் என்றுதான் கீழ்பவானி பகுதிக்கு 10 கோடி ரூபாயை கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். தாமிரபாணியிலும், அதே கோதையாறு திட்டத்திலும், வைகை தீரத்திலும் தூர் வாரவேண்டுமென்று கலைஞர் அவர்கள் அளித்த அந்த உத்திரவைத்தான் இங்கே கோதர் மைதீன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடுகின்ற கோதையாற்றிலும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓடுகின்ற தாமிரபாணியிலும் எல்லா இடங்களிலும் தூர் வாரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். எனவே அந்தப் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-10

'பிட்டுக்கு மண் சுமந்த' காலத்திலேதான் வைகை அணை கட்டினான் என்ற ஒரு கதை உண்டு. ஆனால் அதற்குப் பிறகு விரகனூர் ரெகுலேட்டரின்கீழே பார்ப்பீர்களேயானால் கரையே இல்லாமல் போய்விட்டது. வைகைக்கு. ஆனால், வைகைக்கு கரை எழுப்பிக்கொண்டிருப்பவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த இலாக்கா பந்தய குதிரைபோல வேகமாக ஓடுகிறது என்று நீங்கள் பாராட்டுகிறீர்கள் என்றால் அந்தப் பந்தய குதிரையின் அளவுக்குப் பழக்கித்தந்தவர் கலைஞர் அவர்கள்தான். எங்களை மாதத்திற்கு ஒரு முறை இரு முறை என்று அழைத்து ஆய்வு நடத்தியவர் அவர்தான். இன்றைக்கு என்னை எல்லோரும் பாராட்டினார்களே. ஆனால் நான் இன்னும் பாஸ் மார்க்கே கலைஞர் அவர்களிடத்திலே வாங்கவில்லை. எனக்கு அது தெரியும். காரணம் நாங்கள் ஒவ்வொரு இலாக்காவிலும் எத்தனை Percent செலவு செய்திருக்கிறோம் என்று கணக்குப் பார்த்தபோது என் இலாக்காதான் கடைசியில் இருந்தது. காரணம் என்

இலாக்காவிற்கு சில சங்கடங்கள் உள்ளன. ஒரு திட்டம் போடுவோம், நில ஆர்ஜிதத்திலே நேரம் ஆகிவிடும்.

சில நேரங்களில் வழக்குகள் இருக்கும் இன்னும் பல சங்கதிகள் உள்ளன. நேரம் இல்லை சொல்வதற்கு. இருந்தாலும் கலைஞர் அவர்கள் எங்களை விரைவுபடுத்தியதால்தான் இன்றைக்கு நான் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் கிட்டத்தட்ட 90 சதவீதத்தை எட்டியிருக்கிறோம் என்று சொன்னால், எங்கள் பணியை இன்னும் 100 சதவீதமாக காட்டியபிறகுதான் நான் அவரிடத்திலே பாராட்டைப் பெற முடியும். இந்தப் பொதுப்பணித் துறை இன்றைக்கு அவர்கள் காட்டியிருக்கிற ஆர்வத்தின் காரணமாக, ஊட்டிய உணர்வின் காரணமாக இந்த இலாக்காவிற்கு Boom period; Golden Age நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா? 200 ஆண்டுகாலமாக பொதுப்பணித் துறை இருக்கிறது. இந்த நூற்றாண்டினுடைய இறுதியில் இப்போது இருக்கிறது. இந்த மூன்றாண்டுகளில்; நாங்கள் செலவு செய்தது. நாங்கள் என்றால் அவர் கொடுத்தது. கலைஞர் அவர்கள் கொடுத்தது. இன்னும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் செலவு செய்ய இருப்பதை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். உலக வங்கியிலிருந்து 1200 கோடி ரூபாய். Dam Safety அதிலிருந்து 38 கோடி ரூபாய், Hydrology அதிலிருந்து 36 கோடி ரூபாய், ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் அதிலிருந்து 35 கோடி ரூபாய், அரசாங்கம் தந்திருப்பது 500 கோடி ரூபாய் ஆக மொத்தம் கிட்டத்தட்ட 1800 கோடி ரூபாய் 'Plan' திட்டச் செலவு. Non Plan என்ற வகையில் 1200 கோடி ரூபாய், மற்ற இலாக்காக்கள் பில்டிங் கட்டுவதற்கு கொடுத்த பணம் 1000 கோடி ரூபாய். அப்படியானால் இந்த 2001க்குள் நாங்கள் செலவு செய்ய வேண்டிய பணம் 4000 கோடி ரூபாய், இந்தப் பொதுப் பணித் துறைக்கு, நினைத்துப் பார்க்க முடியாது. இந்த நூற்றாண்டில் அல்ல, அடுத்த நூற்றாண்டிலேகூட இவ்வளவு பெரிய தொகையை ஒரு இலாகாவிற்கு தர முடியாது. அப்படி தந்திருக்கக்கூடியவர்தான் நம்முடைய முதல்வர். எனவே இது பொதுப்பணித் துறைக்கு பொற்காலம் அல்லவா? நினைத்துப் பாருங்கள் நீங்கள். ஒரு நேரத்தில் எங்கேயோ ஒரு அணை கட்டப்படும். காங்கிரஸ் இருந்த காலத்தில் நான் குறை சொல்லவில்லை. மணிமுத்தாறு அணை கட்டிக்கொண்டிருப்பார்கள், அது முடிந்து இரண்டு ஆண்டுகள் முடிந்து கிருஷ்ணகிரிக்கு வருவார்கள். அப்போது நிதி நிலைமை அவ்வளவுதான். ஆனால் இன்றைக்கு ஒரே நேரத்திலே Dam Safety பழைய அணைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் பெரியாறு அணை, சாத்தனூர்



அணை, பேச்சிப்பாறை அணை, மணிமுத்தாறு அணை, வீடூர் அணை, கோமுகி அணை, உப்பார் அணை, குண்டேரிப்பள்ளம் அணை, சோலையாறு அணை சித்தமல்லி அணை, வெலிங்டன் அணை, ஆகிய 11 பழைய அணைகளில் பாதுகாப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

அதுபோல கட்டுமானப் பணிகள், பொய்கையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு, அடவிநயினார் அணை, கடனா நதி, இராம நதி, கருப்பா நதி, சாஸ்தாகோயில் இருக்கன்குடி, சென்னம்பட்டி, சிறுமலையாறு, நாயோடை, இராமக்கால் ஓடை, நல்லதங்காள் ஓடை, சோத்துப்பாறை சண்முகாநதி, மலட்டாறு, நஞ்சாஞ்சி ஆறு, முண்டந்துறை பள்ளம், மோர்தானா, பத்தலப்பள்ளி, மலட்டாறு, ஆண்டியப்பனூர் ஓடை, வெள்ளக்கால் அணை, செண்பகத்தோப்பு, குப்பநத்தம், வரட்டாறு - 27 அணைகள் மொத்தம் கிட்டத்தட்ட 38 அணைகள் - தமிழ்நாட்டிலே 38 அணைகளில் ஒரே நேரத்திலே வேலைகள் நடைபெறுவது இந்தத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான். இதுவே இந்த இலாக்காவிற்கு மிகப் பெரிய பெருமை. அதோடுமட்டுமல்ல ஒரே நேரத்தில் நினைத்துப் பாருங்கள், தஞ்சை டெல்டா பகுதியில் 9 ஆயிரம் கிலோமீட்டர், சென்னை மாநகரத்திலே 1820 கிலோ மீட்டர், பொள்ளாச்சி மண்டலத்தில் 1,000 கிலோமீட்டர், மதுரை மண்டலத்தில் 1100 கிலோ மீட்டர், ஆக மொத்தம் 13 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரே நேரத்திலே desilting நடைபெறுவதும் இந்தக் கலைஞர் ஆட்சியிலேதான், இந்த தி.மு.க ஆட்சியிலேதான். அதுமட்டுமல்ல, 900 ஏரிகள் ஒரே நேரத்திலே தூர்வாரப்பட்டிருக்கின்றன. இதுமட்டுமல்ல, 6493 வேலைகளை 670 கோடி ரூபாயிலே எங்களுடைய இலாக்கா கட்டப் பிரிவு நடத்திக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இவ்வளவும் இந்தப் பொற்கால ஆட்சியிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1.15

அதுமட்டுமல்ல, இந்த இலாக்கா இன்னும் வேகமாக இருக்க வேண்டும், பணி அதிகமாகிவிட்டது, எல்லா இடத்திலும் பணி நடக்கிறது. கும்மிடிப்பூண்டியிலிருந்து களியக்காவிளை வரையில் எல்லா ஆற்றிலும், எல்லா அணைகளிலும், எல்லா குளங்களிலும், எல்லா ஏரிகளிலும், அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற வேலை நடக்கிற காரணத்தினால் இலாகாவுக்கு சில சௌகரியங்கள் வேண்டுமென்று

கேட்டார்கள். 30 ஆண்டுகளாக பொதுப் பணித் துறையிலே ஒரு ஜீப்கூட வாங்கியது கிடையாது. 30 ஆண்டு காலமாக, வெள்ளைக்காரன் காலம், காங்கிரஸ் காலத்திலே வாங்கியதோடு சரி. அதற்குப் பிறகு கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெறும் கலைஞர் ஆட்சியிலே மட்டும் 18 கோடி ரூபாய் செலவிலே 530 வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, வளர்ந்து வருகின்ற நேரத்திலே விஞ்ஞானத்தோடு இந்த இலாக்கா ஓட்டிச்செல்ல வேண்டுமென்று கருதுகிறவர் கலைஞர். எனவேதான், 1200 கணிப்பொறிகள் வாங்க 12 கோடி ரூபாய், Xerox Machine வாங்க 2 கோடி ரூபாய், 136 திட்டத்தை ஆய்வு செய்வதற்குத் தேவைப்படும் நவீன Electronic Survey கருவிகள் வாங்குவதற்காக 1 கோடியே 75 இலட்சம், அவற்றை கலைஞர் ஒதுக்கியிருப்பதோடு, இன்னொன்றும் சொன்னார். S.E.-க்கே ஒரு காலத்திலே தொலைபேசி கிடையாது. ஆனால், கலைஞர் அவர்கள் இன்றைக்கு ஒரு S.D.O. வரையிலே எல்லோருக்கும் தொலைபேசி கொடு என்று இலாக்காவிற்கு வேண்டிய அனைத்தையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். எனவே, இது பொதுப்பணித் துறைக்கு பொற்காலம் அல்லவா?

அதுமட்டுமல்ல, பொறியியல், விஞ்ஞானம் மின்னல் வேகத்திலே வளர்ந்து வருகிறது. அந்த வேகத்திற்கு தமிழ்நாடு பொதுப்பணித் துறை ஈடு கொடுத்து நிற்க வேண்டும் என்பதற்காக இங்கே பணியாற்றும் பொறியாளர்கள் உலகில் திக்கெட்டும் சென்று திறமைகளை வளர்த்துக்கொண்டு திரும்ப வருவதற்கு மட்டும் ரூ.10 கோடியை நம்முடைய முதல்வர் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று வீராணம் ஏரிப் பகுதியில் 111 கோடி ரூபாய் திட்டத்தில் இன்றைக்குப் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலே வேறு எங்குமே இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் பக்கத்திலேயும் lining செய்து, கீழே அடியிலே கான்கிரீட் போட்டு 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு வடலாறு திட்டத்திலே இந்தியாவில் வேறு எந்தக் கால்வாயிலும் செய்யாத மகத்தான பணியையும் பொதுப் பணித்



துறை செய்து கொண்டிருக்கிறது. அதற்கு கலைஞர் அவர்கள் 26 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த தூர்வாரும் திட்டத்திலே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டுகளில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் உதவியால் 35 கோடி ரூபாய் செலவில், 104 ஏரிகள், ரூ.10 கோடி செலவில் முதல்வரின் ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின் மூலம் 100 ஏரிகளை மேம்பாடு செய்வதோடு, இந்த ஆண்டு நீர்வள ஆதார திட்ட உதவியுடன் ரூ.210 கோடி செலவில், 225 ஏரிகள் சீர் செய்யப்பட உள்ளன. இத்தோடு ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தூர்வாரும் திட்டத்தின்கீழ் 145 ஏரிகளை தூர்வாரியதோடு, இந்த ஆண்டு 136 ஏரிகள் தூர்வாரப்படும். இந்த வேகத்தோடு சென்றால் 2001 ஆம் ஆண்டு நிதிநிலை நேரத்தில் தமிழகத்திலே சுமார் 1500 ஏரிகள் தூர்வாரி செம்மைப்படுத்தப்பட்டிருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். 1997-98 ஆம் ஆண்டு 200 ஏரிகள் தூர்வாருவதற்காக தொகுதிக்கு ஒரு ஏரி என்று காட்டப்பட்டது. அதில் வேலை முடிவுற்றது 174. மீதமுள்ள 26 ஏரிகளில் பணி இம்மாதத்திற்குள் முடியும்.

அதேபோன்று 1998-99 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ஏரிகள் 200. வேலை முடிவுற்றது 50. மீதி 150 ஜூன் மாதத்திற்குள் முடியும். காரணம் ஏரிகளை நாங்கள் சொன்னவுடன், நல்ல காலம் இரண்டு ஆண்டு காலமாக மழை பொழிந்துவிட்டது. ஏரியிலே போய் இறங்க முடியவில்லை. இரண்டாவது சில இடங்களிலே மரங்களை வெட்டுவதற்கு அந்தக் கிராமத்துக்காரர்கள் தகராறு செய்கிறார்கள். அப்படிப்பட்ட சிக்கல் உள்ள பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளிலே இந்த வேலைகள் வேகமாக நடக்கின்றன.

பிற்பகல் 1.20

இந்த இலாகாவிலே கடந்த 12 ஆண்டுகளாக உதவிப் பொறியாளர் பதவிக்கு எவரும் நேரடியாக நியமனம் செய்யப்படவில்லை. அதனால் பணிகளின் வேகம் பல இடங்களில் தேக்கம் ஏற்பட்டது. இதனைப் போக்குவதற்காக கடந்த ஆண்டு 174 உதவிப் பொறியாளர்கள்

நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும் இந்த ஆண்டு 210 உதவிப் பொறியாளர்களை நியமிப்பதற்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல் பொதுப் பணித் துறையில் பதவி உயர்வு என்பது கடந்த காலத்திலே அத்திப்பூவாய், அபூர்வமாய்த்தான் இருந்தது; பதவி உயர்வே கிடையாது. அந்நிலையை மாற்றி கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் பதவியிலிருந்து உதவி செயற் பொறியாளர் பதவிக்கு 588 பேர்; உதவி செயற் பொறியாளர் பதவியிலிருந்து செயற் பொறியாளர் பதவிக்கு 304 பேர்; செயற் பொறியாளர் பதவியிலிருந்து கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு 141 பேர்; கண்காணிப்புப் பொறியாளர் பதவியிலிருந்து தலைமைப் பொறியாளர் பதவிக்கு 67 பேர்—ஆக மொத்தம் 1,100 பேர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், துறையின் உள்ளே இருக்கிற ஏனைய தொழில்நுட்ப உதவியாளர்கள், உதவி வரைவாளர்கள் போன்றவர்கள் 291 பேருக்கு இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆக மொத்தம் 1,391 பேருக்கு கடந்த 3 ஆண்டுகளில் பதவி உயர்வு கலைஞர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இவ்வளவு திட்டங்களையும் தந்து இருக்கிறார்கள். ஆனால், ஒன்றை நான் இந்த இடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் அவர்கள் தந்த பணிகளை அவர்களுடைய ஆலோசனைப் பெற்று நாங்கள் வேகமாக செயல்படுத்தி இருக்கிறோம். கிருஷ்ணா நதித் தண்ணீரை கொண்டுவா, என்றார்கள். என் இலாகா சென்றது; பணியாற்றினார்கள்; கொண்டுவந்தார்கள்; காலடியிலே வைத்தோம்.

தூர் வாருவதிலே இதுவரையிலே நல்ல பெயரை நாங்கள் பெற்று இருக்கிறோம். மக்களும், நீங்களும் வாழ்த்தி இருக்கிறீர்கள். ஆனால் இவற்றையெல்லாம்விட, 21-வது நூற்றாண்டிலே மில்லினியம் Project என்று சொல்லக்கூடிய அளவுக்கு சென்னை மாநகரத்தை சிங்காரச் சென்னையாக மாற்றித் தருவது என்று முதல்வர் அவர்கள் ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அதைச் செய்வார்கள் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அடையாறு ஆற்றை தூர் வாரி



பலப்படுத்துவதற்கு 31 கோடி ரூபாய், பக்கிங்காம் கால்வாயை தூர் வாரி சீரமைப்பதற்கு 21 கோடி ரூபாய், கூவம் நதியை தூர் வாரி சீரமைக்க 32 கோடி ரூபாய், சி.எம்.டி.ஏ. மற்ற இடங்களிலே—தணிகாசலநகர், அம்பத்தூர் போன்ற இடங்களிலே பணிகளைச் செய்ய 26 கோடி ரூபாய்—இவைகளை ஒதுக்கிவிட்டு, இன்றைக்கு டெண்டர் விட்டு, டெண்டர் முடிகிற நிலையிலே இருக்கிறது. அதே நேரத்தில் இப்போது மற்ற ஊர்களுக்காக—ரிஹாபிலிட்டேஷனுக்காக—இந்த மன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிகளுக்கும் எல்லோருக்கும் நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது ஒன்று. அதாவது இவ்வளவு பெரிய பணியைச் செய்கிறபோது சில இடைஞ்சல்கள் வரும். இன்றைக்கு கூவம் கரையைப் பலப்படுத்தி அகலப்படுத்துவதோடு மட்டுமல்ல, அதிலே தண்ணீர் விட்டு பாருப் போக்குவதற்கு எல்லாம் செய்வதற்காக நாங்கள் அந்தத் திட்டத்தைத் தீட்டி இருக்கிறோம். எனவே, கூவத்தின் கரை ஓரத்தில் பலர் இன்றைக்கு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு நாள் கட்டிக் கொண்டிருந்தார்கள் என்றால், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு ஒரு நல்வாழ்வு கிடைக்கின்றது என்கிறபோது, அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும்; வெளியேற்றப்பட வேண்டுமென்றால், பூவும் பிஞ்சுமாய் கொடியைப் பிடுங்கி விடுவதைப் போல, அவர்களை எல்லாம் நாங்கள் விரட்டவில்லை; விரட்டக்கூடியவர் அல்ல முதல்வர் கலைஞர் அவர்கள்; அதற்காக அவர்களுக்கு என்று ஒரு தனி இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்திலே வீடு கட்டி, அவர்களைக் கொண்டுபோய் சௌகரியமாகக் குடி ஏற்றுவதற்காக மட்டும் 100 கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு இருக்கிற எதிர்கட்சித் தலைவர் கூட என்னைக் கேட்டார்; பல நேரத்தில் பல பேர், பல கட்சியினர் போராட்டம் நடத்துகிறார்கள்; நான் அவர்களை எல்லாம் பணிவன்போடு கேட்கிறேன்; மற்ற இடங்களில் மற்ற மனமாச்சரியங்கள் இருக்கட்டும்; ஒரு மாபெரும் காரியமாக ஒரு பெரிய திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்; உங்களிடம் வருகிறவர்களுக்கு சொல்ல வேண்டும்; நீங்கள் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறீர்களா? அடையாறு கரையில் இருக்கிறீர்களா? அப்படியானால், நீங்கள் உங்கள் பெயரைக் கொடுங்கள்; நாங்கள் அதை அரசிடம் கொடுக்கிறோம்; உங்களுக்கு வேறு இடத்திலே அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்கிறது; அங்கே

நீங்கள் குடியேறுங்கள்; இதை அழகுபடுத்த வேண்டியிருக்கிறது என்று நீங்கள் சொன்னால் பரவாயில்லை. ஆனால் நன்றாக விவரம் தெரிந்தவர்களே போராடுவது, விவரம் தெரிந்தவர்களே உண்ணாவிரதம் இருக்க உட்காருவது என்று சொன்னால், பிறகு பணிகளை செய்கிறவர்களுக்குக்கூட ஒரு வெறுப்பு வந்துவிடும். எனவே இது ஒரு மகத்தான திட்டம். இது ஒரு தனி மனிதனால் சாதிக்கக்கூடியதல்ல. அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டும். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுகிற பொறுப்பை, மாநகராட்சியிடத்திலேயும், எங்களிடத்திலேயும் கலைஞர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். எனவே இத்திட்டத்தினைக் கொடுத்து, எப்போது முடிப்பாய் என்று என்னை கலைஞர் கேட்டார்கள். நான் அவரிடத்திலே சொன்னேன், 2001, செப்டம்பரிலே அண்ணா பிறந்த நாளிலே, படகு ஓடுகிற அளவுக்கு மாற்றியமைக்கப்படும் என்று. காரணம் என்னை நம்பியல்ல, என்னை நம்பி மட்டுமல்ல. மற்ற எதிர்க்கட்சிகளையும், பொது மக்களையும், மற்றவர்களையும், மற்றும் அதிகாரிகளையும் நம்பித்தான் இந்த உறுதிமொழியை கலைஞரிடத்திலே கொடுத்திருக்கிறேன். எனவே அருள்கூர்ந்து இந்த மன்றத்திலே கேட்கிறேன். கட்சி வித்தியாசம் இல்லாமல் அதனை பெறும் இந்த மகத்தான திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் அனைவரையும் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பிற்பகல் 1-25

இங்கே பேசிய அனைவரும் பல திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் அவற்றை ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுச் சொல்வதற்கு நேரமில்லை. ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நாள் இந்த நிதி நிலை அறிக்கையிலே பேசுகிறபோது, என்னுடைய இலாக்கா சம்பந்தப்பட்ட பெரியபாளையம் பட்டியலை வைத்துக்கொண்டு, இதில் பல குளறுபடிகள் இருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள்.

அவர் அவ்வளவுதூரம் அதைப் படித்ததற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் என்னுடைய இலாக்கா பற்றியதை எடுத்துப் படித்ததில் எனக்கு மகிழ்ச்சி. அவர் சொன்னார். 18.47 இலட்சம் அபிராமம் காவல் நிலையம் கட்டுவதற்கு என்று ஒரு இடத்தில் போட்டிருக்கிறார்கள். 1.25 இலட்சம் என்று இன்னொரு இடத்திலே போட்டிருக்கிறார்கள்; அது வேறு; இது வேறா என்று கேட்டார். இல்லை, இல்லை இரண்டும் ஒன்றுதான்.



18.47 இலட்சத்திற்குள்ளேதான் இந்த 1.25 இலட்சம் அடங்குகிறது. காரணம் அது Building Civil Works; இது Electrical Works. ஆகையால் இது வேறல்ல; அது வேறல்ல என்பதை நான் அவருக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து இன்னொன்று, பரமக்குடியிலே கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதைப் பற்றி. அப்படி ஒரு கட்டடமே இல்லை என்கிறார்கள். இந்தப் பணிக்கு 10-12-1990-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு இவ்வளவு நாட்களாயிற்று. ஒன்றும் வேலை நடக்கவில்லை. அந்த அலுவலகத்தினைக் கட்டுவதற்கு, அவருக்கே தெரியும், இடம் கிடைக்கவில்லை. இடம் கிடைக்காத காரணத்தால், புதிதாக ஆர்.டி.ஓ. அலுவலகம் கட்டுகிற இடத்தில், இரண்டாவது தளத்தில் வைக்கலாம் என்று நினைத்து, 27-8-1998 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தார். அதற்கென மறுபடியும் திருத்திய மதிப்பீடு 18 இலட்சம் ஆனது. ஆனால் இறுதியில் வட்ட வளர்ச்சி அலுவலர் பதவியை எடுத்துவிட்டதால் 1-12-1998-ல் இந்தக் கட்டடப் பணியைத் தொடர வேண்டாம் என்று ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் மூலம் தெரிவித்துவிட்டார். எனவேதான், அதற்கு எந்தவிதமான தொகையும் இந்த ஆண்டில் ஒதுக்கப்படவில்லை என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மேலகடாரம். அந்த ஊரில் 10, 20 பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளி என்றார். இல்லை, மேல்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிக்கும் பணம் ஒதுக்கி, மேல்நிலைப் பள்ளிக்கும் பணம் ஒதுக்கி தவறுதலாக ஒதுக்கிவிட்டார்கள். கல்வித் துறையிலே தவறுதலாக ஒதுக்கிவிட்டார்கள். அதுபோல் சில நேரங்களில் நடக்கும். இப்போது அந்தத் தொகையை நயினார்கோயிலுக்கு அனுப்பி, அந்தப் பணத்தை தற்போது எடுத்துவிட்டார்கள். எனவே, மேல்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஒதுக்கப்பட்டதாக இருக்கிறது.

இன்னொன்றையும் சொன்னார்கள். கமுதியிலே கிறிஸ்துவ மிஷன் நடத்துகிற பள்ளியே கிடையாது என்று சொன்னார்கள். அதை தவறுதலாகத்தான் போட்டிருக்கிறார்கள். சத்தியநாடார் இந்து பெண்கள் பள்ளியிலேதான் அந்தப் பணி நடைபெறுகிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றும் பலர் இங்கே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் சொல்கிற

இந்த அறிவிப்புகளிலே அவற்றைப்பற்றி வந்தால் மகிழ்ச்சி அடையுங்கள்; வராவிட்டால் வரவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மேலகடாரத்திற்கு ஒதுக்கிய பணத்தை நயினார்கோயிலுக்கு மாற்றினீர்கள் என்று சொன்னால் அந்த மேலகடாரத்தில் உள்ளவர்கள் எல்லாம் என்னிடம் சண்டைக்கு வருவார்கள். அதனால் தயவுசெய்து நயினார்கோயிலுக்குக் கொடுங்கள். மேலகடாரத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை மாற்றாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொன்னார் என்றால், அந்த ஊரில் உயர்நிலைப் பள்ளிதான் இருக்கிறது என்றார். மேல்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிக்கும் பணம் ஒதுக்கிவிட்டார்கள். உயர்நிலைப் பள்ளி என்று போட்டு பணம் ஒதுக்கிவிட்டார்கள். உயர்நிலைப் பள்ளி என்று அதற்குப் போட்ட பணத்தைத்தான் எடுத்துவிட்டார்கள். மேலகடாரத்திற்கு பணம் உண்டு.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அறிவிப்புகள்: கீழ்பவானி அணை 1953 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் மொத்த ஆயக்கட்டு 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கர். இந்த அணை கட்டப்பட்ட நோக்கில் தண்ணீரை தாராபுரம் எல்லைவரை கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக கீழ்பவானி அணைக்கட்டு பகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள பாசன நிலத்தில் 12½ சதவீதம் நிலங்களை கீழ்பவானி பாசன ஆயக்கட்டிலிருந்து நீக்கிவிட்டார்கள். இப்படி நீக்கப்பட்ட பகுதிகளை அந்தப் பகுதியில் 'தாராபுரம் கட்' என்று அழைப்பார்கள். அப்படி நீக்கப்பட்ட நிலங்கள் சுமார் 23,000 ஏக்கர். கீழ்பவானி பாசன ஆயக்கட்டில் உள்ள 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கரில் பல பாசன பரப்பில் உள்ள நிலங்களை வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றிவிட்டு இருக்கிறார்கள். 'தாராபுரம் கட்'டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களை மீண்டும் கீழ்பவானி பாசனத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசிடம் நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்துள்ளார்கள். அவற்றை ஆராய்ந்த கலைஞர் அரசு அந்த 23,000 ஏக்கர்களையும் கீழ்பவானி பாசன



ஆயக்கட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறது.

கீழ்பவானி பிரதானக் கால்வாயையும், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் ஆகிய கால்வாய்களையும் தூர்வாரி பலப்படுத்த ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை இந்த அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஆண்டு முதல் கட்டமாக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூபாய் 10 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி கால்வாய்களைச் சீரமைப்பதன் மூலம் மிகையாகக் கிடைக்கும் நீரையும் ஏற்கெனவே பாசனப் பகுதியிலிருந்து வீடுகளாக மாற்றப்பட்ட ஆயக்கட்டு ஏக்கர் மூலம் மிச்சப்பட்டு இருக்கும் நீரையும் 'தாராபுரம் கட்' பகுதியில் உள்ள நிலங்களுக்குத் தருவதன்மூலம் கீழ்பவானி பாசனதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. அதனுடைய ஒரிஜினல் பாசனமான 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கருக்கு மேல் போகவும் போகாது. 'தாராபுரம் கட்' நிலங்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கிற விவசாயிகள் அதற்கு ஏற்படும் செலவை பொதுப்பணித் துறையின் நிபந்தனைக்கு உட்பட்டு அந்த விவசாயிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*சாத்தனூர் அணை:* திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து மழைக் காலங்களில் உபரியாக கடலுக்குச் செல்லும் நீரை சமுத்திர ஏரிக்கு திருப்பி அங்கு மிகையாகும் நீரை துரிஞ்சலாறு மூலமாக நந்தன் கால்வாய் வழியாக தண்ணீர் அளிக்கும் திட்டம். மறைந்துவிட்ட ப. கோவிந்தசாமி, கலைஞரிடத்திலே திருப்பித் திருப்பி கேட்டுக் கொண்டிருந்த திட்டம். இந்த நந்தன் கால்வாய் திட்டம்.

இத்திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை, செஞ்சி, மேல்மலையனூர், முகையூர், விழுப்புரம் ஆகிய தொகுதிகளில் உள்ள 64 ஏரிகள் மூலம் சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெறும். இந்தத் திட்டத்திற்கு ரூ.27 கோடியைச் செலவிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இசைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*மோர்தானா அணை - கால்வாய்:* வேலூர் மாவட்டத்தில் உள்ள மோர்தானா அணையில் இருந்து, வலதுபுற-இடதுபுற காலவாய்கள் மற்றும் கிளை வாய்க்கால்கள் உட்பட சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி 17 ஏரிகளுக்கு நீர் வழங்கி சுமார்

10,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்து [illegible] ரூ. 40 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதற்காக [illegible] என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**பாண்டியன் மடு திட்டம்:** வேலூர் மாவட்டம், [illegible] வட்டம், சித்தாத்தூர் கிராமத்தில் [illegible] அணைக்கட்டு அமைத்து, காவலூர், [illegible] மேல்விலாச்சூர், கீழ்விலாச்சூர், [illegible] ஒய்யாத்தூர், தலையாம்பட்டு-உ[illegible] கிருஷ்ணாபுரம், வந்தூர், சேவூர் ஆகிய [illegible] வழங்க ரூபாய் 3 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**நீரேற்று பாசனத் திட்டம்:** [illegible] திருவாரூர் மற்றும் நாகை ஆகிய [illegible] இறைவைப் பாசனத் திட்டங்கள் [illegible] பழுதடைந்து நீண்டகாலமாக [illegible] இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் [illegible] தருமாறு நீண்டகாலமாக கோரிக்கை வைத்து [illegible] இந்த 29 நீரேற்று இறைவைப் பாசனத் [illegible] பாசனத்திற்கு ஏற்ற வகையில் செய்து [illegible] மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். [illegible] முடிந்தது.

Bed Dam: கோமதி சீனிவாசன், [illegible] நாகை ஆகிய மாவட்டங்களில் ஓடுகின்ற ஆறுகள் [illegible] எல்லாம் நீர் ஓடுகிறபோது ஏற்படுகிற [illegible] மட்டம் தாழ்ந்து போய்விடுகிறது. [illegible] தண்ணீர் ஏறி பாசனத்திறகுச்செல்ல முடியாத நிலை [illegible] இப்படிப்பட்ட குறைகள் விவசாயிகள் மத்தியிலும், [illegible] உறுப்பினர்கள் மத்தியிலும் இருப்பதை [illegible] வந்த காரணத்தால் இத்தகைய நிலை உள்ள [illegible] Bed Dam கட்டுவதற்கு ரூ. 3 கோடியே 71 இலட்சத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



**ஷட்டர்கள் புதுப்பிக்கும் திட்டம்:** திருவாரூர், நாகை, தஞ்சை மாவட்டங்களில் ஆறுகள், வாய்க்கால், வடிகால்களில் உள்ள ஷட்டர்கள் நீண்ட காலமாக புதுப்பிக்கப்படாததால் பழுதடைந்து இருக்கின்றன. இதனால் வெள்ளக் காலங்களில் தண்ணீரை முறைப்படுத்த முடியவில்லை என்ற குறை தஞ்சை விவசாய மக்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்துவருகிறது. இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று பழுதடைந்து இருக்கின்ற ஷட்டர்களையெல்லாம் புதுப்பிப்பதற்காக ரூபாய் 1 கோடியே 36 இலட்சத்தை கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.35

அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள், கும்பகோணம் நகரில் [illegible] 1 கால்வாய்களைச் சீர்படுத்த ரூபாய் 2 கோடியே 31 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன. இதை மேலும் பலப்படுத்த ரூபாய் 1 கோடியே 91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கலைஞர் அவர்கள் இசைவு தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உய்யக்கொண்டான் கால்வாய், கடந்த ஆண்டு பெய்த பெருமழையில் திருச்சி மாநகரம் வெள்ளத்தில் மிதந்தது என்று சொன்னார் திரு. பொய்யாமொழி அவர்கள். காரணம் திருச்சி மாநகரத்தில் ஓடுகின்ற உய்யக்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு ஆகிய நீர்வழிகள், நீண்ட நெடுங்காலமாக தூர் வாரப்படாமல் தூர்ந்து போனதே இதற்கு முக்கிய காரணமாகும். இந்தக் குறைகளைப் போக்கும் பொருட்டு இந்த ஆறுகள், கால்வாய்களையெல்லாம் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்துவதற்கு ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்தை மாண்புமிகு கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்றின் போக்கைப் பாதிக்கும் செடி கொடிகள் அகற்றும் திட்டம்: தற்போது ஆறுகளில் எல்லாம் கருவேல மரங்களும் காட்டாமணக்குச் செடிகளும் மண்டிக் கிடப்பதால் ஆறே மறைக்கப்படுவதோடு ஆற்றின் போக்கும் திசைமாறுகிற நிலை உருவாகியிருக்கிறது. இந்த அபத்தை உணர்ந்த முதல்வர் கலைஞர் அவர்கள் முதற்கட்டமாக சென்ற நிதிநிலை ஆண்டில் ரூபாய் 50 இலட்சத்தை ஒதுக்கி குளித்தலை

பாலத்திற்கு மேல்புறமும், கீழ்புறமும் சுமார் 10 கிலோமீட்டர் தூரத்திற்கு
இந்தச் செடிகளை அகற்ற உத்தரவிட்டு இருந்தார்கள். இந்தப் பணி
செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் காவிரியில்
மேற்படி வேலைகள் திருச்சி நகரம் முதல் கரூர் நகரம் வரை வரும்
ஆண்டுகளில் தொடர்ந்து செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நொய்யல் ஓரத்தப்பாளையம் அணை. இப்போதுதான்
பேசினார்கள். நொய்யல் ஓரத்தப்பாளையம் அணையிலிருந்து மாசுபட்ட
நீரை நேரடியாக புகலூர் கால்வாயில் கலக்காமல் காவிரி ஆற்றில்
கலக்கச் செய்யும்படி ஒரு சைபன் அமைத்து நிரந்தர பரிகாரம்
கண்டால் விவசாயிகளும், டி.என்.பி.எல். நிறுவனமும் மிக்க பயன்
பெறும். இதற்காக 35 இலட்சம் ரூபாயைச் செலவிட கலைஞர்
அவர்கள் இசைவளித்திருக்கிறார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டம். அரவக்குறிச்சி தொகுதியில் உள்ள ஊர்
பள்ளப்பட்டி. இஸ்லாமிய பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்ற
பகுதி இது. நீண்ட காலமாக இந்த ஊரில் குடிநீர் பிரச்சினை
என்பது மிகப் பெரிய பிரச்சினை ஆகும். இதனைப் போக்குவதற்காக,
பள்ளப்பட்டிக்கு அருகில் உள்ள நங்காஞ்சியாறு ஓடையின் ஓர்
அணை உள்ளது. அது நீண்டகாலமாக பழுதடைந்திருக்கிறது. அதனைச்
சீரமைத்தால், அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், பள்ளப்பட்டி
குடிமக்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று அந்த ஊரில் உள்ள
பொது மக்களிடமிருந்து அரசுக்கு பல விண்ணப்பங்கள் வந்து
கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
ரூபாய் 30 இலட்சம் நிதியை ஒதுக்கி செலவிட முதல்வர் அவர்கள்
ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

கதிரியின் குளம். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில்
உள்ள கதிரியின் குளம். அதன் பாசனக் கால்வாய்களைத் தூர்வாரி
பலப்படுத்துவதற்காக ரூபாய் 50 இலட்சத்தை முதல்வர் அவர்கள்
ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.



சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம். இத்திட்டம் 1987 ஆம்
ஆண்டு துவக்கப்பட்டதாகும். ரூபாய் 10 கோடி செலவு செய்து
அணை கட்டி முடிக்கப்பட்டது. அணைக்கட்டின் இடது கரை, வலது
கரை கால்வாய் 15-15 கிலோ மீட்டர் வெட்டி 21 குளங்கள் மூலம்
2132 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது என்பது திட்டம்.
ஆனால் கால்வாய் ஆங்காங்கே பாதி வெட்டி, இடையிலே
வெட்டப்படாததால் தண்ணீர் இருந்தும் கால்வாய்க்கு தண்ணீர்
போகாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளை
முடித்து, திட்டத்தின் முழுப் பயனையும் விவசாயிகள் அனுபவிக்க
ரூபாய் 15 இலட்சத்தை முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்
என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியாறு-மாவமங்கலம் கால்வாய். பெரியாறு பிரதான கால்வாயில்
கடைசிப் பகுதியிலுள்ள மேலூர் பகுதியிலிருந்து மாவமங்கலம் ஏரி
வரையில் 19 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கால்வாய் வெட்டப்பட்டு
11 கண்மாய்களுக்கு தண்ணீர் தந்து அதன் மூலம் 2500 ஏக்கர்
வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி செய்வது என்பது திட்டம்.
இதற்காக 1993 ஆம் ஆண்டு ரூபாய் 5 கோடியே 70 இலட்சம்
ஒதுக்கப்பட்டு கால்வாய் வெட்டப்பட்டது. ஆனால் வேலை
முடியவில்லை. இன்னும் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய்
வெட்ட வேண்டியிருப்பதாலும் சில கட்டுமானப் பணிகள்
செய்யாததாலும் இந்தக் கால்வாய் பயனற்றதாகக் கிடக்கிறது. எனவே,
இப்பணியைச் செய்து 2500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி
அளிக்கப்படுவதற்காக ரூபாய் 1 கோடியை முதல்வர் அவர்கள்
ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மணி அவர்களுக்கு. விளாத்துறை நீர் ஏற்றுத் திட்டம்.
குழித்துறை ஆற்றில் அமைந்ததுதான் விளாத்துறை நீரேற்று இறைவைப்
பாசனத் திட்டம். இதன்மூலம் 2,000 ஏக்கர் பாசனம் பெற்று வந்தது.
ஆனால், இப்போது சுமார் 1,800 ஏக்கர் பட்டணம் கால் பாசனத்தில்
சேர்க்கப்பட்டுவிட்டது. மீதி இருக்கின்ற 200 ஏக்கர் நிலத்திற்கு ஒரு
Acqaduct உடைந்து போனதால் தண்ணீர் போகமுடியாத நிலை
உருவாகியிருக்கிறது. அவற்றைச் சீர் செய்வதற்காக ரூ.5 இலட்சம்
செலவு செய்ய முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை
நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

பெருங்கால் வாய்க்கால் சீரமைப்பு மற்றும் மணிமுத்தாறு அணை திறப்பு. மணிமுத்தாறு அணையில் உட்பகுதியில் இருக்கின்ற பெருங்கால் வாய்க்காலை சீரமைப்பு செய்ய வேண்டும். ஆனால், மணிமுத்தாறில் தண்ணீர் அளவு 80 அடி இருக்கிறது. ஜூன் மாதம் முதல் வாரத்தில்தான் பெருங்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். அந்த பாசனத்திற்கு முன்கூட்டியே ஏப்ரல் முதல் வாரத்திலேயே பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவதன் மூலம் பெருங்கால் வாய்க்காலைச் செப்பனிடுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. பெருங்கால் பாசன விவசாயிகளும் அதையே விரும்புகின்றார்கள். எனவே, 6-4-1999 அன்று பெருங்கால் பாசனத்திற்கு மணிமுத்தாறிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் ஏரிவீதம் முதலமைச்சரின் ஏரிகள் தூர்வாரும் திட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு 200 ஏரிகள் எடுக்கப்பட்டன. அதேபோல், 1998-99 ஆம் ஆண்டு 200 ஏரிகள் தூர்வாரும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 1999-2000 ஆம் ஆண்டிற்கும் 200 ஏரிகளை எடுத்து தூர்வாருவதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, பொதுப்பணித் துறை ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பழமையான துறையாகும். எனவே, இந்தத் துறையை மேம்படுத்த, பழமையான அதிகார உச்ச வரம்பு மற்றும் நடைமுறைகளை தற்போதுள்ள காலத்திற்கு உகந்த வகையில் சீர்படுத்த வேண்டியது அவசியமாகும். குறைந்த தொழில்நுட்ப செலவீட்டில் நீடித்த நல்ல தரமான திட்டங்களை நிறுவுவதற்கும், பராமரிக்கவும் துறையைச் சீர்ப்படுத்த வேண்டியதன் அவசர நிலையினைக் கருத்திற்கொண்டு, மிகச் சிறந்த தொழில் நுட்ப வல்லுநரின் தலைமையில் ஒரு பொறியியல் சீர்திருத்தக் குழு Engineering Reform Committee நிறுவ முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எதிலேயும் முதல்வராக இருக்கக்கூடிய முதல்வர், போலீசுக்காகக் கமிஷன் அமைத்தும், அதேபோன்று மற்ற அரசு ஊழியர்களுக்காக கமிஷன் போட்டதும், இதேபோன்று, இந்தியாவிலே பொறியாளர்களுடைய நிலைமையை அறிந்து, என்ன செய்யவேண்டும் என்பதற்காக ஒரு Engineering



Reform Committee-ஐ இந்தியாவிலேயே முதன்முதலாக அமைப்பவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவிற்கே இதுதான் வழிகாட்டியாக இருக்கும்.

பெரிய மற்றும் நடுத்தரத் திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஆய்வுப் பணிப் படிகள் வழங்கப்படும். ஆய்வு செய்கிற அனைவருக்கும் வழங்கப்படும் வழங்கப்படும். ஆய்வு செய்கிற அனைவருக்கும் வழங்கப்படும். அடுத்த நிலையில் உள்ள தொழில்நுட்ப நேர்முக செயற்பொறியாளருக்கு அடுத்த நிலையில் உள்ள தொழில்நுட்ப நேர்முக உதவியாளர் என்ற பதவியின் பெயரைத் துணைச் செயற்பொறியாளர் என மாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது. 10 ஆண்டுகள் அல்லது 2400 நாட்கள் பணிபுரிந்து உள்ள தினக்கூலி தொழில்நுட்ப உதவியாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்படும். பாசன உதவியாளர்களின் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்படும். இத்துறையில் தினக்கூலியாக பணிபுரிபவர்களில் தகுதி உள்ளவர்களைக் கொண்டு 500 பாசன உதவியாளர்கள் பதவி நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீண்டும், நாங்கள் ஏற்றிருக்கின்ற இந்தப் பணியில் எங்களால் முடிந்த அளவிற்கு பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்தப் பணிகளை நாங்கள் பாரபட்சமின்றி விரோதமில்லாமல் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம் சொன்னார்: கட்சி பாரபட்சமாக என்று. நான் இப்போதும் சொல்கிறேன்: நான் இந்த மன்றத்திலே அறைகூவல் விட்டுச் சொல்கிறேன். எந்த உறுப்பினராவது எழுந்து, துரைமுருகன் கட்சி பாரபட்சத்தோடு பணியாற்றுகிறார் என்று சொல்லட்டும். நான் எந்தத் தண்டனைக்கும் உட்படுகிறேன். காரணம், எங்களுக்குக் கட்சிகள் தெரியாது. பணியாற்றுகின்றபோது, மக்கள் தெரிகிறார்கள். பயிர் தெரிகிறது. நீர் தெரிகிறது. இவற்றையெல்லாம் எனக்குச் சொல்லிக்கொடுத்த என்னுடைய தலைவர் கலைஞர்தான் என் கண்களுக்குத் தெரிகிறார். எனவே, கட்சி பாரபட்சம் இல்லை. காரணம், பணியில் எந்தக் கட்சி என்று பார்ப்பதில்லை. எனவே, அந்த வகையில் இவற்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகள் இவ்வளவு மகிழ்ச்சியோடு முடிவதற்கு பெருமுயற்சி எடுத்ததோடு, அந்த ஏரியைக் காத்த கலைஞர் அவர்களுக்கு நன்றி. நான் இல்லாத நிலையில் அண்ணன் கோ.சி. மணியும், சுந்தரமும் அங்கே காவல்காரர்களைப்போல, 24 மணி நேரமும் ஒரு அமைச்சர்

என்பதைக்கூட மறந்து இருந்தார்கள். அவர்களுக்கும் எனது துறையில் இருக்கின்ற செயலாளரிலேயிருந்து அனைத்து, பொதுப்பணித் துறை நிர்வாகத்தினருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர், குடிநீர் வடிகால் வாரியத்திலே இருக்கிற அத்தனை பேருக்கும், உழைத்த பொதுமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப்பிரேரணைகளைத் தயவுசெய்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் என்னென்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து நின்றால், உங்களது கோரிக்கை என்ன என்று சொல்லக்கூடிய அளவிற்கு நான் உங்களிடத்திலே பழகியிருக்கிறேன். எனவே, நேரம் இல்லாத காரணத்தினால் நீங்கள் கொடுத்த கோரிக்கைகளெல்லாம் என் நெஞ்சில் இருக்கின்றன. எந்தெந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 1.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 35 - பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35 - பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ச. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. ச. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

டாக்டர் கே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் கே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்...

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாக்கெடுப்பிற்கு விட்ட பிறகு நீங்கள் எப்படி பேச அனுமதி கேட்கலாம்? உட்காருங்கள்.

"பாசனம் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.315,21,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 36 – பொதுப் பணிகள் - கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36 பொதுப் பணிகள் - கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. இ. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 72,11,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்...



## (இ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.



"பாசனம் குறித்த மூலதனச் செலவுப் பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.334,49,37,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஈ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55 பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.177,35,89,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-4-1999) காலை 9. 30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

123. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-4) பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

124. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-2) பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

125. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-2) பதினாறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

61. பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

62. பொதுப்பணித் துறையின் கட்டடப் பணிகள் பற்றிய ஆய்வுரை, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

63. பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய திட்டச் சுருக்கம், 1998-99 (தமிழ், ஆங்கிலம்)

64. பொதுப்பணித் துறையின் மூன்றாண்டு சாதனைகள் (தமிழ்)

65. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை, 1998-99.

66. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை, 1998-99.

67. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

68. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

69. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து மூன்றாவது அறிக்கை, 1998-99.

70. பொதுத் நிறுவனங்கள் குழுவின் எழுபத்தி மூன்றாவது அறிக்கை, 1998-99.



71. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தி நான்காவது அறிக்கை, 1998-99.

72. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை, 1998-99.

73. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தாறாவது அறிக்கை, 1998-99.

74. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தேழாவது அறிக்கை, 1998-99.

## இணைப்பு

[88 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

### கோரிக்கை எண் 35-பாசனம்

### கோரிக்கை எண் 36 - பொதுப்பணிகள் - கட்டடங்கள்

### கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு

### கோரிக்கை எண் 55 - பொதுப்பணிக் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை —திருக்குறள்

காவிரி தென்பெண்ணை பாலாறு-தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி - என
மேவிய ஆறு பல ஓடத் - திரு
மேனி செழித்த தமிழ் நாடு —பாரதியார்

ஆறு பாய் அரவம் மள்ளர்
ஆலை பாய் அமலை, ஆலைச்
சாறு பாய் ஓதை வேலைச்
சங்கின் வாய்ப் பொங்கும் ஓதை,
ஏறு பாய் தமரம், நீரில்
எருமை பாய் துழனி, இன்ன
மாறு மாறு ஆகி, தம்மில்
மயங்கும் - மா மருத வேலி —கம்பராமாயணம்

[1999 ஏப்ரல் 7

குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் "அணை" என்றான் - அவன்
கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து - தன்
கற்புநெறி காட்டுதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்.
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழ மன்னன்
பூம்புகாரில் கடல் அலையைக் கணவனாய் ஆக்கி காத்தான்.

—முதல்வர் கலைஞர்

## 1.0 முன்னுரை

பழமையும் பெருமையும் வாய்ந்த பொதுப்பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பொதுப்பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நீர்த் தேவையைக் கோரும் எல்லா பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களை சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும் கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

## 2.0 நீர்வள ஆதார அமைப்பு

நீர்வளத் தொகுப்புத் திட்டத்தை செயலாக்குவதில் முதற்படியாகவும் அதனைத் திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும்,



1999 ஏப்ரல் 7]

தனித்தன்மையுடன் செயல் புரியவும் பொதுப்பணித் துறையை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டடங்கள் அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் பிரிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநிலவாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு, முறையே சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார். ஒவ்வொரு மண்டலத்தின் கீழ் உள்ள வடிநிலப் பகுதி, கிளையாறு, கிளையாற்றின் கிளையாறு விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

***1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை***

(நீர்வள ஆதார அமைப்பின் தலைவராகவும் கொள்கை உருவாக்கும் அலுவலர் ஆவார். நீர்வள ஆதார அமைப்பின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பவர், வரவு செலவு திட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரி.)

***2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை***

(திட்டங்களின் ஆயத்த அறிக்கை, சாத்திய மற்றும் விரிவான அறிக்கை தயாரித்தல், திட்டங்களில் சுற்றுப்புற சூழலினால் ஏற்படும் விளைவுகளை கணக்கீடு செய்தல் ஆகிய பணிகளை செய்தல்.)

***3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை***

(வடிவமைப்புகளின் தரங்களை இன்றைய சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் உயர்த்துதல், திட்டங்களுக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரித்தல், மேலும் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தை செயலாக்குதல் மற்றும் மண்டலத் தலைமைப் பொறியாளருக்கு கட்டுமான ஆதாரம் குறித்து உதவுதல்)

**4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை**

(நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்வழங்கு அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் தரம் வகுத்தல். நீர்வள தொகுப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகள் அமைப்பு மற்றும் அதன் பங்கு இவற்றை வகுத்தல். நீர்வள ஆதார அமைப்பின் பணிமனை நிறுவனங்களுக்கு பொறுப்பு வகித்தல்.)

**5. தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர் ஆதார விவர மையம், சென்னை**

(மேற்பரப்பு, நிலத்தடி நீர் மற்றும் வானிலை விவரங்கள் ஆகியவற்றை சேகரித்து, சரிபார்த்து, பராமரித்தல், உலக வங்கி உதவியுடன் கூடிய நீரியல் திட்டத்தை செயலாக்குதலுக்கு பொறுப்பு வகித்தல்.)

**6. தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை**

(சென்னை மண்டலத்தில் உள்ள அனைத்துப் பாசன வடிநிலங்களின்கீழ்வரும் அனைத்து பாசன திட்டங்களை செயலாக்குதல். பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த் தேவைகளைச் பூர்த்தி செய்தல்.)

**7. தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி.**

(திருச்சி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின்கீழ்வரும் அனைத்து பாசன திட்டங்களைச் செயலாக்குதல். பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.)

**8. தலைமைப் பொறியாளர். பொள்ளாச்சி மண்டலம், பொள்ளாச்சி**

(பொள்ளாச்சி மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின்கீழ்வரும் அனைத்து பாசன திட்டங்களைச் செயலாக்குதல். பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்தல்.)





**9. தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை**

(மதுரை மண்டலத்தில் உள்ள வடிநிலங்களின்கீழ்வரும் அனைத்து பாசன திட்டங்களைச் செயலாக்குதல். பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அவைகளின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.)

**10. இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம் தரமணி, சென்னை**

(மாநிலத்தில் உள்ள அனைத்து வடிநிலங்களுக்கும் வரைபடம் தயார் செய்தல், தமிழ்நாடு நீர்வள கொள்கை சம்பந்தப்பட்ட விவரங்களுக்கு பொறுப்பு அலுவலர், நீர்வள ஆதார கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுவின் அங்கத்தினர் - செயலர் பொறுப்பு வகிக்கிறார்.)

**11. இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி**

(நீர்வள ஆதார அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து அலுவலர்களுக்கும் வேளாண் பெருமக்களுக்கும் பயிற்சி அளித்தல்.)

## 3.0 பாசன நிலை

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பானது அல்லது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | கால்வாய்கள் | 9.50 இலட்சம் எக்டேர் |
| 2. | ஏரிகள் | 9.00 இலட்சம் எக்டேர் |
| 3. | கிணறுகள், குழாய்க் கிணறுகள் | 11.50 இலட்சம் எக்டேர் |

[1999 ஏப்ரல் 7

## 4.0 தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி

4.1 தமிழ்நாட்டில் பெரியதும் மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15.00 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்ட தொடக்கத்தில் 23 பெரியது மற்றும் நடுத்தர திட்டங்களின் மூலம் 11.00 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்ட காலத்தில் 1998-99 முடிய பாசனம் பெறும் பகுதி 14.76 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

1999-2000 ஆம் ஆண்டில் 664 எக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**4.2.** அண்டை மாநில வடிநிலப் பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்

**4.2.1.** தமிழ்நாடு, அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயனபடுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரை தமிழ்நாட்டுக்கு திருப்பி விடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள அபிவிருத்தி முகமையை தமிழ்நாடு அணுகியுள்ளது.

**4.2.2.** தேசிய நீர்வள அபிவிருத்தி முகமையானது இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.



1999 ஏப்ரல் 7]

**4.2.3.** மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணார் - பாலார் - காவேரி - வைகை இணைப்புகளில் மிகுதியான நீரை திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள அபிவிருத்தி முகமையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கையும் தயாரிக்கப்படுகிறது.

**4.2.4.** இதனையன்றி பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தி திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழுமூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**4.3.** பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்

**4.3.1.** மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பெரியதும், நடுத்தரப் பாசன திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன் நீரை சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக சாகுபடி செய்யவும் இயலும்.

**4.3.2.** இந்நோக்கத்துடனே பெரியாறு-வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையார், தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களை புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் வினியோக அளவை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாக பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தி அளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு

[1999 ஏப்ரல் 7

திட்டமானது 1995-96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5.0 நிதி ஒதுக்கீடு**

பெரியதும், நடுத்தரமானதும் ஆகிய பாசன திட்டங்களுக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.336.85 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.185.84 கோடி தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டத்திற்கு அடங்கும். 1999-2000 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு நீர்வளத் தொகுப்பு திட்டத்திற்கு ரூ.220.71 கோடி உட்பட ஒதுக்கப்பட்ட நிதியளவு ரூ.408.15 கோடி ஆகும்.

**6.0 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்**

தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**7.0 நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள்**

1998-99 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பின்வரும நடுத்தா மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தன:

1. பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)

2. நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

3. இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

4. பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)

5. நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

6. இராஜாதோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)

7. கவுண்டின்யாநதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)



1999 ஏப்ரல் 7]

8. அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

9. அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி) (விருதுநகர் மாவட்டம்)

10. வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

11. கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

12. வராகநதி சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) (நீ.ஆ.தொ.தி)

13. சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)

14. மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)

15. கொள்ளிடம் ஆற்றின் ஊற்று நீரை கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடுதல் (கடலூர் மாவட்டம்)

16. உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

17. ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

18. செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

19. வறட்டாறு-குப்பத்து ஓடை நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

20. பத்தலபள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

21. குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

22. வறட்டாறு - வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

[1999 ஏப்ரல் 7

23. கால்வாய் - சடையநேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

குறிப்பு: மொத்தம் 23 திட்டங்களில் 9 திட்டங்கள், பத்தி 12-ல் விவரிக்கப்பட்டுள்ள நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் "நடைபெறும் நீர்த்தேக்கத் திட்டப்பணிகள் முடிவாக்கம்" என்ற தலைப்பின்கீழ் செயலாக்கப்படுகின்றன.

## 8.0 நடைபெற்றுவரும் நடுத்தர பாசனத் திட்டப் பணிகளின் செயலாக்க நிலை

### 8.1 பெரியாறு அணையை வலுப்படுத்துதல்

தேக்கடிக்கு அருகில் உள்ள பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 84,269 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் முக்கிய பாசன ஆதாரமாகும்.

1886 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட 999 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்தத்தின்படி 152 அடி அளவுக்கு நீரைத் தேக்கக் கூடியவகையில் பெரியாறு அணை 1887-1895 ஆம் ஆண்டுகளுக்கிடையில் கட்டி முடிக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டில் அணையின் உறுதி மற்றும் பாதுகாப்பு குறித்த கவலை எழுந்தபோது இதுகுறித்து மைய நீர் குழுமத்தின் கருத்து மற்றும் ஆலோசனை கேட்கப்பட்டது. மைய நீர் குழுமம் இரு மாநில அதிகாரிகளுடன் கூட்டாக பேச்சு வார்த்தை நடத்தியபின் பின்வரும் தீர்வு நடவடிக்கைகளுக்கு யோசனை தெரிவித்தது :

1. உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை (Emergency measures)

அ. அணையின் தலைப் பகுதியில் கற்காரை இட்டு தலைப் பகுதியை 6 அடி அகலப்படுத்துதல்.

ஆ கூடுதல் நீர்போக்கிகள் அமைத்தல்.



1999 ஏப்ரல் 7]

2. நடுத்தர காலப் பணிகள் (Medium term measures)

மிக உயர்தரமுள்ள இருப்பு கம்பிகளை அணையின் தலைப் பகுதியிலிருந்து கடைக்கால் பகுதி வரை செலுத்தி பாறையுடன் சேர்த்து பொருத்துதல்.

3. நீண்டகாலப் பணிகள் (Long term measures)

அணையின் பின்புறத்தில் கற்காரை இட்டு வலுப்படுத்துதல்.

4. நிவர்த்திப் பணிகளை செயல்படுத்த ஏதுவாக நீர்த்தேக்கத்தின் நீர்ப்போக்கி கதவுகளை முழுமையாக உயர்த்தி நீர்மட்டத்தை தற்காலிகமாக 136 அடியில் நிறுத்தி வைத்தல்.

தொடர்ந்து சிற்றணை வலுப்படுத்துதல், கைப்பிடிச்சுவர்களை உயர்த்துதல் மற்றும் வேகத் தடைகள் அமைத்தல் போன்றவைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அணையின் உடனடிப் பணிகளும் நடுத்தர காலப் பணிகளும் செய்யப்பட்ட பின்பு 145 அடி உயரம் வரை தண்ணீரைத் தேக்கவும் அனைத்து வலுப்படுத்தும் பணிகள் முடிவுற்றபின் முழு அளவான 152 அடி உயரத்திற்கு தண்ணீரை தேக்கவும் இயலும்.

மைய நீர் குழுமத்தின் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மையநீர் குழுமத்தினால் முதலில் பிரேரரிக்கப்பட்டபடி 1979-ல் அணை வலுவூட்டும் பணிகள் அனைத்தும் ரூ.13 கோடி செலவில் முடிக்கப்பட்டன. தொடர்ச்சியாக பிரேரரிக்கப்பட்ட மூன்று கூடுதல் பணிகள் அதாவது (1) சிற்றணையை வலுவூட்டும் பணி (2) மூன்று கூடுதல் நீர்ப்போக்கிகளின் கீழ் நீர்வேகக் கட்டுப்பாட்டு கட்டுமானம் (3) கைபிடிச் சுவர்களை உயர்த்துதல் ஆகியவை நிறைவடையவில்லை.

சிற்றணையை வலுவூட்டும் கருத்துரு 1987-லேயே கேரள அரசின் ஒப்பிசைவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசினால் பலமுறை நினைவூட்டப்பட்டும் கேரள அரசு தனது ஒப்பிசைவை தர முன்வரவில்லை. இருப்பினும் கேரள அரசின் ஒப்பிசைவை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. மூன்று கூடுதல் நீர்ப்போக்கிகளின்கீழ் உள்ள வேகத்தடை அமைப்புகள் முன்பே முடிந்து இருக்க வேண்டும்.

[1999 ஏப்ரல் 7

ஆனால் இப்பணிக்கான 'குவாரி' களுக்கு கேரள வனத்துறை தடையாய் இருந்ததால் பணிகள் முடிவு பெறவில்லை. இப்பணிக்கான சரளைக் கற்கள், தமிழ்நாடு எல்லையில் சேமிக்கப்பட்டு பணி நடைபெறும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மிருந்த சிரமத்திற்கிடையில் இப்பணி திரும்ப தொடங்கப்பட்டுள்ளது. இதே மாதிரி 1987-ல் தொடங்கப்பெற்ற, "கைப்பிடிச் சுவர் உயர்த்தும் பணி" கேரள அரசால் உடன் நிறுத்தப்பட்டது. இப்பணியும் மேற்சொன்ன முறையில் செயல்படுத்தபட வேண்டும்.

முடிவுறாத இப்பிரச்சினையை தீர்வு செய்திட கேரள அரசுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எழுத்துமூலக் கோரிக்கை மற்றும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் நேரடி தொடர்பு இவைகள் தவிர அமைச்சர்கள் அளவிலான இரண்டு கூட்டங்கள், 28-11-1996 அன்று சென்னையிலும் 13-8-1998-ல் திருவனந்தபுரத்திலும் நடந்தன. 26-5-1998-ல் தமிழ்நாடு மற்றும் கேரள அரசு செயலர்களுடன் மைய அரசின் நீர்வளத் துறை செயலரால் கூட்டம் நடத்தப்பட்டது. முன்னிருந்த நிலைக்கே அணையில் நீரைத்தேக்க எழுந்துள்ள இப்பிரச்சினைக்கு தீர்வு காண உதவிட மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துக் கொண்டதற்கிணங்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

13-8-1998-ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில், இரு அரசுகளும் தத்தம் மாநிலத்தில் தொழில்நுட்பக் குழு ஒன்றை அமைப்பது என்றும், அக்குழு தொழில்நுட்பக் கருத்துருக்களை விரிவான முறையில் விவாதித்து தத்தம் அரசிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து விவாதித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண உள்ளனர். தமிழ்நாடு தனது அறிக்கையை தயார் செய்துள்ளது. இருமாநில முதல்வர்களும் கூடி முடிவெடுக்க ஏதுவாக அறிக்கையை விரைவில் தயாரிக்க கேரள அரசை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கேரள மாநில முதல்வரிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட கடிதத்தின்படி, அறிக்கை இன்னும் தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணைப் பிரச்சினையை தீர்ப்பதில் கேரள அரசின் ஆர்வமற்ற போக்கிற்கிடையே, 152 அடிக்கு அணையில் நீர்தேக்குவதற்கான முடிவை தமிழ்நாடு தொடர்ந்து முயற்சிக்கும்.



1999 ஏப்ரல் 7]

### 8.2 நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி, சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம் கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையிலா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை அமைக்கும் பணியும் பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளது. பகிர்மானக் கால்வாய் வெட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மொத்தத்தில் சுமார் 75 விழுக்காடு வேலைகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.37.36 கோடிக்கு அரசு, மே 1998-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

1320 மீட்டரில் இடதுபுற தாங்குசுவர், இறக்கைச்சுவர், சுற்றுச்சுவர் மற்றும் 1700 மீட்டரில் வலதுபுற தாங்கு சுவர், இறக்கை சுவர், சுற்றுச் சுவர் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளது.

### 8.3 இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாறு ஆற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி, சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுகுறிச்சி, மேலகரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை, வடமலபுரம், வெள்வால் தொத்தி, வேதப்பட்டி, ஆகிய கிராமங்களில் மொத்தம் 3705 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தில் கால்வாய் வெட்டும் பணி 70 விழுக்காடு முடிவடைந்துள்ளது. கால்வாயில் குறுக்கு கட்டுமான பணி மற்றும் ஆற்றின் குறுக்கே கல்லணை கட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன.

***8.4* பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.அ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)**

இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர், ஆரம்போலி கிராமங்களிலும், இராதாபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக 202 எக்டேர் புதிய புன்செய் பாசன வசதியும், 183 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும். இது தவிர தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் 4 கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்காக 20 மி. கன அடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மண் அணையின் ஒரு பகுதி மாநில நிதியுடன் ஏற்கெனவே செயலாக்கப்பட்டது. மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்கு கட்டுமானப் பணிகள் உட்பட பிரதான கால்வாய், உபரி நீர்க் கால்வாய், இணைப்புக் கால்வாய் ஆகிய பணிகள், சாலை அமைத்தல், கைப்பிடிச்சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின்கீழ் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி (ஆற்றுப் பகுதி தவிர), உபரி நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, உபரி நீர்ப்பாதையில் மட்டம் தாழ்த்தும் மதகுகளில் முதல் நான்கு பணிகள் முடிந்துவிட்டன. புதிய பிரதான கால்வாய் வெட்டுதல் மற்றும் கற்காரை பூசுதல், குறுக்குக் கட்டுமானப் பணிகள் எல்.எஸ்.330 மீ.-இல் ஒற்றைப் பாதை பாலம் கட்டுதல் உட்பட உபரி நீர் கால்வாய் எல்.எஸ்.280 மீ. முதல் 330 மீ. வரை வெட்டும் பணி மற்றும் மண் அணை கட்டுவதில் உள்ள எஞ்சிய பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகின்றன.



***8.5* நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டததில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரை சிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்காபுரம், குமாரபுரம், முத்து மோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்கு பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்கு பாசன உறுதியும் கிடைக்கும்.

மிகை நீர் வழிந்தோடி மற்றும் மணல்வாரி நிர்மாணித்தல், இடதுபுற தலைமதகு நீர்வழிந்தோடியின் இருபுறமும் மண் அணை அமைத்தல், இடது பிரதான கால்வாய் அமைத்தல் போன்ற பணிகளுக்கு நீர் ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ஜனவரி 1996-ல் ரூ.12.06 கோடி அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி, வலதுபுற பிரதான கால்வாய் தலைமதகு கட்டும் பணி, வலதுபுற பிரதான கால்வாய் பணி ஆகியவை முடிவடைந்தது. மணல் போக்கியுடன் கூடிய தடையிலா உபரி நீர்போக்கி கட்டும் பணி மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் தலைமதகு கட்டுதல் ஆகிய பணிகள் 50 விழுக்காடு முடிவடைந்துள்ளது. மதகு ஓரங்களில் மண் அணை அமைக்கும் பணி, குறுக்கு கட்டுமானங்கள் உட்பட இடதுபுற பிரதான கால்வாய் எல்.எஸ். 0 மீ. முதல் 1800 மீ. வரை வெட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன.

***8.6* இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.அ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாத்தோப்புகானாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

[1999 ஏப்ரல் 7

இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர், மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் மற்றும் சேனூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப்பரப்பிற்கு பாசன உறுதியும், 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்கு பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர் போக்கி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு 0 மீ. முதல் 5000 மீ. வரை கால்வாயில் கற்காரை பூசும் பணி (குறுக்கு வடிகால் கட்டுமானங்கள் உட்பட) ஆகிய பணிகள் மாநில நிதியில் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன.

நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 500 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.2.67 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் கண்மாய்களின் இணைப்புக் கால்வாய் பணிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

**8.7 கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 1152 எக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன் குடியாத்தம், வேலூர், வாணியம்பாடி வட்டங்களில் 2585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் ஏற்படும்.

நீர்த்தேக்கம் கட்டுதல், ஜிட்டப்பள்ளியில் ஒரு எடுப்பு அணை (பிக் அப் அணை) கட்டுதல், எடுப்பு அணையிலிருந்து ஒரு பொது கால்வாய் செறுவாஞ்சியிலிருந்து களிஞ்சூர் வரை இடது புற பிரதான கால்வாய், மேலும் செறுவாஞ்சியிலிருந்து பாலார் வெளிப்போக்கி மற்றும் பாலார் குறுக்கிலிருந்து செதுப்பேரி வரை கால்வாய் வெட்டுதல், மோர்தானாவிலிருந்து சயனகுண்டா வரை அணுகு சாலை



1999 ஏப்ரல் 7]

அமைத்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.28.48 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கப் பணியில் 26 விழுககாடு முடிந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது. ஜிட்டப்பள்ளியில் எடுப்பு அணை கட்டும்பணி, எடுப்பு அணையிலிருந்து கால்வாய் வெட்டும்பணி ஆகியவைகளின் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**8.8. அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமாநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ் பிடாகை, வடகரை மேல் பிடாகை, பன்மொழி, அச்சன் புதூர், நெடுவயல், கொடிக்குறிச்சி, நைனார் அகரம், கிழங்காடு மற்றும் ஆயக்குடி கிராமங்களில் 1562 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 93 எக்டேர் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் ஏற்படும்.

கல்லணை, கால்வாய்ப் பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.60.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கல்லணை பணி நடைபெற்று வருகின்றன. கால்வாய் வெட்டும் பணி 80 விழுக்காடு முடிந்துள்ளது.

**8.9 அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைகட்டுதல் (நீ.ஆ.தொ.தி.) (விருதுநகர் மாவட்டம்)**

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம் அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதார தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் ஒரு அணை கட்டி இடது, வலது புற கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.

[1999 ஏப்ரல் 7

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் இதர ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன் மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி, இருஞ்சிறை, ஆதித்தேனந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

அணைக்கட்டு பணி முடிவடைந்து. இடது மற்றும் வலதுபுற பிரதான காலவாய் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

### 8.10 வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது ஆகும்.

இத்திட்டத்தினால் நாங்குனேரி வட்டத்தில் உள்ள நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம், மற்றும் களக்காடு கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 404 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின் கீழ் உள்ள 760 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு போகமே விளையும் 1568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும். புறப்பாடி

திருப்பு மதகு, நீர் ஊட்டுக் கால்வாய், மண் அணை, தடையில்லா நீர் வழிந்தோடி, உபரி நீர் பாதை, கால்வாய் மதகு, ஆற்றை கடக்கும் ஏற்பாடு உட்பட இணைப்புக் கால்வாய் இவைகளுடன் நாங்குனேரிகால், சிவலப்பேரிகால், பாதனேரிகால் தேவநல்லூர் கால்வாய் இவைகளைச் செப்பனிட்டு சீரமைத்தல், மடத்து அணைக் கீழே ஒரு புறவழி கால்வாய் வெட்டுதல், தேவநல்லூருக்கு கால்வாயிலிருந்து இணைப்புக் கால்வாய் அமைத்தல், இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் கட்டடங்கள் கட்டும் பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30.61 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.



1999 ஏப்ரல் 7]

பச்சையாறு ஆற்றின் குறுக்கே திருப்பு மதகு அமைக்கும் பணி மற்றும் ஊட்டுக்கால்வாய் வெட்டும் பணி அக உறை கற்காரை பூச்சு உட்பட நடைபெற்று வருகின்றன. (1) பாதனேரி கால்வாய், தேவநல்லூர் கால்வாய், பாலம்பத்து கால்வாய் இவைகளைச் செப்பனிட்டு சீரமைத்தல், (2) மடத்து அணைக்கட்டு கால் கடைக்கோடியிலிருந்து பீச்சாலம் குளம் கால்வாய் பிரியும் இடம் வரை இணைப்புக் கால்வாய் வெட்டுதல் மற்றும் தேவநல்லூருக்குக் கீழே ஒரு புற வழி கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு உள்ளன. இப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளது.

### 8.11 கொடுமுடியாறு திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தில் திருக்குருங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குனேரி வட்டங்களில் உள்ள மைலாடி, எருவாடி, நம்பித் தலைவன் பட்டியம், வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், இராஜாக்கமங்கலம், அச்சம்பாடு, தலைக்குளம், ஆணைக்குளம், தெற்கு களிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழங்கிணறு திருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசனமும் 193 எக்டேர் ஒருபோக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழிசெய்யப்பட்டுள்ளது.

மண் அணை அமைத்தல், தடையில்லா நீர்வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்று மதகு, உபரி நீர்ப் பாதை, தாமரை அணைக்கட்டை மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள அலுவலர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்தல், ஆணையடி கோவிலை இடப்பெயர்ச்சி செய்தல் ஆகிய பணிகள் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.21.04 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன. நீர்த்தேக்க கட்டுமான பணிகள் நீர்வள தொகுப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக

வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை பொதுப்பணித் துறைக்கு மாற்றுவதுடன் கணிசமான பட்டா நிலங்களும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. 34 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 31-3-1999-க்குள் கையகப்படுத்த வேண்டிய மீதமுள்ள நிலங்கள் வருவாய் துறையினரால் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உபரி நீர் கால்வாய் வெட்டும் பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. தாமரை அணை மேம்படுத்தும் பணி மற்றும் பல்வகை இதர பணிகளுக்கு ஒப்பந்தம் முடிவு செய்யப்படும் நிலையில் உள்ளது.

***8.12 வராக நதி-சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (நீ-ஆ.தொ.தி)(மதுரை மாவட்டம்)***

மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரை குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசனமும் 409 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

கல்லணை நிலுவையில் உள்ள பணிகள், கால்வாய்கள், கண்ணி வாய்க்கால்கள் மற்றும் கட்டட பணிகள் ஆகியவை நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.30.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கல்லணை கட்டும் பணியின் ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. கால்வாய் வெட்டும் பணி மற்றும குறுக்கு கட்டுமான பணிகள் உட்பட கிளை கால்வாய்கள் வெட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன.



***8.13 சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)***

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வறட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி மற்றும் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்ன ஓவலாபுரம், இரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சிபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியளிக்கப்படும்.

அரசு 1986 ஆம் ஆண்டு மே திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.6.95 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை - வழிந்தோடாத பிரிவு, தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன் கூடிய கால்வாய்கள் அடங்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி மற்றும் கால்வாய் வெட்டும் பணிகளில் பெரும் பகுதி முடிவடைந்துள்ளது. தடையில்லா நீர் வழிந்தோடி, தலை மதகு கட்டும் பணி, கல்லணை கட்டும் பணி எஞ்சியுள்ள கால்வாய் பணிகள் குறுக்கு கட்டுமான பணிகள் இவைகள் நடைபெற்று வருகின்றன. 1998 அக்டோபர் திங்களில் அரசு இப்பணிக்கான திருத்திய மதிப்பீடாக ரூ.14.70 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

***8.14 மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)***

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்படி கிராமம் அருகாமையில், கமுதி நீர் கட்டுப்பாடு மதகிற்கு கீழ்ப்புறமாகவும், கிருதுமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாறுடன் சங்கமிக்கும் இடத்திற்கு கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டத்திலுள்ள ஓ. கரிசல்குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்) மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகு சந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின் கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு 1994 பிப்ரவரி திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன் கூடிய வலது மற்றும் இடது பிரதான கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

அரசு ஆரம்பத்தில் அணை கட்டுவதற்கு பதிலாக நீர்த்தேக்கம் அமைக்க இயலுமா என பரிசீலனை செய்ததால் இத்திட்டம் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது போலவே அணை கட்ட அரசு இறுதியாக மார்ச் 1998-ல் ஆணை வழங்கியது. இத்திட்டத்தில் தலைமதகு கட்டும் பணி, மணல்போக்கி மதகு கட்டும் பணி மற்றும் அணைக்கட்டு தடுப்பு சுவர் கட்டும் பணி ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## 8.15 கொள்ளிடம் ஆற்றின் ஊற்றுநீரை கான்சாகிப் கால்வாய்க்குத் திருப்பி விடுதல் (கடலூர் மாவட்டம்)

கொள்ளிடம் ஆற்றில் கொரம்பு ஒன்று அமைத்து ஆற்றின் ஊற்று நீரை, கருப்பேரி கிராமத்திலிருந்து கால்வாய் அமைத்து கான்சாகிப் கால்வாய்க்கு திருப்பிவிட இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுக்கு ரூ. 1.83 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் சிதம்பரம் வட்டத்தில் திருவாக்குளம், சித்தலப்பாடி, குமார மங்கலம், கீழபரம்பை, மடுவாங்கரை, கணக்காரப்பட்டு, ராதா விளாகம், நக்கரமன்றங்குடி, உத்தமசூளமங்கலம், வாகப்பபத்தூர், குடிப்பள்ளம், பின்னத்தூர் (மேற்கு) பின்னத்தூர் (கிழக்கு) தில்லை விடங்கன் (வடக்கு) தில்லைவிடங்கன் (தெற்கு) கிள்ளை (வடக்கு) பிச்சாவரம், நஞ்சை மகதூர் வாழ்க்கை (மேற்கு) நஞ்சை மகதூர் வாழ்க்கை (கிழக்கு) புஞ்சை மகதூர் வாழ்க்கை,



மனகபாடி, டி.எஸ்.பேட்டை, டி. பரங்கிப்பேட்டை ஆகிய கிராமங்களில் 3776 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணி முழுமை பெறாததால் பணிகள் தொடங்கப்படவில்லை.

## 8.16 உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிக்கும் பொருட்டு வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தூரத்தில் வைகை அணையின் வலது கோடியில் ஒரு உயர் மட்ட கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரை பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரை பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அக்டோபர் 1996-ல் அரசு ரூ. 33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நஞ்சை நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவுநீர் குட்டைகள், 29 கண்மாய்களின் கீழ் உள்ள நன்செய் நிலங்கள் 128 எக்டேர் விடுபட்ட நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நஞ்சை நிலமும் பாசன வசதி பெறும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பன்னிரண்டு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## 8.17 ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு ஜனவரி - 1997-ல் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 18.28 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருமாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின் கீழ் வரும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 8.18 செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தில் செண்பகத் தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ. 21.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், சாந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், எந்துவம்பாடி கிராமங்களிலும் ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமாடுக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முன்னிப்பட்டு, வையூர் கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அரூர், கரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுக்கப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல் சேவுமங்களம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும்.

இத்திட்டம் 'நபார்டு' (தேசிய வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சி வங்கி) கடன் உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் வனத்துறை நிலங்கள் பொதுப்பணித் துறைக்கு மாற்றப்பட வேண்டிய பணி இவைகள் முடிவுற்றவுடன் பணிகள் தொடங்கப்படும். ஆரம்ப கட்டப் பணிகளான சேமிப்பு கிடங்கு கட்டும் பணி, அலியாபாத்தில் வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.19 வறட்டாறு - குப்பத்து ஓடை குறுக்கே நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ரூ. 8.78 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது.



இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் சொக்கம்பட்டி கிராமங்கள் மற்றும் வி.கே.புதூர் வட்டத்தில் மடத்துப்பட்டி கிராமம் ஆகியவற்றில் 165 எக்டேர் விடுபட்ட நிலத்திற்கு பாசன வசதியும், 77 எக்டேர் நிலம் பாசன உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப்பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.

இத்திட்டத்தின் விரிவான ஆய்வுப் பணிக்கு (எடுத்துக்கொள்ள) சிலர் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே பணி மேற்கொள்ளுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

### 8.20 பத்தலப்பள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

இத்திட்டமானது வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கப்படுவதாகும். அரசு இத்திட்டத்திற்கு நவம்பர் 1997-ல் ரூ. 29.55 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர் மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமான்குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு சாதம் பாக்கம், ராஜக்கால், ஆளியங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்னத் தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஓகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப்பெறும். இத்திட்டத்தில் பேராணம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர் வழிந்தோடி, ஆற்றுமதகு, 'பிகப்' அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 12.09 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் தேவைப்படுகிறது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்களைக் கண்டறியும் பணிகள் செய்யப்பட்டுள்ளன. திட்டச் செயலாக்கத்தின் துவக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8.21 குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ஜூன் 1997-ல் ரூ. 35.10 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடி கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வளையம்பட்டு, தண்டம்பட்டு, களையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல் புழுதியூர், பெருமபட்டம், பக்கிரிபாளையம், துக்கப்பேட்டை, மேமலூர், காயம்பட்டு, கங்காரவரன், சென்னை சமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர் மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அண்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம் மற்றும் அரிதாரை மங்கலம் கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர் மங்கலம், கரியாந்தல், ஆனந்தாள், மேலபுஞ்சை, வாசுதேவம்பட்டு மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும் போளூர் வட்டத்தில் கடலாடி குணத்தூர் கிழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2,528 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்கு பாசனமும் கிடைக்கப்பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர் வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 176.33 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 55.28 எக்டேர் புறம்போக்கு நிலமும், 44.17 எக்டேர் தரிசு நிலமும், 13.14 எக்டேர் வனத்துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத்துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்கள் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஆரம்பப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8.22 வறட்டாறு—வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வறட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம்



வகை செய்கிறது. அரசு 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இத்திட்டத்திற்கு ரூ. 19.20 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளி மதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம் புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடையாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின் கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்கு பாசன உறுதி மற்றும் 1047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கு வகை செய்யும்.

இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்போக்கி, தலை மதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்திற்கு 8.5 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 27 எக்டேர் வனத்துறை நிலமும் 9 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இவை நடைபெற்று வருகின்றன.

ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்பப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அணைப் பகுதிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

## 8.23 கால்வாய்—சடைநேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு ரூ. 12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏற்கனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரையில் அகலப்படுத்துதல் மற்றும் ஏற்கனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி விரிவு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன் தருவை வரையில் ஏற்கனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரவன் தருவை முதல் புத்தன் தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரி கால்வாயின் கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தங்கை குளத்தின் கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு

ஏரிகளை நிரப்புவதன் மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார் குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவாரிமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திருப்பணிபுத்தன் தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவுற்றவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நவம்பர்-டிசம்பர் 1998-ல் நடைபெற்ற இடைக்கால ஆய்வில் உலக வங்கி நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் இத்திட்டத்தை மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

## 9. 1998-99 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற விவரம்

### 9.1 நாராயண காவேரி வாய்க்காலை புனரமைத்து சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு மே திங்களில் இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயண காவேரி வாய்க்கால் மற்றும் அதன் கீழ் உள்ள (சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும்) மண்டல மாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்து சீர்செய்ய ரூ. 5.75 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே. நெடுங்குளம், சிமானேந்தல், குண்டுக்குளம், கே. வேப்பங்குளம், ஓ. கரிசல்குளம், கோவிலங்குளம், கூம்பூதி, எம். புதுக்குளம் மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம். கரிசல்குளம், என். கரிசல்குளம், எ. உசிலங்குளம், எஸ். வாலைகுளம், பிள்ளையார்குளம், எஸ். கீரண்டை மற்றும் கீழ அல்லிக்குளம் ஆகிய கிராமங்களில் 1942.97 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.



இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 11-3-99-ல் அரசினால் ஏற்கப்பட்டுள்ளது. பணிகள் உடன் துவங்கப்படும்.

### 9.2 உப்பார் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கானக்கிளிய நல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவயலூர் அருகே உப்பார் ஓடை நந்தியாறுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ. 4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கானக்கிளிய நல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.

மண் அணை, உபரி நீர்போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

### 9.3 முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்து வாரியின் குறுக்கே ரூ. 9.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி, வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கரும்பூண்டி கிராமம் இவைகளில் 110 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும்.

2,300 மீ. நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி மற்றும் 4 தலை மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

[1999 ஏப்ரல் 7

### 9.4 கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கனவே உள்ள கடானா அணையின் வலதுபுறத்தில் ரூ. 18.82 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல் ஆம்பூர், கீழ ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் அளிக்கும்.

930 மீ. நீளத்திற்கு மண் கரை, ஒரு பாசன தலைமதகு, 18.71 மீ. நீளத்தில் 3 கிளை கால்வாய்களுடன் பிரதான கால்வாய், உபரி நீர் வழிந்தோடியிலிருந்து 120 மீ. நீளத்திற்கு இணைப்பு நீர்வழி ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் (Pre-Qualification bid) 31-5-99 வரை பெறப்பட உள்ளன.

### 9.5 நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறயாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ரூ. 3.5 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அனுமதி அளித்தது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலாந்துராரன்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுபட்டி கிராமங்களிலுள்ள 148 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதி கிடைக்கும்.

620 மீ. நீளத்திற்கு மண் கரை, 30 அடி நீள அதிவேக நீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 4120 மீ. நீளம் கண்ணி வாய்க்கால் இவைகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.



1999 ஏப்ரல் 7]

### 9.6 ராமக்கால் ஓடை மற்றும் ஆணைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் கொடகனாற்றின் உபநதிகளான ராமக்கால் ஓடை மற்றும் ஆணைவிழுந்தான் ஓடை இவைகளின் குறுக்கே ரூ. 3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம், வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.

480 மீ. நீளத்திற்கு மண் கரை, ராமக்கால் ஓடையில் உள்ள உபரிநீர் போக்கியுடன் இணைக்க உபரிநீர் கால்வாயுடன் ஒரு உபரி நீர்போக்கி, தலைமதகு, ஆற்று நீர்போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

### 9.7 நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ. 31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம்துரம்பாடி, மூலனூர் மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.

3450 மீ. நீளம் மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, தலைமதகு மற்றும் ஆற்று மதகு இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[1999 ஏப்ரல் 7

### 9.8 ஆண்டி ஓடையின் குறுக்கே ஒரு அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவைகளில் 82 எக்டேர் நஞ்சை நிலங்களுக்கு பாசன உறுதியும் 84 எக்டேர் புன்செய் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் அளிக்கும்.

36 மீ. நீளம் கல்லணை, தலைமதகு, 33.50 மீ. நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் (இடதுபுற) பிரதான வாய்க்கால் மற்றும் 700 மீ. நீளம் வெள்ளத் தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. பணிகள் துவக்கப்பட உள்ளன.

### 9.9 சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் விருதுநகர் மாவட்டம், இராஜாபாளையம் வட்டம் சாஸ்தாகோவில் அருகே நகரி ஆற்றின் குறுக்கே ரூ. 7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் இராஜாபாளையம் வட்டத்திலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின் மூலம் ஏற்கனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.



1999 ஏப்ரல் 7]

1600 மீ. நீளம் மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, ஓர் ஆற்றுமதகு மற்றும் உபரிநீர் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

### 9.10 வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம் விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ. 7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரியன்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர், சியாமளாபுரம், கருண்வரம், வடபுதுப்பட்டு, கீழ் முருகி, தொட்டாலம் மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

320 மீ. நீளம் மண் அணை 10 மீ. நீளம் உபரிநீர் போக்கி மற்றும் ஆற்று மதகு இவைகள் இப்பணியின் அங்கங்களாகும். நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 9.11 சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ. 4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒரு தட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும்.

975 மீ. மண் கரை, 40 மீ. நீளம் உபரிநீர்போக்கி, ஒரு தலைமதகு மற்றும் 60 மீ. நீளம் உபரிநீர் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

[1999 ஏப்ரல் 7

இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 9.12 கொடகனார் நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு பாசன வசதி அளித்தல்

அரசு 1998 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கொடகனார் நீர்த்தேக்கத்திலிருந்து கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள வெள்ளியணை மற்றும் மூன்று குளங்களுக்கு ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையலகாரன் புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் 116 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதான கால்வாயை புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கனவே உள்ள குறுக்கு கட்டுமான பணிகளை பழுதுபார்த்தல், மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இத்திட்டப் பணிகள் 19-5-99-ல் துவங்கப்பட்டுள்ளன.

### 9.13 நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்

அரசு 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துவதற்கான திட்டத்தை ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, சாத்தனூர், அமராவதி, வைகை, ஆளியார், பவானிசாகர், மணிமுத்தாறு, வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணை பகுதிகளில் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

9 அணைப்பகுதிகளிலும் நடைபெற்று வரும் இந்த மேம்படுத்தி அழகுபடுத்தும் பணி விரைவில் முடிக்கப்படும்.

### 9.14 வண்டியூர் குளத்தை தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)

அரசு 1998 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வண்டியூர் குளத்தை ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் தூர் எடுத்து நவீனப்படுத்தி பூங்கா அமைத்து அழகுபடுத்தும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.



1999 ஏப்ரல் 7]

இப்பணியைச் செய்து முடிக்க ஒப்பந்தங்கள் வரப்பெற்றுள்ளன. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### 9.15 1998-99 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) | குறிப்புகள் (4) |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், குணகரம்பாக்கம் கிராமத்தில் உள்ள மடுவின் குறுக்கே அமைந்துள்ள மண் கொண்டத்தை கல்லணையாக மாற்றுதல். | 22.35 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 2. | திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், ஜாகிர்மங்கலம் கிராமத்திற்கு பாசன நீர்வழங்க பளயனூர் ஏரியின் உபரிநீர் கால்வாயில் உள்ள மண் கொண்டத்தை கல்லணையாக மாற்றி அமைத்தல். | 69.50 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3. | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் கீரைப்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல். | 15.75 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், நரசிபுரம் கிராமம், சர்வே எண் 376-ல் ஒரு குட்டை அமைத்தல். | 29.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) | குறிப்புகள் (4) |
|---|---|---|---|
| 5. | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம் ஆலந்துறை கிராமத்தில் கண்மாய்குட்டை அமைத்தல் மற்றும் மாதவராயபுரம் கிராமத்தில் முண்டந்துறை பள்ளத்தின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 93.20 | பணிகள் துவங்கப்பட்டுள்ளன. |
| 6. | திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், மாமரத்துப்பட்டி கிராமத்தில் பூங்கார் குறுக்கே அணைகட்டி மாரியம்மன் குளத்திற்கு தண்ணீர் வழங்குதல். | 29.30 | பணி தொடங்கப் பட்டுள்ளது. |
| 7. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் சாத்தநேந்தல் கிராமம் வில்லுண்ணியார் (காட்டார்) குறுக்கே அணைகட்டி வீரகொண்டன் மற்றும் அதன் தொடர் கண்மாய்களுக்கு நீர் வழங்குதல். | 57.90 | பணி தொடங்கப்பட்டுள்ளது |
| 8. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம். ஓடைப்பட்டி கிராமத்தில் கணவாய் முடுக்கு அருகில் ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 43.80 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 9. | திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் வட்டம் துலுக்காரப்பட்டி கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல். | 38.75 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், புதுவாக்கோட்டை கிராமத்தில் பாம்பாற்றின் குறுக்கே உள்ள மண் | 42.10 | ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டுள்ளது. பணிகள் |



| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) | குறிப்புகள் (4) |
|---|---|---|---|
| | கொண்டத்தை கல் அணையாக மாற்றி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் காடுக்குடி மற்றும் இதர கண்மாய்களுக்கும் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் பெரிய செங்கிரை குளத்திற்கும் பாசன வசதி அளித்தல். | | விரைவில் துவக்கப்பட உள்ளன. |
| 11. | இராமநாதபுரம் மாவட்டம், கமுதி முதுகுளத்தூர் வட்டங்களில் ரகுநாத காவேரி வாய்க்கால் பகுதி எண் 1 (00 மீ முதல் 20818 மீ வரை) சீரமைக்கும் பணி. | 114.04 | பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 9-3-99 அன்று அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது பணிகள் உடன் துவங்கப்படும். |
| 12. | இராமநாதபுரம் மாவட்டம் கமுதி முதுகுளத்தூர் வட்டங்களில் ரகுநாத காவேரி வாய்க்கால் பகுதி எண் 2 (20818 மீ முதல் 40510 மீ வரை) சீரமைக்கும் பணி. | 71.95 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 13. | இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், கோவிந்தமங்கலம் கண்மாய்க்கு நீர் வழங்க சருகணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 27.85 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 14. | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், மூக்காரெட்டிபட்டி கிராமத்தில் புதிய குட்டை அமைத்தல். | 8.60 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 15. | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், மஞ்சவாடி கிராமம் அருகில் காட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 51.25 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) | குறிப்புகள் (4) |
|---|---|---|---|
| 16. | திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம் லக்கநாயக்கன்பட்டி கிராமம் மான்பாஞ்சான்பட்டி அருகில் ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 28.65 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 17. | திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் எல்லைக் காட்டுப்பட்டியில் புதிய ஏரி அமைத்தல். | 19.50 | பணி தொடங்கப்பட்டு உள்ளது. |
| 18. | திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், காமாட்சிபுரம் கிராமம் அருகே ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல். | 7.20 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 19. | திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், நம்பக்குறிச்சி கிராமத்தில் நக்கம்பாடி ஏரிக்கு தண்ணீர் வழங்க நந்தியார் ஓடையின் குறுக்கே (ஊட்டத்தூர் ஏரிக்கு அருகே) அணை கட்டுதல். | 38.50 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

**10. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கடலாடி ஒன்றியத்திலுள்ள சங்கரத்தேவன் வாய்க்காலை புனரமைத்து சீர்செய்தல். | 55.08 | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

## 10.0 கூடுதல் பாசன வசதி

நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்களால் 1999-2000 ஆம் ஆண்டில் 664 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கவும் சிறுபாசன குளங்கள் மூலம் 1250 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## 11.0 1999-2000 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்கள்

### பகுதி II திட்டங்கள்

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | விவரம் (3) |
|---|---|---|
| | **சிறுபாசன திட்டங்கள்:** | |
| 1. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் ராஜகம்பீரம் ஏரியும் அதன் கீழே அமைந்துள்ள 15 ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ளநீரை திருப்பி விடுதல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.09 கோடி. முன்னேற்றத்தில் 1999-2000. நிதி ஒதுக்கீடு: ரூ. 25.00 லட்சம் பயன்கள்: புதிய பாசன பரப்பு 20.38 ஏக்கர் பாசன உறுதி 2568.87 ஏக்கர். விடுபட்ட பரப்பு 491.71 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 3452.35 மெ. டன். |
| 2. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளபிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு நீர் வசதியளித்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.41 கோடி. 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 25.00 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 1660.86 ஏக்கர். விடுபட்ட பரப்பு 86.76 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 1112.13 மெ. டன். |

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | [1999 ஏப்ரல் 7 விவரம் (3) |
|---|---|---|
| | **சிறப்பு சிறுபாசன திட்டங்கள்:** | |
| 1. | வேலூர் மாவட்டம் வாணியம்பாடி கிராமம் பொன்னம்பள்ளி குக்கிராமத்தின் குறுக்கே சிறிய நீர்த்தேக்க குட்டை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 15.90 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு. கானாற்றின் அருகே ரூ. 6.50 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 10.08 (இரண்டு போகம்), 57.39 ஏக்கர் (முதல் போகம்), 64.25 ஏக்கர் (2ம் போகம்)-கூடுதல் உணவு உற்பத்தி 61.49 மெ. டன். |
| 2. | வேலூர் மாவட்டம் ஆற்காடு வட்டம் பங்கனூர் கிராமம் வண்டிக்கல் கிராமத்தில் ரெட்டிதிப்பை மற்றும் தேவனாகி மலைக்கு இடையில் செல்லும் கானாரின் குறுக்கே தடுப்பணை கட்டுதல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 83.00 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 33.00 லட்சம். பயன்கள்: பாசன உறுதி-104 ஏக்கர் (2 போகம்) கூடுதல் உணவு உற்பத்தி-230.48 மெ. டன். |
| 3. | வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் எண் 93 காங்குப்பம் கிராமம் கல்யாண பெரியாங்குப்பத்தில் உள்ள ஏரியை புனரமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 25.00 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 10.00. லட்சம் பயன்கள்: பாசன உறுதி 2.62 ஏக்கர். புதிய பாசனம் 67.96 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 24.92 |



1999 ஏப்ரல் 7]

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | விவரம் (3) |
|---|---|---|
| 4. | வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் பணமடங்கி கிராமம் பள்ளத்தூர் அருகே சிறிய நீர்த்தேக்க குட்டை புதுப்பித்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 20.00 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 8.00 லட்சம். பயன்கள்: பாசன உறுதி. 18.65 ஏக்கர். புதிய பாசனம் 33.37 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 55.75 மெ. டன். |
| 5. | திருவண்ணாமலை மாவட்டம்: திருவண்ணாமலை வட்டம், சோமாசிபாடி கிராமத்தில் ஒரு சிறிய நீர்த்தேக்க குட்டை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.20 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 1.70 லட்சம். பயன்கள்: பாசன உறுதி. 6.82 ஏக்கர். விடுபட்ட பாசன பரப்பு 23.30 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 12.46 மெ. டன். |
| 6. | திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம் ஆரப்பாக்கம் கிராமத்தில் ஒரு நீர்த்தேக்க குட்டை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. [illegible].30 லட்சம் 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 2.10 லட்சம். பயன்கள்: பாசன உறுதி. 11.29 ஏக்கர். புதிய பாசனம் 21.81 ஏக்கர் கூடுதல் உணவு உற்பத்தி 23.80 மெ. டன். |

| ...ரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | விவரம் (3) |
|---|---|---|
| | தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் பலாப்பட்டி ஆற்றில் உள்ள ஜம்பேரி அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வழங்குதல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 20.40 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு: ரூ. 8.20 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 85.80 ஏக்கர். விடுபட்ட பாசனப் பரப்பு 240.00 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 385.91 மெ.டன். |
| | கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டம் செஞ்சேரி புதூர் கிராமம் சர்வே எண் 274-ல் ஒரு சிறிய நீர்த்தேக்க குட்டை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 23.00 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 9.00 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 82 ஏக்கர். (முதல் போகம்) 0.40 ஏக்கர். விடுபட்ட பரப்பு 20.40 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 38.40 மெ.டன். |
| | திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், தேனூர் கிராமம், ஆனைவாரி ஓடையின் குறுக்கே படுகை அணை கட்டி மாரன்குளம் கண்மாய்க்கு தண்ணீர் வழங்குதல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 11.00 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 5.00 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 25.73 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 36.02 மெ. டன். |





| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | விவரம் (3) |
|---|---|---|
| 10. | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் புத்தனம்பட்டி கிராமத்தில் தூர்ந்துபோன குட்டையை புனரமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 7.20 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 2.90 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 92.80 ஏக்கர். (புன்செய் நிலம் நன்செய் நிலமாக மாறும்). கூடுதல் உணவு உற்பத்தி 129.92 மெ.டன். |
| 11. | திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், இடையாப்பட்டியில் உள்ள கோட்டக்கரை குக்கிராமத்தில் வாரியின் குறுக்கே குட்டை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை: ரூ. 10.80 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 4.30 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 57 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 28.50 மெ.டன். |
| 12. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மருதங்குடி கிராமத்தில் மருதங்குடியாற்றின் குறுக்கே அணை கட்டி, விளாத்த வயல், முருக்கன்குளம் மற்றும் பாப்பான்குளம் ஆகிய குளங்களுக்கு தண்ணீர் வசதி அளித்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 83.50 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ 33.40 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 43.90 ஏக்கர். விடுபட்ட பாசன பரப்பு 50.72 ஏக்கர். (நன்செய்). புதிய பாசனம் 94.68 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 97.34 மெ. டன். |

[1999 ஏப்ரல் 7

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | விவரம் (3) |
|---|---|---|
| 13. | திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் சர்வே எண் 94,98,99 மற்றும் 100 கோலப்பட்டி கிராமத்தில் புதிய நீர்த்தேக்க ஏரி அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 96.70 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 38.70 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 215 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 258.00 மெட்ரிக் டன். |
| 14. | விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி வட்டத்தின் பண்ணை கிராமத்தில் பண்ணை மூன்றடைப்பு கண்மாய்க்கு நீர் வரத்தை அதிகமாக்குதல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 29.90 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 12.00 லட்சம். பயன்கள்: பாசன உறுதி 164.13 ஏக்கர். விடுபட்ட பாசன பரப்பு 30.01 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 140.50 மெ. டன். |
| 15. | விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் குண்டலகுத்தூர் கிராமத்தில் புதிய நீர்த்தேக்க கண்மாய் அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 36.30 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 14.50 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 191.58 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 208.67 மெ.டன். |
| 16. | தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம், இராமசந்திராபுரம் கிராமத்தில் புதிய நீர்த்தேக்க ஏரி அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை ரூ. 29.30 லட்சம். 1999-2000 நிதி ஒதுக்கீடு ரூ. 11.70 லட்சம். பயன்கள்: புதிய பாசன பரப்பு 76.80 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 87.50 மெ. டன். |



1999 ஏப்ரல் 7]

## 12. நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்

1. தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ. 1140 கோடிக்கு தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 1995 செப்டம்பர் திங்களில் அடிப்படை விலையின்படி ரூ. 807.49 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2. இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சி மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களை பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள அபிவிருத்தி, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

3. இத்திட்டம் 40 இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடிப் பயனளிக்கும். இத்திட்டம் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்). பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன் மூலமும் மேம்பட்ட பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

4. இத்திட்டம் காவிரி வடிநில பாசனத் திட்டம் தவிர ஏனைய அனைத்துப் பாசன திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கு வழி கோலும். மேலும் சிறுபாசனத் திட்டங்களான பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராஜாதோப்புகானாறு, கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு, ஆனைவிழுந்தான் ஓடை, ஆவினார் கோயில், இருதயால் ஆகிய நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

5. இந்த அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து பிப்ரவரி 1999 முடிய ரூ. 761.04 கோடி மதிப்பீட்டில் 527 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | திட்டம் பணியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை | தொகை ரூ கோடியில் |
|---|---|---|---|
| 1. | பாசன ஏற்பாடுகளின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு, வேளாண் பெரும் மக்களுக்கு பயிற்சி அளித்தல், திட்டங்களை முடித்தல் உட்பட | 267 | 577.78 |
| 2. | விவசாய சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 8 | 6.95 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள் | 4 | 15.81 |
| 4. | பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் | 7 | 6.87 |
| 5. | இதர திட்டங்கள் | 2 | 0.02 |
| 6. | நீர் திட்டமிடல் | 32 | 33.06 |
| 7. | சுற்றுப்புறச் சூழல் நிர்வாகம் | 3 | 8.07 |
| 8. | நில எடுப்பு மற்றும் பொருளாதார புனர்வாழ்வு | 3 | 17.84 |
| 9. | நிறுவனங்கள் வலுப்படுத்துதல் கட்டடங்கள் கட்டுதல் அறிவியல் கருவிகள் தொடர்பு சாதனங்கள் அலுவலக தளவாடங்கள் வாங்குதல் ஆகியவை | 192 | 40.96 |
| 10. | வாகனங்கள் | 4 | 19.02 |
| 11. | கணிப்பொறிகள், நகலெடுப்பு இயந்திரங்கள் முதலியன | 4 | 16.10 |
| 12. | பிணைப்பு ஆலோசனை | 1 | 18.56 |
| | மொத்தம் | 527 | 761.04 |



6. இத்திட்டத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 220.71 கோடி நிதி கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | நடைபெற்று வரும் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் (Ongoing Schemes) | 53.13 |
| 2. | பாசன மேம்பாடு மற்றும் விவசாய சங்கம் அமைத்தல் & ஒப்படைத்தல் முதல் நிலை | 94.08 |
| 3. | பாசன மேம்பாடு மற்றும் விவசாய சங்கம் அமைத்தல் & ஒப்படைத்தல் (SIFT-II) இரண்டாம் நிலை | 44.09 |
| 4. | நிறுவனங்களை வலுப்படுத்துதல் (Strengthening Institutional Officers under W.R.O.) | 26.92 |
| 5. | சுற்றுச் சூழல் செயல் திட்டம் (Environmental Action Plan) | 2.49 |
| | மொத்தம் | 220.71 |

## 12.1 நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தில் விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்பு

தமிழ்நாடு அரசு பாசன முறைகள் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மையில் நிலையான மற்றும் அதிக பயனாகும் வகையில் செயல்படுத்துவதற்கு இதன் மூலம் பயன்பெறும் விவசாயிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டுள்ளது. நீர்வள ஆதார தொகுப்புத் திட்டப் பணிகள் முடிந்தபின் பாசன வாய்க்காலின் பகிர்வு வாய்க்காலின் கீழுள்ள பகுதிகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியை விவசாய குழுக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும். பயன்பெறும் ஒவ்வொரு விவசாயியும் ரூ. **10** செலுத்தி விவசாயக் குழுமத்தில் உறுப்பினராக இணைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் ஹெக்டேருக்கு ரூ. **250** வீதம் வைப்புத் தொகையாக செலுத்தி அந்தக் குழுமத்தில் சேரும் தொகையை வட்டி அளிக்கக்கூடிய வைப்புத்தொகையாக விவசாய மன்றத்தின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். இத்தொகையிலிருந்து ஆண்டிற்கு பெறப்படும்

வட்டியாகிய ஹெக்டேருக்கு ரூ. **30**-க்கும் அதிகமாக இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவு இருக்குமானால் அந்த கூடுதல் செலவினத்தை பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து வசூலித்து ஈடுசெய்யப்படும்.

***விவசாயிகளின் அமைப்பு 3 நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.***

அ. மதகு குழு : பதிவு செய்யப்படாத குழு

ஆ. பகிர்வு கால்வாய் மட்டத்திலான விவசாயிகள் குழுமம் - தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்படி பதிவு செய்யப்பட வேண்டியது.

இ. உச்சமட்ட குழு: பாசன அமைப்பு மட்டத்தில்

நீர்வள ஆதார அமைப்பு நீர் வழங்குதல் குறித்த பணிகள், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து விவசாய குழுக்களுடன் பொறுப்புகள், கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்து உடன்படிக்கை குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**குறுகிய கால ஆலோசனை முறை**

இந்தத் திட்டத்திற்கான ஆலோசனை வழங்க அண்ணா பல்கலைக் கழகத்தின் அங்கமாகிய நீரியல் ஆதார மையத்திற்கு ரூ. 46.13 லட்சத்தில் 6 மாதத்தில் கருத்துருவை வழங்க குறுகிய ஆலோசனை பணி 1997 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இந்த ஆலோசகர்கள் கீழ்கண்டுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளார்கள்:—

அ. விவசாய குழுமங்கள் அமைப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டன.

ஆ. சாத்தனூர், கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் மருதாநதி ஆகிய முன்னோடி திட்டப் பகுதிகளில் அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் பகுதிகளில் நேரடி ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இ. சாத்தனூர் பாசனப் பகுதியில் வழிமுறையான விவசாய அமைப்புகளை திருத்திய நடைமுறைகளுக்கான விவசாயிகளின் அணுகுமுறை மற்றும் பாசன மேலாண்மையில் பெண்களின் பங்கு குறித்து குறிப்பான கணக்கெடுப்பு நடத்தி அதன் விவரம் சேகரிக்கப்பட்டது.





ஈ. இந்தத் திட்டத்திற்கு நிறுவன வளர்ச்சித்துறை வல்லார் மற்றும் சமூக அமைப்பாளர்களை பணியில் ஈடுபடுத்தக்கூடிய அரசு சாரா அமைப்புகளை கண்டறிந்து தகுதி பட்டியல் தயாரித்துக் கொடுத்தது.

உ. பயிற்சி வழிகாட்டி அமைப்பு விவரம் தயாரிக்கப்பட்டது.

ஊ. நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களுக்கு வழிகாட்டியாக விளங்க விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்படைப்பு பற்றி வழிகாட்டி மற்றும் குறிப்பு தயாரித்து கொடுத்தது.

அண்ணா பல்கலைக் கழகத்தின் அங்கமாகிய நீர்வள ஆதார மையத்திற்கு ஒப்புவிக்கப்பட்ட பணிக்கான இறுதி அறிக்கையும் சமர்ப்பித்துவிட்டது. இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விவசாயிகள் மன்றம் அமைப்பதற்காக கீழ்க்கண்டவாறு அணுகுமுறை கடைபிடிக்கப்படுகிறது:—

***அ. கணக்கெடுப்புப் பருவம்***—பகிர்மான கால்வாய்களில் நீர் கொண்டு செல்லும் திறன் அதிகரிப்பதற்காக விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்படைப்பு குழு விவசாயிகளுடன் பகிர்வு கால்வாய்கள் நெடுகிலும் நடந்து சென்று தேவையான மேம்பணிகள் குறித்து குறிப்புகள் தயாரித்தல்.

***ஆ. அமைப்பு பருவம்***—விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்படைப்புக் குழு அரசு சாரா அமைப்புகளின் ஒத்துழைப்புடன் விவசாயிகளை சந்தித்து விவசாய மன்றங்கள் அமைத்து அவற்றை சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்ய தூண்டுதல்.

***இ. கூட்டு மேலாண்மை பருவம்***—இந்த பருவத்தில் விவசாய மன்றத்தினர் நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களுடன் இணைந்து தண்ணீர் அளவை கண்டறிவது மற்றும் மேம்பாட்டு பணிகளை எவ்வாறு பராமரிப்பது போன்ற பணிகளை தெளிவாக்கிக் கொண்டது. நீர்கொண்டு செல்லும் திறன் திருப்திகரமாக இருப்பதை நிலை நிறுத்தியபின் உரிய செயற் பொறியாளர் அந்த பாசன பகுதியின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை விவசாயிகள் மன்றங்களுக்கு ஒப்படைப்பு செய்தல்.

[1999 ஏப்ரல் 7

அமைக்கப்பட்ட விவசாயிகள் மன்றங்களின் விவரம் கீழ்வருமாறு:

| வ.எண். | மண்டலம் | வி.அ.மற்றும் ஒ.குழு | விவசாயிகள் மன்றம் | மொத்தம் அமைக்கப்பட்டது. |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 16 | 559 | 87 |
| 2. | பொள்ளாச்சி | 26 | 369 | 4 |
| 3. | மதுரை | 78 | 447 | 116 |
| | மொத்தம் | **150** | **1375** | **207** |

### விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்புக் குழு

150 விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு குழுவிலும் ஒரு உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர், ஒரு பணி ஆய்வாளர், அந்த வாய்க்காற்கான நீர்கட்டி மற்றும் அரசு சாரா அமைப்பினால் நியமிக்கப்பட்ட சமூக அமைப்பாளர்கள் பங்கேற்பார்கள். அரசு சாரா அமைப்புகளினால் நியமிக்கப்பட்ட நிறுவன வளர்ச்சி வல்லுநர்கள் சமூக அமைப்பாளர்களை வழி நடத்துவார்கள்.

### பயிற்சி

விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்பு குழுவிலுள்ள நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களுக்கு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தினால் முனைப்பிலான பயிற்சி ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. அரசு சாரா அமைப்புகளினால் செயல்பட்டு வரும் நிறுவன வளர்ச்சி வல்லார் மற்றும் சமூக அமைப்பாளர்களுக்கான பயிற்சி திட்டம், இயக்குநர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி இரு பிரிவாக எட்டு குழுக்களுக்கு பிப்ரவரி 99 மாதத்திலும் மீதமுள்ள 9 குழுக்களுக்கு மார்ச் 99 மாதத்திலும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 7]

### கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்புத் திட்டம் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் முழுவதும் தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) அவர்களால் முனைப்பாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

### அரசு சாரா அமைப்புகளை தெரிந்தெடுத்தல்

தமிழ்நாட்டில் சென்னை, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டலங்கள் விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்புத் திட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசு சாரா அமைப்புகளின் சேவையை வசதியாகவும், திறமையாகவும் உபயோகித்துக் கொள்ளும்பொருட்டு மேற்கண்ட மூன்று மண்டலங்கள் உபமண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. சென்னை மண்டலத்தில் 5 உபமண்டலங்களும், மதுரையில் 7 உபமண்டலங்களும், பொள்ளாச்சியில் 5 உபமண்டலங்களும் சிறந்த சேவைக்காக பிரிக்கப்பட்டுள்ளன. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகளும் மேற்கண்ட வகையிலே தொகுக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட 17 தொகுதிக்குரிய (அதாவது சென்னை 5, பொள்ளாச்சி 5 மற்றும் மதுரை 7) அரசு சாரா அமைப்புகளுக்கும், அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த 17 அரசு சாரா அமைப்பு மற்றும் நிறுவனங்களும் தெரிந்தெடுக்கப்பட்டு விவசாயிகள் அமைப்பு மற்றும் ஒப்பளிப்பு திட்டத்திற்கு 17 நிறுவன வளர்ச்சி வல்லார் மற்றும் 281 சமூக அமைப்பாளர்கள் ஆகியவர்களைக் கொண்டு திட்டப்பணி நிறைவேற்ற பணிக்கப்பட்டுள்ளனர். தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசு சாரா அமைப்புகளும் உரிய நிறுவன வளர்ச்சி வல்லார் மற்றும் சமூக அமைப்பாளர்களை பணியில் அமர்த்தி பணியை துவக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

### செயல்முறைத் திட்டம்

பொள்ளாச்சி, மதுரை மற்றும் சென்னை ஆகிய மண்டலங்களுக்கான செயல்முறை திட்டம் முழுமையான வடிவில் தயாரிக்கப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 7

## 12.2 நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் முக்கியமான பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு

சென்னை மண்டலம்

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| | **செய்யாறு அணைக்கட்டு பாசன அமைப்பு மொத்தம் ரூ. 4.67 கோடி** | | | |
| 1. | செங்கம் மற்றும் போளூர் வட்டங்களில் அணைக்கட்டு, ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் கட்டடங்களை புனரமைத்தல். | 5 அணைக்கட்டுகள் மேம்படுத்துதல் மேல் மற்றும் கீழ் வழிந்தோடி மற்றும் குறுக்கு மணல் போக்கி மதகுகளை அமைத்தல், தடுப்புச் சுவர்கள் நீட்டித்தல், வாய்க்கால்களை தரப்படுத்துதல், தேவையான இடங்களில் குறுக்குக் கட்டடங்கள் அமைத்தல். | 95.47 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | செய்யாறு அணை பாசன பகுதிகள், ஏரிகள், உபரி நீர்க்கால்வாய்கள் மற்றும் குறுக்கு கட்டடங்கள் புனரமைத்தல். | தவசி ஏரி வாய்க்கால்கள் 2.38 முதல் 4.72 கி.மீ. வரை புனரமைத்தல், தேத்துறை கண்மாய் வாய்க்கால் கி.மீ. 4.33 முதல் 6.66 கி.மீ. வரை புனரமைத்தல், வாய்க்கால் தளத்தை 1.0 கி.மீ. அளவும் பக்கங்களை 2.8 கி.மீ. அளவும் காங்கிரீட் பூச்சு அமைத்தல், 3 ஏரியின் 3 மதகுகளை புனரமைத்தல். | 90.00 | 55% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை. (இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 3. | வந்தவாசி வட்டம், செய்யாறு அணைக்கட்டு பகுதியில் ஏரிகள், உபரி நீர் வாய்க்கால்கள் மற்றும் குறுக்குக் கட்டடங்கள் புனரமைத்தல். | ஏரிக்கரைகளை பலப்படுத்துதல், சேதமான 8 தலைப்பு மதகுகளைத் திரும்பக் கட்டுதல், விருதூர் ஏரி தலைப்பு மதகை மீண்டும் கட்டுதல், கால்வாய்தளம் சீரமைத்தல். | 90.00 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டுள்ளது. உலக வங்கியின் தடையில்லா சான்று எதிர்நோக்கப்படுகிறது. |
| 4. | உத்திரமேரூர் வட்டம், செய்யாறு அணைக்கட்டு பகுதியில் அணைக்கட்டுகள், ஏரிகள், உபரி நீர் வாய்க்கால்கள் மற்றும் கட்டடங்கள் புனரமைத்தல். | வரத்துக் கால்வாய்களில் 9.4 கி.மீ. வரை தூர் வாருதல். வாகன தடம் அமைத்தல், வாய்க்கால் பக்கவாட்டில் 200 மீ காண்கிரீட் பூச்சு அமைத்தல், 75.3 மீ. நீளம் தாங்கு சுவர் அமைத்தல். | 56.56 | ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டது. பணிகள் துவங்கப்பட உள்ளன. |
| 5. | செய்யார் வட்டத்தில் செய்யாறு அணைக்கட்டு மற்றும் பிரதான கால்வாய்கள் ஆகியவைகளை புனரமைத்து, வானிலை ஆய்வில் கருவிகள் மற்றும் மதகு கதவுகள் பொருத்துதல். | செய்யாறு அணையின் தலை மதகு மற்றும் பிரதான வாய்க்கால் எல்.எஸ். 56 மீ முதல் எல்.எஸ். 2735 மீட்டர் வரை சீர்செய்தல். | 122.00 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 6. | பண்ணை வளர்ச்சிப் பணிகள். | .. | 12.58 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பணிகள் துவக்கப்பட உள்ளன. |

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| பாலாறு அணை பாசன அமைப்பு— மொத்தம் ரூ. 12.53 கோடி | | | | |
| 1. | பாலாறு அணை புனரமைத்தல். | அணை புனரமைத்தல். | 66.26 | ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது. |
| 2. | காவேரிப்பாக்கம் பிரதான கால்வாய் 0 மீ முதல் 4950 மீ வரை புனரமைத்தல். | வாய்க்கால் மற்றும் குறுக்குக் கட்டடங்களை புனரமைத்தல். | 80.00 | பணி முடிக்கப் பட்டது. |
| 3. | காவேரிப்பாக்கம் வரத்துக் கால்வாய் புனரமைத்தல் (குணமடை முதல் காவேரிப்பாக்கம் ஏரி வரை) | வாய்க்கால் மற்றும் குறுக்குக் கட்டடங்களை புனரமைத்தல். | 104.00 | பணி முடிக்கப் பட்டது. |
| 4. | மகேந்தரவாடி வாய்க்கால் மற்றும் அதற்கான வரத்துக் கால்வாய்களை புனரமைத்தல். | வாய்க்கால் புனரமைப்பு 6.1 கி.மீ. குறுக்குக் கட்டடங்கள் புனரமைப்பு நீர்வழிந்தோடி புனரமைப்பு | 42.00 | 50% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5. | காவேரிப்பாக்கம் ஏரியின் உபரி நீர் கால்வாய் வரத்து கால்வாய் கொண்டம் மற்றும் ஏரிகளை புனரமைத்தல். | 7 வரத்துக் கால்வாய்கள் புனரமைப்பு 8 கொண்டங்களை மேம்படுத்துதல் 30 ஏரி மதகுகள் மறுகட்டுமானம் 3 திருகு மதகு அமைத்தல் | 80.00 | 35% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6. | தூசிமாமண்டூர் வாய்க்காலின் கீழ் ஏரி வரத்துக்கால்வாய், ஏரிக்கரை, மதகுகள், புனரமைத்தல் மற்றும் புறவழி அமைத்தல். | வரத்துக் கால்வாய் புனரமைப்பு 5, நீர்வழிந்தோடி மேம்படுத்துதல் 1, மதகுகள் மேம்படுத்துதல் 35, ஏரி வரத்துக் கால்வாய புனரமைப்பு 5, ஏரிக்கரை புனரமைப்பு 32. | 80.00 | 40% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |



| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 7. | ராஜாக்கால் வாய்க்கால் மதகுகள் ஏரிக்கரை மற்றும் குக்குண்டி வாய்க்கால் மற்றும் ஏரிகளை புனரமைத்தல். | தடுப்புச்சுவர் கட்டுதல் 74 மீ வடிமண் குழி, தலைப்பு மதகின் கீழ் கருங்கல் சுவர் கட்டுதல், தலைப்பு மதகிலிருந்து 100 மீ கான்கிரீட் பூச்சு, நிலை அளவு அமைத்தல் (500 மீ இடைவெளியில்) புதிய திருகு மதகுகள் அமைத்தல் 9 எண்கள். | 34.00 | 40% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8. | பாலாறு பாசனப் பகுதியில் கோவிந்தவாடி வாய்க்கால் புனரமைத்தல். | 19 வாய்க்கால்களில் வடிமண் சேகரிப்பை அகற்றுதல் 35 குறுக்கு கட்டடங்கள் புனரமைப்பு 150 மீட்டர் ரிவெட்மெண்ட் கட்டுதல், 8 திருகு மதகு அமைத்தல். | 203.00 | 40% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 9. | பாலாறு பாசன பகுதியில் சக்கா மல்லூர் வாய்க்கால் புனரமைப்பு கான்கிரீட் பூச்சு வாய்க்காலை சீரமைத்தல் வடிநீர் உள்வாங்கிகளை மேம்படுத்துதல் ஏரி வரத்து வாய்க்கால்களின் கரை மற்றும் மதகுகளை புனரமைத்தல் மற்றும் மாற்று இணைப்பு வாய்க்கால் அமைத்தல் | வாய்க்கால் புனரமைப்பு 0 முதல் 3 கி.மீ. 6.75 முதல் 9.25 கி.மீ. வரை மற்றும் 11.05 முதல் 12.57 கி.மீ. வரை 500 மீ. இடைவெளியில் நிலை அளவுகள் அமைத்தல் 21 திருகு மதகு அமைத்தல். | 50.05 | 30% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 10. | கம்பக்கால் வாய்க்கால் புனரமைப்பு 0 மீ. முதல் 18650 மீ. மற்றும் இந்த பகுதியின் ஏரிகள் புனரமைப்பு மற்றும் ஏரிக்கு ரிவெட்மெண்ட் கட்டுதல். | தேவையான இடங்களில் கல்பாவுதல், 0 முதல் 15.95 மீ. வரை வாகன நடத்திற்கு சரளை மண் பரப்புதல், 23 வரத்துக் கால்வாய் மேம் படுத்துதல், ஏரியின் 29 குறுக்குக் கட்டடங்களை புனரமைத்தல், 27 ஏரிகள் மேம்படுத்துதல். | 197.00 | 40% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 11. | கம்பக்கால் வாய்க்கால் 18650 மீட்டர் முதல் 44360 மீ வரை மற்றும் இந்தப் பகுதியில் உள்ள ஏரிகளை புனரமைத்தல் மற்றும் ஏரி பகுதியில் ரிவெட்மெண்ட் கட்டுதல். | வரத்து வாய்க்கால் மேம்பாடு-14 எண்கள், குறுக்குக் கட்டடங்களில் மேம்பாடு-13 எண்கள், ஏரிகள் மேம்படுத்துதல்-5 எண்கள், குறுக்குக் கட்டடங்கள் மேல்புறமும் கீழ்புறமும கல் பாவுதல். | 160.00 | 50% பணிகள் முடிவுற்றன எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 12. | காவேரிப்பாக்கம் ஏரி மற்றும் வரத்துக் கால்வாய் 6,7,8 மற்றும் 8(அ) இணைப்புக் கால்வாய் புனரமைப்பு. | வாகன தடம் மேம்படுத்துதல், கல்பாவிய இடங்களை சிமெண்ட் சாந்தினால் உறுதிப் படுத்துதல், வரத்து வாய்க்காலை சீர் படுத்துதல், ஏரிக்கரைகளை 3 அடுக்கு வடிகட்டும் முறையில் வலுவூட்டுதல். | 68.50 | 50% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடை பெற்று வருகின்றன. |
| 13. | பாலாறு அணைக்கட்டு பகுதி அரக்கோணம் வட்ட எல்லை கோவிந்தவாடி வாய்க்காலின் கீழ் உள்ள ஏரிகளை புனரமைத்தல். | மதகுகள் மீளக் கட்டுமானம்-19 நீர்வழிந்தோடி கட்டுதல்-2 இணைப்புச் சாலை மேம்பாடு சேதமான ரிவெட்மெண்டை எடுத்து மீள அமைத்தல். | 30.00 | ஒப்பந்தம் முறிக்கப்பட்டது மறு ஒப்பந்தம் கோரப்பட்டு உள்ளது |
| 14. | பாலாறு பாசனப் பகுதியில் உள்ள தூசி வாய்க்கால் புனரமைப்பு தற்போதுள்ள வாய்க்கால் சீரமைப்பு. | தற்போதுள்ள வாய்க்கால் சீரமைத்தல் மற்றும் குறுக்கு கட்டடங்களை புனரமைத்தல். | 49.10 | 60% பணிகள் முடிவுற்றன எஞ்சிய பணிகள் நடை பெற்று வருகின்றன. |
| 15. | அளவைக் கருவிகள் பொருத்துவது. | -- | 9.50 | ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| பொய்னி அணைக்கட்டு பாசன அமைப்பு மொத்தம் ரூ.4.29 கோடி | | | | |
| 1. | பொய்னி அணைக்கட்டின் கீழ் உள்ள கிழக்கு பிரதான கால்வாய் புனரமைத்தல். | கால்வாய் புனரமைப்பு கால்வாய் பக்கங்களை கல் பாவுதல் குறுக்கு கட்டடங்கள் மேம்பாடு. | 119.00 | 60% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | பொய்னி அணை பகுதி புனரமைத்தல் கூடுதல் மணல் போக்கி மதகு அமைத்தல் மற்றும் வானிலை குறிப்பு கருவிகள் அமைத்தல். | மணல் போக்கி மதகு மேம்பாடு 10 தலை மதகை மாற்றியமைத்து மண் சேகரிப்பை அகற்றுதல், இயக்கத்துக்கான தளம் அமைத்தல், வானிலை குறிப்பு கருவிகள் அமைத்தல். | 35.90 | பணி முடிவுற்றது. |
| 3. | பொய்னி அணைக் கட்டிலிருந்து வாலாஜா அணைக்கட்டு வரையான கிழக்கு பிரதான கால்வாய் கி.மீ. 6.25 முதல் கி.மீ.51.95 வரை மற்றும் இந்த பகுதி குறுக்கு கட்டடங்களை புனரமைத்தல். | வாய்கால் இரண்டு புறசாய்வு பகுதிகளுக்குகல் கட்டட முகப்பு அமைத்தல் 21.8, 27.09, 28.48, மற்றும் 30.48, கி.மீ. இடங்களில் கல் கொண்டம் அமைத்தல், 25.91 கி.மீ. இடத்தில் நீர்போக்கி பாலம் திரும்ப அமைத்தல். | 89.00 | 10% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்றுவருகின்றன. |
| 4. | பொய்னி அணைகட்டு பாசன பகுதி தெற்கு பிரதான வாய்க்கால் கி.மீ. 8.25 முதல் கி.மீ. 29.25 வரை மற்றும் இதனுள் அடங்கும் கட்டடங்களை புனரமைத்தல். | அடித்தள மண் அகற்றுதல் 0 முதல் 15.87 கி.மீ. வரை வாய்க்கால் பக்கவாட்டில் 820 மீ நீளத்திற்கு கல்சுவர் முகப்பு அமைத்தல், நீர்வெளி போக்கி அமைத்தல் வாய்க்காலில் உள்ள பாறை மேடுகள் மற்றும் மண் சேகரிப்பு அகற்றுதல். | 45..35 | 20% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்றுவருகின்றன. |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 5. | பொய்னி அணைக்கட்டு பகுதியில் பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி வட்ட எல்லையில் சோளிங்கர் வாய்க்கால் மற்றும் உபரி நீர் வாய்க்கால் 27.40 முதல் 53.35 கி.மீ. வரை புனரமைத்தல். | வரத்து கால்வாய் சீரமைத்தல் 11.68 கி.மீ. கல் கொண்டம் கட்டுதல் 3 மண் சேகரிப்பை அகற்றுதல் மற்றும் குறுக்கு கட்டடங்களை புனரமைத்தல். | 59.40 | 20% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்றுவருகின்றன. |
| 6. | வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் பகுதியில் பொய்னி அணைகட்டு பாசன பகுதிகள் மேற்கு பிரதான கால்வாய் கி.மீ. 00 முதல் 20.44 கி.மீ. மற்றும் அதன் கிளை கால்வாய்களை புனரமைத்தல் | தேவையான இடங்களில் தாங்கு சுவர்கள் அமைத்தல் பழுதடைந்த மதகுகளின் கதவுகளை மாற்றுதல் நீர்வழிந்தோடி தளம் மற்றும் ஒழுங்குபடுத்தும் கட்டடங்கள் சீரமைத்தல். | 80.34 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டுள்ளது. உலக வங்கியின் தடையில்லா என்று எதிர் நோக்கப்படுகிறது. |

தொழுதூர் மற்றும் பிலாந்துறை அணைக்கட்டு பாசன அமைப்பு மொத்தம் ரூ.3.46 கோடி.

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 1. | திட்டக்குடி வட்டத்தில் தொழுதூர் முறைபடுத்தும் மதகு, மற்றும் வெல்லிங்டன் நீர்த்தேக்க வரத்துக் கால்வாய் மற்றும் பிலாந்துறை அணைக்கட்டு இவைகளை புனரமைத்தல். | நீர்போக்கி தளம் அமைத்தல்-2 முறைபடுத்தும் மதகின் மேல் தார் பூச்சு அமைத்தல், வரத்து கால்வாயில் வண்டல் மண் அகற்றுதல் | 23.70 | பணி முடிவுற்றது. |
| 2. | வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தின் உயர் மற்றும் கீழ்மட்ட கால்வாய் மற்றும் பிலாந்துறை அணையின் பிரதான கால்வாய் புனரமைத்தல். | குறுக்கு கட்டுமானங்கள் புனரமைப்பு 27, நீர் வெளிபோக்கி தாங்கு சுவர் கட்டுதல், 500 மீட்டர் இடை வெளியில் மாதிரி வடிவம் கட்டுதல், புதிய திருகு மதகு அமைத்தல் 10. | 59.00 | பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 3. | தொழுதூர் மற்றும் பிலாந்துறை அணைகட்டு பகுதிகளில் 8 எக்டேர் வரை பகிர்மான கால்வாய் புனரமைப்பு | பின் தாங்கு சுவர் கட்டுதல் மற்றும் தளம் கான்கிரீட் பூச்சு அமைத்தல், பாசன வசதிக்காக மட்டம் தாழ்த்தி கட்டடம் கட்டுதல் | 6.50 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 4. | தொழுதூர் மற்றும் பிலாந் துறை அணைக்கட்டு பகுதியில் பாசன அமைப்பைச் சார்ந்த ஏரிகள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் புனரமைத்தல். | பழுதடைந்த மதகுகள் சீரமைத்தல், நாசிங்கமங்கலம், காளிங்கன் ஏரி மற்றும் சின்னப்பூவன் ஏரிகளின் வழிந்தோடிகளை மராமத்து செய்தல், பலவீனமான பகுதிகளில் கல் ரிவெட்மெண்டு கட்டுதல். | 36.46 | ஒப்பந்த அனுமதிக் குழு இப்பணிக்கான ஒப்பந்த புள்ளியை தள்ளுபடி செய்தது. எனவே மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட வேண்டும். |
| 5. | பிலாந்துறை பொ.ப. துறை வளாகத்தில் வானிலை மற்றும் நீரியல் கருவிகள் அமைத்தல். | வானிலை கருவிகள் அமைத்தல். | 1.90 | முதலில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் யாரும் பங்கேற்கவில்லை எனவே மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட வேண்டும். |
| 6. | வெல்லிங்டன் நீர்த் தேக்கத்தின் பகிர்மான கால்வாய்களை 8 எக்டேர் எல்லை வரை கல்சுவர் முகப்பு அமைத்தல். | தளம் மற்றும் சாய்வு பகுதிகளில் சரளை மண் பூச்சுக்கு மேல் கல்சுவர் முகப்பு அமைத்தல், 200 மீ இடைவெளியில் மாதிரி வடிவம் அமைத்தல். பழுதடைந்த கட்டுமானங் களுக்கு மராமத்து செய்தல். | 218.00 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும். |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| திருக்கோவிலூர் மற்றும் எல்லிஸ் சத்திரம் அணைகட்டு பாசன அமைப்பு மொத்தம் ரூ.7.74 கோடி | | | | |
| 17. | தாமிரபரணி பாசன அமைப்பின் பகிர்மான கால்வாய்களை புனரமைத்து நவீனப்படுத்துதல் | கருங்கல் தாங்கிச் சுவர் கட்டுதல், நீர் வெளிப் போக்கிகளுக்கு மராமத்து செய்தல், புறவழி கால்வாய் அமைத்தல், பகிர்மான அணைகளை பழுதுபார்த்தல் மற்றும் புதிய பகிர்மான அணைகள் கட்டுதல் | 142.52 | ஒப்பந்தப் புள்ளிகள் 5-3-99-ல் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 18 | பண்ணை வளர்ச்சிப் பணிகளும் மற்றும் கொப்பு வாய்க்கால்களின் கீழ் உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் | | 118.00 | ஒப்பந்தப் புள்ளிகள் 5-3-99-ல் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. உடன் படிக்கை எடுக்கப் பட வேண்டும் |

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| **பெரியார் வைகை பாசன அமைப்பு—மொத்தம் ரூ.11.00 கோடி** | | | | |
| 1. | இணைப்புக் கால்வாயில் கிளை வாய்க்கால் I மற்றும் பகிர்மான கால்வாய் II-யும் அமைத்தல் | இணைப்புக் கால்வாயில் உள்ள பாசன மதகுகளின் கீழ் 12 புதிய கிளை கால்வாய்களை வெட்டுதல் | 275.22 | ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன |
| 2. | பெரியார் பிரதான கால்வாயின் 12வது பிரிவு வாய்க்காலின் கீழ்வரும் 6 முதல் 8 வரையிலான பகிர்மான கால்வாயினால் பயன்பெறும் குளங்களுக்கான வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் மற்றும் புறவழிக் கால்வாய்களை அமைத்தல் | 16.04 கி.மீ. நீளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டுதல், 4.83 கி.மீ நீளத்திற்கு கருங்கல் லைனிங் அமைத்தல், 77 குறுக்கு கட்டடங்கள் கட்டுதல் | 152.46 | 85% பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3. | 12வது பிரிவு வாய்க்காலின் 8வது பகிர்மான கால்வாயினால் பயன்பெறும் குளங்களுக்கான வரத்துக் கால்வாய் மற்றும் பெரியார் பிரதான கால்வாய் கடை கோடி வரை மேம்படுத்துதலும் புறவழிகால்வாய்களை அமைத்தலும் | 20.40 கி.மீ நீளம் புதிய கால்வாய் வெட்டுதல், 0.36 கி.மீ நீளத்திற்கு கருங்கல் லைனிங் கட்டுதல், 79 குறுக்கு கட்டடங்கள் கட்டுதல் | 227.70 | 35% பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 4. | பெரியார் பிரதானக் கால்வாயின் கிளை வாய்க்கால்கள் 1 முதல் 8 வரை பயன்பெறும் குளங்களுக்கான வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதலும், புறவழிகள் அமைத்தலும் | 8.91 கி.மீ நீளத்திற்கு புதிய கால்வாய் வெட்டுதல், 5.12 கி.மீ நீளத்திற்கு பூச்சு வேலை செய்தல், 35 குறுக்கு கட்டடங்கள் கட்டுதல் | 139.59 | 70% பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |



| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 5. | திருமங்கலம் பிரதானக் கால்வாயின் 4வது கிளை வாய்க்காலை மேம்படுத்துதல் மற்றும் நீரளவை கருவிகள் பொருத்துதல் | கிளை வாய்க்கால்களில் கல்கட்டிட லைனிங் செய்தல், மதகுகளை மீளக்கட்டுதல், வண்டிப்பாதை அமைத்தல் | 35.64 | 60% பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 6. | பெரியார் வைகை பாசன அமைப்பில் பாலங்கள் கட்டுதல், அளவைக் கருவிகள் பொருத்துதல் | 6 பாலங்கள் கட்டுதல், 22 இடங்களில் அளவைக் கருவிகள் பொருத்துதல், 16 அளவுக் கற்கள் பொருத்துதல் | 49.50 | பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன |
| 7. | இணைப்புக் கால்வாயில் பகிர்மான கால்வாய் II கிளை வாய்க்கால்கள் II, III, IV (அ), IV (ஆ), IV (இ), IV (ஈ), VI, VII, VIII (அ) அமைத்தல் | .. | 219.78 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. உடன் படிக்கை எடுக்கப் பட வேண்டும் |
| **திட்டங்கள் முடிவாக்குதல்** | | | | |
| **நம்பியார் நீர்த்தேக்கத் திட்டம்—மொத்தம் ரூ.11.49 கோடி** | | | | |
| 1. | மணற்போக்கி மற்றும் இடதுபுற மதகு உட்பட கதவுகள் இல்லாத உபரி நீர் வழிந்தோடி கட்டுதல் | .. | 720.00 | 50% பணிகள் முடிவடைந்தன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2. | கதுரங்கு கரையில் மண் அணை அமைத்தல் இரு புறங்களிலும் கரை இணைப்பு | .. | 10.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3. | அனைத்து குறுக்கு கட்டுமான பணிகள் உட்பட இடது பிரதான கால்வாய் எல்.எஸ். 0மீ. முதல் 1800 மீ. வரை அமைக்கும் பணி | .. | 190.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 4. | எல்.எஸ்.1800 மீ. முதல் இடதுபுற பிரதான கால்வாயில் உள்ள குறுக்கு வடிகால் பணிகள் செய்தல் மற்றும் இடதுபுற பிரதான கால்வாயின் ஏரிகளை மேம்படுத்துதல், பகிர்மான கால்வாய்கள் I மற்றும் II மற்றும் வழங்கு வாய்க்கால் ஆகியவற்றின் குறுக்கு வடிகால் பணிகள் செய்தல் மற்றும் ஏரிகளின் மேம்படுத்தும் பணி | | 102.00 | ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தயாரிப்பில் உள்ளன. |
| 5. | வலதுபுற கால்வாய் மற்றும் வழங்கு வாய்க்கால் ஆகியவற்றின் குறுக்கு வடிகால் பணிகள் செய்தல் மற்றும் ஏரி மதகுகளை மேம்படுத்தல் | | 68.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 6. | நம்பியார் திட்டத்திற்கு நேரடி பாசன பரப்பிற்கு நீர் வழங்குவதற்கு வலது பிரதான கால்வாய் எல்.எஸ்.365 மீட்டரில் பிரியும் கிளை கால்வாய் மற்றும் அதன் பகிர்மான கால்வாய்களை வெட்டுதல் மற்றும் அகவுறைப் பணி செய்தல் | | 51.70 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 7. | திசையன் விளையில் உதவி செயற்பொறியாளர் மற்றும் உ.பொ./இ.பொ. குடியிருப்புகள் கட்டுதல் (மீதப் பணிகள்), கணிப்பொறி அறை, ஈப்பு கொட்டகை, அணுகுசாலை ஆகியவற்றின் அமைப்புப் பணிகள் | | 7.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| | **பொய்கையார் திட்டம்—மொத்தம் ரூ.3.86 கோடி** | | | |
| 1. | ஆற்றின் பகுதி மற்றும் மண் அணையில் எஞ்சியுள்ள பணிகள் | | 146.05 | பணி தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது |
| 2 | அகவுறைப்பணி மற்றும் குறுக்குக் கட்டுமான பணிகள் உட்பட புதிய பிரதான கால்வாய் வெட்டுதல் | | 55.40 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3. | எல்.எஸ்.330 மீட்டரில் ஒரு வழிப்பாலம் கட்டுதல் உட்பட உபரி நீர் கால்வாய் எல்.எஸ்.280 மீ முதல் 330 மீ. வரை வெட்டுதல் | | 52.50 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 4. | இணைப்புக் கால்வாய் மற்றும் கன்னிவாய்க் கால்கள் வெட்டுதல் | | 79.00 | பணிகள் துவக்கப்பட்டு உள்ளன |
| 5. | சாலை அமைத்தல் மற்றும் கைப்பிடிச் சுவர் கட்டுதல் | | 50.00 | உடன்படிக்கை எடுக்கப்பட்டு உள்ளது |
| 6. | கட்டடங்கள் | | 3.00 | பணிகள் முடிவுற்றன |
| | **சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்—மொத்தம் ரூ.22.11 கோடி** | | | |
| 1. | கல் அணை கட்டுதல் நீர்த்தேக்கம் மற்றும் அதில் இணைந்த வேலைகள் அமைத்தல் | | 2100.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2. | குறுக்குக் கட்டுமானப் பணிகள் உட்பட கால்வாய் மற்றும் பகிர்மான கால்வாய்கள் வெட்டுதல் | கால்வாய் அமைத்தல் மற்றும் குறுக்குக் கட்டுமானப் பணிகள் மற்றும் இதர கட்டுமானப் பணிகள் செய்தல் | 105.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3. | கட்டடங்கள் | | 6.00 | உடன்படிக்கை பெறப்பட்டது பணிகள் துவக்கப்பட உள்ளன |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| **அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கத் திட்டம்—மொத்தம் ரூ.61.49 கோடி** | | | | |
| 1. | கல் அணைக் கட்டுதல் | நீர்த்தேக்கம் மற்றும் அதில் இணைந்த வேலைகள் அமைத்தல் | 6080.47 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2. | எல்.எஸ்.4.18 கி.மீல் புதிய கால்வாய் வெட்டுதல் மற்றும் அகவுறைப் பணிகள் | கால்வாய்கள் அமைத்தல், குறுக்கு கட்டுமானப் பணிகள் மற்றும் இதர கட்டுமானப் பணிகள் | 39.00 | 80% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3. | கட்டடங்கள் | | 30.00 | 70% பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| **வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம் மொத்தம் ரூ.49.90 கோடி** | | | | |
| 1. | பச்சையாறு குறுக்கே திருப்பு மதகு கட்டுதல் மற்றும் அகவுறைப் பணி உட்பட ஊட்டுக் கால்வாய் வெட்டுதல் | | 150.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2. | தலைப்புப் பணிகள் மண் அணை, கதவுகள் இல்லாத கலிங்கு, உபரி நீர் வழிந்தோடி மற்றும் கால்வாய் மதகு | | 4220.00 | ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது |
| 3. | இணைப்பு கால்வாய் வெட்டுதல் குறுக்கு கட்டுமானப் பணி உட்பட | | 200.00 | ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது |
| 4. | நங்கனேரிக்கால், சீவலப்பேரிக்கால் தென்வீதிக்கால், வடமனேரிக்கால் மடத்து அணைக்கட்டுக்கால் புனரமைத்தல் | | 135.00 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டு |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 5. | பாடனேரி வாய்க்கால் தேவநல்லூர் வாய்க்கால், பாலம்பத்து அணைக்கட்டு வாய்க்கால் | | 60.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 6. | மடத்து அணைக்கட்டுகால் கடைமடை முதல் பீச்சான் குளம் வாய்க்கால் பிரிவு வரை உள்ள இணைப்பு வாய்க்கால்கள் | | 35.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 7. | தேவநல்லூருக்கு கிழே புறவழிக் கால்வாய் வெட்டுதல் | | 30.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 8. | இணைப்புச் சாலை பணிகள் | | 30.00 | உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 9. | கட்டடங்கள் | | 100.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| **கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம்— மொத்தம் ரூ.20.26 கோடி** | | | | |
| 1. | மண் அணை அமைத்தல் கதவுகள் இல்லாத நீர்வழிந்தோடி, கால்வாய் மதகு மற்றும் ஆற்றின் மதகு ஆகியவற்றின் பணிகள் | நீர்த்தேக்கம் கட்டுதல் மற்றும் அதில் அமைந்த வேலைகள் செய்தல் | 1910.20 | ஒப்பந்தப்புள்ளிப் படிவம் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டதில் திரும்பப் பெறப்பட்டது. குறிப்புரைகள் நிவர்த்திககப்பட்டு வருகின்றன |
| 2. | உபரி நீர் கால்வாய் வெட்டுதல் மற்றும் தொட்டிப்பாலம் (அக்யுடக்ட்) கட்டுதல் | | 79.75 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது |

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 3. | தாமரையாறு அணைக்கட்டை மேம்படுத்துதல் மற்றும் பிற பலவகைப் பணிகள் | கால்வாய்கள் அமைத்தல், குறுக்கு கட்டுமானப் பணிகள் மற்றும் பிற கட்டுமானங்கள் | 33.67 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 4. | தலைப்புப் பணி இடத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் வசதி அளித்தல் | | 2.60 | பணி நடைபெற்று வருகிறது. |

கிருதமால் அணைக்கட்டு திட்டம் (அத்திக்குளம் அருகில்) மொத்தம் ரூ.3.49 கோடி

| | | | | |
|---|---|---|---|---|
| அ | அணைக்கட்டு கட்டுதல் | கால்வாய்கள் அமைத்தல், குறுக்குக் கால்வாய் கட்டடப் பணிகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் | 68.83 | வேலைகள் முடிவடைந்தன |
| ஆ | இடதுபுறக் கால்வாய்கள் அமைத்தல், குறுக்கு கட்டுமானப் பணிகள் உட்பட | | 166.64 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| இ. | வலதுபுறக் கால்வாய்கள் வெட்டி அமைத்தல், குறுக்கு கட்டுமானப் பணிகள் உட்பட | | 113.60 | பணிகள் நடைபெற்று வருகின்றன |





| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|

பொள்ளாச்சி மண்டலம்

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம் —மொத்தம் ரூ.110.84 கோடி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சமகோட்டு கால்வாய் 8.425 கி.மீ முதல் 11.299 கி.மீ. முடிய புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு குறுக்கு கட்டடங்கள் மராமத்து செய்தல் | 197.59 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2. | சேதுமடை கால்வாய் புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு, குறுக்கு கட்டடங்கள் மராமத்து செய்தல | 66.57 | ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு உள்ளது. பணிகள் துவக்கப்பட வேண்டும் |
| 3. | வேட்டைகாரன் புதூர் கால்வாய் புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு, குறுக்கு கட்டிடங்கள் மராமத்து செய்தல் | 120.00 | 23% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 4. | கி.மீ. 5.6, 16.40 மற்றும் 19.20ல் பிரியும் கிளை கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல் கால்வாயில் தளம் மற்றும் பக்க கான்கிரீட் குறுக்கு கட்டடங்கள் மராமத்து செய்தல் மதகுகளுக்கு பலகை கதவுகளுக்கு பதிலாக திருகு கதவுகள் மாற்றுதல் | 170.00 | பணிகள் முடிவுற்றன |
| 5 | பெரிய குமாரபாளையம் மற்றும் வருவேடம் பாளையம் கிளை கால்வாய்கள் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய கான்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு | 120.00 | 90% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 6. | கொடுவாய், அழகு மலை மற்றும் நாகலிங்கபுரம் கிளைக் கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 111.50 | பணிகள் முடிவுற்றன |
| 7. | உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 223.00 | 40% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 8. | பூலாங்கிணறு கிளைக் கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 122.70 | 55% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 9. | புதுப்பாளையம் கிளைக் கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 171.50 | 20% பணிகள் முடிவுற்றன எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |





| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 10. | சாலைகள், துணைக் கடவு நீர்த்தேக்கத்திலிருந்து சர்க்கார்பதி நுழைவு வரையுள்ள வரத்துக்கால்வாய் மற்றும் இழுவை இயந்திரம் ஆகியவற்றை புனரமைத்தல் | தடுப்பு சுவர் கட்டுதல் கல்பாவுதல் கால்வாய்தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு இழுவை இயந்திரம் அமைத்தல் | 28.16 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 11. | மனுப்பட்டி கிளை கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 37.37 | 70% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 12. | பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் உள்ள திருப்பூர் வட சின்னாரி பாளையம் கிளை கால்வாய்கள் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 136.00 | பணிகள் முடிவுற்றன |
| 13. | பொள்ளாச்சி கால்வாய் புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாய் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு மதகுகளில் பலகை கதவுகளுக்கு பதிலாக திருகு கதவுகள் பொருத்துதல் | 284.00 | 45% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 14. | பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் 48.00 கி.மீ.இல் பிரியும் ஜே. கிருஷ்ணாபுரம் கிளை கால்வாயை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய கானகிரீட் தளத்தை மராமத்துசெய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 58.50 | பணிகள் முடிவுற்றன |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 15. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 7.600 கி.மீ. முதல் 28.600 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், நடைபாலம் மற்றும் முறைப்படுத்தும் மதகு கட்டுதல் | 401.00 | 65% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 6. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 46.980 கி.மீ. முதல் 64.000 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், நடை பாலம் மற்றும் முறைப்படுத்தும் மதகு கட்டுதல், கல் சாலை அமைத்தல் | 228.00 | பணிகள் முடிவுற்றன |
| | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 68.000 கி.மீ. முதல் 87.000 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கல் சாலை அமைத்தல் | 224.00 | 95% பணிகள் முடிவுற்றன எஞ்சியப் பணிகள் நடை பெற்று வருகின்றன |
| | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 87.400 கி.மீ. முதல் 124.000 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கல் சாலை அமைத்தல் | 395.00 | 30% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடை பெற்று வருகின்றன |
| 19. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 1.20 கி.மீ. முதல் 7.60 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டிய விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 391.50 | 30% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடை பெற்று வருகின்றன |
| 20. | பிரதானக் கால்வாயிலிருந்து 28.60 கி.மீ. பிரியும் கிளை மற்றும் கோயில்பாளையம், செங்குந்தபாளையம் மற்றும் வடசித்தூர் கிளை கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், மதகுகளுக்கு பலகை கதவுகளுக்கு பதிலாக திருகு கதவுகள் போடுதல் | 196.00 | 50% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 21. | சமகோட்டு கால்வாய் 30.400 கி.மீ முதல் 49.30 கி.மீ.வரை புனரமைத்தல் மற்றும் பிரிவு சாலையை 32.00 கி.மீ முதல் 35.73 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாய் தரப்படுத்துதல், கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், பிரிவு சாலை மராமத்து செய்தல், இரும்பு பாலம் அளவை பாலம் அமைத்தல் | 317.00 | 18% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 22. | சமகோட்டு கால்வாய் 0.00 கி.மீ. முதல் 4.277 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல் கால்வாயில் தளம் மற்றும் பக்க கம்பி காங்கிரீட் பூச்சு கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல் | 251.86 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 23. | சமகோட்டு கால்வாய் 11.671 கி.மீ முதல் 13.143 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 79.73 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |

1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 24. | சமகோட்டு கால்வாய் 5.400 கி.மீ முதல் 7.500 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 201.13 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 25. | சமகோட்டு கால்வாய் 13.900 கி.மீ. முதல் 15.837 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 134.55 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 26. | சமகோட்டு கால்வாய் 15.84 கி.மீ. முதல் 22.80 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 479.25 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 27. | சமகோட்டு கால்வாய் 25.45 கி.மீ முதல் 25.49 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கால்வாயை கருங்கல் சுவர் கட்டி உயர்த்துதல், நடைபாலம் அமைத்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல் | 218.18 | 15% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |





| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் *நிலவரம் |
|---|---|---|---|---|
| 28. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 64.00 கி.மீ முதல் 68.00 கி.மீ வரை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கால்வாயில் தளம் மற்றும் பக்க கம்பி காங்கிரீட் பூச்சு பழைய காங்கிரீட் தளத்தை மராமத்து செய்தல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கல்சாலை அமைத்தல் | 36.37 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 29. | தனி வாய்க்காலும் அதன் 7 ஏரிகளும் மற்றும் வேல பாளையம் வாய்க்கால் புனரமைத்து நவீனப்படுத்துதல். | கரையை உயர்த்துதல், கல் பாவுதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், வாய்க்கால் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு மதகு மற்றும் மணல் போக்கி மதகு கட்டுதல், மதகுகளின் கதவுகளை மராமத்து செய்தல் | 113.29 | 30% பணிகள் முடிவுற்றன. எஞ்சியப் பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 30. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் 2 -1 -0 மைல் முதல் 3 4- 500 வரை வலதுபுறம் பிரியும் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்கள் மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு | 56.60 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 31. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 28.60 கி.மீ முதல் 39.50 கி.மீ முடிய புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு கல் சாலை அமைத்தல் | 724.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 32. | பழைய ஆழியாறு வாய்க்காலை புனரமைத்தல் | அணைக்கட்டுகள் அதன் கட்டுமானங்கள் புனரமைத்தல், கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், நடைபாலம், சிறுபாலம் நீர் போக்கி தடுப்பு சுவர் கட்டுதல், மதகுகளுக்கு பலகை கதவு மற்றும் திருகு கதவுகளை போடுதல் | 193.95 | ஒப்பந்தம் ஏற்கப்பட உள்ளது. |
| 33. | கொடுவாய், அழகுமலை நாகலிங்கபுரம் கிளைக் கால்வாய்கள் மற்றும் பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் உள்ள பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல் கட்டுமானங்களை மராமத்து செய்தல். கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு தடுப்பு சுவர் கட்டுதல் | 50.42 | 10% பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 34. | குண்டடம் கிளை மற்றும் அதன் உட்கிளை பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல் கட்டுமானங்களை மராமத்து செய்தல். கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு தடுப்பு சுவர் கட்டுதல் | 313.50 | 10% பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 35. | பல்லடம் நீட்டிப்பு கால்வாய் மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயில் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், மதகுகளுக்கு பலகை கதவுகளுக்கு பதிலாக திருகு கதவுகள் போடுதல் | 213.79 | 10% பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 36. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 39.50 கி.மீ முதல் 46.98 கி.மீ. வரை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு பழைய கான்கிரீட் தளத்தை மராமத்து செய்தல் | 875.16 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 37. | கோமங்கலம் பகிர்மானக் கால்வாய் மற்றும் பூலாங்கிணறு, புதுப்பாளையம் கிளைக் கால்வாய்களின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை ஒட்டி விரிவடையாத மண் கொண்டு தரப்படுத்துதல், கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல். | 316.80 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 38. | வேட்டைக்காரன்புதூர் கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 201.60 | இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |
| 39. | பொள்ளாச்சி கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க கான்கிரீட் பூச்சு மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 347.10 | இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 40. | சேத்துமடைக் கால்வாயின் பகிர்மானக் கால் வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல். | 67.00 | ஒப்பந்தம் ஏற்கப்பட்டுள்ளது பணிகள் தொடங்கப்பட வேண்டும் |
| 41. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் 1.20 கி.மீ. முதல் 23.60 கி.மீ. வரை உள்ள கிளைக் கால்வாய்கள் மற்றும் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | கால்வாயை தரப்படுத்துதல், கட்டுமானங்களை மராமத்து செய்தல், கால்வாயின் தளம் மற்றும் பக்க காங்கிரீட் பூச்சு மதகுகளுக்கு திருகு பலகை பொருத்துதல் | 233.50 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| 42. | ஆழியார் ஊட்டுக் கால் வாய் மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல் | " | 330.00 | ஒப்பந்த அனுமதிக் குழு இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. தடையின்மைச் சான்று கோரி உலக வங்கி அணுகப்பட்டுள்ளது. |
| 43. | பெருந்தொலைவு கிளைக் கால்வாய் புனரமைத்தல் | " | 102.55 | 15% பணி முடிக்கப் பட்டு உள்ளது. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 44. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் இடதுபுற பகிர் மானக் கால்வாய்கள் 23 முதல் 39.50 கி.மீ. வரை மற்றும் கோவில் பாளையம் மற்றும் வடசித்தூர் கிளைக் கால்வாய்களின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல். | " | 345.50 | இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளியின் முதல் அழைப்பில் யாரும் பங்கேற்கவில்லை. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலவரம் |
|---|---|---|---|---|
| 45. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயின் பெரிய குமாரபாளையம், வரும்வேடம்பாளையம் கிளைக் கால்வாயில் எல்.எஸ்.52.70 முதல் 82.62 கி.மீ. வரை பிரியும் இடதுபுற பகிர்மானக் கால்வாய்கள் புனரமைத்தல் | | 123.00 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு உள்ளது உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 46. | பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் கி.மீ.88/0 முதல் 102/800 கி.மீ. வரையுள்ள பகிர் மானக் கால்வாய்கள் மற்றும் நேரடிப் பாசன மதகுகள் மற்றும் திருப்பூர் கிளைக் கால்வாயின் முத்தம் பாளையம் ஆகியவற்றை புனரமைத்தல். | | 127.50 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப் பட்டு உள்ளது. பணிகள் தொடங்கப்பட உள்ளன |
| 47. | பரம்பிக்குளம் பிரதானக் கால் வாயின் எல்.எஸ். 113.00 முதல் 134.00 கி.மீ. வரை யுள்ள பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல். | | 128.52 | ஒப்பந்தம் ஏற்ற பணிகள் தொடங்கப்பட உள்ளன |
| 48. | உடுமலைப் பேட்டை பிரதானக் கால்வாயின் பகிர்மானக் கால்வாய்களை புனரமைத்தல். | | 186.06 | பணிகள் தொடங்கப்பட உள்ளன |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணியின் பெயர் | சிறப்பியல்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பணியின் நிலைமை |
|---|---|---|---|---|
| 49. | சர்கார்பதி நீட்டு கால்வாய்க்கு கற்காரையிலான (ஆர்.சி.சி.) மூடிப் பலகை அமைத்தல் | | 32.67 | ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் வழங்கப் பட்டது. தடையின்மைச் சான்றிதழ் கோரி உலக வங்கி அனுப்பப்பட்டுள்ளது. |
| 50. | உப்பார் அணையின் இடது மற்றும் வலது கரை கால்வாய்களை புனரமைத்தல் | | 71.90 | ஒப்பந்தப்புள்ளி படிவம் உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது |
| 51. | 32.8 முதல் 51.205 கி.மீ. வரையில் பிரியும் வாய்க் கால்கள் மற்றும் ஜெ.கிருஷ்ணாபுரம் கிளை வாய்க்காலின் பகிர்மான வாய்க்கால்கள் புனரமைத்தல் | | 130.50 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டுள்ளது உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 52. | திருப்பூர் கிளைக் கால்வாய் மற்றும் வடசின்னாரி பாளையம் கிளை வாய்க்கால்களின் பகிர்மானக் கால்வாய்கள் புனரமைத்தல் | | 174.00 | ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப் பட்டுள்ளது. உடன்படிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| 53. | உப்பார் அணையின் இடது மற்றும் வலது புறக் கால்வாய்களை புனரமைத்தல் | | 224.25 | ஒப்பந்தப்புள்ளி படிவம் உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது |



1999 ஏப்ரல் 7]

## 13.0 சிறுபாசனம்

### 13.1 ஐரோப்பிய குழும உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம்- முதல் கட்டம்

இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 200 எக்டேருக்குக் குறைவான பாசனப் பரப்புடைய 206 மானாவாரி ஏரிகள் ரூ.52.44 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன. இத்திட்டம் 1984-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டு 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவுற்றது. இதன் மூலம் மொத்தம் 28,740 எக்டேர் நிலங்கள் பயன்பெற்றன.

இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை
5. கடலூர்
6. விழுப்புரம்
7. புதுக்கோட்டை
8. சிவகங்கை
9. இராமநாதபுரம்
10. விருதுநகர்

### இரண்டாம் கட்டம்

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 100 எக்டேர் முதல் 200 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய மானாவாரி ஏரிகளையும் 4 எக்டேர் முதல் 40 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப்படுத்தும் திட்டம் 1989-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ 125.00 கோடி ஆகும். இத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. வேலூர்
4. திருவண்ணாமலை

6. திருச்சி
7. பெரம்பலூர்
8. கரூர்
9. திண்டுக்கல்
10. தேனி
11. மதுரை
12. சிவகங்கை
13. இராமநாதபுரம்
14. விருதுநகர்
15. தூத்துக்குடி
16. திருநெல்வேலி
17. புதுக்கோட்டை

### பணி முன்னேற்றம்

இத்திட்டத்தின்கீழ் 316 மானாவாரி ஏரிகளும், 80 முன்னாள் ஜமீன் ஏரிகளும் நவீனப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டன. 1997-98-ஆம் நிதி ஆண்டு வரை 218 மானாவாரி ஏரிகளிலும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளிலும் வேலைகள் நிறைவுற்றன. இதன்மூலம் 5808 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன் 30,480 எக்டேர் பாசனப் பரப்புடைய நிலங்கள் பயனடைந்தன. 1998-99-ஆம் ஆண்டு 66 மானாவாரி ஏரிகளில் பணிகள் முடிக்கப்படும். இதன் மூலம் 300 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன், மொத்தம் 8500 எக்டேர் பாசன நிலம் பயன் பெறும்.

1999-2000-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மீதமுள்ள 2 ஏரிகளில் பணிகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக கூடுதல் 230 எக்டேர் பாசன நிலம் பயன்பெறும். ஐரோப்பிய நாணய மாற்று உயர்வினால் கிடைத்த நிதியில் மேலும் 19 ஏரிகளை பாசனதாரர் சங்கங்கள் மூலம் நவீனப்படுத்த ஏப்ரல் 1998-ல் ஐரோப்பிய பொருளாதாரக் குழு ஒப்புதல் அளித்தது. இந்த ஏரிகளில் பணிகள் செப்டம்பர் 1999-க்குள் முடிவடையும். இதனால், 300 எக்டேர் பாசனப் பரப்பு கூடுதல் பாசன வசதி பெறுவதுடன், மொத்தம் 2,180 எக்டேர் பாசன நிலம் பயன்பெறும்.

### நிதி நிலை முன்னேற்றம்

1997-98 வரை இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ.108.95 கோடி. இத்திட்டத்திற்கு 1998-99-ஆம் ஆண்டிற்கு ரூ.12.89 கோடி நிதி ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளது. 1999-2000 நிதி நிலை மதிப்பீட்டில் ரூ.6.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்களை ஈடுபடுத்துதல்

ஐரோப்பிய குழும உதவிபெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், அந்தந்த ஏரியின் பாசனத்தாரர்களை திட்ட உருவாக்கும் நிலையிலிருந்தே ஈடுபடுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பாசனதாரர், ஒவ்வொரு ஏரி ஆயக்கட்டுக்கும் பாசனதாரர் சங்கம் ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும், ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தில் பாசனதாரர் சங்கங்கள், ஏரியின் மேம்பாட்டுப் பணியை எடுத்துச் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் வாய்க்கால்களுக்கு அகவுறை செய்தல், சமுதாயக் கிணறு அமைத்தல் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி சீரமைக்கும் பணி ஆகியவைகளை செயற்படுத்திட பாசனதாரர் சங்கங்களுடன் கலந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதுநாள் வரை 22 ஏரிகளில் கட்டுமானப் பணிகள் பாசனதாரர் சங்கங்களால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### ஏரிகளின் பராமரிப்புப் பணிகளை பாசனதாரர் சங்கங்கள் மேற்கொள்ளல்

நவீனப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் ஏரிகளின் பராமரிப்பில் ஈடுபட பாசனதாரர் சங்கங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பாசனதாரர் சங்கம் எக்டேருக்கு ரூ.250 வீதம் வசூலித்து பிறகு அவர்கள் திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலம் அரசிடமிருந்து சம ஈட்டுத் தொகை பெறவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 23 பாசனதாரர் சங்கங்கள் அரசிடமிருந்து சம ஈட்டுத் தொகை உதவியை பெற்றுள்ளன.

### அரசு சாரா நிறுவனங்களின் முன்னோடி செயல்பாடு

அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தி பாசனதாரர் சங்கங்களை முழுமையாக பங்கேற்க வைத்து ஏரிகளை நவீனப்படுத்துதல், இத்திட்டத்தின் ஒரு திட்டப்பகுதியாக அமைந்துள்ளது. பாசனதாரர் சங்கம் பணிகளின் மதிப்பில் 10 விழுக்காடு பணமாகவோ பொருட்களாகவோ அல்லது வேலை மூலமாகவோ வழங்கி இத்திட்டத்தினை எடுத்து செயல்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றன.

[1999 ஏப்ரல் 7

ஐரோப்பிய குழும ஒப்புதலுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில், வல்லாகுளம் தொடர் ஏரிகள், அரசு சாரா நிறுவனத்தின் (பிரதான்) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

அரசு சாரா நிறுவனங்களான திருச்சியில் உள்ள 'ஆசா' (A.S.A.) மதுரையில் உள்ள 'ஸ்பீச்' (Speech) முதலியவை மூலமாக கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மதுரையில் நாகேந்தூர் மற்றும் வில்லூர் தொடர் ஏரிகளில், சுற்றுப்புறச் சூழல் மாற்றத்தை ரூ.16.04 இலட்சம் மதிப்பீட்டில் கண்டறிதல்.

2. 13 பொதுப்பணித் துறை ஏரிகளையும், 28 ஊராட்சி ஒன்றிய ஏரிகளையும் ரூ.161.40 இலட்சம் செலவில் நவீனப்படுத்த அரசு சாரா நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் பாசனதாரர் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3. ஐரோப்பிய நாணய மாற்று சரிவினால் கிடைத்த ரூ.131.35 இலட்சம் நிதியின் மூலம், 8 பொதுப்பணித் துறை ஏரிகளை நவீனப் படுத்தும் பணி பாசனதாரர் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மாற்றுப் பயிர் செயல்முறை விளக்கம்**

அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு ஏரியில் உள்ள நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி ஐரோப்பிய குழும நிதி உதவியுடன் பயிர் மாற்று செயல்முறை விளக்கப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1996-97 முதல் வேளாண் துறையின் மூலம் இரண்டு ஆண்டு காலத்தில் 119 ஏரிகளின் ஆயக்கட்டில் பயிர் விளக்கப் பண்ணைகள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், ஏரியின் பாசனதாரர் இரண்டாம் போகத்தில் நீர் குறைவாகத் தேவைப்படும் பயிர்களாக பயறுவகை, பருத்தி, நிலக்கடலை, பூச்செடிகள், காய்கறிகள் பயிரிட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

**பாசனதாரர்களுக்குப் பயிற்சி**

பாசனதாரர்கள் கீழ்க்கண்ட பயிற்சிகளில் பங்கு கொண்டனர்

| | | |
|---|---|---|
| 1. | வேளாண் துறை மூலமாக | 18 பயிற்சி முகாம்கள் |
| 2. | கேவிகே காந்தி கிராமம், கிராமப் பல்கலைக்கழகம் மூலமாக | 3 பயிற்சி முகாம்கள் |
| 3. | திருச்சி பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலமாக | 32 பயிற்சி முகாம்கள் |



1999 ஏப்ரல் 7]

இந்தப் பயிற்சி முகாம்களில் சுமார் 2500 பாசனதாரர் பங்கு பெற்றனர். பாசனதாரர்களுக்கு ஏரிப்பராமரிப்பு, நீர் மேலாண்மை, மாற்றுப்பயிர் சாகுபடி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு இவைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 1999-ல் இப்பயிற்சித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஐரோப்பிய குழும ஒப்பந்தப்படி ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் 1999-க்குள் முடிவடையும்.

## 13.2 சிறுபாசன ஏரிகள் பன்னாட்டு பொருளாதார கூட்டு நிதி (ஜப்பான்) உதவியுடன் கிராமப்புற முன்னேற்றத்திற்காக மேம்படுத்தும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 2500 சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு ரூ.270 கோடியில் மதிப்பீடு தயாரித்து, செப்டம்பர் 94ல் மைய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மைய அரசின் ஆலோசனைப்படி இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துரு ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழுவின் உதவி பெற டில்லியில் உள்ள தூதரகத்திற்கு அனுப்பி வைக்க மைய அரசு நிதி அமைச்சகத்தைச் சார்ந்த பொருளாதாரத் துறைக்கு தமிழ்நாடு ஜுன் 1995-ல் அனுப்பிய டில்லியில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு பொருளாதாரத் துறை ஆகஸ்ட் 1995-ல் திட்ட அறிக்கைக்கான "திட்டக் குறிப்பு" அனுப்பி வைத்தது.

இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஜப்பான் அரசு தமிழ்நாட்டில் சிறுபாசன ஏரிகளை கிராமப்புற முன்னேற்றத்திற்காக, மேம்படுத்தும் இத்திட்டத்தை பரிசீலனை செய்ய முடிவு செய்தது. அதன்படி தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்காக உள்ள "ஜப்பான் இன்டர்நேஷனல் கோவாப்ரேஷன் ஏஜன்ஸி" (ஜைகா) ஜுலை 1996-ல் தனது பார்வையாளர்கள் குழுவை அனுப்பி வைத்தது. அக்குழு இத்திட்டத்தின் நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது. மைய அரசு, மற்றும் "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜன்ஸி" ஆகஸ்ட் 1996ல் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது.

ஜப்பான் ஆய்வுக் குழுவானது முதல் கட்ட ஆய்வினை டிசம்பர் 1996-ல் தொடங்கி பிப்ரவரி 1997-ல் முடித்து இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை எண். I-ஐ பிப்ரவரி 1997-ல் அளித்தது. மீண்டும் ஆய்வுக்

[1999 ஏப்ரல் 7

குழு இரண்டாம் கட்ட ஆய்வினை நடத்தி முன்னேற்ற அறிக்கை எண் 2-ஐ 1997 ஜூலையில் அளித்தது.

ஜப்பான் ஆய்வுக்குழு தள ஆய்வுகளை முடித்து கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் 2093 ஏரிகளை சீரமைப்பு செய்ய ரூ.890 கோடிக்கு திட்ட கருத்துருவினை தயாரித்து அனுப்பியுள்ளது.

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. சிவகங்கை
4. இராமநாதபுரம்
5. விருதுநகர்

மேற்கண்ட திட்டக் கருத்தை பன்னாட்டு பொருளாதார கூட்டுறவு (ஜப்பான்) உதவிபெற தமிழக அரசு நிதித்துறையால் செப்டம்பர் 1997-ல் மைய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பி உள்ளது.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுக்குழு, "ஆய்வுக்குழு"-வின் முடிவு அறிக்கையை ஜனவரி 1998-ல் அனுப்பியது. மேற்கூறிய திட்டத்திற்கு பன்னாட்டு பொருளாதார கூட்டுக்குழு (ஜப்பான்) மற்றும் மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் 1999-2000-ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 13.3 கிராம முன்னேற்றத்திற்காக சிறுபாசன ஏரிகளை உலக வங்கி உதவியுடன் புனரமைக்கும் திட்டம்

இம்மாநிலத்தில் 39,202 ஏரிகள் உள்ளன. சீர்செய்யவும், நவீனப்படுத்தவும் எந்தத் திட்டத்திலும் எடுத்துக் கொள்ளப்படாத ஏரிகளை நன்கு ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளைக் கண்டறிய ஓர் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பொதுப்பணித்துறை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் சமீன் ஆகிய 8000 பாசன ஏரிகளை சீரமைக்க ரூ.2570 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சிக்காக திட்ட அறிக்கை, உலக வங்கி நிதி உதவி பெற பிப்ரவரி 1997-ல் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஏரிகளில் தூர் எடுத்தல், கரைகளை வலுப்படுத்துதல், கலிங்குகள், மதகுகளைப் புதுப்பித்தல் மற்றும் சீர்செய்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல், மற்றும் பாசனக் கால்வாய்களில் தேர்வு செய்யப்பட்ட பகுதியை



1999 ஏப்ரல் 7]

அகவுறை செய்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தினால் 1,07,500 எக்டேர் நிலம் கூடுதலாக பாசன வசதி பெறுவதுடன் மொத்தம் 4,51,000 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுமென எதிர்பார்க்கப்படும்.

இத்திட்டம் மைய நீர்வள அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

## 13.4 உலக வங்கி உதவியுடன் நீர் ஆதார தொகுப்புத் திட்டத்தின் மூலம் மானாவாரி சிறுபாசன ஏரிகள் மற்றும் பாசன அமைப்பில் உள்ள ஏரிகள் மேம்படுத்தும் திட்டம்

தமிழ்நாட்டில் 20 மாவட்டங்களில் உள்ள மானாவாரி சிறுபாசன ஏரிகள் மற்றும் பாசன அமைப்பில் உள்ள ஏரிகள் ஆகியவற்றை ரூ. 220 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள அனுப்பப்பட்ட கருத்துரு, உலக வங்கியின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஊட்டுக் கால்வாய்களை மேம்படுத்தும் வேலை, கரைகளை சீரமைத்தல், மதகுகளை பழுதுபார்த்து சீரமைப்பு செய்தல், கலுங்கு (நீர்போக்கி) களைச் சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தல், கொப்பு வாய்க்கால்களுக்கு அகவுறை செய்தல், பாசன உழவர் சங்கக் கட்டடம் கட்டுதல் முதலிய இனங்கள் செய்யப்பட உள்ளன.

## 13.5 'நாபார்டு' வங்கி நிதி உதவியின் மூலம் சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மை பணிகளுக்காக திட்டம் - ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-முதல் கட்டம்

தமிழ்நாட்டில் 20 மாவட்டங்களில் உள்ள 65 சிறுபாசன ஏரிகளை ரூ.25 கோடி செலவில் 7100 எக்டேர் பயன்பெறும்பொருட்டு 'நபார்டு' வங்கிநிதி உதவியின் மூலம் 'ஆர்.ஐ.டி.எப்.'ன்கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தின் குறிக்கோளானது ஏரிகளை நவீனப்படுத்தி தரத்தை உயர்த்தி, நீர்ப் பாசன திறனை உயர்த்துவதன் மூலம், கிராமப்புற வளர்ச்சி, வேளாண் காடுகள், மீன் வளர்ப்பு, நெற்களம் உருவாக்குதல், கொப்பு வாய்க்கால்களுக்கு அகவுறை செய்தல், மதகுகள் மற்றும் கலிங்குகளை (நீர்போக்கு) சீரமைத்து மேம்படுத்துதல், கரைகளை

சீரமைத்து மறு கட்டமைப்பு வேலை செய்தல், ஏரிக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் முதலிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதாகும்.

இத்திட்டம் ஏப்ரல் 1999 முதல் மார்ச் 2000-க்குள் செயற்படுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 13.6 மாநில ஏரிப்பாசனத் திட்டம்

தமிழ்நாட்டில் 8939 பொதுப்பணித் துறை ஏரிகளும் 9850 முன்னாள் சமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும் நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995-96-ல் இத்திட்டத்தினை அமல்படுத்தியது.

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு முன்னாள் சமீன் ஏரிகளைத் தரப்படுத்தி மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு பொதுப்பணித் துறையின் பொறுப்பில் உள்ள பழைய ஏரிகளை தரப்படுத்துவதும் மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் சமீன் ஏரிகளையும் தரப்படுத்திய பிறகு தொடர் பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப்பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்கு தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு 1998-99-ஆம் ஆண்டு ரூ.885.13 இலட்சம் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| மாநில ஏரிப்பாசன திட்டம் முன்னாள் சமீன் ஏரிகள் | .. | ரூ.422.50 இலட்சம் |
| மாநில ஏரிப்பாசன திட்டம் பொதுப்பணித் துறை ஏரிகள் | .. | ரூ.462.63 இலட்சம் |

1998-99-ஆம் ஆண்டில் ரூ.3.83 கோடி மதிப்பீட்டில் 231 பொதுப்பணித்துறை ஏரிகளும் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் 189 முன்னாள் சமீன் ஏரிகளும் கடந்த ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ள பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பிப்ரவரி 1999 வரை பொதுப்பணித் துறை ஏரிகளுக்கு ரூ.2 கோடியும் முன்னாள் சமீன் ஏரிகளுக்கு 1.32 கோடியும் செலவிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 1999-2000 ஆண்டு ரூ.885.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 13.7 சிறப்பு சிறுபாசனத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் பாசன உறுதியளிக்கக் கூடியதும், கூடுதல் பாசனம் அளிக்கக் கூடியதுமான புது ஏரிகள் அமைத்தல், அணைக்கட்டு கட்டுதல், இணைப்புக் கால்வாய் வெட்டுதல், பழுதடைந்த ஏரிகளை புனரமைத்தல், குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் அடங்கும். தூர் வாரி புனரமைக்கும் திட்டங்களில் வண்டல் படிவினால் கொள்ளளவு குறைந்துபோன ஏரிகளைத் தூர்வாரியும், ஏரியின் எதிர்வாயில் உள்ள நிலம் ஏரித் தண்ணீரால் மூழ்காவண்ணம் நிலத்தை சீர்செய்யும் பணியும் அடங்கும்.

1998-99—ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டதிற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.6.54 கோடி (5.07 கோடி மாநில திட்ட ஒதுக்கீடு + 1.47 கோடி 'நபார்டு' உதவி). இதனால் 550 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1998-99-ல் இத்திட்டத்தின்கீழ் 44 பழைய பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அரசு 1998-99-ல் 19 புதிய பணிகளுக்கு மொத்தம் ரூ.7.34 கோடிக்கு ஒப்புதல் அளித்தது.

550 எக்டேர் நிலப்பரப்பில் கூடுதல் பாசன வசதி செய்யும் பொருட்டு 1999-2000—ஆம் ஆண்டில் ரூ.737.88 இலட்சம் (ரூ.737.87 இலட்சம் மாநில திட்ட ஒதுக்கீடு மற்றும் ரூ.0.01 இலட்சம் 'நபார்டு' உதவி) சிறப்பு சிறுபாசனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.8 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாக" கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப்பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவுநீர் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.12.80 இலட்சம் ஆகும். இவ்வாண்டில் 7 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1999-2000---ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13.9 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

1997-ஜூலைத் திங்களில் ரூ.98.50 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் 31 தடுப்பு அணைகள் (உதகமண்டலம் வட்டத்தில் 8, கூடலூர் வட்டத்தில் 6, குன்னூர் வட்டத்தில் 9, கோத்தகிரி வட்டத்தில் 8 பணிகள்) செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1998-99-ல் முடிக்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் 23 பணிகள் ஒப்பளிக்கப்பட்டு தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### 13.10 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் 24 வட்டங்கள் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 1998-99 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.22.00 இலட்சம் ஆகும். 7 பணிகள் (கோவை மாவட்டத்தில் 2, திருநெல்வேலி மாவட்டத்தில் 5) முன்னேற்றத்தில் உள்ளன.

1999-2000--ஆம் ஆண்டிற்கு ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 14.0 பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம் (நீர் வாரச்சந்தை):

வேளாண் மக்களுக்கும் நீர்வள அமைப்பின் அலுவலர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தவும், பாசன ஏற்பாடுகளில் இணைந்து நிர்வகிப்பதற்கும் அரசு பாசனக் கணிப்பு மற்றும் செயல் திட்டம் (நீர் வாரச்சந்தை) திட்டத்தை அமல்படுத்தியது. இதன்படி

1. பாசனக் கணிப்பு மற்றும் செயல்திட்டம் (நீர் வாரச்சந்தை) முறை நீரால் நிரம்பும் கண்மாய்கள் உள்பட எல்லா பாசன ஏற்பாடுகளிலும் தொடங்கப்படும்.

2. பாசன ஏற்பாட்டை கவனிக்கும் பிரிவு அலுவலர் ஒவ்வொரு திங்கள் கிழமையும் பிற்பகல் 3.00 மணி அளவில் தனது பொறுப்பிலுள்ள பாசன அமைப்பை இயக்கவும், பராமரிக்கவும் உள்ள தனது பாசன அலுவலர்களுடன் அப்பகுதி வேளாண் மக்களைச் சந்திக்கத் தயாராக இருப்பார். இதன்பொருட்டு பிரிவு அலுவலகத்தில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டு, அக்கூட்டத்தில் தீர்மான முடிவுகள் அப்பதிவேட்டில் குறிக்கப்படும்.

3. அப்பிரிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பாசனப் பகுதிகளுக்கு நீர் வழங்கும் பாசன ஆதாரங்களில் பாசன நீர் இருப்பு விவரம் அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்படும்.

4. பிரிவு அலுவலர் வேளாண் மக்களுக்கு பாசன ஏற்பாடுகளின் வெவ்வேறு கிளைகளில் கடந்த வாரம் செய்யப்பட்ட நீர் நிர்வாகத்தைப் பற்றியும் அன்றைய தினத்தில் பாசன ஏற்பாட்டில் நீர் இருப்பு விவரத்தையும் விளக்கி வேளாண் மக்களின் கருத்தை நடப்பு வாரத்தில் அமல்படுத்துவதற்குக் கோருவார்.

5. பிரிவு அலுவலர் வேளாண் மக்களிடையே கலந்து ஆலோசித்து அந்த வாரத்தில் செய்யப்பட வேண்டிய செயல் திட்டத்தை தயாரித்து அந்த இடத்திலேயே பாசன ஆய்வாளர்கள் மற்றும் பாசன உதவியாளர்களுக்குத் தேவையான உத்தரவுகளை வழங்குவார்.

நீர் வாரச்சந்தைத் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

**15.0 வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பாசன மேலாண்மையில் பயிற்சியளித்தல்:**

பாசனக் கட்டமைப்புகள் பராமரித்தல் மற்றும் பாசன நீர் மேலாண்மையில் வேளாண் பெருங்குடி மக்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் பெரும் பணியில் திருச்சி மாவட்டம் துவாக்குடியில் உள்ள பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிலையம் ஈடுபடுத்தப்பட்டு 1998-99-ஆம் ஆண்டில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் 1,100 வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1999-2000-ஆம் ஆண்டிலும் சுமார் 5,000 வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்க இத்திட்டம் தொடரப்படும்.

**16.0 மாவட்டந்தோறும் பாசனக் கருத்தரங்குகள் நடத்துதல்:**

வேளாண் மக்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும், பாசன வசதிகள் பற்றிய விவசாயிகளின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வகையிலும் மாவட்ட அளவிலான நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் 1998-99-ல் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு பாசனம் மற்றும் நீர் விநியோகத்தில் அரசின் கொள்கைகளை வேளாண் குடிமக்கள் அறிய உதவுகிறது. பாசனக் கருத்தரங்குகள் இவ்வாண்டும் (1999—2000) மாவட்டங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**17.0 காவிரி டெல்டாப் பகுதிகளில் கனரக இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணி:**

காவிரியாற்றின் டெல்டாப் பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் அவ்வப்போதைய வெள்ள நீர்வரத்து காரணமாக தூர் சேர்ந்து விடுகிறது. மேலும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும் நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும், வெள்ளக்கட்டுப்பாடு பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்தத் தடங்கல்களினால் பாசனக் காலங்களில் கடைக்கோடி பகுதிக்குப் பாசன நீர் கிடைப்பதில் குறைவும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைமையும் இருந்து வருகிறது.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும்



'புல்டோசர்களை' வாடகை அடிப்படையில் தருவித்து தூர்வாருவதும், காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதும் வாடிக்கையாய் உள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு ஆகும் செலவினை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் பராமரிப்பு நிதியில் செய்ய இயலாததால் 1997–98-ஆம் ஆண்டு முதல் அரசால் இதற்குச் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997—98-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டெல்டாப் பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகள் தூர்வாரவும் அவற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும், அரசு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணிகள் 1997—98-லேயே முடிக்கப்பட்டன.

இதேபோல் 1998—99-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது—

**1. காவிரி டெல்டாப் பகுதியில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் வட்டங்களில் தூர் வாருதல்:**

நிதி ஒதுக்கீடு .. ரூ.20.00 கோடி

1998 நீரடைப்பு காலத்தில், ஆறு மற்றும் வடிகால்களில் 1,165 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் ஏ.பி. வாய்க்கால்களில் 639 கி.மீ. நீளத்திற்குத் தூர்வாரும் பணி ரூ.19.62 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டது.

**2. கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் ஆகிய வட்டங்களில் காவிரி வடிநிலப்பரப்பிலுள்ள ஆறுகள், கால்வாய்கள் மற்றும் கண்மாய்களில் தூர் வாருதல்:**

நிதி ஒதுக்கீடு .. ரூ.3.00 கோடி

1998 நீரடைப்பு காலத்தில், ஆறு மற்றும் வடிகால்களில் 31.40 கி.மீ. நீளத்திற்கும், வாய்க்கால்களில் 93.10 கி.மீ. நீளத்திற்கும் தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது.

**3. குளித்தலை அருகில் காவிரி ஆற்றில் உள்ள மண்திட்டுக்கள், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் மற்றும் புதர்களை அகற்றுதல்:**

நிதி ஒதுக்கீடு .. ரூ.50 இலட்சம்

[1999 ஏப்ரல் 7

இப்பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் குளித்தலை அருகே குளித்தலை - முசிறி பாலத்திற்கு மேல்பகுதியிலும் கீழ்பகுதியிலும் 10 கி.மீ. நீளத்திற்கும், 1.6 கி.மீ. அகலத்திற்கும் காவிரி ஆற்றிலுள்ள புதர்களையும், மண் திட்டுக்களையும் அகற்றுவதாகும். இப்பணி தற்போது நடை பெற்று வருகிறது.

இந்தத் தூர் வாரும் பணியானது ஆறுகள் மற்றும் கால்வாய்களில் நீர் மேலாண்மைத் திறனை வெகுவாக உயர்த்தியுள்ளது. மேலும், கடைக்கோடி நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் 22,23-6-98 தேதிகளில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடை பெற்று வரும் தூர் வாரும் பணிகளைப் பார்வையிட்டு இப்பணி காவிரி டெல்டாவின் எஞ்சிய பகுதிகளிலும் வரும் மூன்று ஆண்டுகளில் அனைவரும் பயனடையும்படி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

எனவே தூர் வாரும் பணிகள் 1999-2000, 2000-2001 மற்றும் 2001-2002 ஆகிய இந்த மூன்றாண்டுகளிலும் செயயத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மூன்றாண்டுகளில் தூர் வார தீர்மானிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரம், அதற்கான உத்தேச மதிப்பீடு ஆகியவை கீழ் கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண். | தூர் வார உத்தேசிக்கப்பட்டவை | அளவு | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|
| 1 | ஆறுகள் | கி.மீ. | 472 | 58 | 109 |
| 2. | வடிகால்கள் | கி.மீ. | 1,624 | 359 | 306 |
| 3. | கால்வாய்கள் | கி.மீ. | 1,816 | 4,880 | 4,357 |
| 4. | கண்மாய்கள் | எண்கள் | 136 | 304 | 180 |
| | மதிப்பிட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | | 54.28 | 38.87 | 28.93 |

1999—2000-ஆம் ஆண்டில் காவிரி டெல்டா பகுதிகளில் தூர் வாரும் பணிக்காக அரசு ரூ. 50.00 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

## 18. முதலமைச்சரின் ஏரிகள் தூர் வாரும் திட்டம்

தமிழக அரசு, 200 கண்மாய்களைத் தூர் வாரி மேம்படுத்தும் பணிக்கு 1997—98-ல் ஒப்புதல் அளித்தது. ஒரு சட்டமன்றத் தொகுதிக்குக்



1999 ஏப்ரல் 7]

அடிப்படையில் கீழ்க்கண்ட குறைந்த பட்சம் ஒரு கண்மாய் என்ற வாருவதற்குத் வழிமுறைகளைப் பின்பற்றி கண்மாய்கள் தூர் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதாவது, (1) பாசனப் பரப்பு 150 ஏக்கருக்குக் குறையாமல் உள்ள கண்மாய்கள், (2) பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், (3) இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும், (4) கண்மாய்க்கரை, மதகு, மறுகால் வலிமை படுத்தப்பட வேண்டும், (5) மதகின் நீர் தேக்கி மட்டத்திற்கே மதகின் அருகில் தூர் வாரப்பட வேண்டும், (6) வெட்டி எடுக்கப்பட்ட மண், சாலை அமைக்கவும் மற்றும் கரையை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

1997—98-ஆம் ஆண்டில் 200 கண்மாய்களைத் தூர் வாரும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.91 கோடி ஆகும். இப்பணிகள் செப்டம்பர் 1997-ல் தொடங்கப்பட்டு, 1997 1998-ஆம் ஆண்டில் ரூ.5.13 கோடி செலவிற்கான பணிகள் முடிக்கப்பட்டன.

இப்பணிகள் அதிகபட்சமாகப் பொருத்தமான கனரக இயந்திரங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1997—98-ல் ஒப்பளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர் வாரும் பணியில் அநேகமான கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கண்மாய்களில் பணிகள் 31-3-1999-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணிகளை முடிக்க அரசு 1998—99-ஆம் ஆண்டிற்கு ரூ.10.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1998 99-ஆம் ஆண்டில் மேலும் 200 புதிய கண்மாய்களில் தூர் வாரும் பணி (ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர் வாரும் பணிகள் அல்லாமல்) செய்யப்படும் என்று அரசு அறிவித்து அதற்கான ஒப்புதலையும் வழங்கியுள்ளது. கண்மாய்களின் விவரம் இணைப்பு II-ல் உள்ளது. 1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த 200 கண்மாய்கள் தூர் வாரும் பணிக்கு மேலும் ரூ.5.00 கோடி 1998 1999-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளின் செயலாக்கம், மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், ஒப்பந்தக்காரர் நியமனம் செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இத் திட்டத்திற்கு கிராமப்புற மக்கள் மற்றும் பாசனதாரர்களிடமிருந்து மிகையான ஆதரவு கிடைத்துள்ளதால் இத் திட்டத்தை 1999-2000 ஆண்டிலும் தொடரத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 19. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்

1983-ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப் பிரதேச அரசிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஆண்டில் 8 மாத காலங்களில் 15 டி.எம்.சி. நீரில், வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி. ஆந்திர அரசால், தமிழ்நாடு-ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்" என்றும் ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.11 கோடியாகும். இத் திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை ரூ.196.04 கோடியாகும். (1996-97 ஆண்டுக்குரிய விலைப்பட்டியலின்படி) 1998 பிப்ரவரி வரை ரூ. 162.08 கோடி இத் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கை திட்டப்பணிகளின் மதிப்பீடு ரூ.2190 கோடியாகும். அதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.520 கோடியாகும். இதில் 1997 செப்டம்பர் வரை ரூ. 512 கோடி ஆந்திர அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு-ஆந்திர எல்லையில் கடந்த 29-9-1996 அன்று கிருஷ்ணா நதி தண்ணீர் வரப்பெற்றது. அதற்கான விழா தமிழக ஆளுநர் முன்னிலையில் தமிழ்நாடு, ஆந்திர முதலமைச்சர்கள் மற்றும் பிற அமைச்சர்கள் கலந்துகொள்ளச் சிறப்பாக நடந்தேறியது.

இதைத் தொடர்ந்து 1996 அக்டோபரில் ஆந்திராவில் பெய்த கன மழையினால் ஏற்பட்ட புயல்-வெள்ளப் பெருக்கில் ஆந்திர எல்லைக்குட்பட்ட கண்டலேறு-பூண்டி கால்வாயில் பல பகுதிகளில் உடைப்புகள் ஏற்பட்டு, கண்டலேறிலிருந்து நீர் வழங்குவது



நிறுத்தப்பட்டது. அத்துடன் வெள்ளச் சேதங்களைக் கண்டறிந்து தக்க சீரமைப்புப் பணிகளைப் பரிந்துரைக்க இரு மாநிலப் பொறியாளர்களையும் உள்ளடக்கிய தொழில் நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரையின்படி ஆந்திர அரசு தக்க நிதி ஒதுக்கீடு செய்து சீரமைப்புப் பணிகள் செய்ததால் முடிக்கப்பட்டன.

கடந்த 26-6-97 முதல் மீண்டும் கிருஷ்ணா நீர் திறந்துவிடப்பட்டு 1-7-97 அன்று தமிழக எல்லையைக் கடந்தது. பின்னர் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்ததாலும், சென்னை நகரக் குடிநீர்த் தேக்கங்களுக்கு அவற்றின் சொந்த வடிநிலங்களிலிருந்தே மிகையான நீர் வரத்து இருந்தமையாலும் கிருஷ்ணா நீர் பெறுவது 24-11-97 முதல் மீண்டும் நிறுத்தப்பட்டது.

18-11-97 அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற மாண்புமிகு ஆந்திரப்பிரதேச-தமிழக அமைச்சர்கள் கூட்டத்தில், கண்டலேறு-பூண்டி கால்வாயில் உள்ள ஒழுகல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ரூ.41.21 கோடி மதிப்பில் சிமெண்ட் - கான்கிரீட் லைனிங் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, பணிகள் முடிக்கப்பெற்று 15-7-98 அன்று கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்டு அது தமிழ்நாடு எல்லையை 24-7-98 அன்று அடைந்தது. கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் திறந்துவிடப்பட்ட நீரில் பூண்டி நீர்த்தேக்கத்தில் வினாடிக்கு 325 கன அடி மட்டுமே வரப்பெற்றது.

5-11-98 அன்று கிருஷ்ணா நீர் நிறுத்தப்பட்டது. 24-7-98 முதல் 10-11-98 வரையிலான காலத்தில் சுமார் 2,837 மி.க. அடி கிருஷ்ணா நதி நீர் பெறப்பட்டது.

1999-ஆம் ஆண்டு கிருஷ்ணா நதி நீர் திறந்து விடுதல் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆந்திரப்பிரதேச நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அமைச்சர் அவர்களும் 17-1-1999 அன்று விவாதித்தனர். கண்டலேறு—பூண்டி கால்வாயில் 1999-ஆம் ஆண்டுக்கான முக்கிய பராமரிப்புப் பணிகளை முடித்த பிறகு 1-6-1999 வாக்கில் தமிழ்நாட்டுக்கு கிருஷ்ணா நதி நீரைத் திறந்துவிடத் தீர்மானிக்கப்பட்டது.

## 20. புதிய வீராணம் திட்டம்

[1999 ஏப்ரல் 7

புதிய வீராணம் திட்டத்தை "சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் இரண்டாவது திட்டம்" என்ற பெயரோடு உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தும்பொருட்டு ஆகஸ்ட் 1993-ல் ரூ.161 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்மூலம் பெருநகருக்கு நாளொன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் நீர் வழங்க வகை செய்யப்பட்டிருந்தது.

இத் திட்டத்தில் (1) கீழ்க்கொள்ளிடம் அணையிலிருந்து வீராணத்திற்கு நீர் கொணரும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல், (2) வீராணம் ஏரியில் மேடுகளகற்றி, அதன் தற்போதைய கொள்ளளவான 935 மி.க. அடியை 1185 மி.க. அடி அளவுக்கு கூடுதலாக்க ஏரியின் முழு நீர்மட்டத்தை இரண்டு அடி உயர்த்துதல், (3) வீராணம் ஏரியின் முன்கரைகளுக்கு வலுவூட்டுதல் ஆகிய வீராணம் ஏரி தொடர்பான பணிகளுக்கு மட்டும் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர் வடவாறு மற்றும் வீராணம் ஏரியின் கீழுள்ள ஆயக்கட்டுகளுக்குப் பாசனம் அளிக்கும் கால்வாய்களைப் புதுப்பித்து மேம்படுத்தும் பணியையும் உள்ளடக்கி மார்ச் 1996-ல் ரூ.110.95 கோடிக்குப் புதிதாக ஒப்புதல் வழங்கப்பட்டது. கால்வாய்களைப் புதுப்பிப்பதனால் வடவாற்றின் கீழுள்ள 11178 ஏக்கர் நிலங்களும், வீராணம் ஏரியின் கீழுள்ள 11856 ஏக்கர் நிலங்களும் (ஆக மொத்தம் 50031 ஏக்கர்) நிலங்கள் தடையற்ற சீரான பாசனம் பெற வாய்ப்புண்டு.

இத் திட்டம் முதலில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவிருந்தது. அண்மையில் வீராணத்திலிருந்து சென்னைக்கு நீர் கொண்டு வருவதற்கு ஆகும் மிக அதிகமான செலவினைக் கருத்திற்கொண்டும், சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து ஆண்டுதோறும் 12 டி.எம்.சி (1200 கோடி கன அடி) நீர் வர இருப்பதை முன்னிட்டும், வீராணம் திட்டத்தின் பயனை கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வீராணம் ஏரியினைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மட்டுமே அளிக்கும் வகையில் திட்டக் கருத்துரு மாற்றியமைக்கப்பட்டு மாநில நிதியாதாரத்தின் கீழ் செயற்படுத்தவும் அரசு 1999 செப்டம்பரில் உத்தரவிட்டது.

இத் திட்டப் பணிகள் 25 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 25 பணித் தொகுப்புகளின் மதிப்பு மற்றும் அவைகளின் தற்போதைய நிலை பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:



1999 ஏப்ரல் 7]

| வ. எண். | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூ.கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | வடவாறு வாய்க்காலை மேம்படுத்துதல் | 6 | 26.39 | ரூ.23.14 கோடி மதிப்பில் 5 தொகுப்பில் உள்ள பணிகளின் செயலாக்கம் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.3.25 கோடி மதிப்பிலான ஒரு தொகுப்பில் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| 2. | வீராணம் ஏரியில் நிறைகுள மட்டத்தை 2 அடி உயர்த்துதல் மற்றும் வீராணம் பிரதானக் கரையை வலுவூட்டுதல் | 4 | 11.33 | 4 தொகுப்பில் உள்ள பணிகளின் செயலாக்கம் முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3. | நீர்ப்பிடிப்புப் பகுதியிலுள்ள கரையை மேம் படுத்துதலும் புதிய கரையை அமைத்தலும் | 4 | 10.48 | ரூ.6.56 கோடி மதிப்பீட்டில் 3 தொகுப்பில் உள்ள பணிகளின் செயலாக்கம் முன்னேற்றத்தில் உள்ளது. ரூ.3.92 கோடி மதிப்பீட்டில் ஒரு தொகுப்பில் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| 4. | வடவாற்றின் 24 கால்வாய்கள், வீராணத்தின் 34 கால்வாய்கள் ஆகிய ஏரியின் கீழுள்ள பாசனப் பரப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல் | 2 | 25.00 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும். |
| 5. | வீராண பிரதானக் கரையில் தார்ச் சாலை அமைத்தல் | 2 | 4.75 | மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன. |

[1999 ஏப்ரல் 7

| வ. எண். | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூ.கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 6. | கீழணை மதகு அடைப்பான்கள் சீர்செய்தல். | 1 | 1.08 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 7. | வீராணம் மறுகால் மேம்பாடு, வட வாற்றின் குறுக்கே புதிய மதகு அமைத்தல், கொடுவேரி வடிகால் மேம்பாடு, உபரி நீர்ப் போக்கி மேம்பாடு மற்றும் மதகு அடைப்பான்கள். | 4 | 31.18 | மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன. |
| 8. | அலுவலர்கள் குடியிருப்பு சீரமைத்தல் மற்றும் புதிய ஆய்வு மாளிகை நிர்மாணித்தல். | 2 | 0.74 | மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன. |

மொத்தமுள்ள 25 பணித் தொகுப்புகளில் ரூ.12.11 கோடி மதிப்பில் 13 தொகுப்பில் உள்ள பணிகளின் செயலாக்கம் முன்னேற்றத்தில் உள்ளது. ரூ.7.17 கோடி மதிப்பீட்டில் 2 தொகுப்பில் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ரூ.0.67 கோடி மதிப்பிலான 10 தொகுப்பில் உள்ள பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன.

## 21. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையத்தின் கொள்கை விளக்கக்குறிப்பு (1999-2000)

நிலநீர் வளத்தினைப் பல்வேறு வகைகளில் பெருக்குவதில் மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின் கீழ், முறையான மற்றும் அறிவியல் பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் விரிவான அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தினைத் தொடர்ந்து கணித்து வருகின்றது. இவ்வகையில் ஜனவரி 1997 வரை கணக்கிடப்பட்ட விவரங்களின்படி, நிலநீர் வளம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைக் கருத்தில் கொண்டு பொதுப்பணித் துறையின் கீழ் இயங்கும் மாநில நில



1999 ஏப்ரல் 7]

மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், நிலத்தடிநீர் வளங்களை அவ்வப்போது மதிப்பிடவும் பயன்படுத்தவும், நிலத்தடிநீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்குமான ஆய்வுப் பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டுவரும் பலவகைப்பட்ட பணிகளை உள்ளடக்கிய நிலநீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 2267 கிணறுகளில் (618 வறட்சி கிணறுகள் உட்பட) நீர் மட்டஅளவுகள் எடுக்கப்பட்டு நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்.

2. தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளை (9000 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

3. தமிழகத்தில் மண் பரிமாணத்திற்கு ஏற்ப 15 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரி முகடுகளில் இருந்த நீரியல் மற்றும் வானிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

4. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 400 மழையளவு நிலையங்களிலிருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து மற்றும் மழை நீர் வரத்திற்கும் பூமியில் நீர் இறுப்பிற்கும் உள்ள தொடர்பினைக் கண்டறிதல்.

5. புவியியல், புவிபௌதீகம் மற்றும் புவி மேற்பரப்பில் ஆய்வுகளின் மூலமாக நிலநீர் வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிதல் (தீவிர ஆய்வு 85 ஒன்றியங்களில்)

6. வேளாண் மக்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு கிணறுகள் தோண்டுவதற்கு இடங்கள் தேர்ந்தெடுப்பதற்கும், ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்குதல்.

7. சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற நிலநீர்ச் சான்று வழங்கல்.

8. எரு மற்றும் உரமிடுதலால் நிலநீர் மாசுறுவதை (12 இடங்களில்) அளவிடல் மற்றும் (22 மண் வகைகள்) நிலநீர் மாசுறுவதைக் கண்காணித்து அதன் தன்மைகளைக் கண்டறிதல்.

9. கடலோரப் பகுதிகளில் உள்ள நீர் படுகைகளில் (250 கி.மீ. அளவிற்கு) கடல்நீர் ஊடுருதலைச் சிறப்பாய்வு மூலம் கண்காணித்தல்.

10. நிலநீர் ஆய்விற்கான துளைக் கிணறுகள் (180 எண்கள்) துளையிடுதல் பணி.

[1999 ஏப்ரல் 7

11. தமிழகத்திலுள்ள சுமார் 17,000 கிராமங்களில் நிலநீர் வளத்தினை மதிப்பிடும் பணியைத் தொடர்பணியாகச் செய்தல்

1999-2000-ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூபாய் 111 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், மற்ற திட்டப் பணிகளான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியோடு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப்பணி, நிலநீர் உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் புத்தாக்கப் பயிற்சிக்கான பணி, தன்மை மற்றும் மதிப்பீடு ஆய்வுப்பணி முதலியவற்றிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில திட்டக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூபாய் 3 கோடி அறிவியல் மற்றும் தொழில் நுட்ப தேவைப் பணியுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிக்காகவும், ரூபாய் 1.25 கோடி நிலநீர் உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் புத்தாக்கப் பயிற்சிப் பணிக்காகவும், ரூபாய் 10 இலட்சம் தன்மை மற்றும் மதிப்பீட்டு ஆய்வுப் பணிக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22.0 உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் "நீரியல் திட்டம்"

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து இந்திய அரசு நிறுவனங்களுக்கு நீரியல் திட்டம் ஒன்றினை உருவாக்கி, செயல்படுத்த உலக வங்கி, நிதி உதவ முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள், இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்கு பெறும் மாநிலங்களில் உள்ள நீரியியல் சுழற்சி சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தன்மை பற்றிய விவரங்களையும் சேர்ந்து விஞ்ஞானப்பூர்வமான எல்லா விவரக் குறிப்புகளையும் மேம்படுத்தி தகுதி வாய்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் கிடைக்கச் செய்வதாகும். இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த திட்டமிட்ட மதிப்பீடு ரூ.38,647 கோடி ஆகும்.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் உலக வங்கியுடன் 1995 செப்டம்பர் மாதம் ஏற்பட்டு 1995 செப்டம்பர் முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் பருவம் 6 ஆண்டுகள் (1995-2001). இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.38,647 கோடி அரசு ஆணை 111, பொதுப்பணித் துறை, நாள் 20-2-96 மூலம் வழங்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (நிலநீர்) பொதுப்பணித் துறை அவர்களின் கீழ் நீரியியல் திட்டத்தைச் செயல்படுத்த ஒரு மையம் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவர குறிப்பு மையம்) ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 7]

### மேற்பரப்பு நீர்ப் பகுதி

தமிழகத்தில் உள்ள ஆற்றுப் படுகைகளில் நீர் போக்கு விவரங்களைச் சேகரிக்க 120 நீரளவு நிலையங்கள் அமைத்தல், 116 பெரிய ஏரிகளின், கொள்ளளவு மற்றும் நீரளவு ஆகியவைகளை அறிய தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்துதல், வானியல் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க 20 வானிலை தட்ப வெப்ப நிலையங்கள், 42 மழை அளவு நிலையங்கள், 3 வானிலை நிலையங்கள் ஆகியவை அமைத்தல் நீரின் தன்மையைச் சோதனை செய்ய 15 நீர்த்தன்மை பரிசோதனை சாலைகள் அமைத்தல்.

அலுவலகக் கட்டடங்கள் (4 கோட்டம், 12 உப கோட்டம் மற்றும் 60 பிரிவு அலுவலகம்) கட்டுதல், 41 தள கருவி பண்டகசாலை கட்டடம் கட்டுதல், 24 வாகனங்கள் வாங்குதல் போன்றவை நீரியியல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

### நிலத்தடி நீர்ப் பகுதி

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள பரிசோதனைக் கிணறுகளில் நீர் மட்ட அளவுகளைச் சேகரிப்பது மற்றும் புதிதாகக் கடினப் பாறைப் பகுதிகளில் 669 ஆழ்துளைக் கிணறுகள், படிவப் பாறை பகுதிகளில் 65 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீரின் தன்மை, நீர் நிலை மாற்றம் ஆகியவைகளை 603 தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகளைப் பொருத்திச் சேகரித்தல்.

10 தட்ப வெப்ப நிலையங்களை மேம்படுத்தி நீர் நிலை மாற்றங்களில் விவரம் சேகரித்தல்.

4 ஆற்றுப் படுகைகளில் தட்ட வெப்ப நிலையங்கள் ஏற்படுத்துதல்.

நீரின் தன்மை அறிய 4 புவிவேதியல் பரிசோதனை சாலை கட்டடங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த புள்ளி விவர மையக்கட்டடம் அமைத்தல் ஆகிய பணிகள் மற்றும் 30 வாகனங்கள் வாங்குதல் போன்றவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 1999 பிப்ரவரி மாதம் முடிய சாதனை விவரம்

### மேற்பரப்பு நீர்த் தொகுதி

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 120 நீரளவு நிலையங்களில், 1999 பிப்ரவரி முடிய 84 நிலையங்களின் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகள் 1999 மார்ச் மாதத்திற்குள் முடிக்க நடவடிக்கை [1999 ஏப்ரல் 7
எடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 116 ஏரிகள் நீர்மட்டம் [illegible] விவரம் சேகரிக்க அமைக்கப்படவுள்ளதில் இதுவரை 10 ஏரிகளில் தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன மீதிப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து [illegible] நிலையங்கள், தட்ப வெப்ப நிலையங்கள், தானியங்கி [illegible] நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நீரியியல் திட்டத்தின் கீழ் (30) நீரின் தன்மை மற்றும் வண்டல் [illegible] நிலையங்களும் தள தளவாடங்களும் பண்டகசாலைகளும் (10) அமைக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீரியல் திட்டத்தின்கீழ் இதுவரை 4 கோட்ட அலுவலகம், 10 உபகோட்டம், 52 பிரிவு அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## நிலநீர்ப் பகுதி

கடினப்பாறை பகுதியில் அனைத்து ஆழ்துளைக் கிணறுகள் (60 எண்கள்) அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன [illegible] பகுதியில் 65 ஆழ்துளைக் கிணறுகள் [illegible] இதுவரை 60 கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதி 1999 [illegible] மாதத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆழ்துளைக் கிணறுகளின் நீர்மட்டத்தைக் கணிப்பதற்காக 60.1 தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் வாங்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 258 எண்கள் பெறப்பட்டு 208 எண்கள் ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ளன. மீதி கருவிகளை 1999 [illegible] மாதத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 200 தானியங்கி நீரளவு பதிப்பான்கள் கொள்முதல் செய்ய [illegible] ஆணை அளிக்கப்பட்டுள்ளது. நீரியியல் திட்டத்தின் கீழ் [illegible] பரிசோதனை சாலை கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு 2 பரிசோதனை கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதி 2 கட்டடங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன.

## நிதிநிலை சாதனை

1998-1999-ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.12.1212 கோடி. 1999 பிப்ரவரி மாதம் முடிய ரூ.8.70 கோடி சிவில் பணிகள் கருவி



1999 ஏப்ரல் 7]

தளவாடங்கள் மற்றும் தொடர் செலவினம் ஆகிய பணிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. இந்நிதியாண்டிற்குள் மீதி ஒதுக்கீடு தொகையினைச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை நீரியியல் திட்டத்தில் மொத்தமாக ரூ. 17.28 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

## 1999-2000 திட்டம்

நீரியியல் திட்டத்தின்கீழ் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள் நிலநீர் தொகுதி மற்றும் மேற்பரப்பு நீர் தொகுதி ஆகியவைகளில் மேற்கொள்ளப்படும்.

## நிலநீர்ப் பகுதி

120 ஆழ்துளைக் கிணறுகளில் தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்துவதற்கான மேடை அமைக்கப்படும். மேலும் ஒருங்கிணைந்த விவரக் குறிப்பு மையக் கட்டடம் கட்டப்படும் (செலவினம் ரூ.2.64 கோடி).

## மேற்பரப்பு நீர்ப் பகுதி

16 புதிய நீரளவு நிலையங்கள், நீர்ப்போக்கு விவரம் அறிய 9 ஸ்டாண்டர்டு கேஜ் அமைத்தல், 56 பெரிய ஏரிகளில் நீர் மட்டம் மற்றும் கொள்ளளவு ஆகியவைகளை அறிய தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தும் பணிகள் ஆகியவை 1999-2000-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். (செலவினம் ரூ.0.52 கோடி)

மேலும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின் கீழ் அணைகளின் வண்டல் தன்மை, வெள்ளத்தை முன் கணிப்பது ஆகிய பணிகள் 1999-2000-ல் மேற்கொள்ளப்படும்.

## கொள்முதல் (நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்ப் பகுதி)

19 பிரிவு கணினிகள் 26 எண்கள், 11 பிரிவு கணினிகள் 2 எண்கள், ஆராய்ச்சிக் கருவிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் (செலவினம் ரூ.2.17 கோடி)

மேற்கூறிய பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ.8.10 கோடி 1999-2000-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 7

| | | கோடி |
|---|---|---|
| 1. | சிவில் பணிகள் (மேற்பரப்பு நீர்ப் பகுதி) | 0.52 |
| 2. | சிவில் பணிகள் (தரைநீர்ப் பகுதி) | 2.64 |
| 3. | கொள்முதல் (மேற்பரப்பு நிலநீர்ப் பகுதி) | 2.17 |
| 4. | தொடர்செலவினம் | 2.27 |
| | | ரூ.8.10 |

## 23.0 அணை பாதுகாப்புத் திட்டம்

அணை பாதுகாப்புத் திட்டமானது, தமிழ்நாட்டில், உலக வங்கி உதவியுடன் 1991-ஆம் ஆண்டு ரூ.48.3 கோடி உதவித் தொகையுடன் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டமானது, அணையின் நீர் இயல் மற்றும் கட்டமைப்புத் தேவைகளின் தரத்தை மேலும் உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

உலக வங்கி, 1997-ஆம் ஆண்டு இத்திட்டத்தைக் கீழ்க்கண்ட நான்கு அணைகளுக்கு மட்டும் 9/98 வரை திட்ட கால அளவை நீட்டித்தது

1. பேச்சிப்பாறை அணை
2. கோமுகி அணை
3. மணிமுத்தாறு அணை
4. பெரியார் அணை

எனினும் கீழ்க்கண்ட மேலும் நான்கு அணைகளில் அணை பாதுகாப்புத் திட்டத்தை, மாநில அரசு நிதி உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்பு, உலக வங்கி இதனை இடைக்கால ஆய்வின்போது, நீர்வள ஆதார அமைப்பின் கீழ் எடுத்துக்கொள்ள கருத்தளவில ஒப்புதல் வழங்கியது.

1. சாத்தனூர் அணை
2. வீடூர் அணை
3. சோலையாறு அணை
4. வெலிங்டன் அணை



1999 ஏப்ரல் 7]

உலக வங்கி உதவி மூலம் தொடங்கப் பெற்ற அணை பாதுகாப்புத் திட்டத்தின் காலம் 30-9-98 அன்று முடிவுக்கு வந்தது. பேச்சிப்பாறை அணை மற்றும் மணிமுத்தாறு அணைகளின் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டன.

உலக வங்கி 1998 நவம்பரில் நடத்திய இடைக்கால ஆய்வின்போது கீழ்க்கண்ட 5 அணைகளையும் நீர்வள ஆதார அமைப்பு தலைப்பில் செய்ய கருத்தளவில் ஒப்புக் கொண்டது:

| | | | |
|---|---|---|---|
| 1. | கோமுகி நதி அணை | .. | 4.744 கோடி |
| 2. | சாத்தனூர் அணை | .. | 14.840 கோடி |
| 3. | வீடூர் அணை | .. | 8.020 கோடி |
| 4. | சோலையாறு அணை | .. | 1.450 கோடி |
| 5. | வெலிங்டன் அணை | .. | 3.000 கோடி |
| | மொத்தம் | .. | 32.054 கோடி |

உலக வங்கி குழு, உலக வங்கிக்கு மேற்கண்ட திட்டங்களைத் தங்களது குறிப்புத் தொகுப்பில் (எய்டு மெமாயர்) பரிந்துரை செய்துள்ளனர். எனினும் மேற்கண்ட பணிகள், தற்சமயம் மாநில அரசு நிதி உதவியுடன் செய்யப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் ஒப்புதல் (பரிந்துரையின்பேரில்) கிடைத்த பிறகு செலவினத் தொகை ஈடு செய்யப்பட்டுவிடும்.

### அணை பாதுகாப்புத் திட்டம்—2

மத்திய அரசுக்கு ரூ. 118.5 கோடிக்கு, அணை பாதுகாப்புத் திட்டம்—2 என்ற தலைப்பில் 13 அணைகளிலும் (பொதுப்பணித் துறை பொறுப்பிலுள்ளது) மற்றும் 10 அணைகளிலும் (மின் துறையின் பொறுப்பிலுள்ளது), பாதுகாப்பு கருத்துரு பணிகள் மேற்கொள்ளப் (உலக வங்கி உதவியுடன்) மாநில அரசு அனுப்பியுள்ளது.

## பன் மாநில நதிகளின் நீர் பங்கீடு
## 24.0 பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஒப்பந்தம் - ஆய்வு

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆழியாறு, தேக்கடியாறு, பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும்

ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும் குடிநீர் [1999 ஏப்ரல் 7
விநியோகத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்தவும் இவ்விரு
அரசுகளுக்கு இடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஒரு
ஒப்பந்தம் 29-05-1970-ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி
9-11-1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால
அனுபவத்தின் அடிப்படையில் இருசாராரின் ஒப்புதலின் பேரில்
ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்படுத்த இசைவு இரு அரசுகளும்
21-9-1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு
அமைச்சர்கள் மட்டத்தில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தின.
பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான
அறிக்கை தயாரிக்க இருமாநில அரசு அலுவலர்களைக் கொண்ட
ஒரு குழுமம் அமைக்கப்பட்டது. இக்குழுமம் திருவனந்தபுரம் மற்றும்
அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடிப் பேசியபோதிலும் எந்த
முடிவுக்கும் வர இயலவில்லை.

**கேரள அரசு பரிசீலிக்க வேண்டியவை.**

1. இடமலையார் புனல் மின் திட்டத்தினைச் செயலாக்குவதின் முகமாக, ஒப்புக்கொண்டபடி 2.5 டி.எம்.சி. தண்ணீரை ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு பாசன அமைப்பிற்குத் திருப்பி விடுவதை ஏற்க வேண்டும்.

2. ஒப்பந்தத்தின்படி இடமலையாறு மற்றும் இடுக்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் மேல் நீராறு தண்ணீர் முழுவதையும் எவ்விதத் தடையுமின்றி அக்டோபர் முதல் ஜனவரி முடிய தமிழகத்தில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

3. மணக்கடவு மதகிற்கு மேல் உபயோகத்தில் உள்ள உபரிநீரைச் சேமித்து பாசன உறுதி செய்திடும் வகையில் ஒரு சமநிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரளம் இசைவு அளிக்க வேண்டும்.

4. மேல் நீராறு நீரை ஒரு குகைப் பாதை வழியாக நடுவாறுக்குக் கொண்டுவந்து அங்கு ஒரு புனல் மின்நிலையம் அமைத்து வெளிவரும் நீரை திருமூர்த்தி அணைக்குத் திருப்புதற்கான புதிய திட்டத்திற்கு இசைவு அளிக்க வேண்டும்.

5. கேரளத்தில் சித்தூர்புழா வடிநிலத்திற்குத் தேவைப்படும் நீரை தமிழகத்திற்குரிய 2.5 டி.எம்.சி.க்கு மேல் உள்ள நீரை



ஆனைமலையாற்றிலிருந்தோ அல்லது தேக்கடியாறிலிருந்தோ திருப்பிக் கொள்ளவேண்டும்.

கடந்த 28-11-96-ல் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் இருதரப்புப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின் மீது எந்த முடிவும் எடுக்கப்படாததால் மீண்டும் கூடிப் பேசத் தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக அரசு மீண்டும் கூடிப் பேசத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதுவரை கேரள அரசு இக்கூட்டத்திற்கு நாள் நிர்ணயிக்கவில்லை.
இதுகுறித்து அரசு தொடர்ந்து முயற்சிக்கும்.

## 25.0 பாண்டியாறு - புன்னம்புழா திட்டம்

பன்னாட்டு நதியான பாண்டியாறு—புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாறில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு - புன்னம்புழா, நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 3 கி.மீ. மேற்கே இணைகிறது. இந்த இணைப்புக்குக் கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாளியாறுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்த கூடலூர் நகரம் ஆகும்.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965-ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்குநோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 ச.கி.மீ. (66.20 ச.மை) பரப்புடைய நீர்பிடிப்புப்பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 11 டி.எம்.சி. தண்ணீரை 500.50 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி மு[illegible] கூட்டமாக 100 மெ.வா. (2ஓ 5 மெ.வா) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. இதனால் 409 மி.யூ. ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968-ல் ஒப்புதல் அளித்தது.

கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும் வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாறு ஆற்றில்

இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக் கொண்டதின்பேரில் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்படி இத்திட்டம் தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியம் 1968-69-ஆம் ஆண்டு ஆரம்பித்த தொடக்கப் பணிகள் நிறுத்தப்பட்டன. பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட விரும்பியது.

கடந்த 28-11-96-ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தையின்போது, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தில் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் குறைந்தது 7 டி.எம்.சி.யையாவது தமிழ்நாட்டுக்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கேரள அமைச்சரை தமிழ்நாடு அமைச்சர் கேட்டுக் கொண்டார். திட்டத்திற்கான அறிக்கையைப் பரிசீலித்த பிறகு அதன்மீது கருத்து தெரிவிப்பதாக கேரள அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான அறிக்கையை தமிழ்நாடு மின்வாரியம் தயாரித்துள்ளது. அந்த அறிக்கையின்படி திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி. நீரில் 50 விழுக்காடான 7 டி.எம்.சி.யைப் பயன்படுத்தி 2 ஒ 50 மெகாவாட் மின்சாரம் தயாரித்தபின் அந்த நீரை கேரளத்திற்குத் திருப்பிவிடுவது. அப்போதே 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் பணி தொடங்கப்படும். இரண்டாவது கட்டத்தில் திருப்பிவிடப்பட்ட 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டில் சிறார் வாடி நிலையத்தில் 2 ஒ 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் தமிழ்நாட்டில் மோயாறு ஆற்றில் கலக்கும்.

தமிழ்நாடு மின்வாரியம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயாரித்துச் செய்து, இத்திட்ட செயலாக்கத்தை கேரள அரசின் ஒத்திசைவிற்காக அனுப்பியது. கேரள அரசு தனது இசைவினை தெரிவிக்காததோடு 7 டி.எம்.சி தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்பிவிடுவதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை. கேரள அரசின் இசைவைப் பெற தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.



## 26.0 தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டம்

### (அ) மகாநதி - கோதாவரி -- கிருஷ்ணா – பெண்ணாறு -- காவிரி -- வைகை - குண்டாறு இணைப்புகள்

தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆறுகளை இணைக்கும் கருத்து மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இவ்விணைப்புப் பணிகளுக்கான ஆய்வு அறிக்கைகளை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்து வருகின்றது.

இதுவரை மகாநதி - கோதாவரி, கோதாவரி-கிருஷ்ணா, கிருஷ்ணா-பெண்ணாறு, பெண்ணாறு-காவிரி இணைப்புகளுக்கான முதல்நிலை அறிக்கையினை தேசிய நீர் அபிவிருத்தி முகமை தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறை படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி ஆறுகளிலிருந்து உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி மற்றும் வைகை படுகைகளுக்குத் திருப்பிவிடலாம் என்று தெரிவித்துள்ளது.

மகாநதி மற்றும் கோதாவரி ஆறுகளின் உபரி நீரைத் திருப்பிவிடும் பெண்ணாறு-காவிரி இணைப்பு முக்கியமான இணைப்பாகும். பெண்ணாறு-காவிரி இணைப்பு சுமார் 534 கி.மீ. நீளமுள்ள கால்வாயின் உபரி நீரைத் பெண்ணாற்றின் குறுக்கே அமைந்த சோமசீலா அணைக்கட்டிலிருந்து சுமார் 9455 மி.க.மீ. (334 டி.எம்.சி) தெற்கே தமிழகத்தின் கல்லணை வரை திருப்பப்படும். கால்வாய் ஆரம்பிக்கும் சோமசீலா அணை முதல் தமிழகத்தின் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டு பகுதிகளின் பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யப்படுவதோடு சுமார் 3865 மி.க.மீ. (136.1 டி.எம்.சி) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப்பகுதி மற்றும் காவிரிப் படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி வைகை-குண்டாறு இணைப்பானது மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். பெண்ணாறு-காவிரி இணைப்பில் காவிரியில் கிடைக்கப்பெறும் 3855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) அளவு நீரில் 2252

மி.க.மீ. (79.5 டி.எம்.சி) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காகத் திருப்புவதே இந்த இணைப்பின் நோக்கமாகும்.

தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டத்தினை விரைவில் செயலாக்க தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. 40 ஆண்டு தொலைநோக்கு திட்டத்தின் கால அளவினைக் குறைத்து நதிகளின் இணைப்புத் திட்டத்தைச் செயலாக்கிட தமிழ்நாடு அரசு தேசிய நீர் அபிவிருத்தி முகமையைக் கேட்டுக் கொண்டுள்ளது. பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு, நேத்ராவதி, ஹேமாவதி போன்ற சாத்தியமாகும் நதி இணைப்புத் திட்டங்களை அவைகளின் சாத்தியக் கூறு அறிக்கை தயாரானதும் தேவையான சம்பிரதாயங்களை உள்ளடக்கி, மற்றப் பணிகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கைக்குக் காத்திராமல் செயலாக்கிடவும் கோரியுள்ளது. இப்பொருள் குறித்து அரசு தொடர் நடவடிக்கை எடுத்துவருகிறது.

## (ஆ) மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புதல்

நீர்வள மேம்பாட்டுக்காக மத்திய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகளை இணைத்தல் ஒரு அங்கமாக உள்ளது. அதில் மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டமும் அடங்கியுள்ளது. தீபகற்ப ஆறுகளை இணைக்கும் பணிக்காகத் திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசியக் நீர்வள குழுமத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதன்படி தேசிய நீர்வளக் குழுமம், ஆறுகள் அனைத்திலும் ஆய்வினை மேற்கொண்டு இணைப்புத் திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் கேரளத்தில் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் உபரி நீர்வளத்தை தமிழ்நாட்டுக்குத் திருப்பும் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்துள்ளது.

பம்பா-அச்சன்கோவில் வைப்பாறு இணைப்புத் திட்டத்தின்படி இரண்டு இயல்பான நீர்த்தேக்கங்கள், ஒரு விசை இறைப்பானால் நிரப்பப்படும் நீர்த்தேக்கம், மின் உற்பத்திக் கேந்திரங்கள் மற்றும்



தமிழ்நாட்டுக்கு நீரைக் கொண்டு வருவதற்கு சுமார் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாய் ஆகியவை அமைக்கப்படும். இத்திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி அளவு நீர் தமிழ்நாட்டிற்குத் திருப்பப்பட்டு அதனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், சிவகிரி, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி தாலுக்காவில் சுமார் 91400 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும். தமிழ்நாட்டிற்கு பாசன வசதியுடன் ஆண்டுக்கு சுமார் 1114 மில்லியன் யூனிட் மின்உற்பத்தியும் கேரளத்திலுள்ள வெம்பாடு ஏரியின் உப்புத்தன்மையைப் போக்கவும் மற்றும் கேரளத்தில் குடிநீர் வசதியும் இத்திட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 1398 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இத்திட்டத்திற்கு மத்திய நீர் குழுமத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தினைக் கேரள அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கேரள ஆறுகளில் உபரிநீர் ஏதும் இல்லையென்றும் கேரள ஆறுகளிலிருந்து நீரை வெளியே கொண்டு சென்றால் அதனால் கேரளத்தின் வளமும் சுற்றுச்சூழல் நிலையும் கெட்டுவிடும் என்று கேரளம் கருதுகின்றது.

ஆறுகள் இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மாநிலங்களின் கருத்தை மாற்றவும் இணைப்புத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலைப் பெறவும் மத்திய அரசு ஒரு "துணைக் குழுவை" அமைத்துள்ளது. அக்குழுமம் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புக்கு கேரளத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கும் என தமிழ்நாடு அரசு எதிர்பார்க்கின்றது. இதுதொடர்பாக 1999 ஜனவரியில் தமிழ்நாடு முதலமைச்சர், இந்த இணைப்பு கருத்துருவுக்கு கேரள அரசின் ஒத்திசைவைப் பெற்றுத் தர பாரதப் பிரதமரைக் கோரியுள்ளனர்.

தமிழ்நாடு அரசும் 22 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் கருத்துருவுக்கு கேரளத்தின் ஒப்புதலைப் பெறத் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 27.0 காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான்

இப்பாசனத் திட்டம் திறம்பட செயல்படும். முதன் முதலில் 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்களை புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கு ஒரு பெரும் திட்டம் (மாஸ்டர் பிளான்) தீட்டியது. பன்னாட்டு நிதியுதவி பெறும் நோக்கத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இருந்தாலும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்காமற் போனது. அதனால் இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவி ஏதும் கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு, மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டா பகுதிகளில் சிறு பணிகள் அவ்வப்போது மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டன. இம் முயற்சிகள் காவிரி டெல்டா பாசன திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை.

எனவே, காவிரி டெல்டா பாசனப் பகுதி நவீன மயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதியாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற் பகுதியாக 400 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன:

1. 70,000 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளைப் புனரமைப்புச் செய்து நவீன மயமாக்குதல்,
2. 323 கால்வாய்களைப் புனரமைப்பு செய்து நவீன மயமாக்குதல்,
3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்,
4. ரூ. 23.02 கோடி மதிப்பிற்கு வெள்ளத் தடுப்பு பணிகளை நிறைவேற்றுதல்,
5. ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றுதல்.

## 28. காவிரி நதி நீர் தாவா:

காவிரி நடுவர் மன்றம் 25-06-1991 ஆம் நாளன்று பிறப்பித்த இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் விவகாரத்தில், தமிழ்நாடு நீண்டு நாட்களாக உட்பட்டு வந்த கடும் சோதனைக்கு, 1998-99 ஆம் ஆண்டில் ஒரு முடிவு ஏற்பட்டது.



தமிழக அரசு, தொடர்ந்து பலமுறை காவிரி நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து நீண்டகாலம் காத்திருந்த பின்னர், இறுதியில் 1990 ஆம் ஆண்டு மே திங்களில் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, இந்திய அரசு, 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த்தகராறுகள் சட்டத்தின்கீழ், 1990 ஜூன் திங்களில், காவிரி நதிநீர் தகராறுகள் குறித்த நடுவர் மன்றத்தை நியமித்தது.

நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பினை வழங்குவதற்கு இடைப்பட்ட கால அளவில் செயல்படுத்துவதற்காக, காவிரி நதிநீர்த்தகராறில் இடைக்கால நிவாரணம் ஒன்றை அறிவித்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்பது தமிழ்நாடு அரசு, 1990 ஜூலை திங்களில், இந்நடுவர் மன்றத்தின் முன் வைத்த முதல் கோரிக்கையாகும்.

கர்நாடக அரசு, அதன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிக்குள்ளேயே, தண்ணீர் முழுவதையும் தேக்கி வைக்கும் தன்னிச்சையான போக்கினால், தமிழ் நாட்டிற்குள் நீர் வரத்து ஏற்கெனவே குறைந்து விட்டது என்ற நியாயமான காரணத்தினால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

காவிரி நதிநீர்த் தகராறு நடுவர் மன்றம் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த உரிமையியல் பல்வகை மனுவின் மீதான நீண்ட விசாரணைக்குப் பின்னர் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, 25-06-1991 அன்று இடைக்கால ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அந்த ஆணையில் மேட்டூர் அணையில் ஒரு பாசன ஆண்டில் 205 டிஎம்சி. தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கர்நாடக மாநிலம், அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து, தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டது. மாதாந்திர, வாராந்திர வரையறைகளுக்கு உட்பட்டு, கர்நாடக அரசு, தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும் அந்த ஆணை மேலும் கூறுகிறது. மேலும், இறுதித்தீர்ப்பு வழங்கப்படும் வரையில் கர்நாடக அரசே உறுதியாகத் தெரிவித்தவாறு 1990 ஜூன் திங்கள் நிலவரப்படி பாசனம் செய்யப்பட்ட நிலபரப்பான 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேற்படாமல் பாசனம் செய்யப்பட வேண்டும் என்றும் நடுவர் மன்றம் உச்சவரம்பு நிர்ணயித்தது.

இந்த ஆணையினால் மனக்குறைகொண்ட கர்நாடக அரசு, அந்த ஆணையைச் செயல்படுத்தாது தடுப்பதற்கு பல வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டது. இத்தகைய முயற்சிகளில் ஒன்றாக கர்நாடகத்தின் முழுத்தேவையை நிறைவு செய்யும் வகையில் நதிநீரைப்

பயன்படுத்திக்கொள்ள உதவும் பொருட்டு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்ததுடன் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செல்லாது என்று அறிவிக்கக்கோரி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது. இது குறித்து, இந்தியக் குடியரசுத்தலைவர், உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டறிந்தபோது, இந்த அவசரச் சட்டம், மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாகும் என்றும், தெள்ளத்தெளிவாகக் கூறியது. இடைக்கால நிவாரணம் வழங்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், எனவே சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்தவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் இந்திய அரசு, அறிவிக்கை ஒன்றை வெளியிடுவது அவசியம் என்றும் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து, வேறு மாற்று வழி ஏதுமில்லாத நிலையில், 10-12-1991-ஆம் நாளன்று, இந்திய அரசு, அதனை அரசிதழில் இடைக்கால ஆணையை வெளியிட்டது.

பிரச்சினை அத்துடன் முடியவில்லை. கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு இணங்கி செயல்பட மறுத்தது. 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்த் தகராறுகள் சட்டத்தின் 6ஆம் பிரிவில் கூறியுள்ளவாறு, இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்குரிய திட்டம் ஒன்றை வகுப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டிய இந்திய அரசு, அவ்வாறு செய்ய முன்வரவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துமாறு கர்நாடக மாநிலத்திற்குத் திட்டவட்டமான ஆணை பிறப்பிக்குமாறும், இந்த ஆணைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், திட்டம் ஒன்றைத் தயாரிக்க இந்திய அரசுக்குக் கட்டளையிடுமாறும் கோரி 1992 மே திங்களில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு பலமுறை விசாரணைக்கு வந்தது. பலமுறை ஒத்திவைக்கப்பட்ட பின்னர், இறுதியாக அரசியலமைப்புச் சட்ட ஆயம் இவ்வழக்கினை விசாரணை செய்தது. அப்போது இந்திய அரசின் சார்பில் வாதிட்ட, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் அளித்த 09-04-1997-ஆம் நாளிட்ட வாக்குமூலத்தில், இந்திய அரசு, இச் சட்டத்தின்படி, திட்டத்தினைத் தயாரிக்க ஒப்புக்கொண்டிருந்தது என்றும் அதற்குச் சிறிது கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார். இவ்வாறு இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அது, திட்டம் ஒன்றைத் தயாரித்து இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து



மாநிலங்களின் கருத்தினைக் கோரி, 1997 மே திங்களில், அதனை அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. கர்நாடக அரசு, இந்த வரைவுத் திட்டத்தை விமர்சனம் செய்ததுடன் அத் திட்டத்தில் இடம்பெற்ற பல முக்கியமான பகுதிகளுக்கு மறுப்புத் தெரிவித்தது. அத்துடன் நில்லாமல், கர்நாடக அரசு, தானே தன்சார்பில் திட்டத்தைத் தயாரித்து அதனைப் பரிசீலனைக்கு அளித்தது. கர்நாடக அரசு, தண்ணீரை முறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் ஆலோசனைத்தன்மை கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதை மட்டும் ஏற்றுக்கொண்டது. தமிழ்நாடு அரசு, சில பகுதிகளில் மிகச்சிறிய மாற்றங்களைத் தெரிவித்ததைத் தவிர்த்து, மற்றபடி இவ்வரைவுத் திட்டத்தை முழுவதுமாக ஏற்றுக்கொண்டது. கேரள அரசும், புதுச்சேரி அரசும் கூட, சிறு கருத்து மாற்றங்களுடன் இவ்வரைவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. இவ்வாறு வேறுபட்ட கருத்துக்கள் எழுந்ததன் காரணமாக இந்திய அரசு, அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், இவ்வரைவுத் திட்டத்தை வெளியிட ஆர்வம் காட்டவில்லை.

இத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியில் இருந்து வருவதாகக் காரணம் காட்டி, இந்திய அரசு, உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் மீண்டும் வழக்கை ஒத்தி வைக்கக் கோரிக்கை விடுத்து வந்தது. ஒரு நிலையில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் 10-11-1997-ஆம் நாளன்று ஆணை உறுதி மொழிப்பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் அளித்திருந்த அவருடைய வாக்குமூலத்தில், இத் திட்டத்தை இறுதி செய்து, அறிவிக்கை வெளியிடுவதில் இந்திய அரசின் தரப்பில் காணும் செயலின்மையைக் குறித்து விளக்கிக் கூறியதுடன் இத் திட்டத்தை உடனடியாக வெளியிடுமாறு, இந்திய அரசுக்குக் கட்டளையிடுமாறும் வேண்டிக்கொண்டார். தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களும், பிரதமர் அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதியதுடன், நேரில் சந்தித்தும் இத் திட்டத்தை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், நாடாளுமன்றத்தில், இப் பிரச்சினையை எழுப்புமாறு, தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டு, இப் பிரச்சினையின் பின்புலம் பற்றிய குறிப்பினையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுற்றனுப்பியுள்ளார்.

இதற்கிடையில், 21-07-1998-ஆம் நாளன்று, இந்த வழக்கு குறித்து பரிசீலிக்கையில், மாண்புமிகு இந்திய நீதித் துறைத் தலைவர், இவ்வழக்கை மேற்கொண்டும் தள்ளிப் போடுவதற்கு

இடமில்லையென்றும் இந்திய அரசு, இத் திட்டத்தை இறுதி செய்து, 12-08-1998-ஆம் நாளன்று நீதிமன்றத்திடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் தெளிவுபடுத்தினார். இந்திய அரசுக்கு இத் திட்டம் தொடர்பான நடைமுறை முழுமையையும் விரைந்து செயல்படுத்துவதைத் தவிர, வேறு வழியில்லாமல் போயிற்று. அப்போதிலிருந்து பணிகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டன. முடிவு ஒன்றை எடுப்பதற்காக பாரதப் பிரதமர் இத் திட்டம் தொடர்பாக 06-08-1998 அன்று காவிரிப் படுகை முதலமைச்சர் கூட்டம் ஒன்றை கூட்டினார். வினைத்திட்டு முதல் நடவடிக்கையாக, 29-07-1998 அன்று அமைச்சரவைச் செயலாளர், தலைமைச் செயலாளர்களுடன் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக் கூட்டத்தில், விரிவான விவாதத்திற்குப் பின்னர், இறுதி வரைவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட இறுதி வரைவுத் திட்டம், 03-08-1998-ஆம் நாளன்று, தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சரால் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. பாரதப் பிரதமரால் கூட்டப்படும் கூட்டத்தில், முதலமைச்சர் பங்கு கொள்வார் என்றும், இத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கும் நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை செயற்படுத்துவதற்குரிய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

காவிரிப் படுகைசார் மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்கள், 1998-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6 மற்றும் 7-ஆகிய நாட்களன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர். இத் திட்டம் குறித்து, பல மணிநேர விவாதத்திற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர்கள் இத் திட்டத்தின் சாராம்சத்தை ஏற்க ஒப்புக் கொண்டனர். பின்னர் அதற்கு இறுதி வடிவம் கொடுத்து 11-08-1998-ஆம் நாளன்று இது தொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டது.

12-08-1998-ஆம் நாளன்று இத் திட்டம் அறிவிக்கையிடப்பட்டதாகக் குறிப்பிட்டு, 17-08-1998-ஆம் நாளன்று இறுதியாகப் பரிசீலிப்பதற்காக, அரசியலமைப்புப் பிரிவின் முன்பு வைக்க உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இந்த இறுதி விசாரணையில், இத் திட்டம் தொடர்பான இந்த அறிவிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டதைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த இவ்வழக்கிற்குத் தீர்வு காணுவதற்கு ஆணையிடப்பட்டது.

இந்த 1998-ஆம் ஆண்டு காவிரி நதி நீர்த்திட்டத்தை (1991-ஆம் ஆண்டு காவிரி நடுவர்மன்றத்தின் ஆணை மற்றும் அதனையடுத்து



இது தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தையும் செயல்படுத்துதல்) இறுதி செய்வதற்கும், தமிழ்நாடு அரசுச் சார்பில் கணிசமான அளவிற்குச் சீரிய முயற்சிகள் வேண்டியதாயிற்று. அதனை நதி நீர் சம்பந்தப்பட்ட ஏனைய மாநில அரசுகளும் உடன்பாடு மூலம் ஏற்றுக்கொண்டன.

இதற்கிடையில், நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய அனைத்து மாநிலங்கள், தமிழ்நாடு மாநிலத்தில் 9 சாட்சிகளையும் மத்திய அரசு நேரடி ஆட்சிப்பகுதியான புதுச்சேரியின் ஒரு சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்த பின்னர் தமிழ்நாடு மாநில அரசு, கர்நாடக மாநிலத்தின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வது 08-05-1997 அன்று மேற்கொள்ளப்பட்டது. முதல் 2 சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யும் பணி பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது. தமிழ்நாடு மாநிலமும், ஏனைய மாநிலங்களும், கர்நாடக மாநிலத்தின் மேலும் 4 சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளன. கேரள மாநிலமும், தங்களுடைய சொந்த சாட்சிகளை குறுக்கு விசாரணைக்கு அனுப்பலாம். கேரள மாநிலம், 3 சாட்சிகள் அனுப்பப்படுமென தெரிவித்துள்ளது. காவிரிப் படுகை மாநிலங்கள் அனுப்பிய சாட்சிகள் அனைவரையும் குறுக்கு விசாரணை செய்யும் பணி முடிவடைந்த பின்னரே, காவிரிப் படுகை மாநிலங்களின் விவாதங்கள் தொடரக்கூடும். இந்த விவாதங்கள் முடிவடைந்த பின்னர், காவிரி நதிநீர்த் தகராறு நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பெற இயலும்.

இந்தத் தகராறு எழுந்த நாளிலிருந்தே தமிழ்நாடு அரசு, தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தின் காவிரிப் படுகை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நியாயம் வழங்கப்படுவதை உறுதி செய்யவும் எல்லா முயற்சிகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

## 99.00 சென்னைப் பெருநகர நீர் வழிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்-21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திட்டங்கள் (MILLENNIUM PROJECTS)

சென்னை நகரிலுள்ள அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஓட்டேரிநல்லா, கேப்டன் காட்டன் வாய்க்கால் மற்ற இதர சிறிய வடிகால்கள் போன்ற நீர்வழிகளில் உள்ள சேறு மற்றும் தூர் மண் ஆகியவற்றை அகற்ற தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இந் நீர்வழிகளில், கழிவுநீர் உட்புகுவதை நிரந்தர அடிப்படையில் தடுத்து சுத்தமாக வைத்திருப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இச்செய்முறையில் கீழ்காணும் பணிகள் அடங்கியுள்ளன

1. நீர்வழிப்பயனம், கேளிக்கை மற்றும் வீடு நில உடைமைகளுக்காக சென்னை நகர நீர்வழிகளை மேம்படுத்துதல்.

2. வங்காள விரிகுடாவில் அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் கலக்குமிடத்தில் ஆறுகளின் முகத்துவாரங்களில் சேரும் மணல் மேடுகளை அகற்றுதல் மற்றும் மணல் மேடுகள் உண்டாவதைத் தடுத்தல்.

3. சென்னை பெருநகரப் பகுதிகளில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, கூவம் மற்றும் இதர வடிகால்களில் தூர்வாருதல் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களை மறு குடியேற்றம் செய்தல்.

மேற்கூறிய பணி (1)-க்கான விரிவான ஒருங்கிணைந்த பெருந்திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு கலந்தறியும் நிறுவனத்தைத் (Consultancy Agency) தெரிவு செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. இத்திட்டம் கட்டமைத்து இயக்கி ஒப்படைக்கும் (B.O.T.) அடிப்படையில் நிறைவேற்றப்படும்.

**பணி 2**

கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் முகத்துவாரங்களில் சேரும் மணல் மேடுகளை நீக்கி, அடைப்புகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு தேவையான இயந்திரங்களை நிறுவ வடிவமைத்து செயல்படுத்த தகுதியான முகமையிடம் ஒட்டு மொத்த (கூரசமேநல) அடிப்படையில் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு, இப்பணியினை மேற்கொள்வதற்கான ஒப்பந்தக்காரார் விரைவில் நியமிக்கப்பட உள்ளார்.

**பணி 3**

சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் அமைப்பின் மேம்பாட்டுப்பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளை ஆகியவற்றை நிறைவேற்றும் பொருட்டு அரசு ரூ. 300 கோடி ஒப்பளித்துள்ளது. இதற்கான நிதியுதவி 'ஹட்கோ'விடமிருந்து பெறப்படும்.

கீழ்க்கண்ட நான்கு பகுதிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்கான அறிவிப்பு உலகளாவிய போட்டி ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரி செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



1. அடையாற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் ஆற்றை மறுவடிவாக்கம் செய்தல்

2. பக்கிங்ஹாம் கால்வாயில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் கால்வாயை மறுவடிவாக்கம் செய்தல்

3. கூவம் ஆற்றில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் ஆற்றை மறுவடிவாக்கம் செய்தல்

4. சென்னை பெருநகரப் பகுதிகளில் உள்ள இதர வடிகால்களில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் வடிகால்களை மறுவடிவாக்கம் செய்தல்

இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற எதிர்பார்க்கப்படுகின்றன. வெள்ள நிவாரணப் பணியில் ஒரு பகுதியாக அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் ஓட்டேரிநல்லா ஆகியவற்றில் வெள்ளத் தாக்குதலுக்குட்பட்ட பழுதடைந்த இடங்களில் ரூ. 12 கோடிக்கு தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டு பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டதின் மூலமாக நகர நீர்வழிகளில் தூர் அகற்றியதன் மூலம் பெருவாரியான பகுதி வெள்ள நீரில் முழ்குவதிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் வடகிழக்கு பருவ மழையின் வெள்ளக் காலங்களில் இத்திட்டத்தின் பயனை குடிமக்கள் அனுபவிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

**90.0 கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்**

தமிழ்நாட்டில் அமைந்துள்ள கடற்கரையின் நீளம் 960 கி.மீ. அதில் 900 கி.மீ. வங்காள விரிகுடா பகுதியிலும் 60 கி.மீ. அரபிக்கடல் பகுதியிலும் உள்ளது. தமிழ்நாட்டின் கிழக்கு கடலரிப்பு கடந்த சில ஆண்டுகளாக அப்பகுதியில் அபாயம் விளைவிக்கும் நிலையை எட்டியுள்ளது. இந்த பிரச்சினையைத் தீர்க்க அரசு பல்வேறு தடுப்புப் பணிகளை செய்து வருகிறது.

எண்ணூர் விரைவு நெடுஞ்சாலையை ஒட்டினார்ப் போல் உள்ள கடற்கரை பகுதி, இராயபுரத்தில் உள்ள மீன்பிடித்துறையிலிருந்து 9.08 கி.மீ. நீளத்திற்கு கடலரிப்பினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அரசு, கடற்கரைப் பகுதியை பாதுகாக்கவும், எண்ணூர் விரைவு நெடுஞ்சாலையை காக்கவும் பாறாங்கற்களைக் கொண்டு கடலரிப்புத்

[1999 ஏப்ரல் 7

தடுப்பு சுவர் எழுப்பி பாதுகாக்கும் பல கட்ட செயல்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

அரசு இப்பணிகளுக்கு 1998-99-ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 354.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் வடசென்னையில் எடுத்துக்கொள்ளப்பட்ட கடலரிப்புத் தடுப்புப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. 1999-2000-ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ. 2.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ. 91 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுககாக ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனை தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்த்து வெளிநாட்டு உதவி பெறுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

வடசென்னையில் இராயபுரம் கடலரிப்பிற்கு நிரந்தரமாகவும் சரியான முறையிலும் தீர்வு காணும்பொருட்டு இத்துறையில் உள்ள நிபுணர்கள் மற்றும் நெதர்லாந்து நிபுணர்கள் அனைவரையும் அழைத்து 21-11-1996-ல் ஒரு செயற் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் விரிவான விவாதங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின்னர் சென்னை இந்தியத் தொழில்நுட்ப மையம் மற்றும் பூண்டி நீரியல நிலையம் ஆகியவற்றின் நிபுணர்களைப் பயன்படுத்தி மாதிரி உரு செய்து கடலரிப்பின் போக்கைத் தடுப்பது குறித்து தகுந்த தீர்வு காண்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவி பெறுவதற்கான கருத்துரு நெதர்லாந்து அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

## 31.0 பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

திருச்சியில் துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் நீர்வளத் துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நீர்வள ஆதாரத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பதற்காக நிறுவப்பட்ட அமைப்பாகும்.

வரும் நிதி ஆண்டில் இந்நிலையத்தின் மூலம் நீர்வளத் துறை, வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையைச்



1999 ஏப்ரல் 7]

சார்ந்த 1,000 அதிகாரிகளுக்கு ரூ. 25 லட்சம் செலவிலும், நீர்வளத் துறையைச் சார்ந்த 100 களப்பணியாளர்களுக்கு (Field Staff) ரூ. 2 லட்சம் செலவிலும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ரூ. 25 லட்சம் செலவில் மாநிலத்தில் கிராமப் பகுதிகளில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு 100 பயிற்சி முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையத்தின் மூலம் ரூ. 3 லட்சம் செலவில் 100 பொறியாளர்களை இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு அனுப்பி மேலாண்மைக் குறித்து சிறப்புப் பயிற்சி பெறவும், ரூ. 3 லட்சம் செலவில் இந்நிலைய பயிற்சியாளர்களையும், இந்தியாவின் பல பகுதிகளுககு அனுப்பி பாசன மேலாண்மைக் குறித்து பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் ரூ. 2 லட்சம் செலவில் பயிற்சி உபயோகத்திற்காக வீடியோ (Video) படங்கள் தயாரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ரூ. 180 லட்சம் செலவில் 200 பொறியாளர்களை இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி அங்குள்ள பாசனத் திட்டங்களையும், அவைகள் செயல்படும் விதங்கள் மற்றும் அவைகளின் பராமரிப்பு முறைகள் குறித்து நன்கு அறிந்து வரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

லட்சங்களில்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | (01) | அ) | பொறியாளர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கான பயிற்சி 67 பயிற்சிகள் (I.M.T.I.) | 27 | |
| | | ஆ) | விவசாயிகளுக்கான பயிற்சி 100 பயிற்சிகள் ஒவ்வொரு பயிற்சிகளும் 50 விவசாயிகள் | 25 | |
| 2. | (02) | | மேலாண்மை (Management) பயிற்சி 2 பயிற்சிகள் (I.M.T.I.) | 3 | |
| 3. | (03) | | பயிற்சியாளர்களுக்கான பயிற்சி 5 பயிற்சிகள் (I.M.T.I.) | 3 | |
| 4. | (04) | | வீடியோ படம் தயாரித்தல் (I.M.T.I.) | 2 | |
| | | | | 60 | 60 |

| | | | லட்சங்களில் | |
|---|---|---|---|---|
| 5. | 05) | உள்நாட்டு பயிற்சி 10 பயிற்சிகள் | 30 | |
| 6. | 06) | உள்நாட்டு பயிற்சிப்பயணம் 8 பயிற்சிப் பயணங்கள் | 50 | |
| 7. | 07) | பன்னாடுகளில் பயிற்சி/ கருத்தரங்கு /30 நபர்கள் | 50 | |
| 8. | 08) | பன்னாட்டுப் பயிற்சிப் பயணம் 30 நபர்கள் | 50 | |
| | | | 180 | 180 |
| | | மொத்தம் | | 240 |

240 லட்சம்

### 32.0 நீர் ஆய்வு நிறுவனம்

சென்னை தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனம் தமிழ்நாட்டில் நீர்த்திட்டமிடும் பணிக்கு மையமாக அமையும் நிறுவனம் ஆகும். மேலும், இந்நிறுவனம் தமிழக அரசின் நீர்வள ஆதாரக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுமத்தின் தொழில் நுட்பச் செயலகமாகவும் விளங்குகிறது. நீர்வளத்தை விஞ்ஞான முறையில் திட்டமிடவும், மதிப்பிடவும் மற்றும் மேலாண்மைக்கு அறிவுரை அளிக்கவும் இந்நிறுவனம் செயல்படும்.

தமிழ்நாட்டில் உள்ள ஆற்று வடிநிலங்கள் 17 ஆற்றுப்படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. காவேரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப் படுகைகளுக்கு பரந்த அளவிலே நீர் வளத்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவையாவன. சென்னை, பாலாறு, வராகநதி, பொன்னையாறு, வெள்ளாறு, அக்கினியாறு, பாம்பாறு, கோட்டக்கரையாறு, வைகை, குண்டாறு, வைப்பாறு, கல்லாறு, தாமிரபரணி, நம்பியாறு, கோதையாறு, பரம்பிக்குளம் ஆளியாறு ஆகிய ஆற்றுப்படுகைகளாகும்.

நீர்வள ஆதார திட்டமிடும் பணியின் கீழ் ஒவ்வொரு ஆற்றுப்படுகைகளிலும் கிடைக்கின்ற நிலமேற்பரப்பு நீரும் நிலத்தடி



குடிநீர், விவசாயம், நீரும் விஞ்ஞான முறையிலே கணக்கிடப்படுகின்றன. ஆகியவற்றிற்கு காலநடைகள், தொழிற்சாலைகள், மின் உற்பத்தி ஆகியவற்றிற்கு கணக்கிடப்பட்டு மேலும் தேவையான நீர் 1994 ஆம் ஆண்டிற்கு கணக்கிடப்பட்டு மேலும் வரும் ஆண்டுகள் 1999, 2004, 2019, 2044 ஆகியவற்றிற்கு தேவையான நீரும் கணக்கிடப்பட்டுள்ளன. இவ்வாண்டுகளில் நீர்மிகுதியும், நீர் பற்றாக்குறையும் கொண்ட ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டு வருங்காலத் திட்டங்கள் வகுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பற்றாக்குறையான நீரை சேமித்து, பாதுகாத்து நீர்பற்றாக்குறைவான ஆற்றுப்படுகைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் உத்திகள் பற்றியும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநில நீர்வளத்திட்ட அறிக்கைகளின் வரைவு 16 ஆற்றுப்படுகைகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் மேல் வல்லுநர்களுடைய கருத்து மற்றும் யோசனைகளை அறிந்து "முடிவு அறிக்கையில்" இணைக்க ஒரு நாள் கருத்தரங்கு நீர்வள ஆய்வு நிறுவன வளாகத்தில் 11-8-1998 அன்று நடத்தப்பட்டது. நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் துள்ளிய அளவிலே ஒவ்வொரு ஆற்றுப்படுகைகளிலும் நீர்வள அறிக்கை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1998-1999-ல் பாலாறு மற்றும் வைகை ஆற்றுப்படுகைகள் அறிக்கை தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

திட்ட நிர்வாகத்தின் கீழ், தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி ஆலோசனைகளுக்கு திருவாளர்கள் தகல் கன்சல்டண்ட் இன்ஜினியர்ஸ், இஸ்ரேல் என்ற நிறுவனத்தினருக்கு ரூ. 26.83 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் ஓர் ஒருங்கிணைந்த ஆற்று படுகை மாதிரி வடிவமைப்பு பாலாறு படுகைக்கு உருவாக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தால் பாலாறு, வைப்பார், கோதையாறு ஆகிய ஆற்றுப் படுகைகளுக்கு நீர் ஆதாரம் திட்டமிடுவதுடன், தொழில்நுட்ப பரிமாற்றமும் மேற்கொள்ளப்பட உள்ளது.

வகுக்கும் திட்டங்கள் உண்மையானதாக அமைய நீர் உபயோகத்தில் பங்கேற்போர் கருத்துருக்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே வைகை ஆற்றுப் படுகையில் நீர் உபயோகத்தில் பங்கேற்போர் கூட்டத்தை மதுரையிலே நடத்தி அவர்களுடைய கருத்துக்கள் திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டன. இதுவரை 14 நீர் உபயோகத்தில் பங்கேற்போர் கூட்டம் பல ஆற்றுப் படுகைகளில் நடத்தப்பட்டன.

நிலையான நீர்வள மேம்பாட்டிற்கும், சுற்றுச் சூழல் சார்ந்து திட்டமிடவும் இவை தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்து, சுற்றுச் சூழல் பாழ்படுவதைத் தடுக்கவும், உயிரின பன்முகச் சமநிலையை பராமரிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீர்வள ஆதாரங்களில் சுற்றுச் சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்க நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச் சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஓர் சுற்றுச் சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது. பல்வேறு ஆற்று வடி நிலப்பகுதிகளில் சுற்றுச் சூழல் நிலைமையைப் பற்றிய அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

நீர்ப் பகுதியில் உறுதியான சீர்திருத்தம் செயல்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளுக்கான செயல்முறை திட்டத்திற்கு துணை புரிய தமிழ்நாடு நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தில் நீர்வள ஆராய்ச்சி நிதி உருவாக்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதார அமைப்பிற்கு ஆராய்ச்சிக்கான தலைப்பினைக் கண்டறிந்து அறிவுரை வழங்க "ஆராய்ச்சி அறிவுரை குழு" அமைக்கப்பட்டுள்ளது.

முதல் தவணையாக மூன்று தலைப்புகள் கண்டறியப்பட்டு பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களிடம் விரிவான ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவை:

1. வாய்க்கால்களில் நீர் ஓட்டத்தை அளக்கும் கருவிகளை பொருத்துதல் மற்றும் பாசன அமைப்புகளின் செயல்பாட்டை கண்காணிப்பதற்குரிய அம்சங்களை உருவாக்குதல்.

2. மழை பொழிவு மற்றும் நீர்வரத்து தொடர்பை பெரிய/நடுத்தர நீர்த்தேக்கங்களுக்கு கால வரிசை அடிப்படை விவரம் மூலம் விரிவாக பகுத்தாய்தல்.

3. மாதிரி அமைப்பின் அடிப்படையில் நீர் ஒதுக்கீடு மற்றும் நீர் நிர்வாகத்தை திட்டமிடுதல்.

நீர் ஆய்வு நிறுவனத்தில் ஒரு தொலையுணர்வு மையம், நீர் ஆய்வு நிறுவனத்தின் நீர்வளம் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைத் திறனைப் பெருக்குவதற்காக இயங்கி வருகிறது. தொலையுணர்வு தொழில் நுட்பத்தால், நோக்க ஆய்வு வரைபடங்களான புவியியல் நில உபயோகம், புவி மேற்பரப்பு, நில சாய்வு, வடிகால் மண்வகை, நில



வெடிப்பு, நீரியல் வரைபடங்களை தயாரிக்கலாம். தொலை உணர்வு தொழில்நுட்பத்தைக் கொண்டு பாலாறு மற்றும் வைகை படுகைகளுக்கு நில உபயோகம், நில வெடிப்பு, வடிகால், புவி மேற்பரப்பு போன்ற ஆய்வு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரைபடங்கள் உதவி கொண்டு ஆழ்குழாய் கிணறு துளையிடவும், திறந்த கிணறுகள் அமைப்பதற்கும் ஏற்ற சரியான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மற்றும் கசிவுநீர் குட்டைகள், நீர்தடுப்பு அமைப்புகள் கட்டுவதற்கு தகுந்த இடங்களை தேர்ந்தெடுக்கவும் முடிகிறது. இந்த தொழில் நுட்பத்தின் உதவிகொண்டு, பஞ்சாயத்து யூனியன் வாயிலாக நிலத்தடி நீரை பெருக்குவதற்குரிய சாதகமான இடங்களைத் தேர்வு செய்ய ஆய்வு பணிகள் சிவகங்கை, பல்லடம், சீர்காழி, பெரம்பலூர் ஆகிய ஒன்றியங்களில் முடிக்கப்பட்டுள்ளன. கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், தேனி, போடிநாயக்கனூர், ஆண்டிப்பட்டி ஆகிய ஒன்றியங்களில் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாநில திட்டக்குழுவின் நிதி உதவியுடன் "பாலாறு படுகையில் நிலநீர் தரம் மற்றும் நில உபயோக சூழ்நிலை" என்ற அறிக்கை தொலை உணர்வு தொழில் நுட்பத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. திருவாளர்கள் "தகவல் கன்சல்டன்ட்ஸ்"-ன் ஆலோசனைபடி தொலை உணர்வு தொழில்நுட்பத்தின் மூலம் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், சேத்தியாதோப்பு, கோமுகி, கோதையாறு, வைகை மற்றும் வைப்பார் ஆகிய திட்ட இடங்களில் உள்ள நில நீர்வள விவரங்களின் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தொலை உணர்வு ஆய்வகத்தின் திறனை அதிகரிக்கும் பொருட்டு நீ.ஆ.தொ.தி.-ன் கீழ் இன்டர்கிராப், ஏட்ராஸ்-இமேஜரிஸ் போன்ற நவீன மென் பொருட்கள் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. தேசிய தொலையுணர்வு மையம் ஹைதராபாத்திலிருந்து IRSI - CID மற்றும் WIFS செயற்கை கோள்களிலிருந்து எடுக்கப்பட்ட தமிழ்நாட்டு பரப்பில் வரும் செயற்கை கோள் புகைப்படங்கள் வாங்கப்பட்டுள்ளது.

**33.0. தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்:**

இந்திய கொதிகல சட்டம் 1950-ன் படி உற்பத்தியாகும் உயர் அழுத்த கொதிகலன்கள், உதிரி மற்றும் பொருட்கள் மேலும் அதிகபட்ச

எண்ணிக்கையில் உள்ள கொதிகலன் உபரி அலகு, வார்ப்பட பட்டறை, உலைகளம், குழல் மற்றும் குழாய் உற்பத்தி களம் உள்ளடக்கிய கொதிகலன் உற்பத்தி களத்தில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகும்.

தமிழ்நாட்டின் கொதிகலன் மற்றும் கொதிகலன் உதிரி தொழில் இவைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் தனது திறமையான செயல்பாட்டால் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையின் ஒரு அங்கமாக இயங்கி வரும் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923 ஐ மாநில அரசுகளால் இணை பொறுப்பின் கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதை ஒட்டி மேற்படி சட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் மேற்கொண்டு இயங்கி வருகிறது.

கொதிகலன்கள், கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் இதர உயர் அழுத்த பாகங்கள், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950-ல் வரையறுத்துள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதில் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் பொறுப்பு வகிக்கிறது.

இவ்வாய்வகம், கொதிகலன்கள் மற்றும் உதிரிபாகங்கள் வடிவமைப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதுடன், தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும், நிலை ஆய்வுகள் மேற்கொண்டு, அவற்றின் தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது. இத்தகைய நிலை ஆய்வுகள் ஒவ்வொரு தயாரிப்பில், கச்சா பொருள் நிலையிலிருந்து இறுதி வடிவம் பெறும்நிலை வரையிலும் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் இவ்வாய்வகத்தினால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தரத்திற்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.

கொதிகலன் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல்மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர்



அழுத்த பற்ற வைப்பாளர்கள், உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பற்றவைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வகையில், ஆசியாவிலேயே மிகப் பெரிய அளவில் கொதிகலன்களைத் தயாரிக்கும் பாரத மிகுமின் நிறுவனம், தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் உள்ளது. தமிழ்நாட்டில் உயர் அழுத்த கொதிகலன்கள் தயாரிப்பில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள் திருவாளர்கள் சிதார் வெசல்ஸ் லிமிடெட், மாத்தூர், திருச்சிராப்பள்ளி, விசன்ஸ் எனர்ஜி சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, ஜி.பி. இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, பிரிமியர் இண்டஸ்டிரிஸ், திருச்சிராப்பள்ளி, பைப்லைன்ஸ் அண்டு புராசஸ் ராஜினிபேப், திருச்சிராப்பள்ளி, ஐஏஇசி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, பின்னி இன்ஜினியரிங் இண்டஸ்ரீஸ் (மெட்ராஸ்) லிமிடெட், சென்னை, இபில்டெக், கும்மிடிப்பூண்டி, டாயிஷ் டிவிஷன் லிமிடெட், சென்னை, பூந்தமல்லி, ஜெயா அண்டு பாப்காக் பவர் ஸிஸ்டம் லிமிடெட், கோயம்புத்தூர், கம்பெனி, கோயம்புத்தூர், ஜெயா பாய்லர்(பி) லிமிடெட், கோயம்புத்தூர் ஆகும். ஸ்ரீவெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேஷன், கோயம்புத்தூர் ஆகும். 1998-99-ம் ஆண்டில் இந்த நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ 455 கொதிகலன்கள் இந்நாட்டில் பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன் அனைத்து நிலைகளிலும் ஆய்வு செய்து அவற்றிற்கு தரச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. இதன்படி கொதிகலன்கள் தயாரிப்பினில், தமிழகம் முன்னிலை வகிப்பதை, தொடர்ந்து உறுதிபடுத்தி வருகிறது.

அனல்மின் நிலையங்களுக்கும் தேவையான சர்வதேச அளவில் தயாரிக்கப்படும் கொதிகலன்களுக்கு ஈடாக 500 மெகாவாட் வரை மின்சாரம் தயாரிப்பதற்கும் உகந்த பாரத மிகுமின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பிரம்மாண்டமான உயர் அழுத்த கொதிகலன்களையும், இவ்வாய்வகம் வடிவமைப்புக்கு ஒப்புதல் அளிப்பதுடன், ஒவ்வொரு நிலையிலும் ஆய்வு செய்து, தரச் சான்றிதழ்களையும் வழங்கி, மேற்படி கொதிகலன்கள் எந்த ஒரு தயாரிப்பு குறையும் சுட்டிக்காட்ட இயலாதவாறு, நம் நாட்டின் பல்வேறு மின் நிலையங்களில் மிகத் திறம்பட செயல்பட்டு வருகிறது. மேலும், ஒருசில அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உயர்

அழுத்த கொதிகலன்கள் இவ்வாய்வகத்தால் ஆய்வு செய்யப்பட்டு, தரச்சான்றிதழ்களும் அளிக்கப்படுகிறது.

இத்தகைய கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், புதியதாக கொதிகலன்களைத் தயாரிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது, இவ்வாய்வகம் அத்தகைய விண்ணப்பத்தாரர்களுக்கு தேவையான அனைத்துவித உதவிகளையும், வழங்கி உரிய தொழில்நுட்ப நெறிமுறைகளையும் வழிகாட்டுவதன்மூலமாக, மேற்படி நிறுவனங்கள் எந்தவித இடர்பாடுமின்றி, தொழிற்சாலைகளை தமிழகத்தில் துவக்கவும், அவ்வாறு துவக்கப்படும் தொழிற்சாலைகள் வெகுவிரைவாக உற்பத்தியை துவக்கவும் இவ்வாய்வகம் அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தொழில் துவங்க முனைவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த பல்வேறு மாநிலங்களில் இயங்கி வரும் பல கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், தற்போது தமிழகத்தில் தங்கள் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகளைத் துவக்க முன்வந்துள்ளது சிறப்பு அம்சமாக குறிப்பிடலாம். சான்றாக, கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்த தி/ள் [illegible] பாப்காக் பவர் சிஸ்டம் என்ற ஜெர்மானிய கூட்டுத் தயாரிப்பு நிறுவனம், அனல்மின் நிலையங்களுக்குத் தேவையான கொதிகலன்களை தயாரிக்கும் தனது மிகப் பெரிய தொழிற்சாலையை, தற்போது சென்னை அருகில் பூந்தமல்லியில் துவக்கி, உற்பத்தி பணிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான தடைபடாத மின்சார விநியோகம் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு, தொலைநோக்குடன் தமிழகத்தில் மின்உற்பத்தியை பலமடங்கு உயர்த்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு தனியார் அனல்மின் நிலையங்களுக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்து, இம்மின்நிலையங்கள் அமைப்பில், கொதிகலன்கள் பெரும்பங்கு வகிப்பதால், இவற்றின் நிர்மானத்திற்கு கொதிகலன்கள் ஆய்வகம் அனைத்து உதவிகளையும் நல்கி வருகின்றது. இவ்வாறு கொதிகலன்கள் ஆய்வகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப்பெற்றுள்ள தனியார் அனல்மின் நிலையங்களில் குறிப்பிடத்தக்கவை தி/ள் தமிழ்நாடு கெமிகல் புராடக்ஸ் நிறுவனத்தாரால் கும்மிடிப்பூண்டியில் அமைக்கப்பட்டு விரைவில் உற்பத்தி தொடங்க உள்ள 63.75 மெகாவாட் திறன்கொண்ட அனல்மின் நிலையம். இதேபோன்றே மேட்டூரில் தி/ள் மெட்ராஸ் அலுமினியம்



கம்பெனி நிறுவனத்தாரால் அமைக்கப்பட்டு வரும் 3X25 மெகாவாட் மின் உற்பத்திக்குத் தேவையான கொதிகலன்களை முதன்முறையாக சீன நாட்டிலிருந்து கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதால், இக்கொதிகலன்களுக்கு வடிவமைப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு கொதிகலன்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதேபோன்று சென்னை பேசின் பிரிட்ஜில் தி/ள் ஜிஎம்ஆர் வாசவி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தாரால் 200 மெகாவாட் டீஇபிபி மின்உற்பத்தி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள நான்கு புதிய கொதிகலன்களுக்கு அவைகளின் இயக்கத்திற்கு உரிய ஆய்வுகளுக்குப்பின் சான்றிதழ்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டுள்ளன.

இக்கொதிகல ஆய்வகம், 1998-99 ஆம் ஆண்டில் 116 புதிய கொதிகலன்களை, அவற்றுக்கான நீராவி குழாயமைப்புகளையும் நிறுவ ஒப்புதல் வழங்கி, அவற்றை பதிவு செய்வதன் மூலம் உற்பத்தி பணிகள் துவங்கப்பட்டு, தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

அரிசி ஆலைகள், துணியாலைகள், சுத்திகரிப்பு நிலையங்கள், சர்க்கரை ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், மருந்து பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உருக்காலைகள், அனல்மின் நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், நட்சத்திர உணவு விடுதிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் புதிதாக கொதிகலன்கள் அமைத்துள்ளன.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களைத் தவிர, கொதிகலன்கள் உதிரி பாகங்களான உயர் அழுத்த அடைப்பான்கள், குழல் மற்றும் குழாய்கள் தயாரிப்பு தொழிற்சாலை, உலைக்களம், எஃகு வார்ப்பட சாலை போன்ற உபகரணங்களைத் தயாரிக்கும் பெரும்பாலான நிறுவனங்களும் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்படும் உபகரணங்கள் நம் நாட்டின் மொத்த தேவையை பெருமளவில் ஈடுசெய்கிறது. இவ்வகையில் உலகத்தரம் வாய்ந்த அடைப்பான்களை தயாரிக்கும் தி/ள் அட்கோ இந்தியா லிமிடெட் நிறுவனம், சென்னை, மணப்பாக்கத்தில் ஒரு தொழிற்சாலையுடன் துவங்கி, தற்போது மறைமலைநகரில் ஒரு தொழிற்சாலையும், காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலையுமாக மூன்று தொழிற்சாலைகளில் தனது உற்பத்தித்திறனை விரிவுபடுத்தியுள்ளது. இதுபோன்றே, உயர் அழுத்தக் கொதிகலன்கள் தயாரிப்பில், திருச்சி பாரத மிகுமின்

[1999 ஏப்ரல் 7

நிறுவனத்திற்கு அடுத்தபடியாக சிறந்து விளங்கும், தி/ள் சிதார் வெசல்ஸ் லிமிடெட் நிறுவனம், தம்முடைய கொதிகலன்கள் தயாரிப்பு பிரிவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாத்தூர் மற்றும் விராலிமலைப் பகுதியில் உள்ள நிறுவனங்கள் தவிர பல சிறப்பு வசதிகள் பொருந்திய மூன்றாவது பிரிவினை திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரமங்களத்தில் துவங்கி, உற்பத்திப் பணியை ஆரம்பித்துள்ளது. உதிரி பாகங்கள் தயாரிப்பில், அட்கோ இந்தியா லிமிடெட் நிறுவனத்தைத் தவிர, விராலிமலையில் தி/ள் எப்.எம்.சி சன்மார் லிமிடெட், சென்னையில் பிஷர் சோமாக்ஸ் சன்மார் லிமிடெட் நிறுவனம், கோவையில் கேஎஸ்பி பம்ப்ஸ் நிறுவனம், ஓசூரில் தி/ள் சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் நிறுவனம் ஆகியவை மிகப் பெரிய அளவில் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில், கொதிகலன் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு, சுமார் 2,13,000 அடைப்பான்களுக்கான தரச் சான்றிதழ்களையும், சுமார் 80,000 உயர் அழுத்த குழாய் உபகரணங்களுக்கான தரச் சான்றிதழ்களையும், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ன் கீழ் தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் வழங்கியுள்ளது.

கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பழுது பார்க்கும் நிறுவனங்கள், கொதிகலன்கள் மற்றும் நீராவி குழாய் அமைப்பு நிறுவும் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பற்ற வைப்பாளர்கள், அதற்குரிய முறையான தகுதி பெற்றிருப்பதன் மூலம் மேற்படி நிறுவனங்களில் தயாரிப்புகள் வரையறுக்கப்பட்ட தரத்தில் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு இவ்வாய்வகம், உயர் அழுத்த பாகங்கள் பற்ற வைப்பாளர்களுக்கு தேர்வுகள் நடத்தி, தேர்ச்சி பெறும் பற்ற வைப்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் சுமார் 740 பற்றவைப்பாளர்களுக்கு தேர்வு நடத்தி, அதில் தேர்ச்சிப்பெற்ற 686 பற்ற வைப்பாளர்களுக்கு தரம் வாரியாக (பைப், ட்யூப் மற்றும் பிளேட் ஆகியவற்றில் அலாய் ஸ்டீல் மற்றும் கார்பன் ஸ்டீல்) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பதுடன், கொதிகலன்களைப் பயன்படுத்துவோர் கொதிகலன்கள் முறையாக இயக்குவதை உறுதி செய்வதன் மூலம், பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொது சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்படாமல்



1999 ஏப்ரல் 7]

கண்காணிக்க இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923-ல் விதிகளை இவ்வாய்வகம் அமுல்படுத்தி வருகிறது. பல்வேறு தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலன்களை ஆண்டிற்கு ஒரு முறை அவைகளின் திருப்திகரமான செயல்பாட்டிற்கு தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் ஆய்வு செய்து வருகிறது. நெறிமுறைகளில் இல்லாத கொதிகலன்களின் சான்றிதழை ரத்து செய்து கொதிகலன்களின் பழுதுகளை முறையாக நீக்கம் செய்த பிறகே தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் சான்றிதழைப் புதுப்பிக்கிறது.

1998-99 ஆம் ஆண்டில் சுமார் 2734 கொதிகலன்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் இயக்கத்திற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. வருடாந்திர ஆய்வுகள், நிறுவனங்களின் உற்பத்தி பாதிப்பிற்கு இடமளிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டின் ஆய்வின் போது சுமார் 98 கொதிகலன்கள் பழுதடைந்ததாகக் காணப்பட்டது. அவற்றில் சுமார் 80 கொதிகலன்களின் பழுதுகள் சீர்செய்யப்பட்டு, உரிய சான்று அளிக்கப்பட்டு, இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மேற்கூறிய அலுவல்கள் தவிர, நிறுவனங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், தகுதிவாய்ந்த உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதையும், மேற்படி நிறுவனங்களின் கொதிகலன்கள் தொழில்நுட்ப அனுபவத்தினையும் கருத்தில் கொண்டு கொதிகலன்கள் நிறுவப்படவும், குழாய் அமைப்பு பணிகள் அமைக்கப்படவும், பழுதுகள் சீர் செய்யப்படவும், தகுதி வாய்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு கொதிகலன் ஆய்வகம் ஒப்புதல் வழங்கி வருகிறது.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறைகளின்படி, தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க அனுமதிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கொதிகலன்கள் பணியாளர்கள் விதிகள் 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் விதிகள் 1965 ஆகியவற்றை உருவாக்கி உள்ளன. இவ்விதிகளைச் செயல்படுத்தும் அமைப்பாகவும், இவ்வாய்வகம் செயல்பட்டு வருகின்றது. இதற்காக இந்த ஆய்வகம், கொதிகலப் பணியாளர்களுக்கெனவும் (நிலை-I, நிலை - II மற்றும் நிலை - III), கொதிகலன்கள் இயக்கப்

பொறியாளர்களுக்கெனவும் தேர்வுகளை நடத்தி தேர்ச்சி பெறும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் தேர்வு நடத்த விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. வரப்பெற்ற சுமார் 1140 விண்ணப்பங்களில், தகுதி பெற்ற சுமார் 1030 விண்ணப்பத்தாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கொதிகலப் பொறியாளர்கள் தேர்வுகள் 1999 மார்ச் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளன. கொதிகலப் பணியாளர்கள் மற்றும் கொதிகலப் பொறியாளர்கள் தேர்வுச் சான்றிதழ்கள் சில அயல்நாடுகளில் அங்கீகரிப்பைப் பெறுகின்றன.

பதிவுபெற்றுள்ள கொதிகலன்களின் ஆண்டாய்வு மற்றும் அவைகளின் உபயோகத்திற்கான சான்றுரைப்பு தவிர, பதிவு பெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களை கண்டறிந்து, அவற்றின் இயக்கத்தை தடை செய்வதும் கொதிகலன் ஆய்வகத்தின் பொறுப்பாகும்.

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலுள்ள தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர் தலைமையில், மூன்று துணைத் தலைமை கொதிகலன்கள் ஆய்வாளர்களை சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்பத்தூரில் மண்டல நிலை அலுவலர்களாகக் கொண்டும், பதினோரு கொதிகலன்கள் ஆய்வாளர்களையும் (இவர்களுள் ஆறு கொதிகலன்கள் ஆய்வாளர்கள் தனி பொறுப்பிலும்) மற்றும் பதினைந்து உதவி கொதிகலன்கள் ஆய்வாளர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது.

பொதுமக்களின் உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923-ன் விதிகளை தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் தனது திறமையான செயல்பாட்டினால் முழுமையாக நிறைவேற்றி வருகிறது.

இந்நிதியாண்டில் (1998-99) தமிழகத்தில் கொதிகலன் விபத்து அல்லது கொதிகலன்கள் வெடிப்பு ஏதும் நிகழவில்லை. கொதிகலன் மற்றும் கொதிகலன் உதிரிபாகங்கள் உற்பத்தியில் தமிழ்நாடு இந்நாட்டில் முதலாவதாக உள்ளது.



**கட்டட அமைப்பு**

பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பு 1-4-1996 முதல் 16 கட்டட வட்டங்கள் மற்றும் 51 கோட்டங்களுடன் திருத்தியமைக்கப்பட்டு தனிப்பிரிவாக செயல்பட்டு வருகிறது. (இணைப்பு-3).

தமிழ்நாடு பொதுப்பணித்துறை கட்டட அமைப்பு, அரசுத் துறைகளான வருவாய், காவல், மருத்துவம், கல்வி, நீதி, வேளாண்மை, வணிகவரி, சட்டம், கால்நடை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை மற்றும் சிறைச்சாலை ஆகிய துறைகளின் தேவைக்கேற்ப கட்டடங்கள் கட்ட திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானப் பணிகள் மற்றும் அது சார்புடைய பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு வகிக்கிறது. மேலும் இத்துறை அரசு நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள், அரங்கங்கள் கட்டும் பணிகளையும் நிறைவேற்றுகிறது. மத்திய மற்றும் மாநில சார்பு துறைகளான தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக் கழகங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டம், ஆடுகள் வளர்ப்பு திட்டம், டானிடா (DANIDA) வளர்ச்சித் திட்டம், ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக்குழு திட்டம், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் பணிகள், நகர்ப்புற வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் நடுத்தர மற்றும் சிறிய நகரங்களுக்கு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IUDP and IDMST) ஆகிய பிரிவுகளின் கீழ்வரும் கட்டடப் பணிகளை வைப்புநிதி மற்றும் செலுத்து தொகை பணிகளாக நிறைவேற்றுகிறது. மேலும் இக்கட்டட அமைப்பு, பரவலாக்கப்பட்ட மாவட்ட நிதியின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கும் பணிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றையும் செய்துவருகிறது.

இக்கட்டட அமைப்பு அரசு கட்டடங்கள, நினைவு சின்னங்கள், ஸ்தூபிகள், அரசினர் தோட்டம், ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்லம், மற்ற துறைகளைச் சேர்ந்த அரசு இல்லங்களின் கட்டடப் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கிறது. தமிழகத்தில் உள்ள அரசு பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகளின் பராமரிப்பு மற்றும் மெரினா பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும் புயல், வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தால் அரசு கட்டடங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைச் செப்பனிடும் பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்துகிறது.

மேலும் கட்டட அலுவலர்கள், காவல் துறை புலனாய்வு குழுமம் மற்றும் நீதிமன்றங்கள் கோரும் வழக்கு சார்ந்த கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீடு தயார் செய்து தருகிறார்கள். மேலும், திரைப்பட அரங்குகள், பொது கட்டடங்கள் ஆகியவற்றுக்கான உறுதி சான்றிதழ் வழங்குவதும் மற்றும் அரசு அலுவலகங்கள் வாடகைக்கு அமர்த்தியுள்ள தனியார் கட்டடங்களுக்கான வாடகை நிர்ணய சான்றிதழ் ஆகியவை வழங்குவதும் கட்டட அமைப்பின் பொறுப்பாகும். மேலும் இவ்வமைப்பு மிக மிக முக்கியமானவர்கள் வருகையின் போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரம் தடுப்புக் கம்பி வேலி அமைப்புகள், மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

மற்றும் சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் கீழ்வரும் சேவைகளை பொதுமக்களுக்கு அளித்து வருகிறது.

1. பொதுப்பணித்துறை கட்டட மையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டட தொழில் வினைஞர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.
2. பொதுப்பணித்துறை கட்டட மையம் சார்பாக தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும், கட்டட கட்டுமானப் பணிகளுக்கு தேவையான விலை குறைந்த, தரம் வாய்ந்த கட்டுமான பொருள்கள், கருவிகள் தயார் செய்வதும், பொதுமக்கள் கேட்டுக்கொள்வதன் பேரில் கட்டுமான பணியை மேற்கொள்வதும் இதன் பணிகளாகும்.
3. கட்டுமானப் பொருள்கள் தரப்பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப்பணி, மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.
4. பழுதடைந்த கட்டடங்களைக் கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்பு பணி பரிந்துரை செய்தல், மற்றும் அவற்றை நன்நிலைமைக்கு கொண்டு வர தேவையான யுக்திகள் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.

**கட்டடக் கலைஞர் பிரிவின் பணிகள்.**

தலைமைப் பொறியாளர் பதவி அளவில் தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில் கட்டட வரைகலைப்பிரிவு தனியாக இயங்கிக்





கொண்டிருக்கிறது. இப்பிரிவு பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்டு வரும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்கு தேவையான வரைபடங்களை தயாரிக்கின்றது. மேலும் இப்பிரிவு புதிய கட்டடங்களுக்கான ஆரம்ப வரைபடங்கள், விளக்க வரைபடங்கள், முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களைக் கொண்ட வரைபடங்களையும் தயாரிக்கின்றது. இக்கட்டடங்களுக்குத் தேவையான வண்ணப்பூச்சு பற்றி விபரங்களையும் அளிக்கின்றது. இப்பிரிவு நினைவிடங்கள், மண்டபங்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றுக்கான வரைபடங்களைத் தயாரிப்பதோடு அல்லாமல், மிகப் பெரிய கட்டுமான பணிகளான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் தலைமையிட அலுவலகங்கள் உள்ளடங்கிய பெருந்திட்ட வளாகங்களுக்குத் தேவையான உள்ளமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மேலும், தொகுப்பு அங்கிகாரம் மூலம் வழங்கப்படும் திட்டப்பணிகளான ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூட கட்டடங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

## 1998-99 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

### 1. சுகாதாரத் துறை.

#### 1.1 தமிழ்நாட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் கட்டுதல்.

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் 652 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் ரூபாய் 49.68 கோடி செலவில் கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதுவரை 434 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் தமிழ்நாட்டில் 200 சுகாதார துணை நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.9.00 கோடிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இவற்றில் 66 இடங்களில் பணிமுடிக்கப்பட்டது. மீதமுள்ள இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 64 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் மற்றும் 36 சுகாதார துணை நிலையங்களுக்கு பணித்தளம் சுகாதாரத் துறை இதுவரை தெரிவு செய்யாத காரணத்தினால் அவ்வினங்கள் நீங்கலாக மற்ற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், சுகாதார துணை

நிலையங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு 30-6-1999-க்கு முன்பாக சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

## 1.2 விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவுகள்

10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மருத்துவமனைகள், தலைமையிட மருத்துவமனைகளான அரியலூர், உசிலம்பட்டி, திருவள்ளூர், ஆம்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் கட்ட ரூ. 1.48 கோடிகளுக்கு 1997-98-ல் அரசு அனுமதி அளித்துள்ளது. திருவள்ளூர், ஆம்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி 2 இடங்களில கட்டடங்கள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

1998-99 ஆம் ஆண்டிற்கான பணிகள் திருமங்கலம், கொடைக்கானல், பல்லடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவுகள் கட்ட ரூ. 1.20 கோடிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 4 இடங்களிலும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 1.3 காசநோய் சிகிச்சைப் பிரிவுகள்.

தமிழ்நாட்டில் காச நோய் சிகிச்சைப் பிரிவுகள், தலைமை மருத்துவமனைகளான, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர், உசிலம்பட்டி, திருவாரூர், நாமக்கல், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், நாகர்கோவில், கடலூர், பெரியகுளம், விருதுநகர் முதலிய 14 இடங்களில் கட்ட அரசு ரூ. 3.30 கோடிகளுக்கு அனுமதி அளித்துள்ளது. மேற்கூறியவற்றில் 6 இடங்களான கடலூர், பெரியகுளம், நாகர்கோவில், திருப்பூர், நாமக்கல் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் பணிமுடிவுற்றுள்ளது. மீதமுள்ள இடங்களில் பணி நல்ல முன்னேற்றத்தில் உள்ளது.

## 1.4 மருத்துவமனைகள் மேம்படுத்தல் திட்டம்

மாவட்ட தலைமை, வட்டம் மற்றும் வட்டம் அல்லாத மருத்துவமனைகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 2.50 கோடிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகளாவன:-

அ. திருவள்ளூர், உசிலம்பட்டி, திருவாரூர், நாமக்கல் மற்றும் கும்பகோணம் ஆகிய மாவட்ட தலைமை



மருத்துவமனைகளில் வரவேற்பு மற்றும் விசாரணை முகப்பிடம் கட்டி முடிக்கப்பட்டது.

ஆ. இராமநாதபுரத்தில் கண்காணிப்பாளர் குடியிருப்பு இல்லப்பணி நடைபெற்று வருகின்றது.

இ. சங்கரன்கோவில், இராசபாளையம் வட்ட மருத்துவ மனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பணிகள் நடைபெற்றுவருகின்றன.

ஈ. ஆத்தூர் அரசு பொது மருத்துவமனையில் புறநோயாளிகள் சிகிச்சைப் பிரிவு பணிகள் நடைபெற்று வருகின்றன.

உ. மணப்பாறை அரசு பொது மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சைக் கூட பணிகள் முடிவுற்றன.

ஊ. ஊத்துக்கோட்டை அரசு பொது மருத்துவமனையில் பழைய கட்டடத்தையும் புதிய வார்டையும் இணைக்கும் இணைப்பு வழிக் கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

எ. கொடுமுடி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ அலுவலர் குடியிருப்பில் சிறப்பு மராமத்து பணிகள் நடைபெறுகின்றன.

ஏ. பரமக்குடி அரசு பொது மருத்துவமனையில் ஆழ்துளை கிணறும், நீர் வழங்கு வசதியும் செய்து முடிக்கப்பட்டது.

ஐ. அந்தியூர் மற்றும் தொண்டாமுத்தூர் அரசு பொது மருத்துவ மனையில் பிண அறுவைக் கூடம் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன.

ஒ. ஜெயங்கொண்டம் அரசு பொது மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவைச் சிகிச்சை கூடம் கட்டும் பணி நடைபெறுகிறது.

ஓ. பேரணாம்பட்டு மற்றும் வத்திராயிருப்பு அரசு பொது மருத்துவமனைகளில் புறநோயாளிகள் கூடம் கட்டும் பணி நடைபெறுகின்றது.

[1999 ஏப்ரல் 7

### 1.5 மருத்துவக் கல்வி இயக்குநர் சார்ந்த பணிகள்

அ. திருச்சிராப்பள்ளி அரசு உடற்கூறு சிகிச்சை கல்லூரியில் ஆண் மற்றும் பெண் மாணவர் விடுதிகள் கட்ட ரூ. 1.00 கோடி மதிப்பில் அரசு அனுமதி அளித்து பணிகள் முடிவடைந்துள்ளன.

ஆ. சித்த மற்றும் ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சி மையப் பணிகளுக்காக கட்டடம் கட்டும் பணி ரூ. 5.37 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மையப்பணிகள் அனைத்தும் 30-4-1999-க்கு முன்பாக முடிக்கப்படும்.

இ. சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குநர் மற்றும் தேர்வுக் குழுவிற்கான அலுவலகக் கட்டடம் ரூ. 2.73 கோடியில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஈ. திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதன் அரசு மருத்துவக் கல்லூரிக்கான பல்வேறு கட்டடங்கள் கட்டும் பணி ரூ. 12.73 கோடியில் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் 199--ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

உ. திருநெல்வேலியில் 45 சி.ஆர்.ஆர்.ஐ மற்றும் 20 பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூ. 50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றுள்ளது.

### 2. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் **1991-92** முதல் ஏழாண்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வரும் கட்டட பணிக்காக ரூபாய் **46** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் **1997-98** ஆம் ஆண்டில் கட்டடப் பணிகளுக்கு ரூபாய் **24.55** கோடிகள் அனுமதிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் **4.70** கோடிகள் கட்டடப் பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டது. பணிகள் அனைத்தும் **31-12-1998**-க்கு முன்னதாக முடிக்கப்பட்டுவிட்டன.



1999 ஏப்ரல் 7]

### முடிக்கப்பட்ட பணிகள் விவரம்

| வ.எண் | பணி விவரம் | மதிப்பு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| **2.1 வேளாண் துறை பணிகள்** | | |
| **I. அரசு ஆணை எண் 223 (வி.து.) நாள்: 23-5-1997** | | |
| 1. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், காஞ்சிபுரம் | 121.00 |
| 2. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், வேலூர் | 121.00 |
| 3. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், தர்மபுரி | 104.50 |
| 4. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், புதுக்கோட்டை | 107.80 |
| 5. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், மதுரை | 145.50 |
| 6. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், விருதுநகர் | 104.50 |
| 7. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், இராமநாதபுரம் | 102.30 |
| 8. | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், தூத்துக்குடி | 115.50 |
| **II. அரசு ஆணை எண் 319 (வி.து.) நாள்: 7-8-1997** | | |
| | இணை இயக்குனர் (வேளாண் துறை) அலுவலகக் கட்டடம் கட்டுதல், விழுப்புரம் | 165.00 |

| வ.எண் | பணி விபரம் | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **III.** | **அரசு ஆணை எண் 177 (வி.து.) 9-12-1997.** | |
| | வேளாண் துறை இயக்குநருக்கான கூடுதல் அலுவலகக் கட்டடம் (பகுதி2). சென்னை | 230.00 |
| **IV.** | **அரசு ஆணை எண் 233 (வி.து.) நாள் 23- 1 98வ05-1997** | |
| 1. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஊத்துக்கோட்டை | 24.42 |
| 2. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், உத்திரமேரூர் | 24.42 |
| 3. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஆற்காடு | 24.42 |
| 4. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், காட்டுமன்னார்கோவில் | 24.42 |
| 5. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், வேதாரண்யம் | 24.42 |
| 6. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், திருவாரூர் | 24.42 |
| 7. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், திருவிடைமருதூர் | 24.42 |
| 8. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பேராவூரணி | 24.42 |
| 9. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஆவுடையார்கோவில் | 24.42 |
| 10. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஆலங்குடி | 24.42 |
| 11. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பெரம்பலூர் | 24.42 |



| வ.எண் | பணி விபரம் | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 12. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், உசிலம்பட்டி | 24.42 |
| 13. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், குளித்தலை | 24.42 |
| 14. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பல்லடம் | 24.42 |
| 15. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், நத்தம் | 24.42 |
| 16. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், தேவகோட்டை | 24.42 |
| 17. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், திருப்பத்தூர் | 24.42 |
| 18. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஓமலூர் | 24.42 |
| 19. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், இராசிபுரம் | 24.42 |
| 20. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பெண்ணாகரம் | 24.42 |
| 21. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், திருக்கோவிலூர் | 24.42 |
| 22. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், தென்கனிக்கோட்டை. | 24.42 |
| 23. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், முதுகுளத்தூர் | 24.42 |
| 24. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பத்மநாபபுரம் | 24.42 |
| 25. | உதவி இயக்குநர்(வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், சிவகிரி | 24.42 |

[1999 ஏப்ரல் 7

| வ.எண் | பணி விபரம் | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **V. அரசு ஆணை எண் 177 (வி.து.) நாள் 9-12-1997** | | |
| 1. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், செய்யூர் | 23.00 |
| 2. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், ஆரணி | 23.00 |
| 3. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், பண்ருட்டி | 23.00 |
| 4. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், வேடசந்தூர் | 23.00 |
| 5. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், இராசபாளையம் | 23.00 |
| 6. | உதவி இயக்குநர் (வேளாண்மை) அலுவலகம் கட்டுதல், தென்காசி | 23.00 |
| **VI. அரசு ஆணை எண் 116 (வி.து.) நாள் 30-04-1998** | | |
| | கட்டடப் பணிகள் இயக்குநர் (வேளாண் துறை) சென்னை | 14.15 |
| **VII. அரசு ஆணை எண் 4 (வி.து.) நாள் 27-01-1998** | | |
| | 24 மாவட்டங்களில் கணினி அறை வசதிகள்(கணிப்பொறி) | 72.00 |
| **2.2 விதை சான்றிதழ் துறைப் பணிகள்** | | |
| **VIII. அரசு ஆணை எண் 128 (வி.து) நாள் 25-03-1997** | | |
| | கோயம்புத்தூரில் விதை சான்று துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் பயிற்று மையக் கட்டடம் கட்டுதல் | 32.50 |



1999 ஏப்ரல் 7]

| வ.எண் | பணி விபரம் | (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **XI. அரசு ஆணை எண் 116 (வி.து) நாள் 30-04-1998** | | |
| | விதை ஆய்வகத்தில் 9 கட்டட வேலைகள் | 34.14 |
| **2.3 வனத்துறை பணிகள்** | | |
| **அரசு ஆணை எண் 147 (வி.து) நாள் 27-5-1998** | | |
| | 5 நவீன வித்து பண்ணையில் 27 பணிகளின் மதிப்பு | 35.30 |
| **2.4 கால்நடை பராமரிப்புத் துறை பணிகள்** | | |
| **அரசு ஆணை எண் 248 (வி.து.) நாள் 16-6-1997** | | |
| 1. | அபிசேகப்பட்டியில் 200 பசுக்களுக்கு கொட்டகை மற்றும் 100 கன்றுகுட்டிகளுக்கு கொட்டகை, உணவுத் தளம், வைப்பறை ஆகியவை கட்டும் பணி | 100.00 |
| 2. | அபிசேகப்பட்டியில் 100 பசுக்களுக்கு கொட்டகை மற்றும் 50 கன்றுக்குட்டிகளுக்கு கொட்டகை, உணவுத்தளம், வைப்பறை ஆகியவை கட்டும் பணி. | 85.00 |
| **2.5 தோட்டக் கலைத் துறை பணிகள்** | | |
| **அரசு ஆணை எண் 540 (வி.து) நாள் 16-12-1997** | | |
| 1. | மாநில தோட்டக்கலைப் பண்ணைகள், நவலோகம் | 11.76 |
| 2. | மாநில தோட்டக்கலைப் பண்ணைகள், ஆத்தூர் | 22.35 |
| 3. | தோட்டக்கலைப் பண்ணைகள், மாதவரம் | 17.02 |
| 4. | தோட்டக்கலைப் பண்ணைகள், திருவில்லிபுத்தூர் | 6.50 |
| 5. | தோட்டக்கலைப் பண்ணைகள், கன்னியாகுமரி | 31.19 |

[1999 ஏப்ரல் 7

**2.6 சர்வதேச மலர் ஏல மற்றும் விற்பனை மையம், சென்னை**

அரசு ஆணை எண் 489 (விது) நாள் 9-12-98-ல் இப்பணிக்காக ரூ.24.04 கோடி அங்கீகரித்துள்ளது. இப்பணிக்கென பள்ளிக்கரணை அருகில் 35 ஏக்கர் பரப்புள்ள நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட வேலைகள் நடைபெறுகின்றன.

**3. உலக வங்கி நிதியுதவியின் கீழ் நடைபெறும் நீர்வள ஆதார தொகுப்பு திட்டம் மற்றும் நீரியல் திட்டங்களுக்கான கட்டட பணிகள்.**

நீர் வள ஆதார தொகுப்புத் திட்டத்தின்கீழ் கட்டடப் பணிகளுக்கு ரூ.48.735 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ரூ.40.09 கோடி மதிப்புள்ள பணிகள் இனங்கொள்ளப்பட்டன. ரூ. 7.85 கோடி மதிப்புள்ள கட்டடப் பணிகள் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டன. ரூ. 19.33 கோடி மதிப்புள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ. 11.00 கோடி மதிப்புள்ள பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

**3.1 1998-99 ஆண்டு நீர் வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட முக்கிய பணிகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| | | ரூ. இலட்சம் |
|---|---|---|
| 1. | நீர் வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளருக்காக, சென்னை தரமணியில் நூலகம், கணிணி மையம், சொற்பொழிவு அறை, வண்டிக்கொட்டில் ஆகியன உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுதல். | 191.80 |
| 2. | திருச்சியில், திருச்சி மண்டல நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்காக கட்டடம் கட்டுதல். | 122.00 |
| 3. | சென்னையில் அணை பாதுகாப்பு இயக்க கட்டடத்தின் மேல் நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளருக்கு கூடுதல் இடவசதி ஏற்படுத்துதல். | 32.50 |



1999 ஏப்ரல் 7]

| | | ரூ. இலட்சம் |
|---|---|---|
| 4. | நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக்கழகம், பூண்டியில் மருத்துவக்கூடம் கட்டும் பணி | 31.17 |
| 5. | நீரியல் நீரிநிலையியல் ஆய்வுக்கழகம், பூண்டியில் மாநாட்டுக் கூடம், நூலகம், உணவுக்கூடம் மற்றும் கழிப்பறை கட்டும் பணி | 49.22 |
| 6. | பெரியார் பிரதான கால்வாய் கோட்டத்திற்காக மேலூரில் கட்டடம் கட்டும் பணி. | 30.60 |
| 7. | நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக்கழகம், பூண்டியில் (இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளருக்காக) தங்கும் கூடம் I,II,III கட்டும் பணி | 265.31 |

**3.2 நடைபெற்றுவரும் சில முக்கிய பணிகள்.**

| | | |
|---|---|---|
| 1. | இராணிப்பேட்டையில் உபகோட்டம் அலுவலகக் கட்டடம் மற்றும் பிரிவு அலுவலர் குடியிருப்பு கட்டும் பணி. | 45.26 |
| 2. | திருவண்ணாமலையில் உபகோட்ட அலுவலகக் கட்டடம், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், உதவி பொறியாளர் ஆகியோருக்கு குடியிருப்புகள் மற்றும் சாத்தனூர் துணைத் திட்டத்தின் மேம்பாட்டு அலுவலகம் கட்டும் பணி. | 35.70 |
| 3. | திருச்சிராப்பள்ளியில், மண்டல நீர் வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் மற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் பணி. | 67.71 |
| 4. | மேட்டூரில் ஆய்வக மாளிகை, பணியாளர் குடியிருப்பு மற்றும் வாகன ஓட்டுநர்களின் ஓய்வு அறை கட்டும் பணி. | 37.73 |

[1999 ஏப்ரல் 7

| | | ரூ. இலட்சம் |
|---|---|---|
| 5. | திருநெல்வேலியில் வட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி. | 47.00 |
| 6. | பரமக்குடியில் கீழ்வைகை கோட்ட அலுவலகப்பணி | 30.00 |
| 7. | இராசபாளையத்தில் உப்பாறு வைப்பாறு பாசன திட்டத்தின் ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டும் பணி | 31.50 |
| 8. | விருதுநகரில் ஒருங்கிணைந்த வட்ட அலுவலகம் மற்றும் வைப்பாறு பாசனத் திட்ட கோட்ட அலுவலகம் கட்டும் பணி. | 71.50 |
| 9. | கோயம்புத்தூரில் பொள்ளாச்சி, மண்டல நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 250.00 |

## 3.3 விரைவில் தொடங்க உள்ள சில முக்கிய கட்டட பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | சென்னை தாடண்டர் நகரில் நீர் வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் குடியிருப்பு கட்டும் பணி | 322.00 |
| 2. | சென்னை தரமணியில் தரக்கட்டுப்பாடு பரிசோதனை மையம் அமைக்கும் பணி | 98.00 |
| 3. | சேப்பாக்கத்தில், பொதுப்பணித் துறை வளாகத்தில் சென்னை மண்டல நீர் வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளர் அலுவலகம், ஆரணியாறு வடிநிலக் கோட்ட செயற் பொறியாளருக்கான அலுவலகம், கொசஸ்தலையாறு வடிநில வட்டக் கண்காணிப்புப் பொறியாளருக்கான அலுவலகம், கணிப்பொறி அறை ஆகியவற்றுக்கான புதிய இட வசதி அமைத்துக் கொடுத்தல் | 180.00 |



1999 ஏப்ரல் 7]

| | | ரூ. இலட்சம் |
|---|---|---|
| 4. | பழனி, சிவகிரிப்பட்டியில் நீர்வள ஆதார அமைப்பு கண்காணிப்புப் பொறியாளர் (சிறப்பு) வட்டம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி. | 68.00 |
| 5. | கொடைக்கானல் கோகினூர் மாளிகை வளாகத்தில் நீர்வள ஆதார அமைப்பு திட்ட கட்டடம் கட்டும்பணி. | 109.80 |
| 6. | பொள்ளாச்சி ஆமு.பட்டியில் உள்ள பரம்பிக்குளம் ஆளியாறு திட்டக் குடியிருப்பில் மேம்பாட்டுப் பணிகள், பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் குடியிருப்புகள் கட்டுதல் | 100.00 |

## 3.4 நீரியல் திட்டத்திற்கான கட்டடங்கள்

தமிழ்நாடு நீரியல் திட்ட கட்டடங்களுக்கென 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூ.5.18 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1 பரிசோதனைக் கூடம், 1 கோட்ட அலுவலகம், 4 உபகோட்ட அலுவலகங்கள், 36 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் மொத்தம் ரூ. 1.13 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 1.5 கோடி மதிப்பில் 3 பரிசோதனைக் கூடங்கள், 3 கோட்ட அலுவலகங்கள், 8 உபகோட்ட அலுவலகங்கள், 22 பிரிவு அலுவலகங்கள் ஆகிய கட்டடபணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தரமணியில், ரூ. 2.55 கோடி மதிப்பில் விவரக் குறிப்பு மையம் மற்றும் நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவர மைய தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி வழங்கு குழுவால் 5-3-99-ல் முடிவு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் மறுப்பின்மை பெற, மாநில நில மற்றும மேறபரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மைய, தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3.5 நீரியல் துறையில் நடைபெறும் முக்கிய பணிகள்.**

ரூ. இலட்சத்தில்

1. திருச்சியில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி

30.50

2. மதுரையில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி

36.00

3. பொள்ளாச்சியில் புவிசார் வேதியியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி

32.75

4. சென்னையில் புவிசார் வேதியல் பரிசோதனைக் கூடம், வட்டம், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம் கட்டும் பணி

60.00

5. தரமணியில் தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நில மேற்பரப்பு நீர், ஆதார விவர மையம் மற்றும் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

255.00

**4. நீதித்துறை கட்டடங்கள்.**

**4.1 நீதிமன்றக் கட்டடங்கள் ரூ.5.31 கோடி செலவில் கீழ்க்காணும் இடங்களில் 1998-99 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**

ரூ. இலட்சத்தில்.

அ. கூடலூரில் நீதிமன்றங்கள் மற்றும் அலுவலர்கள் குடியிருப்பு

ஆ. நாகர்கோவிலில் வழக்கறிஞர் கூடம் — 131.92

இ. இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுதல் — 37.87

ஈ. சென்னையில் கூடுதல் நகர சிவில் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாணையத்திற்கு கட்டடம் — 354.00

7.55



**4.2 நீதிமன்றங்கள் கட்டட பணிகள் கீழ்க்கண்ட இடங்களில் முன்னேற்றத்தில் உள்ளன.**

| வ.எண். | கட்டடப்பணிகள் | அரசு ஆணை எண்/தேதி. | மதிப்பு ரூ. இலட்சத்தில். |
|---|---|---|---|
| 1. | விருதுநகரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுதல். | 1206/உள்துறை 29-8-96 | 310.00 |
